
ஸ்ரீ பகவான் அருணாசல விஜயம்



# ஸ்ரீ ரமண மஹர்ஷி

1896 ★ நூற்றாண்டு ★ 1996

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

# பகவான் ஸ்ரீ ரமணர்
# அருணை விஜய
# நூற்றாண்டு மலர்

ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை

©ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை

செப்டம்பர் 1, 1996
பிரதிகள் 2000

பதிப்பாளர்
வே.சு. ரமணன்
தலைவர்
ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை 606603.

அச்சுக் கோர்வை
ரெப்ளிகா, சென்னை 600 004.

அச்சிட்டோர்
கார்த்திக் ஆப்செட் பிரிண்டர்ஸ்
சென்னை 600 015.

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| **அர்ப்பணம்** | 1 |
| **முன்னுரை** | 2 |
| **காலைப்பாட்டு**<br>*சத்யமங்கலம் வேங்கடரமண ஐயர்* | 5 |
| **பகவான் ஸ்ரீ ரமணர்**<br>*முருகனார்* | 7 |
| **ஸ்ரீ ரமண வைபவம்**<br>*கனகம்மாள்* | 13 |
| **உமா ஸஹஸ்ரம்**<br>*காவ்ய கண்ட கணபதி முனிவர்* | 22 |
| **ஸ்ரீ ரமண நூற்றாண்டு பதிகம்**<br>*முருகைய பங்கஜாக்ஷி* | 23 |
| **கருணையால் என்னை ஆண்டவன்**<br>*சரோஜா கிருஷ்ணன்* | 26 |
| **பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகள்**<br>*T.K. துரைசாமி ஐயர்* | 36 |
| **ஸ்ரீ பகவானிடம் நான் கண்ட மகத்துவம்**<br>*டங்கன் கிரின்லீஸ்* | 39 |
| **ஸ்ரீ ரமண மாலை (பாடல்)**<br>*சுத்தானந்த பாரதி* | 52 |
| **ஸ்ரீ பகவான்**<br>*பலராம ரெட்டியார்* | 54 |
| **ஸ்ரீ ரமண சொரூபம்** | 62 |

பக்கம்

ஸ்ரீ ரமணாச்ரம புனிதப் பயணம்
*எலினார் பாலின் நோயீ* 63

பிரஹ்ம வித்தை 70

ஸ்ரீ ரமண வசன சாரம் (பாடல்)
*சிவப்பிரகாசம் பிள்ளை* 71

ஸ்ரீ ரமணோபதேசம் (பாடல்)
*சிவப்பிரகாசம் பிள்ளை* 73

ஞானத்திரளாய் நின்ற பெருமான்
*மைக்கேல் ஜேம்ஸ்* 75

மலைவிலா ஞானியர்க்குள் மன்னவன்
*சாது ஓம்* 83

ஸ்ரீ மஹரிஷிகள் அருள்வாக்கு 89

எனது வாழ்க்கையின் மகத்தான சம்பவம்
*கிராண்ட் டஃப்* 90

தியானப் பாட்டு
*சாது ஓம்* 93

ஸ்ரீ பகவான் உபதேசங்களும் அறிவுரைகளும்
*தேவராஜ முதலியார்* 95

ஆட்கொண்ட தெய்வம்
*ஸ்வாமி மதுரானந்தா* 105

விஞ்ஞானி வேதாந்தியானான் 107

ஸ்ரீ ரமண திருத்தொண்டத் தொகை (பாடல்)
*நடனானந்தர்* 112





பக்கம்

ஆண்டவனே
*மால் மருகன்* 115

முள்ளிச்செடிக்கு முக்தி அளித்த மஹாபுருஷர்
*வேங்கடன்* 127

அருணகிரி ரமணனின் அற்புத அனுக்கிரஹ விலாசம் 131

சுகமும் சந்யாசமும் 138

சாதக சித்த சம்வாதம்
*வேங்கட தாசர்* 139

ஸ்ரீ ரமணாஷ்டகம் (பாடல்)
*க. இராமச்சந்திரன்* 147

அருணாசலத்தில் விளங்கும் கைலாசபதி
*ருத்ரராஜ பாண்டே* 149

அதிவர்ணாச்ரமி 152

உபதேச உந்தியார் - கருத்துரை
*முருகனார்* 156

வாயை மூடு!
*சரோஜா கிருஷ்ணன்* 159

சும்மா இரு
*மேஜர் சாட்விக் (சாது அருணாசலா)* 160



காண்போர் மனதைக் கவர்ந்து கொள்ளுங்
கடவுள் பாதம் வாழ்கவே
வேண்டல் வெறுத்தல் இரண்டும் இல்லா
விமலன் பாதம் வாழ்கவே

நானார் எனப்பார் அனியம் விடென்று
நவில்வோன் பாதம் வாழ்கவே
தானாய் விட்டாற் றுயர் போமென்னுஞ்
சாந்தன் பாதம் வாழ்கவே

எப்பா ரத்தையும் ஏற்கும் இறையென்று
இருப்போன் பாதம் வாழ்கவே
செப்பிய வழியி னின்றி டென்னுஞ்
சீரோன் பாதம் வாழ்கவே

ஆசா ரம்விட லணர்த்த மாமென்று
அறைவோன் பாதம் வாழ்கவே
யோசித் தவற்றின் பொருள் கொளென்னும்
யோகி பாதம் வாழ்கவே

- ஸ்ரீரமண பாதமாலை

# முன்னுரை

ஓம் நமோ பகவதே ஸ்ரீரமணாய

அருளே உருவமாகி வந்த ஆசான் ரமணன் திருச்சுழியில் உதித்து, சிவஞானம் அளிப்பவளான் அங்கயற்கண்ணி உறையும் ஆலவாயில் தமது பதினாறாம் வயதில் பிரம்மம் என்னும் பெயர் அறியாமலே பிரம்ம ஞானம் பெற்று, பின்னர் சிவன் இதயப்பதியாம் அருணாசலத்தை அடைந்தார். ஞானத்திரளாய் நிற்கும் அருணாசலத்தை அவரடைந்த நன்னாள் 1.9.1896. அன்று முதல் பிரம்மநிர்வாணம் அடையும் வரை அருணையை விட்டுக் கணமும் நீங்காமலே உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த ஆன்ம தாகம் அடைந்த அன்பர்களைத் தம்பால் ஈர்த்து, தமது சந்நிதி மாத்திரத்தாலும் விழிநோக்காலும் ஆன்மாநுபூதி அடைவிக்கும் அசல சித்தனாகத் திகழ்ந்து தமது அருளாட்சியை நடத்தினார். அவரது வாழ்வாலும் வாக்காலும் சந்நிதி மாட்சியாலும் ஈர்க்கப்பட்டு அவரருள் நாடித் தாமாகவே வருவோர் எண்ணிக்கை நாளும் பெருகி வருகிறது. எவ்விதப் பிரசாரமும் விளம்பரமும் இன்றித் தானாகவே நிகழும் இது ஒன்றே, அவரது அருளாட்சி அவரது மஹாநிர்வாணத்திற்குப் பின்னும் இடையறாது நடந்து வருகிறது என்பதற்குப் போதிய சான்றாகும்.

பகவான் அருணையுற்று 1.9.1996 அன்று, நூறு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. 1946 ல் ஸ்ரீ பகவான் அருணை வந்தடைந்த 50ம் ஆண்டு பொன் விழா, ஆச்ரம வளர்ச்சிக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளின் அயரா உழைப்பால் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தற்போது, 40 அண்டுகளுக்கும் மேலாக ஆச்ரமத் தலைவராக விளங்கிய ஸ்ரீ ஸ்வாமி ரமணானந்தா அவர்களின் ஆசியுடன் இந்நூற்றாண்டு விழா நடைபெறுகிறது. இதனைச் சிறப்பிக்கும் வகையில் இவ்விழாமலர் வெளியிடப்படுகிறது. இம்மலரை அணி செய்யும் கட்டுரைகளைப் பற்றிக் காண்போம். இவற்றுள் சில, பொன்விழா மலரில் ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரைகளைத் தழுவி எழுதப்பெற்றவை; சில, பகவான் அருளில் திளைத்த அன்பர்கள் இம்மலருக்காக எழுதியவை; வேறு சில, ஆங்கிலக் கட்டுரைகளினின்றும் புத்தகங்களினின்றும் தொகுக்கப் பட்டவை. பகவான் குறிப்பிட்ட சாதக-சித்த சம்வாதம், அதிவர்ணாச்ரமம், எல்லா உயிர்களையும் முக்தியில் சேர்க்க வல்ல ஞானியின் கடாக்ஷ மகிமை முதலியவை பற்றியும் இம்மலரில் காணலாம். மேலும் முருகனார் எழுதிய உபதேச உந்தியார் — கருத்துரையும் இம்மலரை அலங்கரிக்கிறது. பகவானைப் போற்றியும் அவர் உபதேசங்களை விளக்கியும் அமைந்துள்ள பாடல்களும் இடம் பெறுகின்றன. கட்டுரைகளுள் பெரும்பாலானவை, தமிழில் முதல் முறையாக வெளிவருகின்றன.



பகவான் சந்நிதி மாட்சி, அருட்கொடை, அடியார்க்கு எளியனாயிருக்கும் தன்மை முதலியவைகளை இக்கட்டுரைகள் நன்கு விளக்குகின்றன. தராதர நோக்காத் தண்ணளியான், அபாத்திரம் என்று ஒன்றை அறியாதான், சாதனையின்றித் தன் சந்நிதியால் சமாதி சாதிப்பித்தருள்பவன், மோனத்தால் உண்மை மொழிவோன், ஆன்மாநுபூதி அடைவிக்கும் பார்வையான், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்றெல்லாம் பகவானைப் போற்றுவது மிகையுரை அன்று, மெய்யுரையே என்பதையும் இக்கட்டுரைகள் மெய்ப்பிக் கின்றன.


காண்போர் மனத்தைக் கவர்ந்து கொள்ளும் பகவானது திருவுருவப் படங்கள் இம்மலரில் கண்ணுக்கு விருந்தாக அமைகின்றன. இவை பகவான் பக்தரான திரு கிரகாம் பாய்ட் (Graham Boyd) அவர்களால் பகவானின் பழைய புகைப்படங்களிலிருந்து மிக்க பிரயாசையுடன் உருவாக்கப்பட்டவையாகும். பகவான் ரூபலாவண்யமே இத்தகையது எனில் அவர் சொரூபலாவண்யம் எத்தகையதோ என்று வியக்கிறோம்.

பேசப் பெரிதும் இனியோனான பகவான் அருள்மணம் பரப்பும் இம்மலர், தலைவன் பேச்சே தம்முணவாகக் கொண்டு மகிழும் அன்பர்க்கு அரிய விருந்தாகவும், நெஞ்சத்து அழுக்கை அகற்றும் அருட்புனலாகவும், பகவான் அருளிய உபதேச நூல்களை ஆழ்ந்து அறிவதற்குத் தூண்டு கோலாகவும் அமைவது திண்ணம். பகவானிடம் நம்மை முற்றிலும் இழப்பதே நாம் அவருக்கு ஆற்றும் தலையாய வழிபாடு ஆகும் என்பதை மறவாது அவர் காட்டிய வழியில் ஒழுகுவோமாக.

முதல் முறையாகத் தமிழில் ஒரு விழாமலரை உருவாக்கி வெளியிடப்பணியாற்றிய அன்பர் அனைவர்க்கும் என் நன்றி. தம் தந்தை யாகிய அருணாசலத்தை நாடி வந்தடைந்த வேங்கடராமனாம் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் திருப்பாதங்களில் இவ்விழா மலரைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

**வே. சு. ரமணன்,**
தலைவர்
ஸ்ரீ ரமணாச்ரமம்,
திருவண்ணாமலை.

*1.9.1996*







## காலைப்பாட்டு

அருண னுதித்தன னருண கிரிதன்னி
லழகிய ரமணரே வாரும்;
அருணாச லேசரே வாரும்.

சாலைக் குயிலோசை காலையிற் கூவிற்று
சற்குரு ரமணரே வாரும்;
சாம்பவி பாகரே வாரும்.

சங்க மொலித்தது தாரகை மங்கின
இங்கித ரமணரே வாரும்;
ஈச சுரேசரே வாரும்.

கோழிகள் கூவின குருகுக ளியம்பின
நாழிகை யாச்சுது வாரும்;
நள்ளிரு ளகன்றது வாரும்.

சின்னங்கள் காகளம் பேரிகை யார்த்தன
பொன்னங்க ரமணரே வாரும்;
போத சொரூபரே வாரும்.

காகங் கரைந்தது காலையு மாயிற்று
நாகா பரணரே வாரும்;
நஞ்சணி கண்டரே வாரும்.

கற்பனை யொழிந்தது கமலங்க ளலர்ந்தன
விற்பன ரமணரே வாரும்;
வேதாந்த ரூபரே வாரும்.

முக்குண ரகிதரே முத்திநா டாள்வோரே
சற்குண ரமணரே வாரும்;
சாந்த சொரூபரே வாரும்.


சத்துச்சித் தானந்த வடிவினைச் சார்ந்திடுந்
தத்துவ ராயரே வாரும்;
தாண்டவ மூர்த்தியே வாரும்.

இன்பதுன் பமில்லா வேகாந்த மேடையி
லன்புருக் கொண்டோரே வாரும்;
ஆனந்த மோனரே வாரும்.


-சத்யமங்கலம் வேங்கடரமணய்யர்

— oOo —





பணிவுடன்: ரன்வீர் கன்னா, உமா கன்னா, மும்பய்



# பகவான் ஸ்ரீ ரமணர்

## முருகனார்

(இக்கட்டுரை ஸ்ரீ பகவான் திருமேனி தாங்கியிருந்த காலத்தில் எழுதப்பட்டது)

தன்னையலாது அன்னியமொன்றும் அறியாராகத் தன்னை அழித்தெழுந்த தன்மயானந்தர் நிலைமை இன்னதென் றெண்ணியுரைத்தல் எவர்க்கும் இயல்வதன்று.

பண்டைத் தவப்பயனால், ஈச்சிறகே போல் அத்துணை மெல்லிதாக ஆணவ★ மலத்திரை மட்டும் ஒரு சிறிது எஞ்சியதன்றி ஏனை இரு மலங்களும் ஏற்கனவே இற்றொழிந்தமையால் உயிர்க்குயிரான இறைவனே அறிவுக் கறிவாக நின்று தன்னுண்மை யுணர்த்தலால் (அவ்வாறுணர்த்தற்கு சித்தாந்த சாஸ்திரமான திருவருட்பயனே† சான்று கூறுவதாம்) வேறொரு குருவும் வெளியில் வேண்டாமலே கேள்வியாலும் **பிரம்மமென்னும் பெயரறியாமலே பிரம்ம ஞானம் பெற்ற புலவர் ரமணர்.** தூலத்தில் அண்ணாமலையாரே அவர்க்குக் குரு; அம்மலையின் அடிவரை வாழ்வே அவரது நிரந்தர குருகுல வாசம். அதன் எல்லையை விட்டு அவர் என்றும் அகன்றதில்லை. அவர் சரீர வாழ்விலும் வியாபிக்கும்படி அவ்வளவு அசலமாயிற்று, அவர் அத்யாத்ம வாழ்வின் அமனஸ்க நிலை (மனமற்ற நிலை). அகந்தை யறிவுக்கு அடிப்படை யுண்மையாய் அனுபவ வாலறிவு வடிவான உள்ளத்தினின்று தன்னியல்பால் எழும் அவர் வாய்மொழிகளால் தத்துவ சாஸ்திர விற்பன்னர் பலரும் சிக்கலான தம் ஐயப்பாடுகள் எளிதில் அகலப் பெறுகின்றனர். விநோதார்த்தமாகவன்றி மெய்யாகவே தம்மாலியன்ற பக்தி சிரத்தையோடு தம்மைச் சூழ வாழும் அடியார் மாலின்யத்தைப் (அழுக்கை) போக்கி உள்ளத்தைக் கிளர்ச்சி செய்கின்றது, அன்னார் மத்தியில் வீற்றிருக்கும் அவரது அத்யாத்ம காந்த சக்திக் கதிர். அவர் உபதேசங்கள் எல்லாக்கால தேசங்களுக்கும் ஏற்பப் பொருந்து வனவாய்ப் பாமர பண்டித பேதமின்றி, நாத்திகமுட்படப் பலதிறப்பட்ட சமயச் சார்புள்ளவர்க்கும் ஒருங்கே ஆன்ம திருப்தியளிப்பன. நாத்திகனும் கடவுளுண்மையை ஒவ்வாது மறுப்பினும் 'நான்' என்னும் தன்னுண்மையை

---

★ ஆணவலேச மாத்திரமே இறுதியான இப்பிறப்புக் கேதுவாக அவர்க்கு எஞ்சி நின்றதென்பது, 'நானா' ரென்னும் விசாரணையே முன்பு விட்ட குறையால் அவருள்ளத்தே தானாகக் கிளர்ந்ததோடு, அவ்விசாரணையால் மட்டில் முடிவான பூரணநிலை மிக்கெளிதில் அவர் கைகூடப்பெற்றது கொண்டு உய்த்துணர்வார்க்கு நன்குணரலாகும்.

† திருவருட்பயன் பாடல் 88-ன் பொருள் : விஞ்ஞானகலர்க்கு ஆணவ மலம் நீங்குவதற்காக இறைவன் தனது அரிய அருளைச்செய்து உள்நின்று உணர்த்துவன். பிரளயாகலர்க்கு மானும் மழுவும் நான்கு தோள்களும் நீலகண்டமும் முக்கண்ணுமாக எழுந்தருளி வந்து அவர்கட்குரிய ஆணவம், கன்மம் ஆகிய இருமலத்தையும் நீக்குவன். சகலர்க்கு அவர்களைப்போல் மானுடவடிவம் தாங்கி அவர்கள் பாலுள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்கியருள்வன் என்பதாம்.

எவ்வாற்றானும் ஒப்பியே தீரவேண்டுமாதலின், அந்த 'நான்' என்பதன் விசாரணையால் முடிவான உண்மை அனுபவத்திற் கண்டறியப்பட்டுக் கவலை யற்றதோர் பேரின்ப வாழ்வு இம்மையிலேயே அதனாற் கைகூடுமென்னின் அந்நெறி அவனுக்கும் உடன்பாடாக வேண்டியது தானன்றோ?

இறைவனைத் தந்தையாகத் தேடிச் சென்று தம்மகத்தே கண்டறிந்தும், கண்டறிந்த அத்யாத்மத் தந்தையான அவ்விறைவனோடு தன்னிழப்பால் இரண்டறக் கலந்தும் விளங்கும் குருத்துவத்தால், அவரை முறையே ஞான பண்டிதனான குமரகுருபரன் கூறாகவும், ஆதி குருவான தக்ஷிணாமூர்த்தி சொரூபமாகவும் அருட்கண்ணால் அறிஞர் கண்டு வழிபடுகின்றனர்; உபாசகர் பலர், தம்மை உய்வித்தற்கென்றே உலகில் அவதரித்து வந்த வெவ்வேறான தத்தம் இஷ்ட தெய்வமென்றே பூரணமாக நம்பித் தொழுகின்றனர். திடஞான ஜீவன் முக்தரான அவர்பால் பரமார்த்தவுண்மை கேட்டறிந்து அவரருள்வலி கொண்டு அத்யாத்ம சாதனை செய்தொழுகுவோர் கணக்கிலர். எனவே உண்மை வழிகாட்டியான உலக குருவாக, அந்தப் பட்டமின்றியே சூரியன் போலச் சுடர்கின்றவர், உலகியற் கற்பனா பேதங்களோடு வர்ணாச்சிரமம் முதலிய சமஸ்த சாஸ்திர சமயாசார பேதங்களும் ஒருங்கே கழன்றவர்; சுருங்கச் சொல்லின், தனித் தன்மை யுணர்வான அகந்தை வாசனையே அற்றமையால் துவித பேதங்கள் எல்லாமே தொலைந்தொழிந்து, அணிமாதி யோக சித்திகளுக்கெல்லாம் மேற்பட்ட ஞானசித்தி பெற்று, நிஷ்பிரபஞ்சமாய் 'நான்' என்பதுட்பட அகிலமும் ஒரே சிவமயமாகக் கிளர்வதான கைவல்ய நிலையில் இயல்பாகவே நிலைத்து நிற்பவர்.

**உடலுருவே நோக்குவார்க்கு, மற்றார் மாட்டுப்போல் அவர் மாட்டும் ஒரு சில வியாவகாரிக குணஞ் செயல்கள் நிகழ்வனவாகத் தோன்றினும், பாவகாரிகள் பார்ப்பரிதான அருட்பர வெளியே தம் யதார்த்த சொரூபமாகத் திடஞானானுபவத்தா லுயிர்க்கும் அவரிடத்தில் அவையாவும் கற்பனையன்றி உண்மை யன்றாக, உய்த்துணர வல்லார்க்கு, நிர்குணமே அவர் குணமும், தம்மைச் சூழ வாழ்வோர் சிந்தையையடக்கித் தம்மைப்போல் அவரையும் சும்மா விருப்பித்தலே அவர் சுபாவமான தொழிலுமாக முடிவதாம்.**

அவருணர்வு, பல்வகையுணர்வும் ஒரே தன்மயமாகச் சுட்டுணர்வு கடந்து சுடர்கின்ற கேவல சொரூபவுணர்வாம். மதியைப் பற்றியதன்றோ மதம்? மதியற்ற விடத்து ஜீவ போதம் சிவபோதத்தே தன்மய மாகக் கரைந்தொழிந்த விடத்து மதமேது? எனவே, **ஞானவரம்பான மோனமே உண்மையான அவர் மதமாம்.** பேச்சும் ஓரளவாகப் பேசுவதன்றி, மற்றைப் பெரியார் எல்லாரும் போன்றே அவரும் அதிகம் பேசுவாரல்லர். அதுவும் ஒரு வியாஜ மாத்திரமேயாக, அவர் சந்நிதி மாண்பானே ஐயத்தினீங்கித் தெளிந்த வுணர்ச்சியும் சித்த சாந்தியும் பெறுகின்றனர் பக்குவப்பட்டோர். (சிந்தையு

மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகத் தத்துவங்கடந்த செம்பொருள் – ஆதி குருவான தக்ஷிணாமூர்த்தியே சனகாதிகளுக்கு மௌனத்தாற் றெரித்த செம் பொருள் – அவ்வாயிலான் மட்டுமே உணர்த்தவுமுணரவும் படுவதன்றோ!). மற்றோரும் அவ்வவர் பக்தி சிரத்தைகளுக் கேற்பக் காமியங்கள் கைகூடப் பெறுவதோடு, பல்வகைப்பட்ட கவலைகளும் நீங்கி மகிழ்ச்சி பெறுகின்றனர்.

பூமண்டலத்தோர் பாக்கியவசத்தால் தென்பாண்டிநாட்டுத் திருச்சுழித் தலத்தில் அந்தணர் குலத்தில் பராசரர் மரபில் விருந்தோம்பலான வேள்வியான் மேம்பட்டதோர் குடும்பத்தில் சுந்தரமையர்க்கு அழகம்மாளிடத்தே முன்னுதித்த குமாரர் மூவருள் நடுநாயகமாக, நான்காவதாகப் பின் பிறந்தாளொருத்தியோடு ஞானநெறி தழைத்தோங்கத் தோன்றினர் நம் ரமணர். அவரவதாரத்தால் விளங்கியது பிரமாதியாண்டு மார்கழித் திங்கள் பதினாறாந் தேதி *(30.12.1879)* சோமவாரம் புனர்வசு நக்ஷத்திரம். வேங்கடராமனெனப் பெயரிடப்பெற்றார் (அவ்வியற் பெயரே ரமணரெனப் பின்னர் மருவியது). திருச்சுழியிலும் திண்டுக்கல்லிலும் மதுரையிலுமாக ஆறாவது பாரம் வரை ஆங்கிலக் கல்வி பயின்றார். அருணாசலத் தியானம் – அது யாராலும் அடைதற்கரிய பிரம்ம லோகமே. அன்று, பிரம்மமே போன்றதோர் பாவனை – அவரையறியாமலே, பிறப்பில் இயல்பாகவேயுண்டாகி, பதினேழாம் வயதில் திருவண்ணாமலைக்குப் புறப்படும் வரை நீறு பூத்த நெருப்புப் போல அவரகத்திற் கனன்று கொண்டிருந்தது. அருணாசல மென்பது திருவண்ணா மலையென உறவினர் ஒருவரால் பின்னர்த் துணுக்குறக் கேட்டறிந்தும், அப்புறப்பாட்டு வரையில் அதைப் பற்றிக் கருதவேயில்லை.

வீட்டிலிருந்த பெரிய புராண வசனப் புத்தகத்தைத் தற்செயலாகப் படித்துப் பார்க்க நேர்ந்ததன் பயனாகத் தினந்தோறும் கோயிலுக்குச் சென்று, வெள்ளியம்பல நடராஜர் முன்பும் அறுபத்து மூவர் முன்பும் நின்று, அவரோடு தம்மையும் ஒருவராகக் கூட்டிக் கொள்ளும்படி பக்திப்பரவசப்படச் சிலகாலம் தொழுது வந்தார். இந்நிலையில் ஒரு நாள், அரோக திடகாத்திரமா யிருக்கையிலேயே, திடீரெனக் காரணமின்றியே, மனத்திலெழுந்த மரண பயத்தால் தாக்கலுற்று, மரணத் தினுண்மையை அனுபவத்திற் கண்டறியத் தலைப்பட்டவராய், தம்முடலைப் பேச்சு மூச்சறப் பிணம்போலக்கிடத்தி, உடலோடியைந்த 'நான்' என்னும் அகந்தையுணர்ச்சியை உள்ளே முற்றுமொடுக்கலும், அவ்வாறொடுங்கப்பெற்ற மூல கேந்திர ஸ்தானமான இதயத்தினின்று, எதனோடும் யாதோரியைபற்ற தம் பரமார்த்த சொரூபவுண்மையுணர்ச்சி 'நான், நான்' என்று தன்னில் தானாக மிகத்தெளிவாக விளங்கவே, அதனோடு மரணசிந்தை அறவே ஒழிவுற்றார். இந்த மாறுதலால், படிப்பில் முன்னிருந்த அற்பக் கவனமும் அகன்றது. படிக்க வேண்டிய நேரத்தில் கண்மூடி மௌனியாகி நிஷ்டை கூடினார். படியாத பாடத்தைத் தண்டனையாக ஒரு நாள் எழுதிக் கொண்டிருக்கு மிடையில் இவ்வாறு செய்யவே, அதைக் கண்ட தமையன் அவரைத்திருத்தக் கருதி,

''இப்படியெல்லாம் இருப்பவனுக்கு இங்கென்ன வேலை'' என்று கடிந்துரைத்தலும், அதுவே அவர் வெளியேற்றத்துக் கேதுவாயிற்று. அதையே ஆப்த வாக்கியமாகக் கொண்டு, வீட்டைத் துறந்து வெளிப்பட்டுவிடுவதெனத் தீர்மானித்தலும், அதுகாறும் மறந்திருந்த திருவண்ணாமலை ஞாபகம் அந்தர்யாமியான ஆண்டவனால் உந்தப்பட்டு மனத்திலுதித்தது. உடனே, தம்மிடமிருந்த பழைய தேசப்பட (அட்லாஸ்)த்தில் சென்னை மாகாணப் படத்தைத் திருப்பி, திண்டிவனமே திருவண்ணாமலைக் கருகேயுள்ள வண்டி நிலையமெனவும் அதையடைய மூன்று ரூபாய் போதுமெனவும் எண்ணியவாறே, 'தாம் தம் தந்தையைத் தேடிக் கொண்டு அவருத்தரவுப்படி அவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டதாகவும், தாம் நல்ல காரியத்தில் தான் பிரவேசித்திருப்பதால் அக்காரியத்திற் கொருவரும் விசனப்படவும் தம்மைத் தேட பணச் செலவு செய்யவும் வேண்டா' மென்றும் ஒரு குறிப்பெழுதிப் பெட்டியில் வைத்துவிட்டு, அதிலிருந்து தன் பள்ளிச் சம்பளம் செலுத்துவதற்காகத் தமையன் எடுத்துக் கொள்ளச் சொன்ன ஐந்து ரூபாய் பணத்தில் தம் பிரயாணச் செலவுக்கான அம்மூன்று ரூபாய் மட்டும் எடுத்துக்கொண்டு 'ரயி'லேறினார். இடையில் விழுப்புரத்தில் வண்டி மாற வேண்டுமென்று தற்செயலாக அறிந்தவாறே அங்கேயிறங்கி அங்கிருந்து ரயில் பிரயாணமாகவும் சிறிது நடையாகவும், புறப்பட்ட நாலாம் நாள் *(1.9.1896)* காலை திருவண்ணாமலை சேர்ந்தார். அந்நேரத்தில் வழக்கத்துக்கு மாறாகக் கதவுகளெல்லாம் ஒருங்கே திறக்கப் பெற்று ஏகாந்தமாயிருந்த கோயிலில் கர்ப்பக் கிருகம் வரை நேரே சென்று ஆருயிர்த் தந்தையான அண்ணா மலையாரை யடுத்து **''அப்பனே! உன்னாணைப்படி வந்து உன்னடி யடைந்தேன்; இனி, உன்னிஷ்டம் என்னிஷ்டம்''** என்று தம்மைத் தலைவனிடம் அறவே ஒப்புக்கொடுத்தலும், அதற்குச் சில காலம் முன்பே மதுரையில், தம் உடலையும் மனத்தையும் ஒருங்கே பற்றியிருந்த தாபம் தண்ணெனக் குளிர்ந்து தணிந்தது.

**அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை**
**அன்பாக் கரைத்தரு ளருணாசலா**

– என்பதே ஆண்டவன் பால், அவர் பேரார்வத்தோடு செய்துகொண்ட ஒரே பிரார்த்தனை. பின்பு கோயிலின் வெளிச் சென்று, ஆடை, குடுமி, பூணூல் மீதப்பணம்யாவும் ஒரு குளக் கரையில் களைந்தெறிந்து, ஒரு கோவண மட்டும் இடையிற் பூண்டு, கோயிலில் ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்து, அண்ணா மலையைக் கண்ட 'நான் யார்' என, ஆராய்ச்சியைத் தம் ஆன்ம சொரூபத்தில் அகமுகமாகத் திருப்பி இதயத்திலாழ்ந்து இன்ப நிஷ்டைகூடப் பெற்றவர், தம்முடலைப் பூச்சி புழு அரித்ததும் தெரியாமல், கோயிலுக்குள்ளே தானே பாதாள லிங்கம் முதலிய பல்வேறிடங்களில் மாறி மாறிப் பல மாதமும், ஊருக்கு வெளியே குருமூர்த்தத்திலும் பக்கத்து மாந்தோப்பிலும் இரண்டாண்டும் தைல தாரை போன்ற நிரந்தர சமாதியில் வீற்றிருந்தார். (காலக் கிரமத்தில் அவரிருப்பிடம் பந்துக்களுக்குத்

தெரியவே, அவர் சிறிய தந்தை தாமே அருணைக்கு வந்து, அவரை ஊருக்கு மீட்டுச் செல்ல முயன்றும், அவரை அசைக்க மாட்டாது திரும்பினர்.) பல்வேறு சோதனைகளையும் சிறுவரும் வெறியரும் செய்த சிறுமைச் செயல்களையும் பொறுமைக்கவசம் பூண்டு தாங்கி நின்றவர் அங்கிருந்து பவளக்குன்றுக்கு மாறித் தங்கருமமான தவ வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்தி வந்தார். தாயும் தமையனும் ஈங்கெய்திப் பதறிக் கதறிப் பிறவிப் பாசத்தாற் பிணித்திழுக்கவும் மலையே போல நிலையிற் கலங்காராய் மௌனமாயிருந்தவர், பக்கத்திலிருந்தவர் வற்புறுத்தலின் மேல் அவர்தாமே கொடுத்த காகிதத்தில் ''அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்தாட்டுவிப்பன்; என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆகலின் மௌனமா யிருக்கை நன்று'' என்றெழுதிக் காட்டி அந்துடனமைந்தார் (வந்தவர் இருவரும் மனந் தடுமாறி வாளா மீண்டனர்). பின்பு மலைமேல் வாசம் தொடங்கியவர், பெரும் பாலும் வேனிற்காலந்தோறும் தண்ணீர் வசதிக்காகத் திருமுலைப்பால் தீர்த்தக் கரையி லுள்ள மாமரக்குகைக்கு மாறிக் கொண்டு, மெய்ஞ்ஞானத் தவராஜ சிங்கமாக மிக்க தேஜோவீரியத்தோடு தமது சகஜ சமாதித் திறத்தால் பல்வேறு பணிகளும் செய்து கொண்டே அன்பர் குழாந்து நடுவில் விருபாக்ஷ குகையில் பல்லாண்டுகள் வாழ்ந்து வந்தார் (தன்னைப் பாதுகாத்து வந்த மூத்த குமாரனிறந்து தாயும், தன் மனைவியிழந்து தம்பியும் இந்நிலையிற் சார்ந்து துறவு பூண்டு அவர் முன்பே வசிக்கலாயினர். அம்மையார், ஆசிரம வாசிகளுக்கான சமையல் முதலிய பணிகளை மிக்க சிரத்தையாகப் புரிந்து, உண்மைத் தாயாகவே அவ்வெல்லோரையும் ஊட்டி வந்ததோடு, அமிழ்தினுமினிய தமது வேதாந்தப் பாடல்களால் அவர்களை மகிழ் வித்தும் வந்தனர்). பிராமண சுவாமி என்ற பெயரே ஊரில் இதுவரை வழங்கி வந்ததாயினும், அவர்பால் உபதேசமாகத் தவத்திலக்கணம் கேட்டுணர்ந்த கணபதி முனிவரால், பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி என்ற பெயர் நாடெங்கும் நாளடைவில் பிரசித்தமாயிற்று. பின்பு அக்குகையினும் உன்னதமானதோரிடத்தில் தொண்டர் சிலரால் புதிதாகத் தமக்கென்றே நிருமிக்கப்பெற்ற கந்தாசிரமத்தை அலங்கரித்து வாழ்ந்து வந்தார். துந்துபி வருடம் வைகாசி மாதம் (1922 மே மாதம்) நோய் வாய்ப்பட்டுக்கிடந்த தம் அன்னையார்க்கு இறுதிக் காலம் குறுகியதறிந்து, தம் வலக்கரத்தை அன்னார் மார்பிலும், இடக்கரத்தைத் தலையிலும் வைத்துச் செய்த திருக்கர தீக்ஷையால் அன்னார் பிராணனை வெளிச்சென்றுழலாமல் உள்ளத்தி லொடுக்கி விதேக கைவல்ய பதம் அளித்தருளினார்.

முற்கூட்டியே எண்ணமெதுவு மின்றியே வழக்கம்போல் ஒரு நாள் சிறிதுலாவி வரப் போனவர், மலைத் தென் பாரிசத்துப் பாலிதீர்த்தக் கரையில் அமைந்துள்ள தம் தாயின் சமாதியருகில் ஈசுவர நியதியால் எப்படியோ தங்கிவிட்டார். அற்பக் கூரைக் கட்டடமாயிருந்த ஆசிரமத்தில் துணிந்து பிரவேசித்து, அன்புருவான தம்மோடு தம்மவரையும் கோல் கொண்டு புடைத்த வன்கணரான கள்வரை நோக்கி, ''ஒரு காலில் அடித்தது போதாதெனில் இன்னொரு காலிலும் அடியுங்கள்'' என்று பெருமிதமாகக் கூறியதோடு

கள்வரை எதிர்த்துத் தாக்கத் துணிந்த ஆசிரம வாசி ஒருவரை நோக்கி, **''அவர்கள் தங்கள் தருமத்தைச் செய்தார்கள்; சாதுக்களான நாம், நம் தருமத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்''** என்று தடுத்தமைவித்தவாற்றால், உற்ற நோய் நோன்றலுயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு — என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்காய்த் தவராஜராகப் பிரக்கியாதி பெற்றார்.

(ஆதியில் வெறுஞ் சப்பாத்திக் காடாயிருந்த அப்பிரதேசம், இப்பொழுது, அன்பரான செல்வர் பலர் முயற்சியால், வருவார்க்கு வேண்டிய வசதிகள் வைத்தியசாலையுட்பட, வேத பாடசாலை கோசாலை முதலிய பல்வகை அங்கங்களோடுங் கூடிப் பெரியதோர் ஆஸ்தானமாக விளங்குகின்றது. தாயார் சமாதியான மாத்ரு பூதேசுவர ராலயம், தாயோடு வந்து முன்பு துறவு பூண்ட தம்பி நிரஞ்ஜனானந்த சுவாமி நிர்வாகத்தில் நூதனமாகத் திருப்பணியும் கும்பாபிஷேகமும் நிறைவெய்தி அவ்வாஸ்தானத்தை அலங்கரித்து நிற்கின்றது.) **சக்தி விலாஸங்களான எல்லா நிகழ்ச்சிகளிலும் ஒருவாறியைந்தாற் போலப் புறத்துத் தோன்றினும் அவர், தமது சகஜ சொரூபானுபூதியாம் உண்மைத் திறத்தால் ஒன்றோடும் இயைபின்றியே, உயிர்த்திருக்கையிலேயே கேவலம் சுத்த சிவத்தோடு இரண்டறக் கலந்த பரிபூரண ஜீவன் முக்தராக, அன்போடு அடிச்சார்ந்தார்க்கு அருள்பாலித்து வாழ்ந்து வருகின்றார்.**

நம் பாரத தேசத்தில் மட்டுமின்றிப் பிற தேசங்களிலும் பல்வேறு பாஷைகளில் அவர் சரித்திரமும் உபதேசங்களும் வெளியிடப்பெற்றுப் பரவியுள்ளதோடு, அவர் மீது கணக்கிலாத் துதிமாலைகளும் குன்று போற் குவிந்துள்ளன. தற்கால முறையில் உலக நலத்துக்காகத் தூலத்தில் அவர் யாதே செய்யினும் செய்யா தொழியினும், அவர் போன்ற மகாபுருஷரான ஜீவன்முக்தர் சும்மா உடலோடுயிர்த் திருக்கின்றதே உண்மையில் உலக க்ஷேமம் பயப்பதாம். எனவே, உலகோர் செய்த புண்ணியத்தால் அன்னார் திருமேனி திடமும் நலமும் பெற்று இன்னும் பலகாலம் இனிது வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் சுரப்பானாக.

அருணாசல ஸ்துதி பஞ்சகம், உபதேசவுந்தியார், உள்ளது நாற்பது முதலிய சொந்தப் பனுவல்களும், தேவிகாலோத்தரம், விவேக சூடாமணி முதலிய அனுவாதங்களும் அவரால் அருளப் பெற்றவை, ஸ்ரீ ரமண நூற்றிரட்டு என்னும் பெயரால் ஒரே புத்தகமாகத் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன. தத்தமக்கான பல்வேறு வகைகளிலும் துறைகளிலும் அவர்பால் ஈடுபட்டுத் தொண்டாற்றி வரும் பக்த சிஷ்ய கணங்களுள் யாரைச் சொல்வது, யாரை விடுவது? **எவ்வாற்றாலேனும் அவரருளாற் கவரப் பெற்று அன்பு பூண்டொழுகுவோர் மிகவும் தன்யரே.**

— oOo —

# ஸ்ரீ ரமண வைபவம்

கனகம்மாள்

'கருணார் ணவமாய்க் கருதக் கநிநல்கு
அருணா சலசிவ மீதாம்' - ஸ்ரீ பகவான்.

கருணைக் கடலாகிய இறைவன் மலை வடிவமாக அமர்ந்து தன்னை நினைத்த மாத்திரத்திலேயே ஜீவர்களுக்கு முக்தியை அளிக்கும் 'அருணாசல' மென்னும் சிவ சொரூபம் இதுவே என்று பகவான் கூறியருளுகிறார். இறைவன் தேஜோரூபத்தில் எழுந்தருளிய இடம்தான் அண்ணாமலையாகும். இந்தமலை நீண்டு நெடிதுயர்ந்து தனித்துக் காணப்படுகிறது. கொஞ்ச தூரத் திற்குப் பிறகு தான் இந்த மலையைச் சுற்றிச் சில சிறிய குன்றுகள் காணப் படும். இதன் தோற்றம் கம்பீரமானது. இந்த மலையின் சிகரம் யோகியின் கூர்மையான புத்தியைப்போல் ஆகாயத்திற்குள் ஊடுருவி நிற்கிறது. இந்த அருணாசல ஸ்புரணம்தான் சிறுவன் வேங்கடராமனைத் தன்பால் ஈர்த்துத் தன்னைவிட்டு அகலாமல் தானாக நிற்கச் செய்தது. இந்த மலை த்ருஸ்ய (காட்சி) மல்ல. த்ருக்காகிய ஞான ஒளியேயாகும். அத்துடன் இதுவே பூமியின் இதயமும் சிவனின் இதயப் பதியுமாகும். உலக மக்கள் உய்யும் பொருட்டு அருணாசலமே மானிட வடிவம் கொண்டு ரமணாசாரியனாக அருணையில் தங்கி அருள்பாலித்து வருகிறது என்று அறிந்தவர் கூறுவர். அவர் அவதரித்தது திருச்சுழி; ஆத்மானுபூதி அடைந்தது மதுரை; தேசிகனாக அமர்ந்து அருள் வழங்கியது திருவண்ணாமலை. இந்த மூன்றுமே பிரசித்த மான சிவ க்ஷேத்திரங்களாகும்.

உலகில் பிறந்த யாவரும் துக்கமற்ற சுகத்தையே விரும்புகின்றனர். ஆனால் உலகில் கிடைக்கக்கூடிய சுகமெல்லாம் துக்கத்தின் கலப்பேயாகும். பூரண நித்யசுகம் அடைய என்ன வழி? யாரை அணுகவேண்டும்? இதுவே மனதின் ஓயாத சிந்தனை. இதற்கு விடை காண வேத சாஸ்திரங்களில் கூறியபடி ஒரு சத்குருவைத் தேடிச் சரணடைந்து அவரது போதனையின்படி சாதனை புரியவேண்டும். அதற்காக காடு மலைகளில் அலைந்து தனித் திருந்து தீவிர ஆத்ம விசாரம் செய்து ஆத்மானுபவத்தையடைய வேண்டும். இது எல்லோராலும் தற்காலத்தில் சாதிக்க முடியுமென்று கூற முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம் முன்னோர் செய்த பெரும் புண்ணியத் தினால் ஆதி குருமூர்த்தமே எளிய மானிட வேடம் கொண்டு, ரமணப் பசும் பெயர் தாங்கி நாமிருக்கும் இடம் தேடி வந்தது. அத்தெய்வம் நம்மிடையே நம்மில் ஒருவராக வாழ்ந்து மனித சக்திக்கு அப்பாற்பட்ட செயல்களை இடையிடையே நமக்குக் காட்டியும் வந்தது. அடைதற்கரிதான ஆத்மானுப வத்தை மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து கொண்டே சதா அனுப வித்துக் கொண்டிருந்தது அந்த ரமண தெய்வம்.

பகவான் ரமணர் அபாரமான சக்தியைப் பெற்றிருந்தும் ஏதும் அறியாதவர் போல் கோவணாண்டியாக உலகில் சஞ்சரித்து வந்தார். முடிசார்ந்த மன்னரும் தன்னடி சார்ந்து போற்றினாலும் எளிய மக்களின் தோழனாய் நின்று அவர்கள் தரும் உணவை அமுதமாக உண்டு, அவர்கள் குடும்பத்தின் குசலம் விசாரித்து மகிழ்ந்தார். அதுபோலவே அவரது போதனைகளும் எளிய முறையில் கேட்பவர் உள்ளத்தில் ஊடுருவிப் பாயும் ஆற்றலுடன் இருந்தன. அவர் ஒருநாளும் தன்னை குருவாகக் கூறிக் கொண்டதில்லை. யாரையும் சிஷ்யனாக எண்ணியதுமில்லை. ஆயினும் அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு சொல்லும் செயலும் போதனையாகவே இருந்தது. அவர் சொல்வதைவிட தம் செயலில் நடந்து காட்டியதே அதிகம். அவர் தன்னடி சார்ந்த அன்பர்களின் தலைச்சுழியை மாற்ற வல்லவர். முக்தி மார்க்கத்தை உபதேசிப்பது மட்டுமன்றி தன்னைக் கதியாக அடைந்தவர்க்கு முக்தியை அளிப்பவருமாவார். அன்னை அழகம்மையின் நிர்யாணமே இதற்குப் போதிய சான்றாகும். இந்தச் சக்தி அவதார புருஷர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். பகவான் அவதார புருஷராயினும் அவரது லக்ஷியம் ஆத்மஞான போதனையேயன்றித் துஷ்டசிக்ஷண மல்ல. பகவானது முக்கிய உபதேசம் சாஸ்திர சர்ச்சையைத் தவிர்த்து ஆத்மானுபவத்தைப் பெறுவதேயாகும். தன்னுண்மையை (ஆத்ம சொரூபத்தை) அறிய தனக்குள்ளே மனதைத் திருப்பி விசாரிக்க வேண்டுமேயன்றி சாஸ்திரங்களை ஆராய்வதல்ல. 1898-ம் வருடம் அவர் தாயார் அருணை வந்து தன் மகனைத் திருப்பி அழைத்துச் செல்லும் முயற்சியில் தோல்வியுற்ற போது 'அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பான்; நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது; நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌனமாயிருக்கை நன்று' என்று எழுதிக் காட்டினார். பகவானது முதல் உபதேசம் தாய்க்கே கிடைத்தது. ஒரு காலத்தில் தந்தையாகிய சிவனுக்கு உபதேசம் செய்த 'சிவ குரு' வாகிய கந்தப்பெருமானே ரமணாவதாரத்தில் 'மாத்ரு குரு' வாகத் திகழ்ந்தார்.

1907-ம் வருடம் கணபதி முனிவர், விரூபாக்ஷ குகையில் இருந்த பகவானையடைந்து அவரது பாதங்களைப் பற்றிக் கொண்டு விம்மிய குரலுடன் 'படிக்க வேண்டியவை எல்லாம் படித்தேன்; வேத சாஸ்திரங்களின் சாரத்தையெல்லாம் அறிந்தேன்; ஆசை தீர மந்த்ர ஜபமும் செய்தேன். ஆனால் இதுவரை எனக்குத் தபசின் இயல்பு என்னவென்று தெரியவில்லை. உங்கள் சரணத்தை நம்பி வந்திருக்கிறேன். தயை கூர்ந்து தபசின் லட்சணத்தை அருள வேண்டும்' என்று பிரார்த்தித்தார். அதுவரை மௌன நிலையில் இருந்த பிராம்மண ஸ்வாமி சுமார் பதினைந்து நிமிடம் வரை அவரையே உற்றுப் பார்த்தபடி இருந்தார். பிறகு இனிய தமிழில் "நான், நான்" என்பது எங்கிருந்து உதிக்கின்றதோ அதைக் கவனித்தால் மனம் அங்கே லீனமாகும், அதுவே தபஸ். ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினால் அந்த மந்த்ரத்வனி (சப்தம்) எங்கிருந்து தோன்றுகிறதோ அதைக் கவனித்தால்

மனம் அங்கே லீனமாகும்; அதுதான் தபஸ்' என்று மிக உயர்ந்த உபதேசத்தையருளினார். உடனே முனிவரது மனம் மகோன்னதமான சாந்தியையும் சந்துஷ்டியையும் பெற்றது. இத்திவ்யோபதேசத்தை அருளிய பிராம்மண ஸ்வாமியை 'பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி' என்று உலகுக்குப் பறைசாற்றினார். அத்துடன் அவரும் அவரது சிஷ்யர்களும் பகவானுக்கு பக்தர்களாயினர்!

பகவானது உபதேசங்களில் தலையாயது 'நான் யார்' என்னும் ஆத்ம விசாரமே. 'நான்' என்ற மஹாமந்திரம் ஓங்காரத்தைக் காட்டிலும் சக்தி வாய்ந்தது. இதுவே இறைவனது முதல் பெயர் என்றுகூறி மந்திர சாஸ்திரத்திற்கு ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தார் பகவான். ஒரு சமயம் அன்பர் ஒருவர் கேள்விக்குப் பகவான் அருளியது. 'நீங்கள் இருப்பதை அறிவதற்கு உங்களுக்குக் கண்ணாடி தேவையா? நான் என்னும் உணர்வு யாவருக்கும் அனுபவந்தானே! இந்த நான் யாரென்றறிய சாஸ்திரங்களினால் என்ன பயன்? மனதை உள்முகமாக்கி தன்னையறிய வேண்டும். முக க்ஷவரம் செய்துகொள்ள எதிரில் கண்ணாடியை வைத்துக் கொள்கிறோம். கண்ணாடியைப் பார்த்து முகக்ஷவரம் செய்து கொள்கிறோமேயன்றி, கண்ணாடியில் உள்ள பிரதிபிம்பத்திற்குச் க்ஷவரம் செய்ய மாட்டோம் அல்லவா! அதைப் போன்றே சாஸ்திரங்கள் மோக்ஷமார்க்கத்தைக் காட்டித் தருகின்றன. அளவு கடந்த சாஸ்திர பாண்டித்தியமும் சர்ச்சையும் கண்ணாடியிலுள்ள பிரதி பிம்பத்திற்குச் க்ஷவரம் செய்வதைப் போன்றதே'.

எத்தனை சாஸ்திரங்கள் படித்தாலும், எத்தனை சாதனைகள், புண்ணிய காரியங்கள் செய்தாலும், அவை அனைத்தும் ஆத்மஞானியின் பார்வைக்கு இணையாகா. ஜீவன்முக்தனின் சாங்கத்யமானது மிகச்சிறந்த சாதனையாகும் என்பது பகவான் வாக்கு. இறைவனைச் சரணடைய, தன்முயற்சி, தெய்வானுக்கிரகம் இரண்டும் வேண்டும் என்பது பகவான் தீர்ப்பு.

'ஞானிக்கு அடையாளம் சமத்துவம்' என்பது பகவான் வாக்கு. ஆசாரிய வினோபா பாவே 'ஸ்ரீ ரமண பகவான் காட்டிய சமத்துவத்தைப் போல் இதுவரை பூமண்டலத்தில் அவதரித்த எந்த மகரிஷியும் காட்டியதில்லை' என்று புகழ்ந்திருக்கிறார். அன்னை அழகம்மைக்கு ஆசாரம் அதிகம். ஒரு முறை பக்தை தேசூரம்மாள் தின்பண்டம் கொண்டு வந்து பகவான் முன் வைத்தார். பகவான் அதில் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டே அம்மாவிடம் 'நீயும் சாப்பிடு' என்றார். அம்மா 'நீ சாப்பிடுகிறாயே அதுவே போதும்' என்றார். அதற்குப் பகவான் 'எல்லோருடனும் கலந்து இருப்பது உனக்குச் சரிப்பட்டு வரவில்லை என்றால் வீட்டுக்குப் போவது நல்லது' என்று அறிவுறுத்தினார்.

பகவான் அளவற்ற மகிமைகள் பெற்றிருந்தும் அவற்றைக் கொஞ்சம் கூட பொருட்படுத்தியதில்லை. சகல சித்திகளிருந்தும் ஏதும் தெரியாதவர் போல்

குப்த சித்தராக விளங்கினார். இதுவே ரமணாவதாரத்தின் சிறப்பு. ஆனால் பகவான் சன்னிதியில் நினைத்தது நிறைவேறும் என்பதற்கு ஆச்ரமத்தில் நடந்த சம்பவங்கள் ஏராளம். ஒருநாள் ஆச்ரம சர்வாதிகாரி உக்கிராணம் (ஸ்டோர்) காலியாகிவிட்டதால் அடியார்களை வெளியே போகச் சொன்னார். இதையறிந்த பகவான் 'பசு பறவையாதிகளுக்கு எந்த உக்கிராணம் இருக்கிறது! நீங்கள் யாரும் எங்கும் போகவேண்டிய அவசியம் இல்லை' என்றார். என்ன ஆச்சரியம் என்று வியக்கும்படி அன்று விடியற்காலையில் யாரோ ஒருவர் வண்டி நிறைய அரிசி, பருப்பு, காய்கறி முதலான சமையல் சாமான்களையெல்லாம் கொண்டுவந்து ஆச்ரமத்தில் இறக்கினார். தனக்குப் பிரார்த்தனையிருப்பதாகச் சொல்லி விலாசமும் சொல்ல மறுத்து உடனே போய் விட்டார். மற்றொரு நாள் ஆச்ரமத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் சமைத்து வைத்திருந்தார்கள். திடீரென்று இருபது பக்தர்கள் கூடுதலாக வந்துவிட்டார்கள். சாந்தம்மாள் பகவானிடம் விஷயத்தைத் தெரிவித்தார். பகவான் ஒன்றும் பேசவில்லை. சாப்பாட்டு நேரம் வந்ததும் எல்லோருக்கும் இலை போடப்பட்டது. முன்னறிவிப்பின்றி வந்த இருபது பக்தர்களுக்கும் சேர்த்து திருப்தியாகும்படி உணவு பரிமாறுவதற்குக் கண்டு விட்டது. சாந்தம்மாளுக்கு ஒரே ஆச்சரியம். இதைப் போன்ற பல அற்புதங்களை பகவானது வாழ்க்கை வரலாறு கூறும்.

பகவான் ரமணர் சமத்காரப் பிரியர். கம்பீரமான தத்துவங்களை நளினமான ஹாஸ்யத்துடன் கலந்து அன்பர் உள்ளத்தில் பதியவைக்கும் போதனையாளர். அவ்வப்போது அவர் காட்டிய சமத்காரங்கள் அடியாரை வியப்பில் ஆழ்த்திவிடும். பகவானுக்கு முழங்கால் மூட்டுவலி இருந்து வந்தது. அதற்கு ஏதாவது தைலம் தடவிக் கொள்வது வழக்கம். ஒருநாள் முழங்காலுக்குத் தைலம் தடவிக் கொண்டே 'எண்ணெய் இல்லையென்றால் இந்த வண்டி (சரீரம்) நடக்காதய்யா' என்று சிரித்தவாறே கூறினார். ஹாலிலிருந்த அனைவருக்கும் ஒரே சிரிப்பு.

ஒருநாள் பகவான் தரிசனத்திற்காக அப்பொழுதுதான் உள்ளே நுழைந்த ஒருபக்தரிடம், தம் எதிரில் உட்கார்ந்திருந்த ஸ்தூல சரீரமுடைய ஒரு அன்பரைக் காட்டி பகவான் அவரிடம் 'இதோ பாருங்கோ கொசு' என்றார். வந்த பக்தர் அந்த அன்பரைப் பார்த்ததும் இவ்வளவு பருத்த தேகமுடைய பெரிய மனுஷனைப் போய் 'கொசு' என்கிறாரே என்று திடுக்கிட்டார். இதற்குள் பகவான் வந்த பக்தரைத் தம் எதிரில் உட்கார்ந்திருந்த ஸ்தூல காயரான பக்தருக்கும் காட்டியபடியே 'இதோ பாருங்கோ குதிரை' என்றார். அந்த பக்தரும் மிக்க ஆச்சரியத்துடன் கோட், பாண்ட் அணிந்திருந்த கௌரவமான ஒருவரை பகவான் ஏன் குதிரையென்று கூறுகிறார்! என வியந்தார். பகவான் சிரித்தபடியே அவர்களிருவரையும் எல்லோருக்கும் காட்டி 'இவர் குதிரை, இவர் கொசு' என்று கூறி அவர்களது குடும்பப் பெயரைச் சேர்த்து 'இவர் குர்ரம் வெங்கட சுப்பராமையகாரு, இவர் தோமா வெங்கட ஸ்வாமி குப்தாகாரு' என்று கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார். தெலுங்கில்

'தோம' என்றால் கொசு, குர்ரம் என்றால் குதிரை. தோமா வெங்கட சுவாமி குப்தா என்ற பண்டிதரை 'கொசு' என்றும், 'குர்ரம்' வெங்கடசுப்புராமையாவை குதிரை என்றும் புன்சிரிப்புடன் அறிமுகப்படுத்தி அனைவரையும் வியப்பிலாழ்த்தினார்.

ஒரு பக்தர் பகவானிடம் 'நான் எத்தனை பிரார்த்தனை செய்தாலும் கடவுள் எனது முறையீட்டைக் கேட்பதில்லை. எனக்கு எந்தப் போகமும் வேண்டாம், உனது சேவகனாக ஏற்றுக்கொள் என்று வேண்டுகிறேன். அதற்கும் பதிலில்லை, காரணம் என்னவாக இருக்கலாம்?' என்று கேட்டார். அதற்குப் பகவான் 'ஒருவேளை உங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டால், பிறகு கடவுளை நீங்கள் நினைக்க மாட்டீர்களோ என்ற பயமாக இருக்கலாம்' என்று சிரித்தபடியே கூறியருளினார். பக்தர்களின் சிரிப்பு அறையில் எதிரொலித்தது. சமயத்திற்கு தக்கவாறு விடையளித்து வியக்கச் செய்வது பகவானுக்குக் கைவந்த கலை.

பகவானது நிராடம்பரமான எளிமைத் தோற்றம் வர்ணனைக்கு எட்டாதது. பக்தர்கள் விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டுவந்து கொடுத்தால் 'இது எதற்கு ஓய் நமக்கு' என்று அவற்றைத் தொடக்கூட மாட்டார். அணிவதற்குக் கௌபீனமும் கைக்கு ஒரு சிறிய துண்டும் தவிர வேறெதையும் உபயோகித்ததில்லை. பட்டுச் சால்வைகளைப் போர்த்து வதற்கும் அழகிய விரிப்புக்களை விரிப்பதற்கும் பக்தர்கள் பகீரதப் பிரயத்தனப்பட்டுத் தோல்வியே கண்டனர். பகவான் 'இந்தத் துண்டைவிட இன்னும் பெரியது எதற்கு? அரை கஜம் அகலம் முக்கால் கஜம் நீளம் இருந்தால் போதுமே. வியர்த்தால் துடைப்பதற்கு, வெய்யிலில் சென்றால் தலையில் போட்டுக்கொள்வதற்கு, குளிர்ந்தால் கழுத்தில் சுற்றிக் கொள்வதற்கு, உட்கார்ந்தால் கீழே விரிப்பதற்கு இது ஒன்றே போதும். இன்னும் பெரிதாக வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்' என்றார்.

பழம்பெரும் பக்தையான முதலியார் பாட்டி ஒருநாள் அரிசிப் பொரியைக் கொண்டுவந்து பகவானிடம் கொடுத்தாள். அதை அன்புடன் வாங்கிக்கொண்ட பகவான் எங்களைப் பார்த்து, 'இந்தப் பாட்டி நான் மலை மேலிருந்த காலத்திலும் எனக்கு ஆகாரம் கொடுத்து வந்திருக்கிறாள். இப்போது வயதாகிவிட்டதால் இங்கேயே இருந்துகொண்டு சாப்பிடு என்றால் கேட்பதில்லை' என்று சொல்லிக்கொண்டே பாட்டியைப் பார்த்து 'பாட்டி உனக்குத்தான் பார்வையில்லையே; எதுக்குத் தினமும் தரிசனத்திற்கு வருகிறாய்?' என்று கேட்டார். பகவானது பரிவான வார்த்தைகளைக் கேட்ட பாட்டி மகிழ்ச்சியுடன் 'பகவானே! உமது பார்வை என்மேல் படவேண்டு மென்றுதான் வருகிறேனே தவிர, நான் பார்க்கிறதற்கு இந்தத் தோல்கண்ணை வச்சுண்டு என்ன இருக்கு?' என்றார். பாட்டியின் வார்த்தையைக் கேட்ட கருணாமூர்த்தியான பகவான் பிரசன்னவதனத்துடன் பாட்டியைப் பார்த்து

விட்டு 'இந்தப் பொரியைக் கொஞ்சம் சூடுபண்ணி மிளகு பொடியைப் போட்டுக் கொண்டுவந்தால் ருசியாக இருக்கும்' என்று கூறினார். என்ன கருணை, என்ன பரிவு! இப்படி அடியார்களுக்குக் கருணை காட்டிய சம்பவங்கள் பலப்பல.

பகவானது தோற்றப் பொலிவு எழுத்தில் அடங்காதது. தரிசன மாத்திரத்தில் ஜீவர்களைத் தன்பால் கவரக்கூடிய எளிமையான தோற்றமே யாயினும் ஆழ்ந்து அகன்ற கடலைப் போன்று கம்பீரமானது. புன்சிரிப்பும், மலர்ந்த முகமும், கருணை நிறைந்த பார்வையும், ஆஜானுபாகுவான சரீரமும், பொன்னையொத்த திருமேனிச்சாயையும் குஞ்சர நடையும் காண்போரைக் காந்தமெனக் கவரக்கூடியது. அவரைத் தரிசித்த கண்கள் புறம் திரும்பாது. எளிய தோற்றமாயினும் யாரும் எல்லை மீறிப்போக முடியாது. அவரைத் தரிசிக்கச் செல்லும் போதே நம்மையுமறியாமல் ஒய்ந்து ஒடுங்கி விடுவோம். பகவான் ஜூப்ளி கொட்டகையில் வீற்றிருந்த போது சில பக்தர்கள் அருகில் சென்று உரையாடி நமஸ்கரித்து வந்தார்கள். அதைக் கண்ட எனக்கு நானும் அருகில் சென்று ஏதாவது பேச வேண்டுமென்று தோன்றியது. ஆனால் கூட்டம் நிறைந்திருந்ததால் கூச்சமாக இருந்தது. ஒருநாள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு இன்று எப்படியாவது பகவானுடன் பேசவேண்டு மென்ற உறுதியுடன் வந்தேன். தூரத்திலிருந்தே பகவானைத் தரிசித்தபடி வந்த நான், ஏதோ ஒவ்வொன்றாக எனக்குள்ளே கழன்று வீழ்வதைப் போல உணர்ந்தேன். நடை தளர்ந்து அருகில் நெருங்க நெருங்க வெற்றுடல் போலாகி என்னுடலை நானே இழுத்துக் கொண்டு செல்லும்படியாய் விட்டது. இந்த நிலையில் பகவான் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கூர்ந்த பார்வை என்னுள்ளத்தில் ஊடுருவிப்பாய்ந்து என்னை எங்கோ அழுத்தியது. அதற்கு மேல் என்னால் நகர முடியவில்லை. இருந்த இடத்திலிருந்தே நமஸ்கரித்து விட்டு உட்கார்ந்துவிட்டேன். அமைதியும் இன்ப லஹரியும் நாள்முழுவதும் என்னை விட்டு அகலவில்லை. பல முறை எனக்கு நேர்ந்த அனுபவம் இதுவே. பகவானுடன் பேசி எந்த இன்பத்தை அடைய நினைத்தேனோ அதைப் பேசாமலே அனுபவத்தால் பன்மடங்கு உணர்ந்து அழுந்தி விடுவேன். சில சமயம் ஏதாவது கேட்க வேண்டும் என்று தோன்றினாலும் பகவான் எதிரில் போய் நின்றால் என்ன கேட்பது என்றே புரியாது. கேட்பவனே இல்லாமல் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாலே திருப்தியாய் விடும். இது என் அனுபவம். பகவான் கோசாலைக்குப் போகும் போது கொஞ்ச தூரம் அடியார்களும் உடன் போவதுண்டு. அவர் ஆடி அசைந்து செல்லும் நடையழகைப் பின்னாலிருந்து பார்த்தபடியே நின்றுவிடுவேன். என் கண்களுக்கு இது ஒரு அரிய விருந்து.

பக்தர்கள் பகவானுக்குத் தின்பண்டங்கள் கொண்டு வந்து கொடுத்தால், தொண்டர்கள் அதில் கொஞ்சம் பகவானுக்குக் கொடுத்து விட்டு ஹாலில் உள்ளவர்களுக்கு வினியோகிப்பார்கள். இதைப் பார்க்கும் எனக்கு நாமும்

பகவானுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று தோன்றும். அதற்கான முயற்சி மனதில் எழுந்த போது ஒரு முறை பகவான் கூறியது: 'இங்கு வருகிறவர்கள் முதலில் வரும் போது சாதனை செய்து சாந்தியடைய வேண்டு மென்றுதான் வருகிறார்கள். இங்கு வந்த பிறகு யாராவது தின்பண்டங்கள் கொண்டு வருவதையும் அதை நான் சாப்பிடுவதையும் பார்த்தவுடன் தாமும் ஏதாவது கொண்டு வர வேண்டுமென்ற எண்ணம் வந்து விடுகிறது. அதை நிறைவேற்ற பிரயாசைப்படுகிறார்கள். எனக்கென்ன இதிலா விருப்பம்? ஏதோ அவர்கள் கொண்டு வருகிறார்களே என்று கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன். இதைவிட அவர்கள் பேசாமல் தாம் வந்த காரியத்தில் ஈடுபட்டு அதில் முயற்சி செய்வது தான் எனக்கு விருப்பம். இவையெல்லாம் எதற்கு? **சாதகன் தன் லக்ஷியத்தை விடாமல் இருக்கணும்!** அது தான் விரும்பத்தக்கது' என்று கூறிக் கம்பீரமாக வீற்றிருந்தார். அங்கு உட்கார்ந்திருந்த எனக்கு இந்த உபதேசம் எனக்காகச் சொல்லப்பட்டதாகவே தோன்றியது. இதன்பிறகு எப்போதாவது இந்த மாதிரி எண்ணம் வந்தால் பகவானது உபதேசம் என் மனதில் எதிரொலித்து அந்த எண்ணத்தை அழித்துவிடும்.

பகவான் சன்னிதியில் நடக்கும் மற்றொரு சிறப்பு என்னவெனில் அவர் யாரையும் வரவேற்பதோ, போகும்படியோ, இருக்கும்படியோ சொல்வ தில்லை. சாட்சி மாத்திரமாக வீற்றிருப்பார். ஒவ்வொருவரும் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டு தாம் வந்த காரியத்தைக் கூறுவர். பகவான் எல்லாவற்றிற்கும் 'சரி சரி' யென்று சொல்லுமே தவிர, இப்படிச் செய், அப்படிச் செய்யாதே என்று ஒரு நாளும் ஒருவரிடமும் கூறியதேயில்லை.

சன்னிதியில் வந்து தியானம் செய்பவர்கள் சில நாள் வராதிருந்தால் ஏன் வரவில்லை என்று கேட்பதுமில்லை. பகவான் இப்படி உதாசீனமாக இருந்தாலும் அவரவர்களும் குறித்த நேரத்தில் விதித்த காரியத்தை முறை தவறாமல் செய்துகொண்டிருப்பார்கள். கட்டுப்பாடோ நிர்ப்பந்தமோ எதுவும் இடையாது. ஆனால் அவரவர்களே தம்மைத்தாமே கட்டுப்படுத்திக் கொண்டு செயல் படுவர். ஜீவன் முக்தனின் சன்னிதி அவ்வளவுசக்தியும் சிறப்பும் உடையது.

அகிலமும் தனக்குள் அடங்கித் தானாக நிற்கும் பகவான் தன் பணியாளர்களுக்குத் தான் ஆணையிடாமல், அவர்கள் இட்ட ஆணைக்குத் தான் கட்டுப்பட்டு நடப்பார். அவர்களை 'ஏன் அப்படிச் செய்தாய்' என்று கேட்கவும் மாட்டார். அவர்களுக்கு அனுகுணமாகத் தன்னை மாற்றிக் கொள்வார். தீபோற்சவ சமயத்தில் கிரிப்பிரதக்ஷிணம் செல்லும் பக்தர்கள் ஏராளமாக ஆச்ரமம் வந்து பகவானைத் தரிசிப்பார்கள். பெரும்பாலும் கிராமத்து மக்கள் அந்தக் குளிரிலும் அரையில் ஈரத்துணியும் தலையில் மூட்டையும் இடுப்பில் குழந்தையும் சுமந்துகொண்டு, கூட்டம் கூட்டமாக அங்கு தரிசனத்திற்கு வருவார்கள். அவர்களது வருகையினால் பகவான்

சோபாவின் முன்பு மண்ணும் ஈரமும் சேர்ந்து அசுத்தமாய்விடும். இந்த எளிய மக்களிடம் பகவானுக்கு எல்லையிலாக் கருணை. இரவு ஒரு மணிக்கே எழுந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டு தரிசனம் கொடுப்பார். அந்த ஈரத்தையும் மண்ணையும் தவிர்ப்பதற்காகத் தொண்டர் ஒருவர் பகவான் குளிக்கச் சென்ற சமயத்தில், சோபாவின் முன்பு வைக்கப்பட்டிருந்த மரத்தினாலான தடுப்பை எடுத்துக் கொஞ்ச தூரத்தில் தள்ளி வைத்துவிட்டுப் போய்விட்டார். வருகிற வர்கள் தூரத்திலிருந்தே தரிசனம் செய்து போகட்டும் என்பது அவரது நோக்கம். குளித்துவிட்டு உள்ளே நுழைந்த பகவான் அங்கு நடந்திருக்கும் மாற்றத்தைக் கண்டார். தம்மை நாடிவரும் ஏழை எளிய பக்தர்களின் நிலையை உணர்ந்தவராய், அருகிலிருந்த தொண்டரைப் பார்த்து 'அவர் ஏதோ தள்ளி வச்சிட்டுப் போயிருக்கார்; நீங்க நம்ம சோபாவை அதன் கிட்டே நகர்த்திப் போடுங்கோ' என்று கூறினார். தொண்டர் எட்டிவைத்த தடுப்பை அருகில் போடச் சொல்லக் கூடாதா? 'சொற்பதம் கடந்த தொல்லோன் அன்பர் சொல், அற்பமும் கடவாது ஆணையில் நிற்போன்' என்று முருகனார் பாடியதற்கு இதுவே போதிய சான்றாகும். **இப்படிப்பட்ட உயர்வற உயர்ந்த ஜீவன் முக்தனின் அளவற்ற பெருமையும் மகிமையும் அவர் தேகத்துடன் வாழ்ந்த காலத்தோடு நின்று விடாமல் இன்றும் தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்குச் சன்னிதியில் அன்பர்கள் அடைந்து வரும் அனுபவமே சான்றாகும்.** இங்கு வரும் பக்தர்களுக்கு நிர்வாகிகள் எந்தக் கட்டுப்பாட்டையும் விதிப்பதில்லை. பக்தர்கள் சிலர் தியானத்திலிருப்பர்; சிலர் கிரிவலம் வருவர்; சிலர் பாராயணம் செய்வர்; சிலர் பூஜையைக் கண்டு மகிழ்வர். இவ்வாறு அவரவர்க்கு விருப்பமான சாதனையில் ஈடுபடுவர். எந்த நிர்பந்தமும் கிடையாது. அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவாறு பகவான் வழிநடத்திச் செல்கிறார். ஜீவன் முக்தனின் சன்னிதியில் ஜீவ பரிபாகம் நிறைவேறியே தீரும். பகவான் திருமேனியுடன் வாழ்ந்த காலத்தில் வந்ததைவிட தற்சமயம் ஆச்ரமத்திற்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை மிக மிக அதிகம். ஒவ்வொருவரும் சன்னிதியில் அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்தி சாந்தியை அனுபவிக்கிறார்கள். இங்கு மனம் அமைதியடைவதைப் போல் வேறெந்த இடத்திலும் அடையவில்லை என்று பெருமிதமும் அடைகிறார்கள். கட்டுப்பாட்டினாலோ விதிமுறைகளினாலோ பெற முடியாத சாதனையின் முன்னேற்றத்தைச் சன்னிதி மாத்திரத்தில் பெற்றுவிடுகிறார்கள். ஒருமுறை தரிசனம் செய்தபின் மீண்டும் பலமுறை வந்த வண்ணமாகவே இருக் கிறார்கள். இது சன்னிதியின் ஈர்ப்புச் சக்தியேயன்றி வேறல்ல.

காலதேசங்களைக் கடந்து நிற்கும் பகவான் ரமணர் அண்ணாமலைப் பதியில் தன் பொன்னடி எடுத்து வைத்து 1-9-1996ம் நாளுடன் நூறாண்டுகள் நிறைவு பெறுகின்றன. நாம் காலத்தால் கட்டுண்ட படியால் அவருக்கும் காலத்தினளவை கணக்கிட்டுக் கூறுகிறோம். கடந்த பொருளாக இருந்தும் கண்ணுக்கு விருந்தாக நாம் காணும் படி உலகில் வந்து உலாவியது ரமணத் திருமேனி. தனக்கு அளவற்ற புகழிருந்தும் அண்ணல் ரமணரைத் தன் மடியில்

அமர்த்திக் கொண்டு அகில உலகத்தினரையும் அவர் காலடியில் கொண்டு வந்து நிறுத்தி மேலும் தன் கீர்த்தியை வானளாவ உயர்த்திக் கொண்டது அண்ணாமலை. ஏற்கனவே பல மகான்களுக்குப் புகலிடமாக இருந்து ஜீவன் முக்தர்கள் மலிந்த நாடெனப் பெயர் தாங்கி நிற்கிறது. **ஜீவன் முக்தர்களின் பூதவுடல் மறைந்தாலும் அவர்களது சாந்நித்திய மகிமை என்றும் மறையாது.** ஆண்டுகள் செல்லச் செல்ல அதன் மகிமை கூடுமேயன்றிக் குறையாது. இதற்குச் சான்றாக நம் பகவானின் அதிஷ்டானம் (சமாதி) கண்கூடாக விளங்குவதை யாரும் அறிவர். இன்னும் பல நூற்றாண்டுகளில் அது எப்படி விரிவடைந்து நிற்கும் என்பதை நாம் பார்க்க முடியாவிட்டாலும் மனதினால் ஓரளவு ஊகித்து உணரலாம்.

பகவான் நாளும் உலாவித்திரிந்து, அன்பருடன் உரையாடி, அவர்கள் உய்யும் வழி உபதேசித்து வந்த புனிதத் தலமான ரமணாச்ரமத்தில் கல்லும் மரமும்கூட அவர் கதை சொல்லும் (நமக்குத் தான் அவற்றின் மொழி புரியாது). கண்ணன் திருவடி பட்டதால் பிருந்தாவனத்தின் மண்ணுக்கும் மாண்பு உண்டானதுபோல், நம் கமலக் கண்ணனாம் ரமணன் திருவடிப்பட்டு ரமணாச்ரமத்தின் மண்ணும் புனிதமாகியது. இருபத்தியெட்டு ஆண்டுகள் நடந்து திரிந்து தன் பாத ஸ்பரிசத்தினால் தூய்மையுறச் செய்து அந்த மண்ணுக்குள் தம் பூதுடலை மறைத்துக் கொண்டு அகில உலகிற்கும் அருள் பாலித்து வருகிறார்.

"வாழ்க அவர் பொன்னடி! அதை என்றும் போற்றி வணங்கிடுவோம்."

—o0o—

தேகத்தை நான் எனக் கருதுதலே தீவினையனைத்திற்கும் மூலமாம் தீவினை. அதுவே தற்கொலையுமாகும். இத்தேகாத்ம புத்தி, என்றும் உள்ள ஆத்மாவை இல்லாததற்கு நிகராகத் தோற்றுவித்தலால், இதனினும் கொடிய தற்கொலை எதுவும் இல்லை. ஆத்மாவே நான் என்னும் அனுபவமே சிறந்த புண்ணியமும், தருமமும், பக்தியும், ஞானமும் யாவுமாம். நானே பிரம்மம் என்னும் அனுபவம், அனாதிகாலமாய்த் தொடர்ந்து துன்புறுத்தும் கர்ம மூட்டையை (சஞ்சிதத்தை), சூரியோதயம் இருளை அகற்றுவதைப்போல ஒரே கணத்தில் அகற்றிவிடும். இடையறாது தியானிப்பவனைத் தீவினை எதுவும் அணுகவே முடியாது. அவாவே மாயை; அவாவற்று இருத்தலே ஞானம்.

**— ஸ்ரீபகவத் வசனாம்ருதம்**

# உமா ஸஹஸ்ரம்

## காவ்யகண்ட கணபதி முனிவர்

(காவ்ய கண்ட கணபதி முனிவர் தமக்குக் கிடைத்த முதல் உபதேசம், சக்தியின் அருளினாலேயே கிடைத்தது என மகிழ்ந்து சுமார் மூன்று வாரங்களில் 'உமா சகஸ்ரம்' என ஆயிரம் பாடல்கள் கொண்ட நூலை வட மொழியில் இயற்றினார். அதில் சுமார் இருநூறு பாடல்களுக்கு மேல் ஸ்ரீ பகவான் முன்னிலையில் ஒரே இரவில் 4 மணி நேரத்தில் மாமரத்துக் குகையில் இயற்றப்பட்டதாகும். இந்நூலில் ஸ்ரீ பகவானைக் குறித்த பாடல்கள் சிலவற்றின் தமிழாக்கத்தை இங்கு காணலாம். தமிழாக்கம்: ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ).

1. பிறைசூடிய பெம்மானிடம் இடைவிடாப்பேரன்பும், ஸகல ஜீவராசிகளிடமும் கருணையும் கொண்ட கௌரியின் கடாக்ஷம், ரமண முனிவர் போன்று எனது அஞ்ஞானத்தை அகற்றுக.

-அத்தியாயம் 13 -பாடல் 2

2. தாயே! ஞானரஸம் என்னும் நினது பாலைப் பருகிய ரமணன் தவராஜனானான், ஞானமயனானான். பூரணனானான். ஈசுவரி! அவனது ஆன்மாவாம் நீ அவனையின்னும் அதனால் வளர்க்கின்றனை.

-அத்தியாயம் 26 -பாடல் 20


3. அன்னையே! பார்வதி! உண்ணாத நினது குச கலசத்தினின்று ஞானமயப்பாலை நின் அன்பிற்குரிய குஹனுக்கு வேண்டிய மட்டும் கொடுத்தாயிற்று. ஈசுவரி! சிறிதளவாவது எனக்கும் கொடு.


-அத்தியாயம் 26 -பாடல் 21

4. பிறப்பற்ற தாயே! நின்பத வொளியை நேரே பற்றி, அஃது உதிக்கும் மூலத்தை ஸ்ரீ ரமண மகரிஷிகள் அருளிய வழியே யான் மீண்டும் மீண்டும் நாடி முயன்று வருகின்றேன்.

-அத்தியாயம் 33 -பாடல் 14

—oOo—





# ஸ்ரீ ரமண
# நூற்றாண்டு பதிகம்
## முருகைய பங்கஜாக்ஷி

ஆதிபரம் பொருளாய அருணேசன் அன்றொருநாள்
 ஆதிரையின் அன்றிரவு அறுமுகனை அன்புடனே
மேதினிபுகழ் திருச்சுழியில் வேதியராம் சுந்தரர்க்கு
 மேவுதிரு மைந்தனென மிளிர்வாய்நீ, யாம் உன்னை
கோதறுநல் வயதுபதி னாறதனில் குளிர்முகத்தோய்
 குவலயத்தோர் உய்ந்திடவே குலவியுனை அழைத்திடுவேன்
ஜோதிமலை அருணமலை சுகிர்தமிகு சோணமலை
 சொலற்கரிய ஞானமலை சொந்தமுடன் வந்திடுவாய் ! 1.

அன்றரனும் அவ்வாறு அறைந்திடவே அழகன்வேல்
 ஐயனுசீர் சுழியற்பதி சுந்தரர்க்கும் அழகனைக்கும்
பொன்றுபுகழ் மார்கழியில் புனர்வசுவில் பொன்னுலகோர்
 போற்றிதுதி பாடிடவும் பூவுலகோர் வணங்கிடவும்
நன்றுநன்று எனமேலோர் நனிசிறக்க வாழ்த்திடவும்
 நற்றவத்தோர் உளங்குளிர நல்லனவும் தழைக்கஞானக்
கன்றெனவே காசினியில் கந்தன்வேங் கடராமன்
 கலக்கமிலா பெருநிலையும் காட்டிடவே வந்துதித்தான் ! 2.

பெற்றோரும் உற்றோரும் பேணிமிகப் பிரியமுடன்
 பெட்புறவே வளர்த்திட்டார் பெரும்ஞானத் தவக்களலை
சிற்றாரொடும் கூடியவன் சிறப்புறுகல் விப்பயின்றான்
 சின்னாளில் அவன்யதார்த்தம் தெளிவுறவே தெரிந்ததம்மா!
உற்றாரொரு வரங்குற்றவர் உரைத்திட்டார், உரைகடந்த
 உயரருணா சலமதனின் ஒப்பில்லா மாண்பினையே
கற்றாரும் அறியொண்ணா கனல்மலையும் பேரொளியாய்
 கவர்ந்தவனின் உள்ளமதில் கனன்றதரு ணாசலமாய் ! 3.

தெற்றெனவே அவன்ஒருநாள் தேர்ந்திட்டான் மரணநிலை
தேகம்யான் அல்லவென திடஞான திரத்தால்
கற்றறிந்தான் அழிவில்லா ஆன்மாநான் எனக்கண்டான்
கல்லாகலை ஞன்நம்வேங் கடராமன் கருத்ததனில்,
சற்றுமுதவா படிப்பினையும் சலிப்புறவே தன்னிட்டான்
சாந்திமிகு மோனநிலை சார்ந்திட்டான், சதறியா
உற்றதமையன் உரைத்திட்டார் சும்மாயிருக் கும்உனக்கு
உற்றாரொடு படிப்பெதற்கு? எனவருந்தி அகன்றிட்டார். 4.

பதினாறு வயதுடைய பாலகனும் பாங்குடனே
பற்றற்றான் பசிமறந்தான் பாசமிகும் தாய்மறந்தான்
மதிமுகத்தோன் மதுரைவிட்டு மகிமைமிகு அருணைவர
மாசற்ற மனத்தினனாய் மறைபோற்றும் மாண்பினனாய்
எதனாலும் எவராலும் எந்நாளும் மாற்றவொணா
ஏற்றமிகு திடஞான ஏந்தலெனப் புறப்பட்டான்
அதிபுனித ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று
ஆறதனில் செப்டம்பர் முதல்நாளில் வந்தடைந்தான். 5.

அருணைநகர் ஆலயத்தை அதிகாலை அடைந்தவனும்
அப்பனேயான் வந்தடைந்தேன் அருணாசலா, எனப்புகன்று
கருணைமிகு கழலிணைகள் பணிந்தவனும் வெளிபோந்தான்
கண்டறியா ஓரன்பர் கரிசனமாய் அழைத்தேகி
பெருமையுடன் களைவித்தார் பெருந்தவத்தோன் முடிகள்தனை
பெம்மானின் ஆணையென பிள்ளையவன் ஏற்றுணர்ந்து
ஒருமையுடன் உடையாக கௌபீனம் தான்தரித்து
உற்றபொருள் பூணூலும் உதரிட்டான் குளமதனில். 6.

பின்னென்ன வேண்டுமினி பெற்றவர்தம் பொறுப்பன்றோ ?
பிஞ்சகனை மனதிருத்தி பெருந்தவத்தில் ஆழ்ந்துவிட்டான்
அன்னையவன் என்செய்வான்? அபிஷேகப் பாலதனை
அடியர்பால் சேர்ப்பித்து அரும்மைந்தற் குண்பித்தான்
அன்னவனும் பாதாள லிங்கமுதற் பலஇடங்கள்
அமர்ந்துதன்னுள் ஆழ்ந்திட்டான், பின்னர்குரு மூர்த்தமுடன்
அன்பர்தொழு மலையமைந்த விருபாக்ஷிகந் தாச்சிரமம்
அடியர்பலர் சூழ்ந்திருக்க அருள்ரமணன் எனத்துலங்கி. 7.

அகிலகுரு எனவிளங்கும் அன்புசுதன் தனைநாடி
அன்னையவள் அழகம்மை அடைந்திட்டாள் அடைக்கலமாய்
சுகிர்தமொரு வடிவான சுயம்ஜோதி ரமணனவன்
சுத்தாத்ம நிலைதந்து அன்னையினை சொலற்கரிய
மகிமைசேர் மாத்ருபூதேஸ் வரியென்னத் திகழ்வித்தான்
மாமுனிவன் பகவான்ஸ்ரீ ரமணமஹ ரிஷிகளென்ன
முகிலனைய கருணையினால் முன்னைவினைத் தீர்த்தன்பர்
முக்திநிலை எய்திடவும் மோனநிலை தெளிவித்தான். 8.

தெள்ளத்தெளி ஞானமொரு தேசிகனாய் ரமணனவன்
தீயவினை தனையோட்டி தீர்க்கமிகு வழிகாட்டி
வள்ளலவன் அருள்நிறைந்த வாரியெனப் பேரின்பம்
வாரிவழங் கிட்டதனால் வாழ்த்திபதம் பணிகின்ற
கள்ளமறு அன்பருளம் களிநடனம் புரிகின்றான்
காலனவன் காமனவன் கடிதோடி மறைந்திடவே
விள்ளவொணா வித்தகனை விண்ணவரும் விரும்பிதொழும்
வேலவனாம் ரமணேசன் விரைமலர்தாள் போற்றுவமே. 9.

அந்நாளில் நூறாண்டு முனம்வந்த அண்ணலுடன்
அடியவராம் நாமெல்லாம் அன்றும்இருந் திட்டதனால்
இந்நாளில் இந்தவிழா நூற்றாண்டில் இன்பமுடன்
இணைந்திட்டோம் இனிமையுற ஏற்றமுற மகிழ்ந்திட்டோம்
சிந்நாளின் தொடர்பல்ல சிறப்புறுநம் காலமெலாம்
சிந்தைதனில் சின்மயனாய் இறைரமணன் இருப்பதனால்
எந்நாளும் எப்பிறப்பும் எந்தைரம ணேசனடி
என்றென்றும் துணையென்று இன்பமுறப் போற்றுவமே. 10.

–o0o–

பிறர் எவ்வளவு கெட்டவர்களாய்த் தோன்றினும் அவர்களை வெறுத்தலாகாது. விருப்பு வெறுப்புகள் இரண்டும் வெறுக்கத்தக்கன. பிரபஞ்ச விஷயங்களில் அதிகமாய் மனத்தை விடக்கூடாது. சாத்தியமானவரையில், அன்னியர் காரியத்தில் பிரவேசிக்கக் கூடாது. பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்ளுகிறான். இவ்வுண்மையை அறிந்தால் எவன்தான் கொடாதொழிவான்?

— **ஸ்ரீபகவான்** நூல் திரட்டு

# கருணையால் என்னை ஆண்டவன்

## சரோஜா கிருஷ்ணன்

பகவான் விருபாக்ஷ குகையில் இருந்த காலத்தில் எங்கள் தாத்தா நாரா யணய்யர் திருவண்ணாமலையில் அரசாங்க டாக்டராக சில வருஷங்கள் பணியாற்றி வந்தார். பகவானிடம் ஆழ்ந்த பக்தியும் அன்பும் கொண்டிருந்த அவர் இங்கிருந்த காலத்தில் ஒரு நாள் கூட விடாமல் பகவானைத் தரிசித்து வருவது வழக்கமாம். அதிகாலையில் ஸ்நானம் செய்து மடியாகப் பட்டுடுத்தி பட்டை பட்டையாக விபூதி பூசிக் கொண்டு வெறுங் காலுடன் கையில் ஒரு செம்பு நிறைய காய்ச்சிப் பக்குவம் செய்த பாலுடன் நாமஸ்மரணம் செய்து கொண்டே மலையேறி விருபாக்ஷ குகையில் பகவானைத் தரிசனம் செய்து திரும்புவாராம். அதற்கு அப்புறம் தான் மற்ற எல்லா வேலைகளும்.

ஒரு சமயம் ஊரில் பயங்கர ப்ளேக் கொள்ளை நோய் பரவி அழிக்க ஆரம்பித்து, ஜனங்களை எல்லாம் ஊரைவிட்டு வெளியேற்றி வேறு இடங் களுக்குப் போகக் கட்டாயப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் பகவான் பச்சையம்மன் கோயிலில் பத்திரமாக இருக்கும் என்று தீர்மானித்த டாக்டர் நாராயணய்யர், பகவான் யாருடைய இடையூறும் இல்லாமல் பச்சையம்மன் கோயிலிலேயே செளகரியமாக இருக்க ஏற்பாடு செய்து பார்த்துக் கொண்டார்.

தாயார் சமாதியருகிலேயே பகவானும் வந்து சேர்ந்தபின், ஒரு சமயம் ஆச்ரமத்தை நடத்தத் திணறும்படி பணத்தட்டுப்பாடு ஏற்பட்டதாம். அடுத்த வேளை சாப்பாட்டிற்கே என்ன செய்வது, எப்படிச் சமாளிப்பது என்று யோசிக்க வேண்டிய நிலை உண்டானதால் ஆச்ரமவாசிகள் (நிர்வாகிகள்) ஆலோசித்து, அப்போது புதுக்கோட்டையில் டாக்டராக இருந்த நாராய ணய்யரிடம் போகத் திட்டமிட்டார்கள். தண்டபாணிசுவாமியும் ராமசாமி பிள்ளையும் புதுக்கோட்டை போய் டாக்டரிடம் நிலைமையை விளக்கினார் கள். விஷயத்தைக் கேட்ட உடனேயே தன்னிடம் கைவசம் இருந்த பணத்தை (சுமார் ரூ.3000) திரட்டிக் கொடுத்து செட்டி நாட்டுப் பணக்காரர்களுக்கும் அரண்மனை உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் சீட்டு எழுதிக் கொடுத் தனுப்பினாராம். அந்தக் காலத்தில் அங்கு எல்லோருக்கும் (வெள்ளைக்கார ரெசிடெண்ட் உட்பட) அவரிடம் அலாதி மதிப்பும் மரியாதையும் இருந்தது. அவர் வந்து பார்த்தாலே வியாதி குணமாய்விடும் என்று நம்பினார்கள். தர்மாத்மா ஜனகரைப்போல் கர்ம யோகி என்று பெயர் பெற்றிருந்தார். அதனால் அவருடைய சீட்டைப்பார்த்ததும் பணம் குவிந்துவிட்டதாம். நிலைமை சீரானதுடன் அநேக ஆச்ரம சீரமைப்பு வேலைகளும் நடந்தேறின. ஆச்ரமப் பக்கம் ஓடிக்கொண்டிருந்த ஓடையைத் திருப்பி விட்டு வடக்கி லிருக்கும் கற்சுவரைக் கட்டியதுடன் ஆச்ரம கட்டடத்துக்கும் பலமான

அஸ்திவாரம் அமைத்தார்களாம். இந்த விவரமெல்லாம் ராமசாமிபிள்ளை பிற்காலத்தில் ஒருநாள் இரவு முழுவதும் கணேசனை உட்காரவைத்து விவரித்தாராம். கணேசன் என்னிடம் சொல்லியிருக்கிறார். நானும் குடும்பப் பேச்சில் லேசாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலையில் தாத்தா இருந்த காலத்தில் பகவான் கையில் அன்ன மிடும் பாக்கியம் அவர் மனைவி செல்லம்மாவுக்குக் கிடைத்ததுண்டாம். சாப்பாட்டைத் தயாராக வைத்துக் கொண்டு காத்திருக்க வேண்டும். வாசலில் பிக்ஷைக்காக பகவான் கையைத் தட்டும் சப்தம் கேட்டவுடன் சற்றும் தாமதியாமல் கொண்டு போய் கையில் இடவேண்டும். இல்லாவிட்டால் பகவான் நிற்காது போய்க் கொண்டேயிருக்குமாம். அவர்கள் செய்த புண்ணியம் தான் அவர்கள் குழந்தைகளும் மூன்றாவது தலை முறையாக நாங்களும் பகவானை அடையும் பாக்கியம் கிடைத்தது. நான்காவது, ஐந்தாவது தலைமுறைகளாக எங்கள் பேரன் பேத்திகளும் தொடர்கிறார்கள்.

பகவான் மலையடிவாரத்தில் வந்து சேர்ந்த புதிதில் தாத்தா நாராயணய்யர், மூத்த மகள் கௌரியையும் (என் அம்மா) நாலு வயது ராமையாவையும் கைக்குழந்தையான என்னையும் கூட்டிக் கொண்டு பகவான் தரிசனத்திற்காக ஒரு தூக்குப்பாத்திரம் நிறைய ஜிலேபி முதலியவை எடுத்துக் கொண்டு வந்தா ராம். எனக்குத் தெரியாவிட்டால் என்ன, பகவான் என்னைப் பார்த்ததே விசேஷம் அல்லவா! அப்போதெல்லாம் ரொம்ப காலம் வரை எனக்குக் கூடத் தெரிந்து, பகவானிடம் சின்னக் குழந்தைகளைக் கையில் கொடுப்பார்கள். பகவானும் மடியில் கொஞ்ச நேரம் 'த்சு, த்சு' என்று விளையாட்டுக் காட்டி விட்டு, திருப்பிக் கொடுப்பதுண்டு. (அந்த மாதிரி என்னையும் தாத்தா பகவான் கையில் கொடுத்திருக்கலாம் என்று நானே நினைத்துச் சந்தோஷப் பட்டுக் கொள்கிறேன்). குழந்தைகளைக் கண்டாலே பகவான் முகத்தில் ஒரு தனிப்பிரகாசமும் மலர்ந்த சிரிப்பும் தோன்றும். சற்று நின்று கைத்தடியால் லேசாகத் தட்டியோ கையால் தட்டிக் கொடுத்தோ ஒன்றிரண்டு வார்த்தை கள் சொல்லிவிட்டுப் போவது வழக்கம். அதற்காகவே பகவான் வரும் வழியில் குழந்தைகளை வைத்துக் கொண்டு நிற்பார்கள்.

அப்போதெல்லாம் பிற்பகலில் யாராவது ஏதாவது பக்ஷணமோ பழமோ கொண்டு வந்து பகவானுக்குச் சமர்ப்பித்தால் அது அப்போதைக்கப்போதே எல்லோருக்கும் வினியோகிக்கப்படும். எங்களுக்கெல்லாம் அது மிக உற்சாக மான விஷயம். வெளிநாட்டவர் விதவிதமான ஆடைகளில் வருவதையும் நம்ம வர்களே அனேகவித அலங்காரங்கள் செய்துகொண்டு வருவதையும் சுவாரசி யமாக வேடிக்கை பார்ப்போம். நடுநடுவே பகவான் யாரைப் பார்க்கிறது, என்ன செய்கிறது, சொல்கிறது என்றெல்லாம் கவனித்துக் கொண்டிருப்பேனே ஒழிய, பகவானின் பெருமையோ அதன் உபதேசமோ ஒன்றும் மனதில் பதிய வில்லை. அந்த சமயம் ராஜகோபால சித்தப்பா ஆச்ரமத்தில் நடக்கும் விசே

ஷங்களை உடனுக்குடன் வீட்டில் வந்து எங்களுக்குச் சொல்வார். அதில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுகிறேன்.

ஒரு நாள் காலை சித்தப்பா வேகமாக வீட்டிற்கு ஓடிவந்து இரண்டணா எடுத்துக் கொண்டு, வந்த வேகத்திலேயே ஆச்ரமத்திற்குத் திரும்பினார். சாயங்காலம் வந்துதான் விவரம் சொன்னார். பகவான் அன்றுகாலை வழக்கம்போல் மலைக்குப் போய்விட்டு வரும் போது திடீரென ஒருபுறா பகவான் காலடியில் விழுந்தது. பகவான் அதைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு ஆதரவுடன் மெதுவாக தடவிக் கொடுத்துக் கொண்டே புறா எங்கிருந்து வந்து விழுந்தது என்று திரும்பிப் பார்த்தது. சற்றுதூரத்தில் ஒரு வேடுவப்பையன் தயங்கி நின்று கொண்டிருந்தான். 'அவனுக்குப் பசிக்கு இது ஆகாரம், இரண்டணா இருந்தால் அவன் பசி தீர்ந்து விடும்' என்று புறாவை அன்புடன் தடவிக் கொண்டே பகவான் சொல்லித்தாம். பக்கத்தில் ராஜகோபாலய்யரும் பணியாளும் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் ஓடிப்போய் ஆச்ரமத்தில் கேட்டு வாங்கி வந்திருப்பார்கள். தன்னுடைய ஆச்ரமம் என்ற எண்ணம் பகவானுக்கு இருந்தால் தானே! சித்தப்பா, ஆபீசுக்கு ஓடிவந்து, ஒன்றுமே சொல்லாமல் தனக்கென்று கடனாகக் கேட்டு இரண்டணா வாங்கிக் கொண்டுபோய் வேடுவப் பையனிடம் கொடுத்தனுப்பிவிட்டு, வீட்டிலிருந்து இரண்டணா எடுத்துப் போய் ஆபீசில் கொடுத்துவிட்டார். பகவான் சொன்னதைத் தானே செய்ய வேண்டும் என்ற ஆசை அவருக்கு.

பகவான் கையில் புறா மயங்கியே கிடந்தது. நல்ல அடிபட்டிருந்தது போலும். ஹாலுக்கு வந்தபின்னும் அது எழவில்லை. 'பச்சை திராட்சையை இதன் தலையில் பிழிந்து விட்டால் சரியாகிவிடுமே' என்று பகவான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெளியூரிலிருந்து பக்தர் ஒருவர் சில கொத்துக்கள் பச்சை திராட்சைப் பழத்துடன் உள்ளே நுழைந்தார். 'அடடே! சொல்லிக் கொண்டிருக்கும்போதே திராட்சை வந்துவிட்டதே' என்று ஆச்சரியப்படுவதுபோல சொல்லிவிட்டு பகவான் புறாவின் தலையில் திராட்சையைப் பிழிந்தது. சற்று நேரத்தில் புறா அசைந்து தலையைத் தூக்கிப் பார்த்தது. கொஞ்சம் தத்தி நடந்து, பகவானுக்குக் கொஞ்சம் பறந்து காண்பித்துவிட்டு பறந்து வெளியே போய்விட்டது. இந்தப் புறா வைத்தியமெல்லாம் எந்தப் பிராணி-வைத்தியனிடம் எப்போது எந்த இடத்தில் பகவான் கற்றுக் கொண்டது?

சேலத்தில் ஒரு நாள் ஒரு கூடை நிறைய பெரிய விளாம்பழங்களைச் சித்தப்பா ராஜகோபாலய்யர் வாங்கிக் கொண்டு வந்தார். உடனேயே கிளம்பி அதை பகவானிடம் கொடுக்க திருவண்ணாமலை போய்விட்டார். அவர் ஹாலில் பழங்களுடன் நுழைந்ததும் பகவான், 'அடடே! இப்போத் தானே விளாம்பழம் தேவை, எங்கு கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டி

ருந்தோம்! இதோ சேலத்திலிருந்து வந்து விட்டதே' என்றாராம். என்ன அவசியத்திற்காக விளாம்பழங்கள் தேவைப்பட்டன என்பது ஞாபகமில்லை. ஏதாவது சிகிச்சை விஷயமாக இருக்கலாம். இப்படித்தான் ஒரு சமயம் ஒரு காரணமுமில்லாமல் திடீரென்று ஒரு பாட்டில் இங்க் வாங்கிக்கொண்டு சேலத்திலிருந்து பஸ் ஏறி திருவண்ணாமலை வந்தார். ஆச்ரமம் வந்த பின்னரே பகவான் அப்போதுதான் இங்க் கேட்டதும் ஆச்ரமத்தில் தீர்ந்து விட்டிருந்ததும் தெரிந்தது. சித்தப்பாவிடம் ஏன் இங்க் வாங்கி வந்தீர்கள் என்று கேட்டதற்கு 'ஏதோ தோன்றிற்று வாங்கி வந்தேன்' என்றார். இது மாதிரி பகவான் ஏதாவது சொல்லும் சமயமே யாராவது அதையே எதேச்சையாகக் கொண்டு வருவதும் அடிக்கடி நடக்கும். ஒவ்வொரு தரமும் பகவான் ஆச்சரியப்படுவதும் தவறாது. சர்வக்ஞன் நினைத்தால் நடவாதது உண்டா? ஆனால் அப்படியாரும் நினைத்து விடக்கூடாதே! இயற்கையாக, எதேச்சையாக நடந்தது போல் இருக்கணுமாம்!

எதிர்பாராமல் சில சமயம் வேஷம் கலைவதுண்டு. ஒரு நாள் 'வேயுறு தோளி பங்கன்' என்ற பாட்டைப் பற்றிய பேச்சு வந்தது. 'பாண்டியன் சபைக்குப் போவது ஆபத்து; சமணர்கள் கொடியவர்கள்' என்று அப்பர், சம்பந்தரைத் தடுத்தபோது அவர் (சம்பந்தர்) பாடிய பதிகம் இது. இதில் கடைசியில் 'ஆன சொன்மாலை யோதும் அடியார்கள் வானில் அரசாள்வர், ஆணை நமதே' என்று வருகிறது. இதைச் சொல்லி பகவான் தலை உயர்த்தி நெஞ்சு நிமிர்ந்து வலது கையால் மார்பில் தட்டிக் காண்பித்தது. அந்த கம்பீரத்தைச் சொல்வது எளிதல்ல. பகவானேதான், ஆதிசங்கரர், திராவிடசிசு சம்பந்தர் என்ற கருத்து அனேகருக்கு உண்டு. அதைத்தான் 'ஆணை நமதே' என்று மார்பில் தட்டிக் காண்பித்ததோ? இதைப்போலவே கல்யாணப்பாட்டு என்று நாங்கள் சொல்லும் 'நீலங்கொள் மேகத்தின் மயில் மீதே' என்ற திருப்புகழின் கடைசியில் 'நானென்று மார்தட்டும் பெருமாளே' என்று வரும் இடத்திலும் மார்தட்டிக் காண்பித்ததாம். பகவானை முருகனாகப் பார்த்தவர்களுக்கு இது ஒரு சான்று போலும். 'அரியாதி இதர ஜீவரது அகவாரிஜ குகையில் அறிவாய்ரமி பரமாத்துமன்' ஆகிய பகவானுக்கு எல்லாம் ஒன்றே. அருணாசல ரமணன் சர்வமும் தானே.

ஆச்ரமத்தில் அனேக சமயங்களில் மனநோயாளிகளைக் கூட்டி வருவதுண்டு. பகவான் சந்நிதியில் குணமாகலாம் என்று நம்பி உறவினர் கூட்டி வருவார்கள். அனேகமாக நாமெல்லோருமே ஏதாவது ஒரு விதத்தில் மனநிலை தடுமாறியவர்கள் தானே. ஆனால் நம்மிடமெல்லாம் அபார கருணை காட்டும் பகவான் பைத்தியங்களிடம் மட்டும் கடுமையாகவே இருக்கும். இது எல்லோருக்கும் தெரியும். காரணம் யாருக்கும் தெரியாது. அவரவர் கற்பனைப்படிச் சொல்லிக் கொள்வார்கள். ஒரு சமயம் பகவானுக்கு ஏதோ உறவான சோமு என்ற மனநோயாளியைக் கூட்டி வந்தார்கள். ஆச்ரமத்தில் எல்லோரும் அவன் என்ன செய்தாலும் ஒன்றும் சொல்வதில்லை. பகவா

னின் உறவினன் என்ற மரியாதையே காரணம். வர வர அவனுடைய அட்டகாசம் ஆச்ரமத்திற்கு வெளியிலும் பரவத் தொடங்கியது. அப்போ தெல்லாம் ரமண நகரில் ஒன்றிரண்டு வீடுகளே இருந்தன. எனக்குச் சுமார் பதினேழு வயதிருக்கலாம். சாரதா (தங்கை), மூன்று வயது சின்னவள். இந்த சோமு, வீட்டில் புகுந்து எங்கள் இரண்டு பேரையும் நமஸ்கரித்துக் கொண்டே 'தேவி, நீ லக்ஷ்மீ, நீ சரஸ்வதி' என்றெல்லாம் பிதற்றினான். நாங்கள் ரொம்ப பயந்து விட்டோம். ஒரு நாள் நடு ராத்திரி சத்தம் போட்டுக் கொண்டே வந்தான். டைபாய்டு ஜுரத்தில் படுத்துக் கொண்டி ருந்த என் அகத்துக்காரர் சத்தம் கேட்டு திடீரென விழித்துக் கொண்டு அவன் உள்ளே வந்துவிடப் போகிறானென்ற பயத்தில் கதவை சாத்த எழுந்ததில் நெஞ்சுவலி வந்து துடித்துவிட்டார். (வெய்யில் காலமானதால் கதவைத் திறந்து வைத்து வெளியில் சித்தப்பா முதலியவர்கள் படுத்திருந் தார்கள்). இந்த விஷயத்தைப் பகவான் காதில் யாரோ போட்டிருக்கிறார்கள். 'ரெண்டு சாத்துவதற்கென்ன?' என்று பகவான் சொன்னதாம். இதனால் தைரியமடைந்த சிலர் சோமுவை நன்றாகச் 'சாத்தி' விட்டார்கள். இதன் பின் அவன் யாருக்கும் தொந்திரவு கொடுக்கவில்லை. இடம் கொடுத்தால் மனநோய் அதிகமாகியிருக்கலாம். அதனால்தான் பகவான் கடுமை காட்டியது போலும்.

பகவான் கண்களை எந்த விதமாக வர்ணித்தாலும் சரியாகாது. கவி களுக்கே எட்டாத விஷயமது. ஆனால் பகவானைப் பார்த்தவர்கள் யாரும் அதைக் குறிப்பிடாமல் இருந்ததில்லை. எனக்குச் சுமார் பதினாலு வயதிருக் கும். அப்போதெல்லாம் ஹாலில் உட்கார்ந்துகொண்டிருப்பேன். பகவான் என்ன செய்கிறது, யாரைப் பார்க்கிறது என்றெல்லாம் சுவாரசியமாகக் கவனித்துக் கொண்டிருப்பேன். பகவான் என்னைப் பார்க்கும் போதெல்லாம் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருக்கும். ஒருநாள் இரண்டாவது கதவ ருகில் உள்ள ஜன்னலின் பக்கம் உட்கார்ந்து பராக்குப் பார்த்துக் கொண்டி ருந்தேன். அப்போது பகவானின் பார்வை என்மேல் திரும்பி நிலைத்தது. நேர்ப் பார்வையாக ஸ்திரமாக அகன்ற விசாலமான கண்களின் திடமான தண்ணொளிப் பார்வை. எனக்கு முதலில் வழக்கம் போல் சந்தோஷமும் பெருமையும் உண்டாயிற்று. என் பார்வை பகவானின் கண்களில் லயித்தது. அந்தக் கண்கள் அறை முழுதும் வியாபித்து நிறைந்தன. என் உணர்விலும் நிறைந்து எனக்கு வேறு ஒரு நினைவும் இல்லாமல் போயிற்று. எத்தனை நேரம் இப்படிப் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று தெரியவில்லை. இது தான் பகவானின் நயன தீக்ஷை என்று இப்போது தெரிகிறது. வாசனைகளை எல்லாம் அழித்துத் துரிய நிலையில் சேர்க்கும் வலிமை வாய்ந்தது. ஆனால் முட்டாளான எனக்கு அப்போது சந்தோஷம் தவிர வேறு ஒன்றும் தெரிய வில்லை. பகவானின் அருட்பார்வை வீணாகாது. அன்று விதைத்தது என்றா வது பலன் தரும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் என்று? அதுதான் தெரியவில்லை!

அந்தக் காலத்திலெல்லாம் நாங்கள் சிறு வயதிலிருந்தே புருஷர்களிடம் பேசவோ பழகவோ அருகில் நிற்கவோ மாட்டோம். நிமிர்ந்து பார்க்கக் கூடாது. நெருங்கின உறவினர், சகோதரர், தகப்பனார் முதலியோர்களுக்கும் தண்ணீரோ புத்தகமோ எதுவானாலும் தரையிலோ மேஜை மீதோதான் வைக்க வேண்டும். இச்சிறு ஆராய்ச்சி எதற்கென்றால் இன்று சர்வ சாதாரணமான ஒரு சம்பவம் அன்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாததாக இருந்தது என்பதைக் காட்டவேயாகும். அப்போது எனக்குச் சுமார் பதினாறு வயது. சில மாதங்களாகக் கடுமையான மன வேதனையிலிருந்தேன். எல்லோரும் என்னை வெறுத்து ஒதுக்கி வைத்தனர். இடைவிடாத குத்தல் பேச்சுக்களும் கடுமையான சொல்லம்புகளும்தான். மனம் கசந்து வாழ்க்கையை முடித்துக்கொள்ள எண்ணி நாலைந்து நாள் பட்டினி கிடந்தேன். அந்த சமயம் ராஜகோபாலய்யர், என் அம்மா, சித்தி எல்லோரையும் கூட்டிக் கொண்டு என் மாமியார் அனுமதியுடன் என்னையும் அழைத்துக் கொண்டு திருவண்ணாமலை வந்தார். இங்கும் என் மனவேதனை குறையவில்லை. சில நாட்களில் சேலம் திரும்ப வேண்டியதாயிற்று. பகவான் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்தது. ஒவ்வொருவராக நமஸ்கரித்து விடைபெற்றபின் நான் இருண்ட மனதுடன் நமஸ்காரம் செய்தேன். தலையைத் தூக்கியதும் என் கண்ணெதிரே பகவானின் பாதகமலங்கள் இரண்டும் சின்ன ஸ்டூலில் பதிந்து இருந்தன. சட்டென்று என்னையுமறியாமல் அத்திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டேன் (நிச்சயமாக இது என் செயலேயல்ல). ஒரு விநாடியில் பயந்து பதறிப்போய் எழுந்து வெளியில் ஓடி வந்து விட்டேன். பகவான் என்னைப் பார்த்த மாதிரி உணர்வு இருந்தும் தலை நிமிர்ந்து பார்க்கத் துணிச்சல் வரவில்லை.

அந்த நிமிடம் முதல் எனக்குள் ஒரு பேரானந்தம் அலைபோல் பொங்கிப் பொங்கி எழுந்தது. மனவேதனை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. ஊர் திரும்பும் வழியில் எல்லோரும் என்னவெல்லாமோ பேசிக் கொண்டும், பகவானைப் பற்றிப் பாடிக்கொண்டும் வந்தார்கள். எனக்கு ஒன்றுமே உறைக்கவில்லை. பகவானையே நினைத்து மனதில் பொங்கியெழும் ஆனந்தக் கடலில் முக்குளியிட்டு லயித்திருந்தேன். வீட்டில் பழைய நிலைமை தொடர்ந்தும் என்னை ஒன்றுமே தொடக்கூட இல்லை. இந்தச் சுகானுபவம் சில காலம் இருந்து படிப்படியாகக் குறைந்துவிட்டது. அதற்குள் வெளிச்சூழ்நிலையும் மாறிவிட்டது. இன்று நினைத்துப் பார்க்கும்போது பகவான் எனக்கு ஸ்பரிச தீக்ஷை அருளியது என்றே தோன்றுகிறது. காரணமின்றி அந்த மாதிரி இரண்டு பாதங்களைச் சேர்த்து அந்த ஸ்டூலில் பகவான் வைத்து நான் பார்த்ததேயில்லை. பகவானே தந்தாலொழிய அந்தப் பாதங்களைப் பற்றும் தைரியம் எனக்கு எப்படி ஏற்பட முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக பொங்கும் அத்தெய்வீக இன்ப ஊற்று எப்படி, ஏன் உண்டாயிற்று? என் வாழ்நாளில் அதற்கு முன்போ பின்போ ஒருநாளும் இதுபோல் நான் அனுபவித்ததே இல்லை. இது சாதாரண நிகழ்ச்சியென்றால்

பகவானைத் தொட்டுப் பணி செய்பவர்களுக்கும் இப்படி உண்டாக வேண்டுமே! தீட்சாபலன், ஞானசித்தி; அது அன்று தெரியவில்லை. என்றா கிலும் நிச்சயமாகக் கிடைக்கும். அருள்வலை தப்புவதுண்டா! கருணைக் கட லான பகவான் இந்த அபலைப் பெண்ணின் கடும் துயர் தீர்ப்பதற்காகவே தன் பொற்பாதங்களைப் பிடிக்கும்படி தூண்டியது போலும்.

'இதயம் இதயம் என்கிறார்களே, அது எங்கே பகவான் இருக்கு?' என்று பகவானிடம் ராஜகோபாலய்யர் கேட்டாராம். அது உடனே தன் ஆள் காட்டி விரலால் சித்தப்பாவின் நெஞ்சில் வலது பக்கம் குத்தி 'இங்கே தான்' என்றதாம். உடனே மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது என்று தன் கடைசி நாட்களில் பேத்தி ரமணியிடம் சொன்னார்.

ஒரு வேனிற்காலத்தில் பகவான் பந்தலில் உட்கார்ந்திருந்தபோது பக்கத் தில் சில பேர்களே இருந்தார்கள். கொஞ்ச நாட்களாகவே பகவானிடம் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்ததை அதுதான் சமய மென்று கேட்டு விட்டேன். அதனருகில் போய் நின்று கொண்டு 'பெண்க ளெல்லாம் தியானம் செய்யக் கூடாதாமே' என்றேன், மெல்லிய குரலில். சாவதானமாய்ச் சாய்ந்து சாந்த சொரூபியாய் உட்கார்ந்திருந்த பகவான் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்து உரத்த குரலில் அதட்டினமாதிரி 'யார் சொன்னது?' என்றது, கர்ஜனையைப் போலக் கேட்டது. நான் வெலவெலத் துப்போய் ஏதோ முணுமுணுத்துவிட்டு, திரும்பி வந்து உட்கார்ந்து விட்டேன். தியானம், சமாதி, ஜீவன்முக்தி இதிலெல்லாம் ஆண் பெண் பேதமே கிடையாது என்று பகவான் சொல்வது பிரசித்தம். **அழுத்தமாக அன்று 'யார் சொன்னது' என்று பகவான் கேட்டது, பெண்களின் ஆத்மீய உரிமை சாசனத்தில் முத்திரை குத்தியது போல் உள்ளது.**

சக்ரவர்த்தியிடம் போய் காலணா யாசித்தமாதிரி இந்த ஞான சாம் ராஜ்யத்தின் ஏக சக்ராதிபதியிடம் எதெல்லாம் எனக்குப் பெரிதாகப்பட் டதோ அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். என் முட்டாள்தனத் திற்கு இரங்கியோ என்னவோ நான் கேட்டதெல்லாம் கிடைத்தது. பகவான் காதில் போட்டால் போதும் என்று எனக்கு இருந்த திடமான நம்பிக்கை ஒருபோதும் வீண்போனதில்லை. அதனிடம் சொல்லும் போது ஒரு தலை யசைப்போ 'உம், உம்' என்றோ 'சரி, சரி' என்றோதான் பதில் வரும். எப்போ தாவது ஒரு கேள்வியோ விளக்கமோ கேட்கும். ஆனால் 'இது எப்படி முடியும்' என்று நினைத்ததெல்லாம் சுலபமாக முடிந்துவிடும். இரண்டாவது உலகப் போர் உச்சக் கட்டத்தில் நாங்களெல்லோரும் இலங்கையிலிருந்து சேலம் வந்து விட்டோம். என் கணவர் எங்கள் தென்னை எஸ்டேட்டை விற்று விட்டுத்தான் வருவேன் என்று திடமாக இருந்தார். பகவானிடம் கூட ஒரு வேண்டுதல் எழுதிக் கொடுத்து விட்டுத்தான் இலங்கை போயிருந்தார். அங்கு குண்டுவீச்சு நடந்ததைக் கேட்டதும் நாங்கள் கதிகலங்கி விட்டோம்.

பகவானைத் தவிர யார் கதி? குண்டு விழும் இடமான மட்டக்களப்பிலிருந்த எங்கள் எஸ்டேட்டை யார் வாங்குவார்கள்? ரமணய்யனிடம் சரணடைவது தான் எனக்குத் தெரிந்த ஒரே வழி. கடைசி நிமிடம் யாரோ ஒரு செட்டியார் எஸ்டேட்டை நஷ்டப்படாத விலைக்கு வாங்க, இவரும் பத்திரமாகத் திரும்பி வந்து சேர்ந்தார். அரசாங்க வேலைக்குரிய வயது வரம்பு தாண்டியும் பகவான் அருளால் மத்திய அரசாங்கத்தில் இவருக்கு வேலையும் கிடைத்தது.

பகவான் விளையாட்டாக எல்லோரையும் சில சமயம் பிரமிக்க வைத்துப்பின் விளக்குவதுண்டு. அதன் ஹாஸ்ய உணர்ச்சி ரொம்ப அழகானது. நாங்கள் என் பிரசவத்திற்காக வேலூர் போனதையொட்டி ஒரு சம்பவம் நடந்தது. பகவத் ஆதேசானுசாரம் சித்தப்பா என்னையும் அம்மாவையும் வேலூர் கூட்டிப் போனார். அங்கு ஒரு அன்பர் வீட்டிலிறங்கினோம். ஆஸ்பத்திரிக்கு அருகிலேயே வேறு ஏதாவது ஜாகை வாடகைக்குக் கிடைக்குமா என்று பார்க்க சித்தப்பா போனார். அந்த மாதிரி ஒன்றும் கிடைக்காது என்று எல்லோரும் சொல்லவே அவருக்குக் கவலையாகி விட்டது. மறுநாள் ஆச்ரமத்திற்கு திரும்ப வேண்டுமே என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு வண்டியில் சிலர் சாமான்களை ஏற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்து அந்த வீட்டில் நுழைந்து விசாரித்தார். வீட்டின் ஒருபாகம் அப் போதுதான் காலியாவதாகவும் வாடகைக்குத் தருவதாகவும் சொன்னார்கள். எங்களை அன்றே அங்கு குடிவைத்துவிட்டு சித்தப்பா திரும்பினார். (எதிர் பாராத விதமாக ஒரு உறவுக்காரப் பையன் எங்களுக்குத் துணையாக வந்து சேர்ந்தான். பகவான் செயலில் குறையொன்றும் இருக்காதல்லவா!) சித்தப் பாவைப் பார்த்ததும் பகவான் வேலூர் விஷயமெல்லாம் கேட்டுவிட்டு, 'காசி விஸ்வநாதர் கோயில் தெரு ஒண்ணாம் நம்பரா? முன்னறை, முன்புற ஜன்னல் வழியே பார்த்தால் நேரெதிரே விஸ்வநாதர் கோயில் கர்ப்பக்கிரகம் வரை தெரியுமே, திண்ணை உயரமாக இருக்கும், ஆனால் சாக்கடை நாற்றம் வருமே' என்றதாம். வேலூருக்குப் போயே இராத பகவானுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? நேரில் பார்த்ததுபோல் வர்ணிக்கிறதே! என்று எல்லோரும் பிரமித்தார்களாம். மறந்து போய் சித்திகளை வெளியிட்டு விட்டதோ? என்றெல்லாம் எண்ணம். பகவான் புன்னகையுடன் 'நாயனா அந்த வீட்டில் குடியிருந்தார்; மகாதேவன் (அவர் மகன்) அங்கே தான் பிறந்தான். அவர் எல்லாவற்றையும் விவரமாக வர்ணித்து எழுதுவார்' என்று சொன்னதும் எல்லோருக்கும் சிரிப்பு வந்துவிட்டதாம். சித்திகளையெல்லாம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லும் பகவானா சித்தி காண்பிக்கும்! சந்நிதியில் நடக்கும் அற்புதங்கள் எல்லாவற்றுக்கும் ஏதாவது நியாயமான காரணத்தைக் காண்பித்து சாதாரண சம்பவமாக்கிவிடும்.

ஒரு முறை ஏதோ ஒரு விசேஷம், ஜயந்தியாக இருக்கலாம். நல்ல கூட்டம். பெரிய பந்தலில் பகவான் சோபாவைச் சுற்றி மூங்கில் தடை

போட்டிருந்தது. எல்லோரும் அமைதியாக கண்ணைமூடித் தியானத்திலிருந் தார்கள். ஆஸ்போர்னுடைய இரண்டு வயதுக் குழந்தை 'ஆடம்' எப்படியோ உள்ளே நுழைந்து பகவான் பக்கம் போய்விட்டான். பகவானும் அவனை வழக்கமான புன்சிரிப்புடன் வரவேற்றது. சிறிது நேரத்தில் குழந்தை திரும்பி மூங்கில் தடையருகில் நின்றுகொண்டு வெளியே வர வழிதெரியாமல் முழித்துக்கொண்டு நின்றது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த சித்தப்பாவிற்குத் தோன்றியதாம், 'சரோஜா பகவான்முன் பிள்ளை வரத்திற்காக 'தண்டையணி வெண்டையம்' திருப்புகழ் பாடியிருக்கிறாள். இப்போது வந்து ஆடமைத் தூக்கினால் இந்த வருஷம் அவளுக்குப் பிள்ளை பிறக்கும்' என்று. எல் லோருக்கும் பின்னால் பகவானிடமிருந்து தூரத்தில் உட்கார்ந்து கொண்டி ருந்த நான் எழுந்து எல்லோரையும் தாண்டிக்கொண்டு வந்து ஆடமைத் தூக்கியெடுத்து வெளியில் விட்டேன் (கொஞ்சம் கொஞ்சிவிட்டு). வீட்டுக்கு வந்ததும் சித்தப்பா எங்களிடம் பகவான் சந்நிதியில் தான் நினைத்ததைச் சொல்லி இவளுக்குப் பிள்ளை பிறக்கும் பாருங்கள் என்று அடித்துச் சொன்னார். அப்படியே நடந்தது.

பகவானைப் போலவே பாப்பாக்களுக்கும் அகம்பாவம் கிடையாது. அதனால் அவர்கள் சந்திக்கும் போதெல்லாம் ஓரே குஷிதான். பகவான் முகமலர்ந்து சிரித்து குழந்தையோடு ஞானக்குழந்தையாக விளையாடும். ஒரு தரம் நான் என் குழந்தை ரமணைக் கையில் தூக்கிக் கொண்டு பகவான் மலையிலிருந்து திரும்பும் வழியில் நின்று கொண்டிருந்தேன். அவனுக்கு மொட்டையடித்திருந்தது. பகவானும் அன்று மொட்டை. குழந்தையைப் பார்த்ததும் பகவான் நின்று அவனைப் பார்த்துக் குனிந்தது. அவன் சிரித்துக் கொண்டே தலையை பகவானைப் பார்த்து நீட்டினான். பகவானும் சிரித்துக் கொண்டே தன் தலையால் அவன் தலையில் முட்டித்து. ரமணுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. என் கையிலிருந்து துள்ளி மறுபடி தலையை நீட்டினான். பகவானும் மூன்று முறை 'முட்டு, முட்டு' விளையாடித்து. பின் சிரித்துக் கொண்டே ஏதோ சொல்லிக் கொண்டு நடந்து விட்டது. இரண்டு மொட்டைத் தலைகளும் – ஒன்று பழுத்த ஞான பரப்பிரம்ம மொட்டை; இன்னொன்று பிஞ்சு புது மொட்டை. தலையை முட்டி விளையாடியது பார்த்தவரையெல்லாம் மனம் நிறைத்து மெய் சிலிர்க்க வைத்திருக்கும். ஐந்து மாதத்தில் ரமண் தவழவில்லை. உட்கார்ந்து தாவின மாதிரி வேகமாகப் போவான். அவனைக் கண்டவுடன் பகவான் ஒரு நாள் அவன் எப்படி வேகமாக ஒரு கோணத்தில் போகிறான் என்பதைச் சொல்லி தானே சரிந்து காண்பித்தது. அறிவாளிகளும் பெரியவர்களும் நிறைந்த சபையில் வேத ரகசியங்களை விளக்கும் பகவான் அதே கவனத்துடன் ஒரு சிறு குழந்தை யின் தவழ்தலை உற்சாகமாக வர்ணிக்கக் கேட்க அற்புதமாக இருந்தது.

நம் பகவான் சந்நிதியில் எல்லோரும் சமம். அரசனுக்கும், பண்டித னுக்கும் கிடைக்கும் அதே கவனத்தை ஒரு சிறுபையனும் பெறுகிறான்.

அரசன், ஆண்டி, பண்டிதன், பாமரன், குழந்தை, குரங்கு, செடி, கொடி எல்லோருக்கும் சம உரிமை (முரட்டுத்தனமாக மர இலையைப் பிய்த் தாலோ, பூச்செடியை மொட்டையடித்தாலோ பகவான் கோபப்படுவதைப் பார்க்கலாம்). ஐந்து வயது ரமண் பகவான் முன்னால் பகவானைப் போலவே காலைமடித்து உட்கார்ந்து 'பகவானே, நானும் மலையில் தபஸ் பண்ணினேன்' என்றான். பகவான் ஆச்சரியப் படுவது போல் மூக்கில் விரலை வைத்து 'அடடே! இவன் தபஸ் செய்தானாமே!' என்று சிறு சிரிப்புடன் சொல்லித்து. இவனுக்கு ஒரே பெருமை. தான் பள்ளியில் படித்த கவி தையோ, எதையோ ஒன்றை உரக்க நடித்து ஒப்புவித்தான். பகவானும் மிகக் கவனத்துடன் கேட்டு ரசித்தது. புகழ் பெற்ற அறிஞர்களும் வித்வான்களும் பெறும் அதே கவனம், மதிப்பு.

என் அண்ணா ராமையா சப்-இன்ஸ்பெக்டராக 1944ல் அன்னூரில் இருந்தபோது, நான் அவர் வீட்டில் தங்கியிருந்தேன். ரமண் நாலைந்து மாதக் குழந்தை. பக்கத்து வீட்டில் வைசூரி கண்டது. ரமணுக்கும் திடீரென கடுமை யான ஜ்ரம் அடித்தது. டாக்டர் அம்மையாயிருக்கலாம் என்று சந்தேகிக்கவே நான் பயந்து பகவானுக்குத் தந்தி கொடுக்கச் சொன்னேன். உடனே தபாலில் பகவான் பிரசாதம் வந்தது. ஆச்ரம பிரசாதம் வேறு எதற்காகவோ அனுப் பப்பட்டு சமயத்தில் வந்து சேர்ந்தது. உடனே எனக்கு அபயம் கிடைத்த தைரியம் வந்து விட்டது. இந்த மாதிரி அநேக பக்தர்களுக்கு அனுபவம் உண்டு. ஆனால் பகவான், தான் எந்தப் பொறுப்பும் ஏற்றதாகக் காண்பித்துக் கொள்வதே இல்லை. பயந்து சரணடைந்து பகவானிடம் முறையிடும்போதே பிரசாதமோ, ஏதாவதொரு தகவலோ ஆச்ரமத்திலிருந்து கிடைத்துவிடும் (அது வேறு சம்பந்தமற்ற விஷயத்திற்காகவும் இருக்கலாம்).

சித்தப்பா ராஜகோபாலய்யருக்கு சூக்ஷ்ம புத்தி; எல்லாவற்றையும் கூர்ந்து, துருவிப் பார்ப்பார். பகவான் மேனியில் ஒரு லேசான சுகந்த வாசனை எப் பொழுதும் கமழ்ந்து கொண்டிருக்கும் என்று சொல்வார். விபூதி, சந்தனம், கற்பூரம், பூ எதிலும் சேராத ஒரு அலாதியான வாசனை. என்ன மாதிரி என்று கேட்டதற்கு 'அதை எப்படி வர்ணிப்பது? நமக்குத் தெரிந்த வாசனையொன் றும் அது போலில்லை. அது இயற்கையாகப் பகவானைச் சேர்ந்தது' என்றார் (நக்கீரர் கவனிக்க).

–oOo–

> கடவுளும் குருவும் உண்மையில் வேறல்லர். புலி வாயிற்பட்டது எவ்வாறு திரும்பாதோ அவ்வாறே குருவின் அருட்பார்வையிற் பட்டவர்கள் அவரால் ரக்ஷிக்கப் படுவரே யன்றி யொருக்காலும் கைவிடப் படார். எனினும் குரு காட்டிய வழிப்படி தவறாது நடக்க வேண்டும்.
>
> — **பகவான் ஸ்ரீ ரமணர்** நூல் திரட்டு

# பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள்

## T.K. துரைசாமி ஐயர்

1896-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி பகவான் ரமணர் அருணாசலத்தை அடைந்தபோது அவருக்கு வயது பதினாறு. பல ஆண்டு கள் மலையிலும் அதைச் சார்ந்த இடங்களிலும் வாசங் கொண்ட மஹரிஷிகளின் அத்யாத்ம பிரபை உலகெங்கும் பரவியுள்ளது. புவியின் எல்லாப் பிரதேசங்களினின்றும் உண்மையை நாடுவோர் ஒளிபெற வேண்டி, சாதி மத பேதமின்றி மகரிஷிகளின் சந்நிதியை அடைகின்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா ஞானஒளியின் தாயகமாக இருந்தது. ஞான தாகமெடுத்தவர்கள் தொலைவேயுள்ள சீன தேசத்திலிருந்து பாலைவனங்களைக் கடந்தும் மலைத் தொடர்களைச் சிரமத்துடன் தாண்டியும் பாடலிபுத்திரம், நளந்தா, தட்சசீலம் என்னும் அத்யாத்ம ஞான ஊற்றுகளிற் பருக உற்றனர் என்னும் சரித்திர வரலாறு இங்கே ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் சென்ற நூற்றாண்டிலிருந்து ஆயிரக்கணக்கான நமது மாணவர்கள் உலகியலறிவை நாடி மேனாட்டு சர்வ கலா சாலைகளுக்குச் செல்வதைக் காண்கிறோம். இந்நிலையில் தூரப் பிரதேசங்களாகிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் பல நாடுகளிலிருந்தும் அன்பர்கள் மஹரிஷிகளின் சந்நிதியில் ஆத்ம சாந்தியைப் பெறுவதற்கு வருவதையும் அவரது எளிமையும் ஆழமும் வாய்ந்த உபதேசங்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, முமுக்ஷுக் களுக்கு மிக உபயோகப்பட்டு வருவதையும் பார்க்கிறோம். தொன்றுதொட்டு மனித அறிவுக்கெட்டாத ஞான ஒளிவீசிய நமது நாட்டு ரிஷிகள், முனிவர் கள், ஞானிகளின் பரம்பரையில் நேரே வந்தவர் ஸ்ரீ ரமண மஹரிஷிகள் என்பதையும் உணர்கிறோம். உலக சரித்திரத்தின் ஆதி காலத்திலிருந்து நாகரி கத்தின் வளர்ச்சியையும் பல்வேறு நாட்டுப் பல்வேறினத்தவர் அதற்காக பாடுபட்டுள்ளதையும் ஆயும் போது, இந்திய மேதை இயற்றி வரும் பணியின் தனிப்பெருமை தெளிவாய் விளங்கும். சமூக முன்னேற்றமான ரயில்வே, சர்வகலாசாலைகள், தற்கால நூல்களைக் கொண்ட புத்தக சாலை கள், நீர்வசதிகள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், நூதன ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தும் ஏதோ ஓர் இயற்கை அதிர்ச்சியால் ஒருவேளை அழிந்துவிடினும் அவ்வளவு பெரிய நஷ்டங்கள் கூடக் காலக்கிரமத்தில் சரிப் படுத்த முடியாதது அல்ல. ஏனெனில் இவையாவும் மேனாட்டிற் பிறந்து வளர்ந்த அசல்களின் மதிப்பற்ற திரிபுகளேயன்றி இந்திய மேதையின் சிருஷ்டி அல்ல. ஆனால் அத்யாத்ம ஞான மரபைப் பாதுகாத்து வருவனவும் சாதனைப் பயிற்சியின் இல்லங்களாய்த் திகழ்வனவும் ஒழுக்கத்தை உணர்த்தும் பற்றின்மையும் துறவும் இலகும் ஆசிரமங்கள் இல்லாதொழிந்தால் தனி மாண்புடையதோர் நாகரிகமும் வாழ்க்கை முறையும் அழிவுற்று மனித சமூகமே அதனால் பெரிய நஷ்டத்தை அடையுமென்பது திண்ணம்.

உலகமுழுதையுமே பிரளயமென அழிப்பதற்குற்ற உலகாயதம், சுயநலம், பேராசை என்பவற்றை எதிர்த்து மாய்க்கும் ஆற்றல் மிக்கவை ஸ்ரீ ரமண மஹரிஷிகளின் வாழ்க்கையும் உபதேசங்களும். அறிஞர் ஈன்ஸ்டின் கூறுமாறு அணுசக்தியின் துஷ்பிரயோகத்தால் புகைந்து சாம்பலாய்ப் போகும் தருவாயிலிருக்கும் இவ்வுலகம், மஹரிஷிகளின் புனித வாழ்வினின்றும் உபதேசங்களினின்றும் வெளியாகும் வாழும் முறையைப் பின்பற்றுவது அத்தியாவசியமாகும். மஹரிஷிகளின் ஆரம்ப சரித்திரம் விந்தை மிக்கது. திருச்சுழியில் சாதாரணமான ஒரு குடும்பத்தில் பிறந்த இவர் அதிபால்யத்தி லேயே வாழ்வையும் சாவையுங் குறித்த ஆழ்ந்த பிரச்சனைகளைப் பற்றித் தெளிய ஞானமுற்ற வரலாறு யாரையும் பரவசமாக்கும். ஒரு நொடியில் அவருக்குற்ற புலனொடுக்கம், தேகாபிமான நீக்கம், அவரது கடுந்தவம் என்பவற்றைப் படிப்பவர் அவரைத் தெய்வமெனப் போற்றி வியக்காதிருக்க முடியாது.

அவரது உபதேசத்தின் சாரம் யாதென்னும் கேள்வி இப்போது எழுகின்றது. மஹரிஷிகளின் உபதேசங்களை விவரித்துக் கூறவோ விளக்கவோ எனக்குத் தகுதியில்லை. எனினும் அவரது செய்தி எளிமையும் நேர்மையும் பொதுத்தன்மையும் வாய்ந்தது என்று மட்டும் கூற விரும்புகிறேன். கொள்கைகளைப்பற்றிய வாதங்களிலும் சமய பேதச் சழக்குகளிலும் அவருக்குச் சிறிதும் பற்றில்லை. படைப்பனைத்தும் ஒன்றே என்பது அவருக்கு அடிப்படை உண்மையாய் வெளிப்பட விளங்குவதால் மாறுபாடுகளையும் வேறுபாடுகளையும் பற்றிப் புலம்பல் வீண் காலக்ஷேபமென்றே அவர் கருதுகிறார். அவரது உபதேசத்தின் இவ்வியல்பே பல்வேறு தேச, ஜாதி மதங்களைச் சார்ந்த பலரையும் காந்தமெனக் கவர்ந்திழுக்கின்றன போலும்! அரசியலில் உள்ள பகைமை, போட்டி, பேராசை முதலியவற்றால் விளையும் போர்த் தூண்டுதல்களை கண்டு நடுங்கும் அறிஞர்கள், எவ்வாறு தேசிய ஆட்சி முறைகளைப் புறக்கணித்து, உலகப் பொதுவாட்சி முறை ஒன்று வேண்டுமென்று முயல்கிறார்களோ, அவ்வாறே அத்யாத்மத் துறையில் மஹரிஷிகள் மத பேதம் பற்றிய வாதப் பிரதிவாதச் சழக்குகளனைத்தையும் அறவே ஒழித்து மனித சமூகமனைத்தையும் மட்டுமின்றி படைப்பனைத்தையுமே தன்னுட் கொண்டதோர் ஐக்கிய பாவத்தை வற்புறுத்துகிறார்.

நமது தூல வாழ்வின் அமைப்பை நூதன ஆராய்ச்சிகள் எவ்வளவோ வெற்றியுடன் திருத்தியிருந்த போதிலும் மனிதனது அத்யாத்ம முதிர்ச்சி அவனது புறவாழ்வின் வளர்ச்சியோடு சமமாக அபிவிருத்தியாகாததுமன்றிப் பிற்போக்கும் உற்றிருக்கிறது. ஆகவே உலகம் அமைதி கெட்டிருக்கின்றது. இவ்வமைதியை நிலைநாட்டவும் உலகியலையும் நீதிவாழ்வையும் அத்யாத்மத்தையும் சீராகப் பொருத்தவும் படைப்பின் ஒற்றுமையைக் கம்பீரமாய்க் கோஷிக்கும் மஹரிஷிகளின் உபதேசம் நமக்கு சரியான சமயத்தில் கிடைத்திருக்கிறது. மஹரிஷிகளுடன் பழகியவர்கள் அத்யாத்ம வளர்ச்சிக்கு


மௌனம் எத்தகைய துணையென்பதை நன்கு உணர்வர். அதுவே சாலச் சிறந்த அத்யாத்ம சக்தி விசேஷமாகும். மௌனமே சிறந்த வாக்குத் திறமை எனலாம். மஹரிஷிகளின் கருணை நிறைந்த பார்வை எவ்வளவு ஆறுதலைத் தருகிறது யென்பதை உலகாயதரும் நன்கறிவர். தம்மோடு பழகுபவர்களை மிக விசித்திரமாய், அதிர்ச்சியேயின்றி சகஜமாய் இருக்கச் செய்வது மஹரிஷிகளின் ஓர் இயல்பு. **தம்மை நாடி வருவோர் எத்தகைய பாபிகளாயினும் அவர்களுக்கு நம்பிக்கையூட்டித் தனதுண்மையை நாடிக் கடைத்தேறி விடலாம் என்று உறுதியளிப்பது அவரது ஒப்பற்ற தனிச் சிறப்பாகும்.** ஆகவே மஹரிஷிகள், ஆத்ம சாக்ஷாத்காரத்தின் வாயிலை அனைவருக்கும் திறந்து வைத்திருக்கிறார். ரமணாச்ரமத்தில் இருப்பது போன்ற எதார்த்த சுதந்திரம் வேறெங்கும் கிடையாது. உண்மையை நாடி வருவோனுக்கு நல்லமைதி இங்கே உண்டு. குடைந்து குடைந்து கேட்ப தொன்றும் இங்கே இல்லை. 'அதிகாரி நீயல்ல' என்னும் பேச்சுமில்லை; எக்குழப்பமும் இல்லை. அருணாசலத்தில் இலகும் இவ்வாசிரமத்தில் கலப்பற்ற எளிமையும் இயற்கைப் பண்பும் சுத்த சுதந்திரமும் திகழ்கின்றன.

மகரிஷிகளின் உபதேசங்கள் உபநிஷத் சம்பிரதாயத்தையும் போக்கையும் தழுவி நிற்பினும் அவரது காட்சியும் முடிபும் திருவாசகம், தேவார மருளி அழியாப்புகழுற்ற நால்வரின் சித்தாந்தத்துடன் ஒத்திருக்கின்றது. ஆயினும் பொன்றாது ஓங்கும் பாரத நாட்டுப் பண்புக்கோர் எடுத்துக் காட்டாய் நிகரற்ற சுய மாண்புடன் அவர் விளங்குகிறார் என்பது நாம் அனைவரும் மகிழ்தற்குரிய விஷயமாகும். எனினும் அவர் முந்திய சித்தாந்தம் எதனையும் அப்படியே அனுசரிப்பவர் அல்லர்; உலக முழுதிற்குமே உரியவர்.

–o0o–


ஞானத் திரளாய் நின்ற பெருமா னல்ல வடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணா மலையாரே.

**— திருஞானசம்பந்தர்**
(தேவாரம்)



பணிவுடன்: ஓம் பிரகாஷ், மும்பய்

38b



# ஸ்ரீ பகவானிடம் நான் கண்ட மகத்துவம்

**டங்கன் கிரின்லீஸ்**

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று பொருள் நாட்டம் ஒன்றிலேயே கண்ணுங்கருத்துமாக, மனிதன் சதாகாலமும் வெறிபிடித்து அலைவதில்லை. சில சமயங்களில் சற்றே நிதானித்துக்கொண்டு, அவன் சிந்தனை செய்ய ஆரம்பிக்கிறான், ''இந்த உலகத்தில் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்? இஃதனைத்தின் எதார்த்த உண்மை என்ன? நான் தான் யார்? எங்கிருந்து வந்தேன்? இந்த நாடகம் முடிந்தபின் எங்கு செல்லப் போகிறேன்?'' என்பன போன்ற கேள்விகள் மனதில் தோன்றுகின்றன. இவை களுக்கு எல்லோரும் ஏகமனதாக முடிவுக்கு வருவதாயிருந்தால் கவலையே இல்லை. ஒவ்வொருவனுடைய முடிவும் ஒவ்வொரு விதமாய் இருக்கிறது. கடைசியில், ஏற்கனவே குழம்பியுள்ள மனம் மேலும் குழப்பமடைந்து, இந்தத் தொல்லை எதற்கென்று, இத்தகைய பிரச்சனைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, வேறு ஏதாவது ''உருப்படுகிற'' விஷயங்களில் மனிதன் புத்தியைச் செலுத்து கிறான்; மறுபடியும் இப்பிரச்சனைகள் தலைதூக்கினால், கொஞ்சம் அவை களைத் தட்டிக் கழித்து, மனதைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான்.

ஆனால் சில அதிருஷ்டசாலிகள் இருக்கிறார்கள்; இக்கேள்விகளுக்குச் சரியான சமாதானம் கிடைத்தாலொழிய, அவர்களுக்குத் தூக்கம் வருகிறதில்லை; மனம் நிம்மதி அடைவதில்லை; முடிவான உண்மை என்ன, வாழ்க்கையின் லட்சியம் யாது, என்று இராப்பகலாகச் சிந்தனை செய்கிறார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு இந்த உலக வாழ்க்கையிலேயே வெறுப்புத் தட்டிவிடுகிறது. உலக சிருஷ்டியின் காரணமும் நோக்கமும் தெரியாத வரையில், வாழ்க்கையின் துன்பங்களை ஏன் சகித்துக் கொண்டிருக்க வேண்டும்! விதி நிஷேதங்களை வற்புறுத்தும் மதபோதனைகளும், வெறும் வாய் வேதாந்தம் பேசும் வித்துவானும், வறட்டு கர்வம் பிடித்த புரோகிதனும், முற்றும் உணர்ந்தவன் போல் பிதற்றும் போலி விஞ்ஞானியும், அவர்களுக்கு ஆறுதலளிப்பதாக இல்லை. உண்மையை நேரடியாக விசாரித்தறிந்தா லொழிய அவர்களுடைய தாபம் தீராது.

''ஏதோ ஆத்மவிசாரஞ் செய்கிறேனென்று சொல்லிக் கொண்டு, ஏன் இப்படி அவதிப்படவேண்டும்! இதற்கு வித்யாகர்வமே காரணமாகும். மதபோதகர்கள், பாவம்! தங்களுக்குத் தெரிந்ததை நல்லெண்ணத்துடன் நமக்கு உபதேசிக்கிறார்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு, கட்டுப் பாட்டிற்கு அடங்கி நடந்து 'சிவனே' என்று காலங்கழிக்கலாமே!'' என்று ஒரு சாரார் கூறுவதுண்டு. ஆனால், என்ன செய்வது! சில பிரகிருதிகளுக்கு, மதபோதனைகளையும் அறிவு நூல் விளக்கங்களையும் ''ஜீர்ணம்'' செய்து

---

*(பொன்விழா மலரில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழ்வடிவம்)*

கொள்ள முடிகிறதில்லை. இவ்விதமான பரிஹாரங்களுக்கு, அவர்களது நோய் அசைந்து கொடுப்பதாயில்லை. அத்யாத்மதாபம் அவர்களுடைய இதயத்தைத் தகித்துக் கொண்டிருக்கிறது. தாற்காலிக சாந்தியளிக்கும் மயக்க மருந்துகளால், பிணி அறவே அகலக் கூடுமோ!

இதுவரை, பொதுப்படையாகக் கூறிவந்த விஷயங்கள், உண்மையில், எனது சொந்த மனோபாவத்தையே வெளிப்படுத்துகின்றன. நெடுநாளாகவே, எனக்கு அத்யாத்ம தாபமுண்டு; இன்னும் அது தீர்ந்தபாடில்லை. பூரணப் பொருளை அறிந்து அனுபவித்தாலன்றோ ஸந்தேஹ விபரீதங்கள் நீங்கும்! இன்னும் எனக்கு அனுபூதி ஏற்படவில்லையே!

நான் பிரும்ம ஞான சங்கத்தைச் (Theosophical Society) சேர்ந்தவன்; தியான பலத்தினால், ஒருவன் தன் குருவை சூக்ஷ்மமாகத் தெரிந்து கொள்ள முடியும் என்பது எங்களுடைய கொள்கை. இருபது ஆண்டுகளுக்கு முன் நான் இந்தியா வந்தபோது, பிரத்யக்ஷமாக எனது குருவைத் தரிசிக்கப் போகிறேன் என்று திடமாக நம்பினேன். பெசன்ட் அம்மையார், மதனபள்ளியில் உள்ள பள்ளிக்கூடத்தில் என்னை ஆசிரியராக அமர்த்தியதே, எனக்கு ஒரு சூசகமாகும். 1926ம் ஆண்டில் ''ஹரநாதப்பித்தர்'' என்ற ஒரு பெரிய மஹான் ஸமாதியடைந்ததைப் பற்றிப் பத்திரிகையில் படித்தேன்; ஜனங்கள் அவரை ராமகிருஷ்ண பரமஹம்சருடன் ஒப்பிட்டுப் பேசினார்கள். அவரைப் போன்ற மற்றொரு மஹான் திருவண்ணாமலையில் ஒரு ஆலயத்தில் வசிப்பதாக, எனது காலேஜ் ஆசிரியர் ஒருவர் சொன்னார். நான் அவ்விடம் சென்று அப்பெரியாரைத் தரிசிக்கலாமென்றால், — என்னைக் கோவிலுள் விட மாட்டார்களே! நான் அயல் நாட்டானல்லவோ! இவ்விதமான தடைக்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை; வாசகர்கள்தான் சொல்ல வேண்டும். கடவுளின் பரிசுத்தத் தன்மையை நாங்கள் கெடுத்து விடுவோமா? எங்கள் தேசத்தினர் செய்த பாபம் காரணமா? அல்லது, கோவில் குருக்களுக்குச் சேரவேண்டிய தட்சணையை நாங்கள் கொடோம் என்பதா? எது எப்படி இருந்தாலென்ன? சர்க்கார் உத்யோகஸ்தனாய் இருந்தாலொழிய, நான் தமிழ் நாட்டிலுள்ள அந்த மஹாத்மாவைக் கோவிலுள் சென்று பார்க்க முடியாது என்று அறிந்தேன். ஆதலால் குருவைப் பிரத்யக்ஷமாகக் காண வேண்டும் என்ற ஆவலை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

பின்னர், வழக்கம்போல், பிரும்ம ஞான சங்கத்தின் ஸாதனக்ரமத்தை அப்யசித்து வந்தேன். இந்தத் தியான மார்க்கத்தில் ஓரளவு வெற்றியும் கிடைத்தது. தியானத்தில், சூக்ஷ்ம லோகங்களிலிருந்து குருமார்கள் காட்சியளிக்கிறார்கள் என்பதும், அவர்கள் அளவிலா அன்பும் அறிவும் உடையவர்களென்பதும், சீடர்களை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதும், போதிய பிரமாணத்துடன் ஊர்ஜிதமாய் விட்டது. ஆனால் நடைமுறையில் உபயோகமாகும் வண்ணம்,

அவர்களது அனுக்ரகத்தை நேர்முகமாகப்பெற முடியவில்லை. ஆதலால் எப்பொழுதுமுள்ள அதிருப்தி என்னை விட்டகலவில்லை.

1928 வருடம் முதல் 1930 வருடம் வரை பொதுவாக பிரும்ம ஞான சங்கத்தார் அனைவருக்குமே ஒரு பெரிய மனக்குழப்பமேற்பட்டது. ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விஷயத்தில் நாங்கள் ஒருவிதமான ஏமாற்றம் அடைந்தோம். அவர் உலக போதகராகவே விளங்கினாலும், அவரது போதனைகள், ஸங்கத்தின் ஸம்ப்ரதாயத்திலிருந்து பெரும்பாலும் முரண் பட்டவை என்று கண்டோம். ஜனங்களின் புராதன மதாசாரங்களுக்கு முரணாக இயேசு போதிப்பதைக்கண்டு, சீடர்களுக்கு எவ்வளவு உணர்ச்சி ஏற்பட்டதோ, அவ்வளவு வருத்தம் எங்களுக்கும் ஏற்பட்டது. முரணான போதனைகளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஸபையின் ஸம்ப்ரதாய முறையை அனுஷ்டிப்பதா, வேண்டாமா, என்ற தர்ம சங்கடமான நிலைமையை நான் சமாளிக்க வேண்டியிருந்தது. ''சீடனாயிருந்து கொண்டு குருவின் பேரால் சேவை செய்'' என்று ஒரு குரல் கட்டளையிடும். ''உபதேசகர்களும் குருமார் களும் வெறும் ஊன்றுகோல் போன்றவர்களே! தன்கையே தனக்கு உதவி; உன் லக்ஷ்யத்தை நீயே முயற்சிசெய்து அடையவேண்டும்'' என்று மறுகுரல் விடை யளிக்கும். ''கிரமமாக தீக்ஷை பெற்றுக்கொண்டு, உலக சேவக மஹா ஸமாஜத்தில் சேர்ந்துகொள்'' என்று மறுபடியும் முதற்குரல் புத்தி புகட்டும். ''ஸாதனக்ரமம் ஒன்றுமில்லை; ஸமாஜங்களென்றும், மத ஸ்தாபனங் களென்றும், ஆத்ம ஸாதனங்களென்றும் வித விதமான பெயர்களைச் சொல்லி உன்னை ஏமாற்றுகிறார்கள். உன் இதயத்திலுள்ள ஆத்மானந்தத்தை நீயே அறிந்து அனுபவி'' என்று மறுமொழி கிடைக்கும். கடைசியில் எந்த வழியைக் கடைப்பிடித்தேன் என்பது முக்கியமான விஷயமில்லை. சங்கத்திலுள்ள எனது பிடிப்பையும் விடாமல், நமது மஹர்ஷிகளிடமும் ஈடுபட்டிருக்கிறேன்.

மஹாத்மா காந்தியுடன் நெருங்கிப்பழகி நான் அரசியல் வாழ்க்கையில் சிலகாலம் பங்கெடுத்துக் கொண்டதுண்டு. ஆனால் ஆத்மானுபூதியடை வதற்குப் பூர்வாங்க ஸாதனமாக, ஸமூக சேவையை மறுமுறை பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதன் பின்னர், ஐக்ய மாகாணங்களிலுள்ள காடுகளில் ஒரே நண்பரைத் துணையாகக் கொண்டு இரண்டு வருஷகாலம் வசித்ததுண்டு. இந்த 'வானப்ரஸ்த' வாழ்க்கையில் எனக்கு ஓர்விதமான ஆத்மானுபவமேற்பட்டது. நன்றாக விழித்திருக்கையில், திடீரென நிகழ்ந்த ஸம்பவமாதலால், திடுக்கிட்டு நான் மிகவும் ஆச்சர்யமுற்றேன். ஆத்மானந்த ஜ்வாலையில், என் மனத்தின் கசடுகள் எல்லாம் பொசுங்கிப்போய்விட்டன. சாதாரண மனிதர்களுக்கும் ஆத்மானுபூதிக்கும் வெகுதூரமென்றும், பக்குவமிக்கவர்களுக்கே இவ்வித மான அனுபவம் ஏற்படுமென்றும், பிரும்ம ஞான நூல்கள் கூறுகின்றன. நான் உத்தம அதிகாரியல்ல என்பதை, எல்லோரையும்விட, நான் நன்கு அறிவேன். ஆதலால் இச்சமயத்தில் என் அனுபவத்தை நானே நம்ப முடியவில்லை.

இந்நிலையில் பக்கத்திலுள்ள எனது நண்பர் ஒருவாறு சமாதானம் கூறினார். ''ஆத்மா, என்றும் எவர்க்கும் இயல்பாய் உள்ளபொருள்; ஸ்வத ஸித்தமாயுள்ளது; எவ்வளவு யோக்யதை யற்றவனாயினும், எவனும் எச்சம யத்திலும் ஆத்ம ஸுகத்தையனுபவிக்கலாம்'' என்று சொன்னார். இச்சமா தானம் என் விஷயத்திற்குப் பொருந்துவதாயிருந்தாலும், அதனுண்மையில் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஜே. கிருஷ்ணமூர்த்தியும் ''காட்டு மிராண்டி கூட, ஒரு நொடியில் இப்பாதையைக் கடந்துவிடுவான்'' என்று சொல்லியுள்ளார். இவரது ஸித்தாந்தப்படி, புனர் ஜன்மத்தின் அஸ்திவாரமும், மனிதனின் அறிவு வளர்ச்சிக்கிரமமும் தகர்ந்து போகிறது. புனர் ஜன்மம், ஊர்ஜிதமான சாஸ்த்ரீய உண்மையென்று நான் முற்றிலும் நம்புகிறேன். ஆதலால் இவர்களது சமாதானங்கள் மூலம், பிரஸ்தாப அனுபவத்தின் தன்மையை நான் நிர்ணயித்துக் கொள்ள முடியவில்லை.

1935 ஆம் ஆண்டில் கால சக்கரம் மறுபடியும் என்னை மதனபள்ளிக்கே கொண்டுவந்து சேர்த்தது. பழைய நண்பரொருவர், தான் ரமணாச்ரமம் செல்வதால் என்னையும் அழைத்துச் செல்வதாகக் கூறினார். எனவே, 1926 ஆம் ஆண்டில் தோன்றி மறைந்த ஸங்கல்பம், இப்பொழுது மறுபடியும் கிளம்பியது. நாங்களிருவரும் 1936-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் கோடைவிடுமுறையில் பிரயாணமாவதெனத் தீர்மானித்தோம். நரஸிம்ம ஸ்வாமிகள் எழுதியுள்ள, மஹர்ஷிகளின் ஜீவிய சரித்திரத்தை, இந்த நண்பர் என்னிடம் கொடுத்தார். புஸ்தகத்தைப்படித்து, நான் மிகவும் பரவசமடைந்தேன். சிறுவர்களென்றால் எனக்கு எப்பொழுதும் பிரியம் அதிகம். மேலும் பால ஸந்யாஸிகளைப்பற்றி அடிக்கடி மனதில் கற்பனை செய்து கொள்வது வழக்கம். எனவே, பாலரமணன் வீட்டை விட்டு வெளியேறியதும், முன்பின் தெரியாத அருணாசலத்திற்குப் பரவசனாய்ப் பிரயாணமானதும், அங்குபோய்ச் சேர்ந்து ஸமாதியிலாழ்ந்து ஈசனோடு இரண்டறக்கலந்து நின்றதும், என்னை மிகவும் பரவசப்படுத்தி, மனதில் கிளர்ச்சியை யுண்டாக்கின. என் இதயத்திலுள்ள எதையோ தூண்டி விட்டு மறுபடியும் ஒளிமங்காமல் நிலைக்கச் செய்திருக்கிறது. அப்புத்தகத்தை எழுதியுதவிய ஆசிரியருக்கு எனது நன்றி உரித்தாகுக.

கோடை விடுமுறை ஆரம்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; எனது ஆர்வத்தைக் குறைக்கும் ஸம்பவமொன்றை இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது; பால் பிரண்டன் எழுதியுள்ள புத்தகத்தையும் படிக்கும்படி, அதே நண்பர் என்னைத்தூண்டினார்; படித்தேன். ஆசிரியரின் போக்கு அவ்வளவு நேர்மையானதாயில்லை; ஒருவரை உயரத்தூக்கி வைத்துப் பேசி, மற்றவர்களையெல்லாம் கண்டபடி அவமதித்துக் குறிப்பிடுவது எனக்குப் பிடிக்கவில்லை; மட்டமான பத்திரிகை நடையை ஆசிரியர் கையாண்டிருப்பதாக என்மனதில் பட்டது. ஒளிக்காமல் இப்படி நான் விமரிசனம் செய்வது, சில அன்பர்களைப் புண்படுத்தக்கூடும். அவர்கள் என்னை மன்னிப்பார்களாக. என் சொந்த அபிப்பிராயத்தைச் சொல்ல

வேண்டியிருக்கிறது. இப்புஸ்தகத்தைப் படித்தபின், திருவண்ணாமலைக்குப் போவதா, இல்லையா என்றுகூட இரண்டொரு நாட்கள்வரை ஆலோசிக்க நேரிட்டது. ஓர் போலிவைத்யன், அத்தாட்சிப் பத்திரங்களை நாடிநிற்பதுபோல, ஸ்ரீ மஹர்ஷிகளும், இவ்விதக்கீழ்த்தர விளம்பரங்களை அனுமதிக்கிறாரா, என்று நான் சிந்திக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த எண்ணத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உண்மையை நேரில் கண்டறிவது என்று முடிவு கட்டினேன்.

ஆச்ரமத்தார்கள் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். மற்ற இடங்களிற்போல, அன்னிய நாட்டாரிடம் காண்பிக்கும் ஆணவத்திமிர் கொண்ட உதாஸீன புத்தி இங்குக் காணப்படவில்லை. பிறதேசத்தான் ஒருவன் புதிய சூழ்நிலைகளினால் பாதிக்கப்படாமலும், சௌகரியக் குறைவொன்றும் இன்றியும் தங்கிச் செல்லவேண்டுமே என்ற கவலையுடனும் சிரத்தையுடனும் என்னை உற்சாகமாகக் கவனித்துவந்தார்கள். பிரும்மஞான சபையைச்சேர்ந்த பழைய நண்பரொருவர் பக்கத்தில் பலாக்கொத்தில் வசித்துவந்தார். அவரிடம் எனது தினசரி அனுபவங்களையும், அபிப்ராயங்களையும் அவ்வப்பொழுது கூறுவது வழக்கம்.

**மஹர்ஷிகளைத் தர்சனஞ்செய்தேன்; வாழ்க்கையின் பிரச்சனைகள் அனைத்தையும் தனக்குத்தானே தீர்த்து முடிவு கட்டிய ஒரு மஹா புருஷனது ஸந்நிதியென்பது அதிசீக்கிரத்திலேயே எனக்கு விளங்கிவிட்டது. தேஜோ மயமான சாந்திதவழும் ஸந்நிதியில் நடுநிசிவானத்தையொத்த அமைதியை பிரத்யக்ஷமாய்க்கண்டேன். என் மனோபீஷ்டம் பூர்த்தியாயிற்று; மனிதவுருக் கொண்ட குருவின் தர்சனபிராப்தி ஏற்பட்டதென்பது, மஹர்ஷிகளைக் கண்ட உடனேயே நிர்ணயமாய் விட்டது.**

அன்றிரவு எனது நண்பரிடம் ஞானநூல்கள் பேசும் ஜீவன் முக்தன் இவர் என்பதில் சந்தேகமில்லை என்று சொன்னேன்; இதை எப்படி நான் உணர முடிந்தது என்பதற்குக் காரணம் கூற இயலாது. **வானத்தில் நீலவர்ணமும், தண்ணீரில் தண்மையும்போல், ஸ்ரீ மஹார்ஷிகளிடமும் ஜீவன்முக்த லக்ஷணம் இயல்பாகவே அமைந்துள்ளது.** ஆனால் எனது நண்பர் சொன்னதுபோல், அவர் கடவுள் என்று என்னால் கூற இயலவில்லை. கவித்துவத்தில் கவிஞனையே காண்பது போல், ஒருவிதத்தில் எல்லோரும் ஈச்வர சொரூபமே. கடவுளை மனித ரூபத்தில் வணங்குவதற்கு என்மனம் இடம் கொடுப்பதில்லை; ஸர்வாந்தர்யாமியாயிருப்பது போலவே, ஈச்வரன், நாமரூபங்களைக் கடந்து, மனவாக்குகளுக்கதீதமாயும் விளங்குகிறார். ''என்னுடைய ஒரு அம்சத்தினால் இவ்வுலகனைத்தையும் தாங்கிக் கொண்டிருக்கிறேன்'' என்ற கீதையின் கருத்து முற்றிலும் உண்மையே.

புனர்ஜன்மம், அத்யாத்ம வாழ்க்கைத்திறன் இவைகள் போன்ற விஷயங் களைப்பற்றி மஹர்ஷிகளிடம் பல கேள்விகள் கேட்க உத்தேசித்திருந்தேன்;

ஆனால் ஸந்நிதியில் பேச நாவெழவில்லை. பேசுவதற்குத் துணிச்சல் ஏற்படு முன், எனது கேள்விகள் பொருத்தமற்றவை என்று தெரிந்து கொண்டேன். ஸந்நிதியில் அனைவருக்கும் இது பொதுவான அனுபவம். இதன் உண்மையை நிரூபிப்பதற்கு என் அனுபவம் மற்றுமொரு சான்றாகும்.

நான்கு நாட்கள் என்னுடன் தங்கியிருந்துவிட்டு, எனது நண்பர் மதன பள்ளிக்குத் திரும்பிச்சென்றார். விடுமுறை முடிவுறும்வரை நான் மட்டும் தங்கியிருந்தேன். சித்தோபசாந்தியுடன் கூடிய இன்ப நிலையை நான் அனுபவித்தேன். ''சும்மா இரு. சாந்தியுண்டாகட்டும்'' என்ற இயேசுவின் வார்த்தை கட்கிணங்க, எனது குருவும், தனது மோன நிலையின் மஹிமையினால், அலை பட்டுக் குழம்பியிருந்த என் மனதைச் சமனப்படுத்திவிட்டார். அகண்ட பரதத்து வத்தின் ஆழ்ந்த அமைதி என் இதய வெளியில் குடி கொண்டது. பூவுலகின்கண், தொன்றுதொட்டு இடையறாது, நாமரூபங்களனைத்தையும் வியாபித்தும் அவை களைக் கடந்தும் விளங்குகிற பரம் பொருளையே, நான் பிரத்யக்ஷமாகக் கண்டேன்; அவ்யக்த பிரும்மத்தில் லயித்திருக்கும் சாந்த ஸ்வரூபரான பகவானது மஹா ஸந்நிதியில், எனக்குப் பிரத்யேகமான இருப்பேது?

கடைசியில் சில கேள்விகளையும் மஹர்ஷிகளிடம் கேட்டதுண்டு; எனது ''வானப்ரஸ்த'' வாழ்க்கையின்போது நிகழ்ந்த அத்யாத்ம அனுபவத்தின் உண்மையைப் பற்றியும் வினவினேன். மஹர்ஷிகளின் விடைகள் நூதனமும் ஆச்சர்யமும் பொருந்தியிருந்தன. எனது கேள்விகளிலுள்ள ஒவ்வொரு பதத்தை யும் எடுத்து விளக்கி, அத்வைதபரமாகச் செலுத்தித் தத்துவ விளக்கம் செய்தார். நான் பூர்ண திருப்தியும் ஆனந்தமும் அடைந்தேன்.

ஈச்வரனது அனுக்ரஹ சக்தி அதிவிசித்ரமானது. கடவுளிடம் பூணும் அன்பு களங்கமற்றும் தீவிரமாயுமிருப்பின், அவர் உடனே அருள் புரிகிறார். அவரது நிர்ஹேதுகமான கருணை பக்தனது பக்குவக்குறைவையும் பாராட்டுவதில்லை. சிவனது போக்கு, அவரது சித்தத்தின் போக்கேயாகும். கோடிக்கணக்கான வருஷங்கள் முயற்சிப்பினும், ஈச்வரானுக்ரஹம் நிச்சயம் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை. உயிர்களிடத்துள்ள அபார தயையே அவரது அருட் பிரசாதத்திற்குக் காரணம். தர்சனப் பிராப்திக்காக நாம் செய்யும் தவத்தினால் அவர் பிரத்யக்ஷமாய் விடுவதில்லை என்பதே எனது அபிப்பிராயம். எப்பொழுது நம்மிடம் தயையுண்டாகிறதோ அப்பொழுது அவர் தர்சன மளிக்கிறார். ''பரிபூர்ணத்தை நாடும் மார்க்கம்'' என்னும் புத்தகத்தில், சாந்தா தெரிஸா, என்னும் ஸ்பானிய பக்தையொருவள், இதே கருத்தைக் குறிப் பிட்டிருக்கிறார். ''சில சமயங்களில், ஈசன், மஹாபாபிகளையும், தன்னிடம் ஆகர்ஷித்துக்கொள்ள முயற்சிப்பதுண்டு. தனது அனந்த கல்யாண குணங்களிற் சிலவற்றை அவனுக்குக்காட்டி, தெய்வீக சம்பத்தில் அவனுக்குக் கொஞ்சம் ருசி ஏற்படுத்துகிறார். அவனுக்கு, இதன் காரணமாகப் பெரியமனிதனென்ற கர்வமும் அகம்பாவமும் ஏற்படுகிறதா, அல்லது, கிடைத்த அதிருஷ்டத்தைப்

பயன்படுத்திக்கொண்டு, அவன் பூரண ஆத்மானந்தத்தை நோக்கி முன்னேறு கிறானா என்று ஈச்வரன் பரீட்சிப்பதுண்டு.'' அத்யாத்ம நெறியில், இவ்வித மான ஸம்பவத்தை ஒரு முக்கியமான, அடிப்படையான அம்சமாக நான் கருதுகிறேன்.

நாளடைவில், ஆச்ரமத்திலிருந்து விடைபெற்றுச்செல்லும் தினம் வந்தது. தேகச்சுமையைத் தூக்கிக்கொண்டு சொப்னாவஸ்தையிலுள்ளவன்போல், மதனபள்ளி வந்துசேர்ந்தேன். சுமார் மூன்று வாரங்கள் வரை பகவான் எனக்கனுக்ரஹித்த சாந்திசுகம் குறையாமல், என்றும் இல்லாத இன்பம் அனுபவித்தேன். எனது உபாத்திமைத் தொழிலிலும், மற்றுமுள்ள விவகாரங் களிலும் வழக்கம்போல் ஈடுபட்டுக்கொண்டிருந்தேனெனினும், எல்லாம் கனவில் நடக்கும் சம்பவங்கள் போலத்தோன்றின; என் மனதில் குடி கொண்டிருந்த சாந்தியிலிருந்து எனது சரீரத் தொழில்கள் வேறுபட்டிருந்தன. இந்த அபூர்வ நிலையைப் பின்னர் என்னிஷ்டம் போல் வருவித்துக்கொள்ள சாத்யப்பட வில்லை. ஸ்ரீ பகவானைப்போன்ற ஞான போதகர்களின் அனுக்ரஹத்தாலேயே இந்த ஸ்திதி நிலைத்து நிற்க முடியும்.

இதன்பின் பலமுறை பகவானிடம் சென்றிருக்கிறேன். ஜனத்திரள் நிறைந் திருக்கும் ஜயந்தி வைபவங்களில் கலந்து கொண்டிருக்கிறேன்; ''பங்கா'' இழுத்து வீசிக்கொண்டிருக்கும் ஒரு அன்பரைத்தவிர, ஸந்நிதியில் கூட்டமே இல்லாத சாதாரண நாட்களில், மௌனோபதேச மகர்ஷிகளைத் தரிசித்த துண்டு. ஒரு வருஷத்திய கோடை விடுமுறை நாட்கள் முழுவதும் சேர்ந்தாற் போல் தங்கியிருந்து, ஆனந்தம் அனுபவித்திருக்கிறேன்; அன்பர்கள் வருவதும் போவதுமாய் இருப்பார்கள்; வெள்ளை முயலொன்று தியானம் செய்பவர் களிடம் வந்து விளையாடும். பெரிய மனிதர்கள் நிஷ்டையிலிருக்கையில் தொந்தரவு செய்யக் கூடாதென்று அதற்குத் தெரிகிறதில்லை! இக்காலத்தில் நடந்த இரண்டு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை; அவைகள் ஸகஜமாக நடக்கும் நிகழ்ச்சிகளாய் இருக்கக்கூடும். ஆனால் எனக்கு நல்ல படிப்பினை யைத் தருவதாயிருந்ததால், நான் இங்கே பிரஸ்தாபிக்க விரும்புகிறேன்.

ஒருநாள், யோக மார்க்கத்தைப்பற்றிய குறிப்புகளடங்கிய நோட்டுப் புத்தகமும் கையுமாக, நல்லவெயில் நேரத்தில் ஸந்நிதியில் தூங்கி வழிந்து கொண்டிருந்தேன். பகவான் என்னைப்பார்த்து, ''கையில் என்ன புத்தகம்?'' என்று வினவினார்; பதில் சொன்னேன். உடனே பகவான் '''மிலரேபா' என்னும் புத்தகத்தைப்படி'' என்று அமைதியாகச் சொன்னார். எனக்கும் பகவானுக்குமிடையே எப்பொழுதுமே அதிகமாகப் பேச்சு வார்த்தைகள் நடந்தது கிடையாது. நான் ஏதாவது சொல்லியிருப்பேனே யொழிய அவர் முதலில் பேசியதே இல்லை. நான் உடனே நூலகக் கார்யஸ்தரிடம் சென்று, டாக்டர் இவான்ஸ் வெண்ட்ஸ், எழுதிய அப்புத்தகத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டேன். திபெத் தேசத்து பக்தனும் யோகியுமாகிய மிலரேபாவின்

இச்சரிதையை ஸந்நிதியிலேயே வைத்துக்கொண்டு ஒருமுறை படித்தேன்; மறுபடியும் படித்தேன். அதில் கண்ட ஆழ்ந்த கருத்துக்கள், என் மனத்தைப் பரவசப்படுத்தி என்னைப்புளகாங்கித மடையச் செய்தன. என் மனோநிலைக்கு உகந்ததாயிருக்கும் என்றெண்ணியே, ஸ்ரீ பகவான் இதைப்படிக்கும்படி உத்தர விட்டுள்ளார் என்று உணர்ந்து கொண்டேன். இச்சம்பவத்திற்கு முன்னும் பின்னும் வேறெவ்வித ஆக்ஞையும் எனக்கு அவர் பிறப்பித்ததில்லை.

இரண்டாவது ஸம்பவம், தரிசனத்திற்கு வந்திருந்த ஒரு புதிய அன்பரைப் பற்றியதாகும். இவர் இளம் பிராயத்தவர்; வடநாட்டு வழக்கறிஞர். பிருந்தாவன லோலனாம் கண்ணனிடம் அபாரப்பிரேமை கொண்டவர்; மனித ரூபத்தில் அவரை வைத்து வணங்க வேண்டுமென்ற விருப்பமும் இதய தாபமும் மேலிட்டவர். இவரும் நானும் வெட்டவெளியில் படுத்துக்கொண்டு இரவு நேர முழுவதும், பக்தமீராவையும், அவரது பிராண நாயகனாம் கண்ண னையும் பற்றி உரையாடிக் கொண்டிருப்பது வழக்கம். இரண்டு வார காலமாக இந்த நண்பர் ஆச்ரமத்தில் தங்கியிருந்தும், மஹர்ஷிகளிடம் இவருக்குக் கவர்ச்சி ஏற்படவில்லை. ''இந்த அத்வைதமும் வேண்டாம்; மௌனமாய்க் கற்போல் மலராதிருக்கும் இந்த மஹர்ஷிகளும் வேண்டாம்; இதோ, ஊருக்குத் திரும்புகிறேன்'' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறாய், இன்னும் சில நாள் தங்கிச் செல்லலாமே யென்று நான் சொல்லிவருவதுண்டு. ஆனால் இரண்டு வாரஞ் சென்றபின், ஒரு நாள். ''நான் இதோ புறப்படுகிறேன்; நேரே பிருந்தாவனஞ்சென்று கிரிதரனாம் கிருஷ்ணனிடம் அன்பு பூண்டு இரண்டறக் கலந்துவிடுவேன்'' என்று புறப்படத் தீர்மானித்து விட்டார்.

கொஞ்சம் பழங்களைக் கையில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ மஹர்ஷிகள் முன்வைத்து அவரிடம் விடை பெற்றுக்கொள்ளலாம் என்று, இந்த நண்பர் ஸந்நிதிக்குள் நுழைந்தார். அப்பொழுதுதான், பகவான் இரவு போஜனத்திற் கெழுந்தருளும் சமயம். ஆரஞ்சுப்பழமும் கையுமாக நிற்கும் இவ்வன்பரைப் பார்த்துக்கொண்டே, பகவான் சிறிது நேரம் நின்று தரிசனமளித்தார். அன்பர் ஸ்ரீ பகவானை நோக்கிய வண்ணம் சிலைபோல் நின்று விட்டார்; பேச நாவெழ வில்லை; உடல் முழுவதும் புளகாங்கிதமாயிற்று. அன்பு வெள்ளம் கரை புரண்டோட, ஆனந்த பாஷ்பம் பெருக, ஸ்ரீ பகவானது பாதகமலங்களில் அடியற்ற மரம் போல் சாஷ்டாங்கமாய் விழுந்தார். கையிலுள்ள பழங்கள் சிதறி இங்குமங்கும் விழுந்தோடின. பகவான் அசைவற்று நின்று கொண்டே யிருந்தார். அன்பர் மெதுவாக எழுந்தவுடன், அவரது உடல் முழுவதும் நடுங்கிற்று. ''போய் வருகிறேன்'' என்று சொல்லவும் அவருக்கு நாவெழ வில்லை. இப்பொழுது, மௌனமாய்க் கற்போலிருந்த மஹர்ஷிகள், புன்முறு வலுடன் சிறிது சமிக்ஞை செய்து, ''சரி போ'' என்று திருவாய் மலர்ந் தருளினார்.

பின்னர், காத்துக் கொண்டிருந்த ஜட்கா வண்டியில் அவ்வன்பரை மெதுவாகத், ''தூக்கிப் போட்டு'' வழியனுப்பிவைத்தேன். நாடிவந்த இஷ்ட தெய்வத்தை அவர் பிரத்யக்ஷமாய்த் தரிசித்து விட்டார். இக்காட்சியைக் கண்ணுற்ற நாங்கள் அனைவரும் ஆனந்த பரவசர்களானோம். மறுபடியும் அவர் ஆச்ரமத்திற்கு வந்ததுண்டா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இந்த சம்பவம் மட்டும் என் மனத்தை விட்டு அகலவே இல்லை. இப்பொழுதும், அக்காட்சியை மனக் கண்ணால் பார்க்கும்பொழுது என் உடல் பூரிக்கிறது. **அற்புதம் நிகழும் என்று நாம் சிறிதும் எதிர்பாராத தருணத்தில், ஸ்ரீபகவான், நமது பிராணநாதனாகத் திடீரென முன்னே தோன்றி நம்மை ஆட்கொள்கிறார்! ஆம், இது உண்மை.**

ஆச்ரமத்தில் நான் கவனித்த பல ஸம்பவங்களையும் இங்கே விரித்துச் சொல்ல இக்கட்டுரை இடந்தராது. ஜீவன் முக்தனது லக்ஷணங்களையும், வர்ணனைகளையும் பற்றி, ஹிந்து, புத்த, முகம்மதிய, கிறிஸ்தவ, ஜைன, கன்பூஷிய முதலிய மதக் கிரந்தங்களில் ஆராய்ச்சி செய்ததுண்டு. ஸ்ரீ பகவானைப் பலவிதமான ஸந்தர்ப்பங்களில் உற்றுக்கவனித்து, அவரது ஸ்திதியை, அந்நூல் களின் முடிபுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். முதல்நாள் ஏற்பட்ட அபிப்ராயமே முற்றிலும் உண்மையென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேக மில்லை. நான் பார்த்துள்ள மனிதர்களுக்குள், ஸ்ரீ பகவானொருவரே ஸஹஜ ஸ்திதியிலிருந்து சிறிதும் பிறழாமல் நிலைத்து நிற்பவராக விளங்குகிறார். இவ்விதமான அபிப்பிராயத்தை முடிவு கட்டுவதற்குள்ள யோக்யதை எனக் கில்லையென்பது உண்மையே. ஏனெனில் மஹாத்மாக்களின் மஹிமையை மற்றொரு மஹாத்மாவே உணரமுடியும். ஆயினும் எனக்குத் தோன்றியதைச் சொல்லலாம் என்று எண்ணினேன்.

உணவு நேரங்களில் பகவான் அன்பர்களை உபசரிப்பதைப் பார்த்திருக் கிறேன்; அப்பொழுது நமக்குச் சற்று வெட்கமாயும் கூட இருக்கும். ஹாஸ்யச் சுவையில் அவர் பேசுவதைக் கவனித்திருக்கிறேன். அவர் அசைவற்று, சாந்த ஸ்வரூபியாயமர்ந்திருக்கும் நேரமுண்டு; ஒழுங்கீனத்தையும் கொடுமையையும் கண்டித்துப் புத்தி புகட்டும் ஸந்தர்ப்பங்களுண்டு; இரவு இரண்டு மணிக்கே எழுந்து, ஆச்ரமத்திற்குக் காய்கறி நறுக்கிக் கொடுக்கும் போது பகவானுடன் இருந்திருக்கிறேன். வித விதமான மனிதர்கள், பல விதமான சந்தேகங் களுடனும், சகிக்கொணாத் துயரங்களுடனும், ஈச்வர நம்பிக்கையிழந்தும், இங்கு வருவதுண்டு. தனது கூரிய அருள் நோக்காலும், மௌனோபதேச மகிமையினாலும், ஸ்ரீ பகவான் எல்லோருடைய பிரச்சனைகளையும் தீர்த்து அனைவருக்கும் மனச்சாந்தியையருளுகிறார். பல பாஷைகளில் பேசவும் எழுதவும் அவருக்குத்தெரியும்; எழுத்துக்கள் வெகு அழகாகவும் சுத்தமாகவு மிருக்கும். பகவானைப் புகழும் பாடல்களை அன்பர்கள் பாடும் பொழு தேற்படும் பிசகுகளை அவர் திருத்துவதுண்டு; அச்சமயம் அவரது முகத் தோற்றத்தில், எல்லாம் நம்முடைய பெருமையே என்பது போன்ற பாவம்

(குறிப்பு) சிறிதளவும் தென்படாது. 'யாருடைய புகழ்மாலையோ?' என்ற பிரிந்து நிற்கும் தன்மையையே காணமுடியும்.

இன்னும், சளசளவென்று ஸந்நிதியில் பேசிக்கொண்டிருக்கும் அன்பர் களிடமும், சுறுசுறுப்பில்லாத ஊழியனிடமும், சேஷ்டை செய்யும் குரங்குகளிடமும், வரம்பு மீறித் தன்னைப்புகழும் மனிதர்களிடமும், தன்பேரை உபயோகித்துப் பணம் தேடுகிறவர்களிடமும், ஸ்ரீ பகவானுக்கு எவ்வித உணர்ச்சி ஏற்படுகிறதென்று கூர்ந்து கவனித்திருக்கிறேன். அதிகாரம், பெருமை, கௌரவம், போன்றவைகளால் உயர் வென்றும், அவையின்மையால் தாழ்வென்றும், அவரது திருஷ்டியில் கிடையாது; தோட்டி முதல் தொண்டைமான் வரை அனைவரும் அவரது நிர்ஹேதுகமான அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களே. மஹர்ஷிகளிடம் இவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரது வாழ்க்கையையுற்று நோக்கிய பின்னர், கடவுளே இவர் என்று யாவரேனும் சொல்லாவிடினும், மஹத்தான அவதார புருஷரென்பதில் எனக் கெப்படி சந்தேஹமுண்டாகும்? மனத்தைக் கவரும் மாலை வானத்தின் மகிமையில் மலைச்சிகரத்தின் காம்பீர்யமேபோல், மஹர்ஷிகளது மஹத்துவம் அனைவர்க்கும் பிரத்யக்ஷமாகத் தெரிகிறது.

வசந்தகாலம்; மாலைநேரம், மனிதா! சற்றுநேரம் பகவானது ஸந்நிதியி லமர்ந்திரு. வேதகோஷத்தின் எதிரொலி வரவரக்குறைந்து, ஓய்ந்தடங்கிய பின்னர், அதோ, பார்! அருணமாமலை; அதையொட்டி காக்கைகளெல்லாம் வரிசை வரிசையாகப் பறந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றன.

உன்னுடைய அல்லல்களும் ஆசைகளும் அளவற்ற எண்ணங்களும், ஓய்வடையட்டும்.... சற்று சிந்தனை செய்துபார். இஃதனைத்தும் வெறுங் கற்பனையே என்ற ஒருவிதமான இன்ப உணர்வு ஏற்படவில்லையா! விவேகமின்மையும், மனவெழுச்சியும் கொண்டு, அங்கே உட்கார்ந்திருக்கும் அற்ப மனிதன் நீயல்ல. நித்யகன பரமாத்ம ஸ்வரூபமே உனது எதார்த்த வுண்மை. உலக விசித்திர மென்னும், நாம ரூபங்களடங்கிய, இந்தச்சிலந்திக் கூடு உன்னிடமிருந்தே வெளிவந்துள்ளது!

ஸ்ரீ பகவானது ஸந்நிதி மகிமையினால் எனது வியக்தித்துவம் வெகுவாக பாதிக்கப்பட்டுவிட்டது. எந்த ஸர்வ சூன்யப்பதத்திலிருந்து, இந்த ஜீவ பாவம் கிளம்பியதோ, அந்த இடத்திலேயே அதை லயிக்கச்செய்வதற்கு, பகவானைத் தவிர மற்றெவரும் எனக்கிதுகாறும் துணைபுரிந்ததில்லை. **பாமரனையும் அனுக்ரஹித்து, மந்த நிலையைப் போக்கி, அவனைச் சச்சிதானந்த சொரூபத்தில் திளைக்கச் செய்யவல்ல மற்றொரு மஹானை நான் வேறெங்கும் கண்டதில்லை!**

பகவான் உபதேசிக்கும் ஆத்ம விசார மார்க்கத்தைப்பற்றி, அதிகம் சொல்ல எனக்குத் தெரியாது. அறிவைப் பற்றிக்கொண்டு முன்னேறும் இந்த ஆன்ம நாட்டம் இயல்பாகவே பலருக்கு உகந்ததாயிருக்கிறது. ஆனால் நான்

எவ்வளவு முயன்று பார்த்தும், இவ்விசாரமார்க்கத்தில், எனக்குப் பிடிப்பேற் படவில்லை. மேலும் இந்த சாதனத்தைக்காட்டிலும், பகவானது ஸந்நிதி விசேஷத்தையே நான் பெரிதாகக் கருதுகிறேன். மஹர்ஷிகளது அனுக்ரஹம் வேறு, ஈசனருள்வேறு என்பதில்லை. கடவுளின் பிரதிநிதியாகவும், தூதரு மாகவே அகண்ட பரதத்துவத்தில் அவர் நிலைபெற்று விளங்குகிறார். பரம் பொருளின் இயல்பை உணர்ந்து சிறிதேனும் ஆத்மானுபவம் பெற, பகவானது அனுக்ரஹமொன்றே எனக்குப்போதுமானது.

ஸ்ரீ பகவான், இம்மாதிரியான வார்த்தைகளை வெறும் பிதற்றலென்று தள்ளிவிடுவது' வழக்கம். புன்முறுவலுடன் கையினால் சமிக்ஞை செய்து கொண்டு, ''இந்த இடமானாலென்ன, வேறெந்த இடமாயிருந்தாலென்ன! நீ அடைகிற ஆனந்தம் உண்மையில் ஆத்மாவிலுள்ளது. உன்தேகம் இருக்கு மிடத்திலும், சூழ்நிலைகளிலும், நீ அதை ஆரோபித்துக் கொள்கிறாய்; இரண்டிற்கும் ஸம்பந்தமேயில்லை'' என்று பகவான் சொல்வதுண்டு. ஆனால், ''ஓ, பகவான்! இப்பொன்விழாமலர் எங்கள் எல்லைக்குட்பட்டது. தங்களைப் பற்றியும், நாங்கள் இதில் இஷ்டம் போல் சொல்லிக்கொள்வோம். நாங்கள் பிதற்றிக் கொண்டிருக்கையில், தயவு செய்து நீங்கள் குறுக்கிடவேண்டாம். அருணகிரி மௌன குருவினிடம் எங்களுக்குள்ள நன்றியறிவைப் பகிரங்கப் படுத்த இப்பொன்விழாவே நல்ல தருணம்!''

முடிவாக, பகவானிடமிருந்து நான் என்னதான் கற்றுக்கொண்டேன்? ஞானநூல்கள் கூறுவதுபோல், நாம் அடைய முயற்சிக்கும் ஆத்மா, நமக்கு அதிசமீபத்திலுள்ளது; அந்தர் முகப்பட்டு தன்னுள்ளாழ்ந்து மூழ்கும் எவனும் உள்ளபொருளை உடனேயுணர்ந்தனுபவிக்க முடியும். என்றும் அழியாத நித்யானந்தமே ஆத்மாவின் இயல்பாகும். மற்றெல்லா ஆனந்தங்களும் அதன் சாயைகளே; மேல் நாட்டவர்கள் புரிந்து கொள்ளும் பாஷையில் தத்துவ விளக்கஞ் செய்யுங்கால், – கடவுள் உயிருக்குயிராய், ஆனந்தத்தின் பிறப் பிடமாய் எல்லாருடைய இதயத்திலும் வசிக்கிறார். அவரிடம் நம்மை ஈடுபடுத்திவிட்டால் அவர் நம்மை அன்புடன் அணைத்துக்கொண்டு, தனதியல்பை விளக்கிக்காட்டித் தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொள்வார் – என்ற பரவுண்மையின் சாரத்தையே நான் தெரிந்து கொண்டேன்.

பகவானது போதனைகள், அவரை நாடுபவர்களின் தேவைக்குகந்தவாறு பற்பல விதமாய் அமையும். ஒரு சமயம் சில முகம்மதிய அன்பர்கள் வந்து, ''மனித வாழ்க்கையின் லக்ஷயமென்ன?'' என்று கேட்டார்கள். ''இஸ்லாம்'' என்ற ஒரே வார்த்தையில் அத்யாத்ம தத்துவத்தின் சாரத்தையும், முகம்மதிய மதத்தைப் போலவே சகல மதங்களின் உட்பொருளையும், ஸ்ரீ பகவான் சுட்டிக்காட்டிவிட்டார். எவ்வளவு தெளிவும் சுருக்கமுமான விடை! இதுவே அவரது மகிமையின் ரகஸ்யம். நாம ரூபங்களைக்கற்பித்து இஷ்ட தெய்வமாகக் கொண்டாடும் பரம்பொருளிடம் ஆத்ம சமர்ப்பணம் செய்வதே ''இஸ்லாம்'' எனப்படும். இஸ்லாமொன்றே ஸலாம் அல்லது சாந்தியையளிக்க வல்லது.

பரமேச்வரனே நமது பரமபிதா; அவரிடமிருந்து நாம் வந்தோம்; அவரில் நிலைத்துள்ளோம்; முடிவில் அவரிடமே திரும்புகிறோம். பரமபிதாவிடம் அன்புடன் அடைக்கலம் புகும் மனிதனிடம் ஆனந்தவெள்ளம் பொங்கித் ததும்பும். அப்பொழுதே, நித்யமும் தெய்வீகமுமான உத்தம சாந்திநிலை சித்திக்கிறது. இவ்வுலகத்தில் அமைதியையும் உண்மையான சமாதானத்தையும் நிலை நாட்டுவதற்குச் சரியான அஸ்திவாரம் இஃதொன்றேயாகும்.

இஸ்லாம் (ஆத்மஸமர்ப்பணம்) என்னும் ஒரு வார்த்தையை விளக்கிப் பல புத்தகங்கள் வியாக்யானம் செய்யலாம். ஆனால் அந்த ஒரு மொழியின் அழகுக்கு அழகு செய்யவோ, நிறைவை நிரப்பவோ ஒருவராலும் முடியாது. அந்த முகம்மதிய அன்பர்கள் சிறிதுநேரம் ஸந்நிதியில் மௌனமாய் அமர்ந்திருந்து பகவானிடம் 'ஸலாம்' செய்துவிட்டு ''இவர் சாதாரண ஹிந்து ஸந்யாசி அல்ல, ஈசதர்சனம் பெற்று ஈச்வர சாந்நித்யத்துடனொளிரும் ஞான திருஷ்டி படைத்த மஹாத்மாவே'' என்ற திருப்தியுடன் திரும்பிச்சென்றார்கள்.

ஆச்ரமவாசத்தில் சில சமயங்களில் நமக்கு அயர்வும் மனச்சோர்வும் ஒருவித ஏமாற்றமும் ஏற்படுவது உண்டு. உள்ளேயொடுங்கிக்கிடக்கும் துர்வாசனைகள் அனைத்தும் வெளிக்கிளம்பும். உபவாசத்தின் பயனாய், உள்ளிருக்கும் கசடுகளனைத்தும் வெளிகிளம்பும் சமயத்தில், உபாதைகள் அதிகரித்து மனிதன் கஷ்டப்படுவதுண்டு. அதுபோல் பகவானைப்போன்ற மகான்கள் ''ரணசிகித்ஸை'' செய்து நமது மனதைப் பரிசுத்தப்படுத்துகையில் பழைய கெட்ட குணங்களெல்லாம் தலைவிரித்தாடுவது ஸஹஜமே. மனம் நிர்மலமடைவதற்கு உள்ளேயுள்ள கசடுகளனைத்தும் வெளியேறுவது நன்மையேயாம். நாம் மனத்தளர்வும் ஏமாற்றமும் அடையும் நேரங்களில், ஆச்ரமத்திலுள்ளோர் அனைவரும் மிகவும் கனிவுடனும் அன்புடனும் நம்மை நடத்துகிறார்கள். எனது ஆங்கிலக் கேள்விகளுக்குப் பகவானருளிய விடைகளை சிரத்தையுடன் மொழிபெயர்த்துதவிய நண்பரின் அரிய சேவையை நான் பாராட்டாமலிருக்க முடியாது. நான் செல்லும் போதெல்லாம், ஸர்வாதிகாரியவர்கள் என்னிடம் காட்டிய அன்பு, என்றும் மறக்கற்பாலதன்று. இருக்க இடமும் உண்ண உணவும் அளித்துச் சகல வசதிகளுடன் கூடிய ஆச்ரமத்தின் அரிய சேவையை எவரும் மறக்கலாகாது. இதன் பெருமை முழுவதும் ஸ்ரீ நிரஞ்சனானந்த ஸ்வாமிகளையே சாரும். சில சமயங்களில் பகவானே நேரில் என்னை உபசரிப்பது, சற்றுக் கலக்கத்தையுண்டு பண்ணினாலும் இன்பமளிப்பதாகவே இருந்தது.

இந்த ஐம்பது வருஷகாலமாக இருக்குமிடத்தை விட்டு நகராமல் ஒரே இடத்தில் பகவான் மோன நிலையில் அமர்ந்துள்ளார்; உண்மைதான்; வெளியில் வந்து அவர் லோகோத்தாரணஞ் செய்யலாகாதா என்று சிலர் கேட்கிறார்கள். ஆனால் பாமரமக்கள் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடும் எந்த ஜன சமூகத்தலைவனும் கனவிலும் கருதொணாவண்ணம்,

ஸ்ரீ பகவான் இந்த 50 ஆண்டுகளாகச்சேவை புரிந்துவருகிறார். நம்மிடையே அவர் வசித்துக் கொண்டிருப்பதே, மஹத்தான அனுக்ரஹமாகும்; நிரந்தரம் ஜொலித்துக்கொண்டிருக்கும் ஆத்மஜோதிமயமாய் அவர் விளங்குவதே அனைத்துலகின் முன்னேற்றத்திற்கு அறிகுறியாகும். ஆயிரக்கணக்கான மக்கள் அவரது அருண்மொழியைக் கேட்ட மாத்திரத்தில் அளவற்ற ஆறுதலடைந்து புத்துயிர் பெறுகிறார்கள். கடலும் மலையும் வானமுமே பரம்பொருளின் அற்புத மஹிமையை விளக்கி நிற்றல் போல், பகவானது மோன நிலையே நித்யவஸ்துவை மனித ரூபத்தில் நிதர்சனப்படுத்தியுள்ளது. பகவானைப்போல் நாமும் உலகசேவை செய்ய முடியுமானால் எவ்வளவு நன்மையாயிருக்கும்! ''தன்னை உயர்த்திக் கொள்பவன் உலகத்தையே உயர்த்துகிறான்'' என்று ஒரு பிரெஞ்சு ஆசிரியர் எழுதியுள்ளார். சீனதேசத்து மஹா ஞானியாம் கன்ப்யூஷியஸ் என்பவருடைய கருத்தும் அதுவே.

நமஸ்காரத்தின் உட்பொருளை உணராத நாம், ஸ்ரீ பகவானது பாதாரவிந்தங்களில் நமஸ்கரிப்போம்; மஹர்ஷிகளின் வாசத்தால் மஹத்துவ மோங்கிய அருணாசல க்ஷேத்திரத்தைப் போற்றுவோம்! சுபகரமான இப்பொன் விழா வைபவத்தையொட்டி, பகவானைப்பூவுலகத்திற்களித்த பெருமையை யும் பாக்யத்தையும் பெற்ற தென்னிந்திய மஹா ஜனங்களுக்கு நமது நன்றி உரித்தாகுக! அபேத நிலையின் உதாஸீன பாவத்திற்கஞ்சி யோடாமல், பகவானது அருட் பிரசாதத்தைத் தேடியடைந்த புத்திமான்கள் பலரையும் பாராட்டுவோமாக!

பூமிதேவியின் தவப்பயனா லவதரித்துள்ள இம்மஹாபுருஷரைக்கண்டு களித்துக் கிருதார்த்தர்களாக இதுவே 'தங்கமான' அரிய சந்தர்ப்பமாகும். இன்னும் பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு பகவானது தரிசனப்பிராப்தி ஏற்படட்டும். இப்பொன்விழாவில் கலந்து கொண்ட ஒருபக்தன், திருவண்ணா மலையில் ஸ்ரீ பகவானை நூற்றாண்டு விழாவிலும் தரிசிக்க விரும்புவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

— oOo —

நானென்(று) எழுமிட(ம்) ஏதென நாடவுண் ணாண்தலை சாய்ந்திடு(ம்) உந்தீபற
ஞான விசாரமி(து) உந்தீபற.

— **ஸ்ரீபகவான்** நூல் திரட்டு

# ஸ்ரீரமண மாலை

## சுத்தானந்த பாரதி

(பண் – உண்ணாமுலை உமையாளொடு)

1. ஊனாகியென் னுளமாகியுள் ளுணர்வாகிய வொருவன்
நானாரென வாராயுழி நானாகிய முதல்வன்
மோனானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைமுனிவன்
தேனார்பொழில் அண்ணாமலை திகழுங்குரு ரமணன்!

2. ஊணாகவென் மனமுண்டவன் உதிநானெனு மதியை
நாணிக்குவித் துரையற்றிடத் தானென்றுதி தலைவன்
காணாமலென் கண்ணாகியென் கருத்தில்வளர் கள்வன்
பேணாரையும் பேணிக்கொளும் பெட்பார்திரு வழகன்!

3. அயராதெனு ளமுதாய்வளர் அனலாகிய விமலன்
பெயராதுதன் னடிக்கேயெனை பித்தாக்கிய பெருமான்
மயலார்புவித் தளைநீங்கிட மருந்தாகிய வரதன்
இயல்பாய்முளை சிவலிங்கமாய் எனையாண்டவன் எம்மான்!

4. தனதென்றொரு பொருளற்றவன் தானேபொரு ளானோன்
மனதென்றொரு மதிலற்றவன் வானின்விரி வானோன்
எனதாருயிர்க் குழலின்மிசை யிசையாய்வளர் இனியன்
அனலார்விழி யொருபார்வையே யடியார்துயர் தெறுமே!

5. நினைவார்நினை நினைவானவன் நினையாநிறை வானோன்
வினையார்திரை கிளராமதர் விச்சைக்கட லானோன்
தனையன்றிவே றுலகற்றதோர் தனலாகிய பகவான்
அனைவாருளத் ததுநானெனும் அருணாடகம் புரிவோன்!

6. கண்டார்மனக் கவலைச்சுமை களவிற்படு மிலவாம்
தொண்டார்தவ சித்தர்குழு தொழுதேத்திடுஞ் சுடரோன்
வண்டார்வன மலர்கொஞ்சிடுந் தென்றல்வளர் மலையான்
வெண்டாமரை பொருபுன்னகை விலக்காதெள துளமே!



7. உருகுந்திரு வடியார்தமிழ் உரையாமொலி கேட்கப்
பெருகாதலோ டருநான்மறை பேசித்தவழ்ந் திறைஞ்சும்
அருவித்திரள் அருகோடிடுங் குருவித்திரள் பாடும்
திருவார்நக ரண்ணாமலை தீர்த்தன்னடி சரணே!

8. சகசத்தனி யிதயத்தமர் சத்தாகிய வொருவன்
சகசித்திர விளையாடலைச் சலனப்பட மெனவே
சுகநித்திரை தனிற்காண்பவன் சொல்லாமறை வடிவோன்
முகபத்தும மதுவுண்டபின் முளையற்றதென் வினையே!

– ഠ0ഠ –

ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து வந்திருந்த லக்ஷ்மண பிரஹ்மசாரி, "நான் யாரென்னும் விசாரணையும் மனத்தின் ஓர் எழுச்சிதானே; அதனால் மனோநாசம் எப்படிக் கைகூடும்?" - என்று வினவினார்.

ஸ்ரீபகவான்: *சீதையின்* நிகரற்ற கற்புச் சிறப்பை ரிஷிபத்னிகள் சோதித்துப் பார்த்ததாக ஒரு கதை சொல்லப்படும். ரிஷிகள் பலரிடையே ஸ்ரீராமனும் தன் வடிவை மறைத்து ஒரு ரிஷி வேஷத்தோடு நிற்க, ரிஷிபத்னிகள், அவர்களுக்குள் தன்பதி யாரென்று கண்டு பிடிக்கும்படி *சீதையைக்* கேட்டுக் கொண்டனர். *சீதை* ரிஷிகளை ஒவ்வொருவராகப் பார்த்துப் பார்த்து 'இல்லை இல்லை' என்று சொல்லிக் கொண்டே வந்து ரிஷி வேஷத்திலே நின்ற தன் பதியைக் கண்டதும் மௌனமாய்த் தலை குனிந்து நின்றாள். *சீதையின்* மௌனம் உண்மையைச் சிறப்புற உரைத்தது. அவ்வாறே வேதங்கள், தத்துவங்களை ஆய்ந்தாய்ந்து "அல்ல, அல்ல" என்று (நேதி, ந-இதி) புறக்கணித்துக்கொண்டே சென்று, ஓரிடத்தில் மேலேயொன்றும் சொல்வதற்கின்றி மௌனமாய் நிற்கின்றன. அதுவே உண்மை நிலை. மௌனத்தால் உண்மையை விளக்குவதன் தாற்பரியம் இதுவே. விசாரணை விருத்தியால் பிறவிருத்திகள் யாவும் விலக்கப்பட்டு விலக்குவதற்கு மேலேயொன்றுமில்லா நிலையில் அவ்விருத்தி தன்மூலமாம் ஸ்வரூபத்தி லொடுங்க, ஸ்வரூபமே மிஞ்சி நிற்கிறது. என்றுமுள்ள ஏக பரிபூரண அறும் ஸ்வரூபம் அதுவே. பாவனாதீதமாம் பரம்பொருள் அதுவே.

**– ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்.**

# ஸ்ரீ பகவான்

## (பலராமரெட்டியாரின் நினைவுத்தொகுப்பு)

பகவானுடன் சிலகாலம் நெருங்கி இருந்து அவரைக் கவனித்ததில் அவர் தம்மை எங்கள் குரு என்றும் நாங்கள் அவர் சீடர்கள் என்றும் ஒருபோதும் வெளிப்படையாகக் கூறமாட்டார் என்பதைக் கண்டுகொண்டேன். சொல்லப் போனால், சிலசமயங்களில் இதற்கு முரணாகத் தாம் குரு அல்லர் என்றும் தமக்குச் சீடர்கள் இல்லை என்றும் கூறுவதுண்டு. ஆனால் அணுக்க அன்பர் களாகிய எங்களுக்கு அவர் எங்கள் குரு என்பதில் எள்ளளவும் ஐயம் இருந்த தில்லை. எங்களைத் தாய்போல் நேசித்தார்; தந்தையைப்போல் பாதுகாத்தார்; ஆசிரியனைப்போல் வழிநடத்தினார்; நண்பனைப் போல் எங்களுடன் பழகினார். அவரது அருளையும் வழிநடத்தும் துணையையும் நாங்கள் எப்போதும் உணர்ந்தோம். வாய்வழி உபதேசங்கள் வாயிலாகவும், மௌனத்தி னாலும், செய்கையாலும் உபதேசிப்பார். சில சமயங்களில் சூக்ஷ்மமாகவும் சிலசமயங்களில் வெளிப்படையாகவும் உபதேசங்கள் அமையும்.

திருவண்ணாமலை டவுனில் வாடகை அறையில் வசித்துவந்தபோது ஆஸ்ரமத்திற்கு அதிகாலையிலேயே வந்துவிடுவேன். பகவானது அணுக்கச் சேவகர் ஹால் கதவைத் திறக்கும்போது நான் அங்கே காத்திருப்பேன். பகவான் துயிலெழுந்து வெளியில்வருவதற்குத் தயாராக இருக்கும் நிலையில் கதவு திறக்கப்படும். நான் ஹாலுக்குள் நுழையும் போது பகவான் சோபாவிலிருந்து எழுந்து வெளியில் வருவதற்குத் தயார் செய்துகொண்டிருப்பார். பகவான் எப்பொழுதும் இரவில் போர்வை போர்த்திக் கொள்வது வழக்கம். நான் ஹாலுள் நுழையும்போது அவர் போர்வையை நீக்கிக்கொண்டிருப்பதைக் காண்பேன். போர்வையை அவரிடமிருந்து பெற்று அதனை மடித்து வைப்பேன். பகவான் கருணைகூர்ந்து என்னை இச்சிறுபணியைச் செய்ய அனுமதித்தார்.

அந்நாள்களில் பகவான் ஹாலில் காலையும் பிற்பகலும் அமர்ந் திருப்பேன். பிற்பகல் இறுதியில் பகவானைத் தரிசனம் செய்யவரும் அதிகமான கூட்டம் இடையூறாக அமையும். என் அறையில் கவனம் சிதறுவதற்கு இத்தகைய இடையூறுகள் இல்லாமையால் அங்கே தியானம் செய்ய முடிந்தது. எனவே பிற்பகலில் ஆஸ்ரமத்திற்குச் செல்வதை நிறுத்திக்கொண்டேன்.

ஒருநாள் பிற்பகல் ஆஸ்ரமத்திற்கு வந்த சுப்பராமய்யா என்னை ஹாலில் காணாததால் பகவானிடம் நான் எங்கிருக்கிறேன் என்று விசாரித்திருக்கிறார். மறுநாள் காலை பகவானுடைய போர்வையை மடிக்கும்போது பகவான், சுப்பராமய்யா என்னைப்பற்றி விசாரித்ததை என்னிடம் கூறினார். பகவான்



முன்போலவே பிற்பகலிலும் நான் அவர் சந்நிதியில் இருப்பதை விரும்புகிறார் என்பதை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாக உணர்த்தவே இதனைக் கூறினார் என்பதைப் புரிந்துகொண்டேன். இவ்வாறு அறிந்திருந்தும் நான் அன்றைய பிற்பகல் என் அறையிலேயே இருந்தேன்.

மறுநாள்காலை வழக்கம்போல் ஹாலினுள் நுழைந்து அவருடைய போர்வையைப்பெற்று மடிக்கச்சென்றேன். ஆனால் அன்று அதனை என்னிடம் கொடுக்காமல் தாமே நிதானமாக மடித்தார். தம் செய்கையால் அப்போது அவர் என்னைக் கடிந்துகொண்டதை உணர்ந்தேன். என்னுடைய தவற்றை உணர்ந்து முன்போலவே பிற்பகலிலும் பகவான் சந்நிதியிலேயே இருந்தேன். இந்நிகழ்ச்சியிலிருந்து பகவான் தம் அடியார்கள் தம் சந்நிதானத்தில் இருந்து நற்பலன் அடைவதை விரும்பினார் என்பதை உணர்ந்தேன். ஆனால் அவர் அதனை எப்படி வெளிப்படையாகச் சொல்லமுடியும்?

திருவண்ணாமலையில் இருந்த முதல் வருடம் ஒருநாள் பிற்பகல் நான் ஹாலில் பகவான் முன் அமர்ந்திருந்தபோது அவர் என்னிடம் ஒரு ஆத்மீக விஷயத்தைப்பற்றி விளக்கிக்கொண்டிருந்தார். அவ்வாறு விளக்குங்கால் அவர் என்னை மேற்குப்புறச் சுவருடன் ஒட்டிவைக்கப்பட்டிருந்த இரு புத்தக அலமாரிகளுள் ஒன்றில் இருந்த குறிப்பிட்ட ஒரு புத்தகத்தைக் கொண்டுவரச் சொன்னார். நான் எவ்வளவு தேடியும் அப்புத்தகம் எனக்குக் கிடைக்கவில்லை. பகவானிடம் திரும்பி வந்து அப்புத்தகத்தை என்னால் கண்டுபிடிக்க இயலவில்லை என்று கூறிவிட்டு அவருக்கு எதிரில் இருந்த தெற்குச்சுவர்மீது சாய்ந்த வண்ணம் அமர்ந்தேன். உடனே பகவான் எழுந்து நிதானமாகவும் கம்பீரமாகவும் அலமாரி இருக்கும் இடத்துக்கு நடந்து செல்வதைக் கண்டேன். அலமாரியைத் திறந்து என்னை எடுத்துவரச்சொன்ன புத்தகத்தை உடனே எடுத்தார். அலமாரியை மூடிவிட்டுச் சோபாவிற்குச் செல்லாமல் நான் அமர்ந்திருந்த இடத்திற்கு வந்து என் இடப்பக்கத்தில் எனக்கு மிக அருகே அமர்ந்து என்னை வியப்பில் ஆழ்த்தினார். எனக்குக் காட்ட எண்ணிய பகுதியுள்ள பக்கத்தில் புத்தகத்தைப் பிரித்து புத்தகத்தை என்முன்னே பிடித்துக் கொண்டு என்னை, குறிப்பிட்ட அந்த பகுதியைப் படிக்கச் சொன்னார்.

பகவானுக்கு அணுக்கசேவை செய்யும் சேவகர்கள் என்னிடம் பகவானது உடல் உலைபோல் உஷ்ணமாக இருக்கும் என்று கூறியிருந்தார்கள். என் அருகிலே பகவான் அமர்ந்தபோதுதான் அவர்கள் கூற்றின் பொருளை என்னால் உணரமுடிந்தது. டைனமோவிலிருந்து மின்சாரம் வெளிவருவது போல் அவர் உடலிலிருந்து ஆத்மசக்தி வெளிப்படுவதை உணர்ந்தேன். பரவச உணர்ச்சி என்னை ஊடுருவிச்சென்று என்னுள் ஆழப்பாய்ந்தது.

பகவான் சரிதத்தைப் படித்தபோது அதில் ஒருபகுதியில் சாதகன் ஒருவன் தன்னுடைய குருவை மாற்றிக்கொள்வது பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததைக்

கண்டேன். இதுபற்றி எனக்கு ஐயம் இருந்ததால் என்னுடைய முதற்கால ஆஸ்ரம விஜயத்தின்போது ஒருமுறை பகவானிடம் இதுபற்றிக் கேட்டேன். அவர் அதற்கு ''நிச்சயமாக குருவை மாற்றிக் கொள்ளலாம், அதனால் என்ன?'' என்று விடையிறுத்தார்.

பகவானுடைய தனிப்பெருஞ்சிறப்பு அவருடைய சந்நிதியின் மஹிமை என்பது என் கருத்து. அவர் உபதேசங்களுள் பெரும்பாலானவை முன்னரே காலங்காலமாகப் பல்லோர்க்கும் அளிக்கப்பட்டவை. பகவானுடைய சந்நிதியை அடைந்தவுடன் எங்கள் நிலையில் ஒரு திடீர் மாற்றம் ஏற்படும். அந்த அளவிற்கு மெய்ப்பொருள் பகவானிடத்துச் சுடர்விட்டுப் பிரகாசித்தது. அவருடைய சந்நிதியின் தெய்வீக ஆற்றல் முற்றிலும் வேறுபட்டதும் தலைசிறந்ததும் ஆகும்.

பகவான் சந்நிதியில் முற்றிலும் வேறுபட்டதும் தெளிவாக அனுபவிக்கக் கூடியதுமான ஏதோ ஒன்றை எப்போதும் உணர்ந்தேன். ஹாலில் நுழைந்து அமர்ந்த உடனேயே வேறு ஒரு இருப்புநிலையை அடைந்ததாக உணர்ந்தோம். நாம் எப்போதும் அறிந்த உலகம் அங்கு இல்லாததுபோல் தோன்றியது. பகவானுடைய சாந்நித்யம் - இவ்வுலகத்தினின்றும் வேறுபட்ட ஒன்று - அவ்விடத்தைச் சூழ்ந்து நிறைத்தது. ஹாலைவிட்டு வெளிவந்தபோது நமக்கு நன்கு பரிச்சயமான பழைய உலகம் மீண்டும் நம்மை எதிர்கொண்டது.

ஒருமுறை என் வடஇந்தியப் பயணத்தைப் பற்றி பகவானிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போது கடுங்கோடைக்காலமான ''மே'' மாதம். பகவானிடம், திருவண்ணாமலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது இமாலயத்தில் உள்ள அல்மோரா இன்பமூட்டும் வண்ணம் எவ்வளவு இதமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது என்பதை விளக்கினேன். பகவான் ''உண்மையான குளிர்ச்சி (நம்) உள்ளே உள்ளது. நமக்கு அந்தக் குளிர்ச்சி இருந்தால், நாம் எங்குச் சென்றாலும் குளிர்ச்சியாகவே இருக்கும். அதுபோலவே கல்லும் முள்ளும் நிறைந்த பூமியிலிருந்து உன் கால்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால், அப்பூமியைத் தோலால் மூட முயல்வதில்லை; மாறாக, தோல் செருப்புக்களைக் கால்களில் அணிந்துகொள்கிறாய். அவ்வாறு செய்வதால் கால்களைப் பாதுகாக்கும் வேலை எளிதில் முடிந்து விடுகிறது.'' என்று கூறினார்.

பகவான் எல்லோரையும் தம் அன்பினால் பிணைத்தது காண்பதற்கு ஓர் அதிசயமும் விவரித்தற்கு இயலாததும் ஆகும். பகவானுக்கும் அவருடைய, நீண்டநாள் பக்தர்களுக்கும் எவ்விதப் பேச்சும் இருக்காது. எனினும் அப்பக்தர்கள், பகவான் தம் அருளையும் அன்பையும் அவர்கள்மீது பொழிந்த வண்ணம் இருந்தார் என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள். பகவான் தம்முடையவரே என்பதையும் தம்மீது மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதையும் பக்தர்கள் அறிய, பகவானது ஒரு பார்வையோ, தலை அசைப்போ, எளிய



விசாரிப்போ போதுமானதாக இருந்தது. எங்களை வழிநடத்தி எங்கள் மீது தம் அருளையும் ஆசிகளையும் சொரிந்த பகவானை மையமாகக் கொண்டு நாங்கள் அனைவரும் ஒரு பெரிய குடும்பமாக வாழ்ந்தோம்.

பகவான் மிகுந்த பரிவும் கருணை உள்ளமும் கொண்டவர்; அதே சமயம் அவர் மிகவும் கண்டிப்பாகவும் இருப்பார். பார்ப்பவர்களுக்கு அவர் உதாசீனராகத் தோன்றினாலும், சாதகர்களின் ஆன்மீக முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை காட்டினார். பகவான் எனக்குப் பலமுறை உதவியிருக்கிறார்.

என் குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக நான் பகவானுடைய சந்நிதியை விட்டு நிரந்தரமாக நீங்கி என் கிராமத்திற்குச் சென்று இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதைப்பற்றி நான் பகவானிடம் விளக்கியபோது அவர் மிகுந்த கருணையுடன் செவிமடுத்துப் பின்னர் தம் தலையை அசைத்தார். அவர் தலை அசைத்ததன் பொருளை அப்போது நான் உணரவில்லை. என் தாயார் நான் பகவான் சந்நிதியை விட்டு நீங்கிக் கிராமத்திற்கு வரவேண்டாம் என்றும், தாமே எல்லாக் காரியங்களையும் கவனித்துக்கொள்வதாகவும் கூறி எனக்குக் கடிதம் எழுதினார். என் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த இந்நிகழ்ச்சியை பகவானது அருள் நேரிடையாகக் குறுக்கிட்டு நிகழ்த்தியது என்பதில் ஐயமேதும் இல்லை. என் தாயாரிடமிருந்து வந்த கடிதத்தைப் பகவானிடம் காட்டியபோது அவர் அதைப் படித்துவிட்டு ''இப்போது உனக்குத் திருப்திதானா?'' என்று கேட்பதுபோல் அன்பு கலந்த புன்னகை புரிந்தார். அவர், ஆஸ்ரமத்திலும் அதன் விவகாரங்களிலும் பற்றற்று இருந்தாலும், எல்லாம் அவர் விருப்பப்படியே நடந்தன என்பது ஒரு புரியாத புதிரே. ஆஸ்ரம சர்வாதிகாரி ஸ்ரீ நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகள் ஒருமுறை என்னிடம் ''சிலசமயம் எனக்கும் பகவானுக்கும் இடையே ரேடியோ தொடர்பு போன்ற ஒன்று இருப்பதாக உணர்கிறேன். இதைப் பிறர் புரிந்துகொள்வது கடினம்'' என்று கூறினார்.

ஒருசமயம் பகவான் என்னை ஒரு புத்தகத்தை உரக்கப் படிக்குமாறு பணித்தார். நானும் படிக்கத் தொடங்கினேன்; சற்றுநேரம் சென்றபின் பகவானது சிரம் தலையணையில் சாய்ந்தது; கண்கள் மூடின. பகவான் தூங்கிவிட்டதாகத் தோன்றியதால் என் அருகில் அமர்ந்திருந்த பழைய பக்தர் ஒருவர் படிப்பதை நிறுத்துமாறு சைகை காட்டினார். படிப்பதை நான் நிறுத்தவில்லை. எனினும் அவர் என்னை மீண்டும் மீண்டும் நிறுத்துமாறு குறிப்பிடவே நானும் படிப்பதை நிறுத்தினேன். நிறுத்திய அக்கணமே பகவான் தம் கண்களைத் திறந்து நான் ஏன் படிப்பதை நிறுத்தினேன் என்று வினவினார். பொதுவாக பகவான் விழித்திருக்கிறாரா தூங்குகிறாரா என்பதை எங்களால் அறிய இயலவில்லை. உண்மையில் அவர் எப்போதும் விழித்திருந்தார்; அதாவது ஆன்மாவில் விழித்திருந்தார்.

சில சமயங்களில் அவர் சோபாவை அணுகியபோது, அவர் கண்களை மூடிக்கொண்டு சாய்ந்த நிலையில் இருப்பார். நாங்கள் ''பகவான்'' என்று மெதுவாகக் குரல் கொடுப்போம். நாங்கள் இவ்வாறு கூப்பிடும்போது அதைக்கேட்காமல் இருந்தால் அவர் தூங்குவதாக முடிவுசெய்தோம். நாங்கள் கூப்பிடுவதைக் கேட்டால் அவர் உடனே பதில் கொடுப்பார் என்றும் கண்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகவே கண்களை மூடிக்கொண்டிருக்கிறார் என்றும் கருதினோம். நாங்கள் எப்படி நினைத்தாலும், இவ்வாறு நாங்கள் கூப்பிடும்போதெல்லாம் அவர் உடனே கண்களைத் திறந்து, ''என்ன விஷயம்'' என்று கேட்பார்.

பகவான் ஒருமுறை பலாக்கொத்துக்கு நடந்து செல்கையில் அமெரிக்க பொறியியல் வல்லுநர் 'கை ஹேக்' அவர் செல்லும் பாதையில் நின்று கொண்டு அவரிடம், ''ஆத்ம ஞானம் அடைந்தபின் நான் மற்றவர்களுக்கு உதவிசெய்ய இயலுமா?'' என்று கேட்டார். இதற்குப் பகவான் ஆங்கிலத்தில் சுருக்கமாக ''ஆத்ம ஞானம் அடைந்தபின் உதவி செய்வதற்கு மற்றவர் எவரும் இரார்'' என்று விடையிறுத்தார்.

பகவான் ஒருமுறை தன்னைப்பற்றி, ''பந்த நிலையில் எண்ணங்கள் இல்லாமல் இருப்பது எவ்வளவு கஷ்டமோ, இந்நிலையில் (ஞான நிலையில்) எண்ணுவது அவ்வளவு சிரமம்'' என்று கூறினார். ''நீங்கள் கேள்விகளைக் கேட்கிறீர்கள், நானும் பதிலாகப் பேசுகிறேன்; நான் எதுவும் பேசாதபோதும் எதுவும் செய்யாதபோதும் தானாகவே உள்ளே ஈர்க்கப்படுகிறேன். நான் எங்கு இருக்கிறேன் என்பதை நான் அறியேன்'' என்று பகவான் கூறியதும் எனக்கு ஞாபகமிருக்கிறது.

நம்மால் இந்நிலையைப் புரிந்து கொள்வது அரிது. குளிர்காலத்தில் ஒரு நாள் பகவான் சோபாவின் மீது அமர்ந்திருந்தார்; ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டே அவர் ''நான் ஞானம் அடைவதற்கு இருபத்தெட்டு அல்லது முப்பது நிமிடங்கள் ஆயின என்று சொல்கிறார்கள். அது தப்பு. ஒரு க்ஷணம் இருக்கலாம். அதுவும் சரியில்லை. டைம் எங்கே அதிலே'' என்று கூறினார். அப்போது நான் அவரிடம் மதுரையில் அடைந்த அனுபவத்திற்குப் பின் அவருடைய ஞானத்தில் எப்போதாவது ஏதாவது மாற்றம் இருந்தது உண்டா என வினவினேன். அதற்குப் பகவான் ''இல்லை; மாற்றம் இருந்தால் அது ஞானம் அன்று'' என்று விடையிறுத்தார்.

அவர் இடையறாமல் மெய்யுணர்வில் நிலைத்திருந்தும் எவ்வாறு அளவுக்கு உட்பட்ட ஒரு சரீரத்தில் இருந்து செயலாற்றினார் என்பது நம் சிற்றறிவுக்கு எட்டாத புதிரே. அந்நிலையை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. மஹோன்னத நிலையில் தாம் இருந்தும், நம் போன்றவர்களிடம் நம் நிலையில் இருந்து அவர் உறவாடினார். ஆஸ்ரமத்தின் செயல்பாடுகளில் ஓரளவு



ஈடுபாடும் கொண்டிருந்தார். இவ்வாறு அவர் செய்தது அவரது தனிப்பெருங் கருணையின் ஒப்பற்ற செயலே என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இவை யெல்லாம் எவ்விதத்திலும் அவருக்குத் தேவையில்லையே.

ஒருமுறை கன்யாகுமரி செல்வதற்காக அவரிடம் விடைபெற்றுக் கொள்ளச் சென்றிருந்தேன். அப்போது அவர் ''இவர்கள் (அதாவது ஆஸ்ரம நிர்வாகிகள்) நாகர்கோவிலில் வக்கீலாக இருக்கும் பக்தர் ஒருவருக்கு வெவ்வேறு நிறங்கள் கொண்ட மூன்றுவித மணல்களை அனுப்புமாறு கடிதம் எழுதியுள்ளனர். இம்மணல்கள் மாத்ருபூதேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகத் திற்குத் தேவைப்படுகின்றன. இதுவரை அவரும் அவற்றை அனுப்பவில்லை'' என்று என்னிடம் கூறினார். என்னிடம் அம்மணல்களைக் கொண்டுவருமாறு வெளிப்படையாகக் கூறாவிடினும், அவர் என்னை அவ்வாறு செய்யும்படி குறிப்பாக உணர்த்தியதை நான் புரிந்துகொண்டேன். நாம் ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என்று அவர் விரும்பியபோது இவ்வாறுபேசித் தாம் வேண்டுவதை மறைமுகமாகக் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

அம்மணல்கள் இருக்கும் பகுதியில் யுரேனியம் இருப்பதாகத் தெரிய வந்ததால், நான் கன்யாகுமரி சென்றபோது அவற்றை எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் நான் துணிந்து யாரும் அறியாவண்ணம் ஒவ்வொரு பையில் ஒவ்வொரு நிற மணலை நிரப்பிப் பின் மூன்று பைகளையும் சுருட்டிய படுக்கையினுள் மறைத்து வைத்தேன்.

ரயில்நிலைய நுழைவாயிலில் இரண்டு காவலர்கள் எல்லோருடைய பெட்டி படுக்கைகளையும் தடைசெய்யப்பட்ட மணலுக்காகச் சோதித்துக் கொண்டிருந்தார்கள். நான் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்று எண்ணி என் மனத்தில் பகவானிடம் ''நான் மணல்களைக் கொண்டுவர வேண்டும் என்று தாங்கள் விரும்பினீர்கள். இப்போது இங்கே காவல்காரர்கள் சோதனை செய்கிறார்கள்! நான் என்ன செய்வது?'' என்று பிரார்த்தித்தேன். நான் பிரார்த்தித்தவுடன் அவ்விருகாவலர்களும் ஏதோ காரணத்திற்காக நுழை வாயிலைவிட்டு நீங்கினர். நானும் உடனே நுழைவாயிலைக் கடந்து சென்று ரயிலில் ஏறினேன். இவ்வாறு நான் ஆஸ்ரமத்திற்கு மணல்களுடன் பத்திரமாக வந்து சேர்ந்தேன்.

ஒருமுறை நான் என் கிராமத்தில் இருக்கும்போது, பெண்டிர் பற்றிய எண்ணங்களால் துன்புறுத்தப்பட்டேன். இதுபற்றி பகவானுக்குக் கடிதம் எழுதினேன். பகவான் அக்கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு ஏதும் கூறாமல் இருந்தாராம். அவர் கடிதத்தைப் படித்த அதே சமயத்தில் என்னைத் துன்புறுத்திய எண்ணங்களும் என்னை விட்டு நீங்கின. இதுபோன்ற சிறு சம்பவங்கள் பகவானைப்போல் உன்னதமான நிலையிலுள்ள ஒருவர் குருவாக

இருப்பதால் உண்டாகும் பெரும்பயனை நன்கு விளக்குகின்றன. நம் இடர்களைக் களைவதற்கு அவர் உதவியை எப்போதும் நாடமுடிந்தது.

நாங்கள் பகவானை எதுபற்றியாவது கேள்வி கேட்க விரும்பினால், பகவான் பதிலளிக்கத் தயாராக இருக்கிறார் என்று எங்களுக்குத் தோன்றும் வரை கேள்வியுடன் காத்திருப்போம். சிலசமயம் அவரை அணுகமுடியாதவாறு அவர் பார்வை எங்கோ தூரத்தில் நிலைத்திருக்கும். அல்லது ஏதாவது ஒரு வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருப்பார். அவரிடம் கொண்ட பயபக்தி காரணமாக எங்களுள் பெரும்பாலோரால் அவருடன் உரையாடலைத் துவக்கவோ, அவரைக் கேள்விகள் கேட்கவோ எளிதில் முடியவில்லை.

ஆனால், கேட்பதற்கு என்ன கேள்விகள் இருந்தன? அவரிடம் எங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அதுவன்றோ எல்லாவற்றிற்கும் மிக மேலானது? என்ன உபதேசத்தை அவரிடம் வேண்டுவது? அவர் உபதேசங்களை நாங்கள் அறிந்திருந்தோம். நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதையும் அறிவோம். அவரிடம் வந்து அவர் காட்டிய வழியைக் கடைப்பிடிப்பவர்கள், பூர்வாங்க சாதனைகளை முன்னரே செய்து முடித்தவர்கள். இளநிலைப்பட்டம், முது நிலைப்பட்டம் ஆகியவற்றிற்காகப் படிக்கும் மாணவர்கள் தங்கள் பேராசிரியர் களைக் கேள்விகள் கேட்பது உண்டு. ஆனால் ஆராய்ச்சிப்பட்டம் பெறு வதற்காக வந்தவர்கள் தங்கள் ஆராய்ச்சியில் அமைதியாக ஈடுபடுவார்கள். எப்போதாவது சிலசமயங்களில் தங்கள் ஆராய்ச்சியைப்பற்றி மேற்பார்வை யாளருடன் கலந்து ஆலோசிப்பார்கள். பகவானிடம் வந்த தீவிர சாதகர்கள், ஆராய்ச்சிப்பட்டம் பெறுவதற்காக உழைப்பவர்களைப் போன்றவர்கள்.

கர்மயோகம் மனம் தூய்மையாகப் பயன்படுகிறது என்று ஆதிசங்கரர் கூறியிருக்கிறார். அவ்வாறு தூய்மையாக்கப்பட்ட மனம் ஏதாவதொரு ஆத்ம சாதனையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். உண்மையான ஞானியே உண்மை யான கர்மயோகியாக இருக்க இயலும் என்பது பகவான் கூற்று. பிறருக்கு நன்மை செய்வதும் ஈவதும் தவறாகா. ஆனால் ஞானியே தன்னைத் தவிர மற்றவர் எவரும் இல்லை என்பதை உணர்கிறான். அப்படியானால் யார் யாருக்குக் கொடுப்பது?

பகவானது வாழ்க்கை முழுவதும் உலகிற்கு அர்ப்பிக்கப்பட்ட அருட் பிரசாதமாகும். அவர் செய்தனவெல்லாம் மற்றவர் பொருட்டே. சமூக சேவை ஓரளவிற்குத் தாற்காலிகத் துன்பநிவாரணம் அளிக்கும் என்பதை பகவான் அறிந்திருந்தார். அவ்வாறு உதவி செய்யப்பட்ட ஒருவன் இப்பிறவியில் மட்டுமன்றி இனிவரும் பிறவிகளிலும் மீண்டும் மீண்டும் துன்பத்திற்கு ஆளா வான் என்பதையும் அறிந்திருந்தார். எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற் காகவும் எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான அஞ்ஞானத்தை முழுமையாக அழிப்பதற்காகவும் பகவான் அவதரித்தார். நாம் இந்த அழியும் உடல் என்றும்,



மனம் என்றும், அகந்தை என்றும் கொள்ளும் தவறான எண்ணத்திலிருந்து நம்மை விடுவிக்க விரும்பினார். இதற்காக ஆத்ம விசார வழியை நமக்கு அளித்து அதை எவ்வாறு அப்யசிப்பது என்பதையும் விளக்கினார். தம்முடைய ஆற்றல்மிக்க சாந்நித்யத்தினாலும் அருளினாலும் சாதகர்களுக்கு அவர்கள் பயன்பெறும் வண்ணம் உதவினார்.

ஒரு சமயம் சுப்பராமய்யா பகவானிடம் ''ஐயே! அதிசுலபம் ஆன்ம வித்தை ஐயே அதிசுலபம்'' என்று தொடங்கும் ஆன்ம வித்தை கீர்த்தனையைப் பற்றி வினவினார். ஆத்ம வித்தை அவ்வளவு எளிதான ஒன்றாக இருந்தால், ஆத்ம ஞானம் அடைவது ஏன் எளிதாக இல்லை என்பது அவர் ஐயம். அப்போது நான் பகவானிடம் ''பல்லாயிரவருள் ஒருவன் என்னை அறிய முயல்கிறான்; அவ்வாறு முயல்பவர்களுள் அரியவனான ஒருவன் (முற்றிலும் என்னையே நேசிப்பவன்) என்னை உள்ளவாறு அறிகிறான்'' என்னும் பகவத்கீதை ஸ்லோகத்தைக் குறிப்பிட்டு, ''ஆத்மஞானம் அடைவது எளிது என்றால் கிருஷ்ணன் ஏன் இவ்வாறு பகவத்கீதையில் கூறியுள்ளான்?'' என்று வினவினேன். பகவான் எங்களைக் கருணையுடன் நோக்கி, நம்பிக்கையுடன் புன்னகை புரிந்து ''ஆத்ம வித்தைக் கீர்த்தனத்தில் கூறப்பட்டுள்ளது உண்மையே. நீங்கள் ஏன் அதைச் சந்தேகிக்கிறீர்கள்? உள்ளங்கை நெல்லிக் கனியைப்போல் அது தெளிவாக விளங்குகிறது'' என்று கூறினார்.

இவ்வாறு அவர் திடநம்பிக்கையுடனும் திடநிச்சயத்துடனும் கூறிய போது, நாங்கள் அவர் காட்டிய லட்சியத்தை அடைய முடியும் எனும் தன்னம்பிக்கையாலும் தளராத சிரத்தையாலும் நிரப்பப்பட்டோம். மேலும் அவர் தாம் காட்டிய லட்சியத்தை வாழ்ந்துகாட்டி விளக்கும் உதாரண புருடராக, ஆரூட ஞானியாக, மெய்ப்பொருளின் சாந்தியிலும் தூய்மையிலும் ஒன்றியவராக எங்கள் முன்னே பிரத்தியட்சமாகத் திகழ்ந்தார். வாழ்க்கையில் எங்களுக்கு இதற்குமேல் வேறு என்ன வேண்டும்? நாங்கள் எல்லோரும் எவ்வளவு பாக்கியம் செய்தவர்கள்!

— oOo —

**விவேகானந்தர் தானோ?**

ஒருநாள் இளைஞன் ஒருவன் பகவானிடம் "சுவாமி! ராமகிருஷ்ண பரமஹம்சர் விவேகானந்தரைத் தொட்ட மாத்திரத்தில் நிர்விகற்ப சமாதியில் இருக்கச் செய்தது போல் பகவானும் நிர்விகற்ப சாமதியில் என்னை நிலைபெறச் செய்ய முடியுமா?" என்று கேட்க, பகவான், "கேட்பது விவேகானந்தர் தானோ?" என்றார். இளைஞன் மௌனியாகி சென்றுவிட்டான்.

**- கனகம்மாள்**

நினைவில் நிறைந்தவை

# "ஸ்ரீரமண சொரூபம்"

*(ஸ்ரீரமண சந்நிதிமுறை 'சொரூபத் திருவகவல்' கருத்தைத் தழுவியது)*

என் மனத்துக்கு இனிய ரமணன் ஞானத் திரளாய் நிற்கும் அருணை மலையின் தலைவன், எண்ணற்ற பல சிறப்பியல்புகள் அவனிடம் ஒருங்கே காணப்படினும் அவற்றுள் எதனோடும் பற்றற்று இருப்பவன், அதனால் ஆதியாகிய நிர்குணஸ்வரூபமாகக் கூறப்படுபவன்-இத்தகைய அவனுடைய மெய் இயல்பை அவன் செய்யும் குளிர்ந்த கருணையினால் நான் அறிந்த வாறு இசைக்கின்றேன்.

அவன் அணுவினும் சிறியன் (நுண்ணியன்); ஆனால் தனக்கு அன்னிய மானவற்றை வணங்கான்; மகிழ்ந்து துதிக்கவும் செய்யான். இறைத்தன்மை யில் அவன் மலையினும் பெரியன்; எனினும் இக்கருத்திற்கு உடன்பட்டு அவனைத் துதிப்பவர்க்கு ஆசியும் மொழியான். எனவே, குறிகுணங்களுடன் பொருந்தாத அழகிய அருள்வளம் உடைய அவனை, சிறியவன் என்றோ பெரியவன் என்றோ கூறுதல் இயலாது. அதுமட்டுமன்று.

அவன் எல்லா உயிர்களின் உள்ளத்திலும் உணர்வு வடிவமாக இருப்ப வன்; எனினும் மனத்தினால் மிக முயன்று எவ்வளவுதான் எண்ணினாலும் அம்மனத்திற்கு விளங்கான். ஆனால் என்ன அதிசயம்! தவமே வடிவான அவன் அமைதியாகச் சும்மா இருந்தால் தானே விளங்குவான். அதனால் பரவெளி வடிவான அவன் விநோதத் தன்மையன், அறிவதற்கு எளியனும் அல்லன்; அரியனும் அல்லன்.

இதுபோலவே அவனுக்கு ஊழ் உண்டு என்றோ இல்லை என்றோ, அவனை உருவம் என்றோ அருவம் என்றோ, பெண் என்றோ ஆண் என்றோ, ஒன்று என்றோ பல என்றோ, அணு என்றோ மகத் என்றோ, அகம் என்றோ அயல் என்றோ, இன்பம் என்றோ துன்பம் என்றோ-இவ்வாறு அவனுடைய இயல்பையும் செயலையும் வழியையும் முறையையும் இன்னது என்று வரை யறுத்துக் கூறுவது அரிதாம். அதாவது **இறைவனாகிய ரமணனது சொரூபத்தை உரைப்பது இயலாதாம்.**

-oOo-





# ஸ்ரீரமணாஸ்ரமப் புனிதப் பயணம்

(பொன்விழா மலரில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையைத் தழுவியது)

## எலினார் பாலீன் நோயீ (கலிபோர்னியா)

சில வருடங்களுக்கு முன் என் வாழ்வில் பெரியதோர் நெருக்கடி ஏற்பட்டது. ஓயா மனத்துயரும் உறக்கமின்மையும் சேர்ந்து என் உடல்நிலையை மிக மோசமாக்கின. இத்தகைய இருண்ட நேரத்தில் எனக்கு அது வரை தோன்றாத எண்ணம் ஒன்று உதித்து எங்காவது வேறு இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதே அது. என் சகோதரி பெட்டியுடன் (Betty) கலந்து ஆலோசித்து உலக சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தேன். பயணத்திற்கான முன்பதிவைச் செய்தவுடன் நான் மிகவும் நோய்வாய்ப்பட்டேன். எனவே பயணத்தை ரத்துச் செய்ய வேண்டியதாயிற்று. ஒன்றன் பின் ஒன்றாகத் தடைகள் தோன்றிப் பயணம் செய்ய விடாமல் தடுத்தன. எனக்கும் நோயின் கடுமை காரணமாகப் பயணம் செய்வதில் உள்ள ஈடுபாடும் போயிற்று. எனினும் ஏதோ ஒன்று பயணத்தை மேற்கொள்ளுமாறு என்னைத் தூண்டிக் கொண்டேயிருந்தது. என் சகோதரியும் அவ்வாறே கருதினாள்.

சில வார ஓய்விற்குப் பின்னர் என் உடல்நிலை தேறியது. மீண்டும், ஒருமாதம் கழித்துப் புறப்படும் கப்பலில் பயணம் செய்ய முன் பதிவு செய்து கொண்டேன். புறப்படும் சமயம் முன் போலவே நோயுற்றேன். கப்பல் சான் பிரான்ஸிஸ்கோவிலிருந்து பனாமா கால்வாய் வழியாக நியூஆர்லியன்ஸை அடைய ஒரு மாதமாகும். ரயில் வழியாகச் சென்றால் மூன்றே நாட்களில் நியூஆர்லியன்ஸையடைந்து அங்கிருந்து கப்பலில் பயணம் செய்யலாம் என்றும் அதற்குள் என் உடல்நிலை தேறிவிடும் என்றும் கப்பல் ஏஜண்ட் ஆலோசனை கூறினார். ரயில் பயணம் கடுமையாக இருந்ததால் மிகவும் தளர்ந்து விழுந்தேன். என்னால் நீண்ட பயணம் மேற்கொள்ள இயலாது என்று மருத்துவர் கூறினார். முன்வைத்த காலைப் பின் வைக்க எனக்கு மனமில்லை. அதிருஷ்டவசமாகக் கப்பல் இரண்டு வாரம் தாமதமாக வந்து சேர்ந்ததால் பயணத்தைத் தொடர முடிந்தது. என்னைப் பார்த்த கப்பல் ஏஜண்ட் "உங்களைப் பார்த்தால் நோயுற்றிருப்பதாகத் தெரிகிறது, கப்பல் கேப்டன் உங்களைக் கவனித்தால் அனுமதிக்க மாட்டார்; மருத்துவ வசதியும் இல்லை" என்று கூறி என்னை அனுமதிக்க மறுத்தார். இறுதியில் "கப்பல் துறைமுகத்தை விட்டுக் கடலில் செல்லும் வரை கேப்டன் கண்களில் படாதவாறு இருங்கள்" என்று கூறி என்னை அனுமதித்தார். கடவுள் என்னைக் காப்பாற்றுவார் என்ற திட நம்பிக்கையுடன் கப்பலில் ஏறினேன். ஏதோ ஒரு சக்தி என்னை நடத்திச் செல்வதாக உணர்ந்தேன். இந்த சக்தியின் உந்துதலை மதித்து நடந்திராவிட்டால் ஸ்ரீரமண பகவான்

சந்நிதியை அடைந்து மிகச் சிறந்ததும் தெய்வீகமானதும் வேறெங்கும் கண்டிராததுமான சாந்தியையும் ஆனந்தத்தையும் நான் அடைந்திருக்கமுடியாது.

கப்பல் புறப்படுவதற்கு முன் எனக்கு அம்மை தடுப்பு ஊசி குத்திய மருத்துவர் "மிகவும் நோய்வாய்ப்பட்ட நிலையில் ஏன் பயணம் செய்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு "நான் என்னை அறிய விரும்புகிறேன்" என்று கூறினேன். நான் அமைதியைத் தேடிக் கொண்டிருந்ததால் காரணமின்றியே என் மனம் எப்போதும், முக்கியமாக நான் நோயுற்றிருந்த காலங்களில் இந்தியாவையே நாடி இருந்தது. கப்பல் புறப்பட்டவுடன் பலவித உணர்ச்சிகளின் பிடியில் சிக்கித் தவித்தேன். இரவில் பயங்கரமான கனவுகளைக் கண்டு அலறி எழுவேன். உடல்நிலை மீண்டும் மோசமடைந்தது. கப்பல் நேராக 'கேப்டவுன்' (தென்னாப்பிரிக்கா) நகருக்குச் சென்று கொண்டிருந்தது. நடுவில் எங்காவது நின்றிருக்குமாயின் பயணத்தை ரத்து செய்து வீடு திரும்பி இருப்பேன். ஆனால் இறைவன் திருவுள்ளம் நான் பயணத்தைத் தொடர வேண்டும் என்றிருந்தது. கேப்டவுனை அடைவதற்குள் என் உடல்நிலையும் சீரடைந்தது. டர்பன் துறைமுகத்திலிறங்கி ஒரு மாதத்திற்குப் பிறகு வந்த கப்பலில் ஏறி இந்தியாவிற்குப் பயணத்தைத் தொடர்ந்தேன். சென்னைத் துறைமுகத்தில் இறங்க என் நண்பர்கள் முதலில் என்னை அனுமதிக்கவில்லை. இறுதியில் என் விருப்பத்திற்கிணங்கி என்னைச் சென்னையிலுள்ள 'கன்னிமாரா' ஓட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அடுத்து என்ன செய்வதென்று அறியாமல் ஆண்டவனை வழிகாட்டுமாறு வேண்டினேன். வெப்பம் கடுமையாக இருந்ததால் வேறு குளிர்ந்த இடம் பற்றி வினவியபோது கொடைக்கானலுக்குச் செல்லுமாறு கூறினார்கள். உடனே காரில் புறப்பட்டுச் சென்றேன். அங்கு இரண்டு இந்து சகோதரர்களைச் சந்திக்க நேர்ந்தபோது அவர்களிடம் இப்பிரதேசத்தில் மஹாத்மாக்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று வினவினேன். ஏன் அவ்வாறு கேட்டேன் என்று எனக்கே தெரியாது. அவர்களிடமிருந்து நான் விடை ஏதும் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் அவர்கள் "ரமண மஹரிஷி என்னும் ஞானி திருவண்ணாமலையில் இருக்கிறார்; பள்ளிப் பருவத்திலேயே வீட்டை விட்டு வெளியேறி அருணை அடைந்தவர். வெகுதூரத்தில் வசிப்போரும் அவரைத் தரிசிக்க வருகிறார்கள். அவரைப் போல ஒரு உண்மையான ஞானியைக் காண்பதரிது. இந்தியாவிலேயே அவர் மிகச் சிறந்த ஞானி" என்று விடையிறுத்தனர். உடனே திருவண்ணாமலைக்குச் செல்ல முடிவு செய்தேன். ஆனால் மற்றவர்கள் ரமணாஸ்ரமம் ஒரு காட்டில் உள்ளதால் அந்தச் சூழ்நிலையும் வசதியின்மையும் எனக்கு ஒத்து வராது என்று தடுத்தனர். ஆயினும் ரயிலில் ஏறி திருவண்ணாமலை அடைந்தேன். ரயில் நிலையத்திலிருந்து மாட்டு வண்டியில் ஆஸ்ரமத்தை அடைந்தேன். ஆஸ்ரம சர்வாதிகாரி உள்ளிட்ட அன்பர்கள் அனைவரும் என்னை அன்புடன் வரவேற்றனர். பகவான் மலைப்பக்கம் சென்றிருப்பதாகவும் சிறிது நேரத்தில் திரும்பி விடுவார் என்றும் கூறி என்னைக் காலை உணவிற்கு அழைத்தனர்.



பகவானைத் தரிசிக்கப் போகிறோம் என்ற ஆர்வத்துடன் உள்ளே நுழைந்தவுடன் அச்சந்நிதியில் தெய்வீகமும் தூய்மையும் நிறைந்திருப்பதை உணர்ந்தேன். பகவான் சன்னிதியில் தெய்வீக மணம் வீசுகிறது. பக்தர்கள் சூழ பகவான் கௌபீனதாரியாக சோபாவில் அமர்ந்திருந்தார். அவர் புன்னகை புரிந்தபோது தேவசாம்ராஜ்யத்தின் கதவுகள் திறக்கப்படுவது போல் இருந்தது. அவரது கண்கள் ஞான ஒளியுடன் நட்சத்திரங்கள் போல் பிரகாசித்தன. அத்தகைய நயனங்களை நான் கண்டதே இல்லை. அவர் என்னை அன்புடன் வரவேற்று என்னைப் பற்றி விசாரித்தார். அவருடைய அருளும் கருணையும் நிறைந்த பார்வை என் இதயத்தை அருளால் நிறைத்தது. நானும் அவரால் உடனே கவரப்பட்டேன். அவரது கருணை சகல உயிர்களையும் தழுவிய ஒன்று. அவர் சந்நிதியில் மனம் தானாகவே தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுவதை உணர்ந்தேன். அவருடைய மகோன்னதமான ஆத்ம சக்தியை உணராமல் இருக்க இயலாது. அவர் பேசவே தேவையில்லை. அவருடைய மௌனப் பிரபாவம் வார்த்தைகளையெல்லாம் விஞ்சிய வீரியம் கொண்டது. நான் இங்கு வருவதற்கு முன் எத்தகைய ஒருவரை சந்திக்கப் போகிறேனோ என்று ஐயமுற்றிருந்தேன். ஆனால் அவரைத் தரிசித்தபின் "பகவானைப் போல் இப்பூவுலகில் இன்று எங்குமே இல்லை; அவரைக் காண்பவர் அவரிடம் தம்மைப் பறிகொடுப்பர்" என்று அறிந்தேன். நண்பகல் உணவிற்குப் பிறகு ஓய்வெடுத்தபின் அவரது சந்நிதிக்குச் சென்றேன். பகவானது சாந்தம் தவழும் திருமுகத்தையும் கருணை பொழியும் கண்களையும் நோக்கிய என் உள்ளம் உருகியது. என்னை அவர் நேரே நோக்கினார். எனக்கு அவர் எவ்வளவு தேவை என்பது அவருக்கல்லவோ தெரியும்! அவரிடம் வருவோர் அனைவரும் பாக்கியசாலிகள். அவரது இயல்பான சாந்தசுகம் அண்டினார்க்கெல்லாம் கொடுக்கப்படுகிறது. சிறு குழந்தைகள் அவரை வணங்குவது கண்கொள்ளாக் காட்சி. தெய்வீகப் புன்னகையுடன் அவர்களை வரவேற்கிறார். சில சமயம் குழந்தைகளை அவர் தன் கையில் வாங்கிக் கொள்கிறார். இது எனக்கு இயேசுநாதர் குழந்தைகளை ஆசீர்வதிக்கும் காட்சியை நினைவுறுத்தியது. இரவு உணவுக்குப்பின் பகவானிடம் நான் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி விளக்கினேன். இரவில் ஆஸ்ரமத்தில் பெண்கள் தங்கும் வழக்கம் இல்லை. ஆதலால் நான் 'முஸாபரி' பங்களாவிற்குச் சென்றேன். பல ஆண்டுகளாக ஆழ்ந்த உறக்கத்தை அனுபவித்திலேன். இதுவே என்னுடைய மோசமான உடல்நிலைக்கு முக்கியமான காரணம். தூக்கத்திற்காக உட்கொள்ளும் மருந்தும் பயனளிக்கவில்லை. இதைப் பற்றி நான் பகவானிடம் ஏதும் சொல்லவில்லை. ஆனால் என்ன ஆச்சர்யம்! எனக்குப் பழக்கப்பட்ட எந்த வசதியும் இல்லாமல் தூக்க மருந்தும் சாப்பிடாமல் அன்றிரவு நன்கு உறங்கினேன். 'உள்ளம்' எனப்படும் என் ஆண்டவன் அருளை, தவறாது பலன் தரும் ஒப்பற்ற அருமருந்தைப் பெற்றுவிட்டேன் அன்றோ? மறுநாள் காலை நான் புதுப்பிறவியைப் பெற்றதுபோல் புத்துணர்ச்சியுடன் எழுந்தேன்.

ஒருநாள் பிற்பகல், பகவான் ஆஸ்ரமத்திலிருந்து மலைக்குச் செல்லும் வழியில் உள்ள கேட் அருகே நின்று கொண்டிருந்தேன். மலைப்பக்கம் செல் லும்போது பகவான் சற்றே நின்று என்னிடம், 'இப்போது மனச் சாந்தியுடன் இருக்கிறாயா?' என்று வினவினார். அவருடைய அன்பு கலந்த ஆதரவும், புன் னகையும் என்னை அளவிலா ஆனந்தத்தில் ஆழ்த்தின.

என்னுடைய அன்பு, ஆழ்ந்த பக்தியாக மலர்ந்தது. என் உள்ளத்தில் சொற்களால் விவரிக்க இயலாத அமைதி நிறைந்தது. முன்பு நான் அதிக முக்யத்துவம் அளித்தவையெல்லாம் இப்போது பொருளற்றுப்போயின. என் னால் அவைகளைச் சரியான கோணத்தில் பார்க்கமுடிந்தது. இறந்த காலத்தைப் பற்றிய வேதனைகளும் எதிர் காலத்தைப் பற்றிய கவலைகளும் மறந்தே போயின. ஆஸ்ரமத்தில் காலச்சக்கரம் ஓடாமல் நின்று விட்டதைப் போல் இருந்தது. உண்மையிலேயே இது புண்ணிய பூமி. இங்குள்ள காற்றிலும் பகவானது அன்பும் அமைதியும் பரவியிருக்கின்றன.

ஜோதிமலையான அருணாசலத்தை நோக்கும் பொழுது, உள்ளத்தில் பயபக்தி நிறைகிறது. நம்மை மீறிய பேரருட்சக்தி நம்மைக் கவ்வி வெற்றி கொள்கிறது. இங்கே எல்லாம் ஓயாது மௌனகோஷம் செய்கின்றன. பௌர்ணமி இரவில் கிரிவலம் செல்வது ஆன்மீக ஊக்க உணர்வை அளிக் கிறது. ஆழ்ந்த அமைதி நிலவும் அருணாசலத்தின் சந்நிதியில் இறைவனது குரலை எளிதாகக் கேட்கலாம். 'விண்டிடாது உன்னிலை விளக்கிட என்றே விண்தலம் அசலமா விளங்கிட நின்றாய்' என்னும் குருநாதனின் அருள் வாக்கு இதனையே உணர்த்துகிறது. பைபிளின் கீதத்திலும் (Psalms) சும்மா இருந்து, நான் இருக்கிறேன் என்று கடவுளை உணர் (Be still and know that I am God) என்று இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வாசகத்தையே பகவான் என்னிடம் முதன்முதலில் குறிப்பிட்டார். பகவான் எனக்கு இறுதியாகக் கூறியதும் இதுவே. எனக்கு எப்பொழுதும் இவ்வாக்கியத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு விருப்பமுண்டு. எனினும் இப்போது அது புதியதோர் பொருளைப் பெற்று என்னை ஆனந்தத்தால் நிறைத்தது. ஆஸ்ரமத்தில் இரண்டு மாதங்களைக் கழித்தேன். ஒருமாதம் இந்தியாவில் ஏனைய பகுதி களைப் பார்த்துவிட்டு அமெரிக்கா திரும்ப உத்தேசித்தேன். ஆனால் ஆஸ்ர மத்தை விட்டுச் செல்ல மனமில்லை. அந்த அளவிற்கு அன்பினால் பிணைக் கப்பட்டுவிட்டேன். விருப்பமின்றியே அமெரிக்கா திரும்ப ஏற்பாடு செய்தேன். இறுதி நாட்களில் பிரிவாற்றாமையால் வருந்தினேன். என் நிலையைக் கண்ட பகவான், "நீ எங்குச் சென்றாலும், நான் உன்னுடன் எப்போதும் இருப்பேன்" என்று கூறி அனுக்கிரகித்தார்.

நான் புறப்படவேண்டிய நாளும் வந்தது. துக்கத்தைத் தாங்க முடியா மல் நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தேன். எனவே அன்று காலை ஹாலுக்குச் செல்லாமல் குளக்கரையிலேயே இருந்தேன். பிற்பகலில் ஹாலில்



பகவான் முன் அமர்ந்தபோது பகவான் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்து 'என்னை விட்டுப் பிரிய மனமில்லாமல் இவள் நாள் முழுவதும் அழுது கொண்டிருக்கிறாள்' என்றார். அவருடைய வாக்கில் அன்பும் மென்மையும் கலந்திருந்தன. இறுதியில் அவர் ஆசீர்வாதத்தைப் பெறும் பொருட்டுச் சென்றேன். பிரிவுத் துயரை என்னால் தாங்க இயலவில்லை. கண்களில் நீர் பெருக ஆழ்ந்த பக்தியுடன் உயிருக்கு உயிரான குருநாதனை வணங்கினேன். அவரே எனக்கு அம்மையும், அப்பனும், ஆண்டவனுமாக இருப்பாராக. நான் என்றுமே அவர் குழந்தையாகவே இருப்பேனாக. நான் செய்யும் செயல் யாவும் அவர் பொருட்டே ஆகுக!

முதலில் சென்னையிலிருந்து காஷ்மீர் சென்று, அங்கிருந்து கல்கத்தா சென்று கப்பலில் ஏறுவதாக உத்தேசித்திருந்தேன். நான் சென்ற எல்லா இடங்களிலும் பகவானின் அருட்சக்தி என்னை நடத்திப் பாதுகாப்பதை உணர்ந்தேன். பல ஆபத்துக்களினின்றும் என்னைக் காப்பாற்றிய சமயங் களில் அதன் செயல்கள் அற்புதங்களாகவே தோன்றின. பகவான் நினைவு என்னை விட்டு நீங்கவேயில்லை.

பகவானை மீண்டும் தரிசிக்காமல் அமெரிக்கா செல்கிறோம் என்ற எண்ணம் என்னைப் பலமுறை கண்ணீர்க் கடலில் ஆழ்த்தியது. ஒருநாள் 'என்னிடம் மீண்டும் வருக' என்று பகவான் கூறுவது போல் கேட்டது. பகவானைப் பிரிந்த நாட்களில் அவர்பால் கொண்ட பக்திவிசுவாசம் தீவிரமாயிற்று. நான் மீண்டும் திருவண்ணாமலை செல்லத் தீர்மானித்தேன்.

என் பயணத் திட்டத்தை மாற்றினேன். கல்கத்தாவிலிருந்து கப்பல் ஏறி அமெரிக்கா செல்லாமல் திருவண்ணாமலைக்கு ரயிலில் பயணமா னேன். என்ன அதிசயம்! மீண்டும் சொந்த வீட்டிற்குச் செல்வதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. நான் பகவான் முன் நின்றபோது அவர் கனிவுடன் என்னை வரவேற்றது என் நெஞ்சை விட்டு என்றும் நீங்காது. இம்முறை பகவானைத் தரிசித்த மகிழ்ச்சியால் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. என்றும் பிரகாசிக்கும் அவரது ஞானப் பிரபாவத்தில் மூழ்கித் திளைத்தேன். அவர் அருள் என்னை முற்றிலும் நிறைத்தது.

குருநாதர் தம் திருக்கரங்களால் தீண்டிய உணவை உண்பதே பாக்கியம். அவருடன் சேர்ந்து உண்பது பெரும் பேறு ஆகும். அவர் அதிகாலையில் எழுந்து காய்கறிகளை நறுக்கிக் கொடுப்பார். சிறப்பான உணவு வகைகளைச் சுவையாகச் சமைக்கவும் செய்வார். ஏழையையும் பணக்காரரையும் சமமாக நடத்துவார். மிருகங்களுக்கும் அப்படியே. எந்தவிதமான பாரபட்சமும் கிடையாது.

மழைக்காலங்களில் பகவான் தன் மார்பில் குளிர் தாக்காதவாறு ஒரு வெள்ளைத் துணியை அணிந்து கொள்வார். அப்போது அழகிய குழந்தை

ஒன்று பிப் (Bib) அணிந்து கொண்டது போல் தோன்றும். பேரறிவும், பெருமையும் ஒருபுறம் இருக்க, அவருடைய கள்ளமற்ற குழந்தைத்தனம் நம் மனதைக் கொள்ளை கொள்ளும். சில சமயங்களில் ராஜாதிராஜனாகக் கம்பீரத்துடன் காட்சியளிப்பார். இரவு நேரங்களில் தலைக்கு முக்காடிட்டுப் போர்வையைப் போர்த்துக் கொள்வார். அச்சமயங்களில் இயேசுவை ஈன்றெடுத்த புனித மேரியைப் போல் காட்சியளிப்பார். நான் வெளியில் நின்று இக்காட்சியைக் கண்டு மோனத்தால் வழிபடுவேன். வேறு சில சமயங்களில் குழந்தைகளைக் கருத்துடன் கவனிக்கும் தந்தை போல் காட்சியளிப்பார். மாலையில் சூரியன் மறையும்பொழுது அவர் மலை மீது ஏறிச் செல்வதை மிகுந்த ஆர்வத்துடன் கண்டு களிப்பேன். அச்சமயங்களில் அவருடன் செல்ல வாய்க்கும் போது பேரானந்தம் அடைவேன்.

ஒருநாள் காலை அழகிய ரோஜா மலர் ஒன்றைக் கண்டு பறித்தேன். அதனைப் பகவானுக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. அன்பர் ஒருவர் அம்மலரைக் கண்டு "ஆஹா எவ்வளவு அழகான ரோஜா மலர்" என்று வியந்தார். 'ஆம், இது பகவானுக்கு' என்று கூறி ஹாலுக்குள் சென்றேன். பகவானிடம் அதனைக் கொடுப்பதா வேண்டாமா என்று எண்ணி அருகே உள்ள ஸ்டூலின் மேல் மலரை வைத்தேன். பகவான் "அது என்ன?" என்று வினவ 'ஒன்றுமில்லை, ரோஜா மலர்தான்' என்று கூறினேன். பகவான் அதனை "என்னிடம் கொடு" என்று மலரை வாங்கிக் கொண்டு, தன் நெற்றியிலும், கன்னத்திலும் ஒற்றிக் கொண்டார். பகவானது கருணைச் செயல் என்னை உருக்கியது. நான் அழுது விட்டேன்.

அமெரிக்காவிலிருந்து கிளம்பியபோது நான் சாந்திக்காக ஏங்கினேன். என் மனதில் அதனை அடைவதற்காகத் தோன்றிய தீவிர இச்சை என்னை வாளா இருக்க விடாமல் விரட்டிற்று. இங்கு என் ஆண்டவன் திருவடியில் அன்பும், அமைதியும், ஆனந்தமும் என்னைச் சூழ்ந்து என் உணர்வில் கலந்தன. பேரமைதி தரும் இவ்விடத்திற்கு என்னை ஈர்த்து வந்தது பகவானே என்பதை நன்கு உணர்கிறேன்.

நான் புறப்பட வேண்டிய நாளும் நெருங்கியது. இம்முறை முன்போல் திரும்ப இயலாது என்று எண்ணி வருந்தினேன். நான் ஆஸ்ரமத்திற்குத் திரும்பியபின் எட்டு மாதங்கள் கழிந்திருந்தன. என் குருநாதருடன் கழித்த அவ்விறுதி நாட்கள் ஆனந்தமானவை. என்னிடம் மிகுந்த அன்பும் பரிவும் காட்டினார். அவர் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தபோதெல்லாம் என் கண்கள் குளமாயின. எப்படி இவ்விடத்தை விட்டுச் செல்லப் போகிறோம் என்ற மலைப்பும் ஏற்பட்டது. நான் புறப்படவேண்டிய நாளும் வந்தது. என்னால் அழுகையைத் தடுக்க இயலவில்லை. அன்று காலை பகவானுடன் மலை மீது நடந்து சென்றேன். பிற்பகலிலும் நானும் சில அன்பர்களும் பகவானுடன் நடந்து சென்று புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.



பகவானுடன் இறுதி முறையாக இறங்கி வந்து கொண்டிருந்தேன். அப்போது என் உள்ளத்தில் இருந்ததை அவரே அறிவார். நாங்கள் திரும்பும்போது இருபுறத்திலும் குரங்குகள் வரிசையாக நின்றன. பகவான் அவைகளை நோக்கி, எனக்கு விடையளிக்குமாறு கூறினார். அக்குரங்குகளை நானும் நேசித்தேன் என்பதை அவர் அறிவார். ஹாலில் நுழைந்தவுடன் பைபிளின் கீதப் பகுதியிலிருந்து• (Psalms) ஆறுதல் அளிக்கும் சில பகுதிகளை என் பொருட்டு வாசித்தார்.

அன்றிரவு தம்முன் உணவு உட்கொள்ள பகவான் என்னை அழைத்தார். (இரவில் பெண்கள் போஜன சாலைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை) இறுதி முறையாக பகவானுடன் உணவு உட்கொண்டது தெய்வீக ஆனந்தத்தை அளித்தது. அதனை நான் என்றும் மறவேன். நான் கிளம்புவதற்கு முன் ஆசீர்வாதம் வேண்டி அவரிடம் சென்றேன். அவர் திருவடியை என் கண்ணீரால் நனைத்தேன். என் உள்ளத்தில் அன்பு வெள்ளம் கரை புரண்டோடியது. என் குருநாதர் என் உயிரைக் காட்டிலும் எனக்கு இனியவர். எனது வாழ்க்கையை அவருக்கு அர்ப்பணிப்பேனாக! இறுதியாக என்னைப் பரிவுடன் நடத்திய அன்பர்கள் அனைவரிடத்தும் விடைபெற்றேன்.

என்னால் இயன்ற அளவில் என்னுடைய அற்புத அனுபவத்தைத் தெரிவித்துள்ளேன். ஆனால் பகவானது சன்னிதான மகத்துவத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அது அனுபவித்தறிய வேண்டிய ஒன்று. ஆங்கே மெய்ப்பொருளை நேருக்கு நேர் தரிசிக்கலாம். *1946-ல்* இக்கட்டுரையை எழுதுகிறேன். நான் தாயகம் திரும்பி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். குருநாதருடைய சாந்நித்யம் அவர் கூறிய படி நாளுக்கு நாள் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது. எனது பக்தி விசுவாசமும் வளர்ந்து வருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் அது அசையாது. விரைவிலேயே எனது குருநாதரிடம் வந்து சேருவேன். அவர் அழைப்பது என் செவியில் ஒலிக்கிறது.

---

• *"பிரபோ! தங்கள் ஆவியை விட்டுப் பிரிந்து யான் எங்குச் செல்வேன்; தங்கள் சந்நிதானத்தை விட்டு எங்கு தான் ஓட முடியும். உயரச் சென்று ஸ்வர்க்கத்தைச் சேர்ந்தால் அங்கே தாங்கள் இருக்கிறீர்கள். நரகத்தில் வீழ்ந்து கிடப்பேனேயாகில் அங்கும் தாங்கள் இருக்கிறீர்கள். காலைப் பொழுதின் இறக்கைகளை தரித்து சமுத்திரங்களின் சூர்யோதய எல்லைக்குச் சென்றாலோ, அப்போதும் தங்கள் கைகளே என்னை அழைத்துச் செல்லும்; தங்களுடைய வலது கை என்னைத் தாங்கிச் செல்லும்".*

–oOo–

# பிரஹ்மவித்தை

(ஸ்ரீ பகவானின் 'விசாரசங்கிரகத்'திலிருந்து ஒரு பகுதி)

பிரஹ்மபுர மென்னும் தேகமாகிய பட்டணத்தில், ஹிருதயகமலா ஸனத்தில் வசிக்கும் ஜீவனாகிய சிவலிங்கத்தை யறிய, தேகாதிகளை நானென்று பஹிர்முகத்தில் சஞ்சரிக்கும் அகங்காரரூப மனதை ஹிருதயத்தில் அடக்கி, தேகாதிகளில் அஹம்புத்தி நீங்கி, தேகத்திலிருக்கும் நான் யார்? என்னும் விசாரத்தோடு, இருந்த படியிருந்து நிச்சலமாக விசாரிக்குங்கால், அஹம் அஹம் என்னும் ஸ்புரிப்பு ஸூக்ஷ்மமாய்த் தோற்றும். அந்த நானாகும் (அஹமென்னும்) ஆத்மசொரூபமே, எல்லாமாய், அல்லவுமாய், பாஹ்யாந்தர பேதமின்றி, எங்குமாய் விளங்கும் பரமாத்மசொரூப மென்னும் நிச்சல பாவனையோடிருத்தல் வேண்டும். இதுவே ஸோஹம் பாவனை யெனப்படும். இதுவே துரிய மெனப்படும். இவ்வித ஸ்புரிப்பு அடங்கின ஸூக்ஷ்மமான இடமே துரியாதீத மென்றும், பின் யோகாஷ்டாங்கத்தில் கூறப்படும் ஜ்வாலா அல்லது ஜோதிரந்தர்க்கதமாய் விளங்கும் ஸர்வ பரிபூரண பரமாத்மா என்றும், ஹிருதயாகாசம் அல்லது தகராகாச மென்றும், மனாகாசம் அல்லது சித்தாகாயமே ஸ்தானமாய்க் கொண்டு எங்கும் பிரகாசிக்கும் ஞானவெளி அல்லது சிதாகாசமென்னும் சிதம்பரப் பிரஹ்ம மென்றும், சிவ மென்றும் ஆத்மா வென்றும், ஞானமென்றும் பலவாறாகச் சொல்லப்படும் கடவுளாகிய பரதேவதா வஸ்து.

வெகுகாலம், முற்கூறிய அஹமென்னும் ஆத்மானுஸந்தான மாகிய ஸோஹம் பாவனையால், (ஸ: = பரமாத்மா; அஹம் = நானென விளங்கும் ஆத்மா) நிரந்தரம் நிச்சலமாய்த் தியானித்து வந்தால், ஹிருதயத்தில் உள்ள அஞ்ஞான அந்தகாரமும் அஞ்ஞான தற்காரியங்களான ஸர்வப் பிரதி பந்தங்களும் நீங்கி, பரிபூர்ண ஞானமானது லப்தமாகும். இங்ஙனம், தேகாலய மாகிய பட்டணத்தில் ஹிருதயகுகையிலிருக்கும் வஸ்துவை அறிதலே, ஸர்வ பரிபூர்ணமாயிருக்கும் வஸ்துவை அறிதலாம்; தேகம் அல்லது ஹிருதயமே ஸர்வமா யிருப்பதால், ''நவத்துவாரத்துடன் கூடிய தேகமாகிய புரியில் ஞானி சுகமாய் வசிப்பான்'' என்னும் கீதையும்; ''தேகமே தேவாலயம், ஜீவனே சிவன்; அவனை ஸோஹம் பாவனையாற் பூஜிக்கின் முக்தியுண்டாகும்; பஞ்சகோசாத்மகமான தேகமே குகையென்றும், ஹிருதயமே குகையென்றும், அதில் வசிக்கும் பரன் குகேசனாவான்'' என்னும் சுருதியும் பிரமாணம். இங்ஙனம் பிரஹ்மத்தை அறியும் மார்க்கமே தகரோபாஸனை அல்லது தகரவித்தையென்றும், பிரஹ்மவித்தை யென்றும் சொல்லப்படும்; இதைக் காட்டிலும் வேறு என்ன சொல்லக்கூடும்? ஊகித்து அறிந்துகொள்ள வேண்டும்.

— oOo —



# ஸ்ரீ ரமண வசன சாரம்

## சிவப்பிரகாசம் பிள்ளை

*['ஸ்ரீ ரமண மாமறை' எனப் பலராலும் போற்றப் பெறும் 'நான் யார்' என்னும் விழுமிய நூலை, பகவானிடத்து முதன் முதலில் 'நான் யார்?' எனும் வினாவை எழுப்பியதன் வாயிலாக, நம் எல்லோருக்கும் பெற்றுத் தந்தவர் சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள். பகவானிடத்து இவ்வரிய உபதேசத்தைப் பெற்ற பின்னர் தம் சொந்த ஊராகிய இடையன்பாற்சொரியில் இருந்து விசாரசீலராகத் திகழ்ந்து யானற்ற நிலையில் நின்றவர். அவர் பகவானுடைய உபதேசங்களையும் பகவானிடம் தாம் செய்த பிரார்த்தனைகளையும் தாம் பெற்ற அனுபவங்களையும் பல இனிய பாடல்களாகப் பாடியுள்ளார்.*

*சிவப்பிரகாசம் பிள்ளை 1949-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் பகவான் திருவடி நிழலை அடைந்தார். அவரது மறைவிற்குப்பின் அவரது நெருங்கிய உறவினரும் அன்பருமான மாணிக்கம் பிள்ளை, அவரெழுதிய பாடல்களின் கையெழுத்துப் பிரதிகளுடன் பகவானைத் தரிசிக்க வந்தார். பிள்ளையவர்களின் இறுதிக் காலம் பற்றி விசாரித்தபின் பகவான் பகவான் 'அவர் இயற்றிய புதிய பாடல்கள் எவையேனும் உள்ளனவா?' என்று வினவினார். அதற்கு மாணிக்கம் பிள்ளை, 'பகவான்! அவர் சில கையெழுத்துப் பிரதிகளை என்னிடம் விட்டுச் சென்றுள்ளார். அவற்றை யாரிடமும் காட்டாமல் எடுத்து விடுமாறு பணித்திருக்கிறார்' என்றார். இதைக் கேட்ட பகவான் 'அப்படியா! அதனால் பரவாயில்லை; அவற்றை என்னிடம் காட்டலாம்' என்று கூறி கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய கட்டினின்று ஒரே ஒரு தாளை மட்டும் எடுத்துக் கொண்டு 'இது ஒன்றே போதும்' என்று கூறி மற்றவைகளை மாணிக்கம் பிள்ளையிடம் திருப்பிக் கொடுத்தார். பகவான் எடுத்த நாளில் 'ஸ்ரீ ரமண வசன சாரம்' எனும் இப்பாடல் இருந்தது.]*

இதுவே ஸார மிதுவே ஸாரம்,
இதுவே ரமண மொழியின் ஸாரம்;
நிஜநீ யார்சொல், நினைநீ நாடு
நிஜமா நாற்றத் தசைநீ யலவே;
உடலோ பிறக்கு முடலோ விறக்கும்;
உடலோ வறியா துறக்கத் திலையே;
அறிவே நீயாம், நீயே யறிவாம்;
அறிவே பிறவா திறவா துளதே.
உறக்கத் தறிவுன் டுடலின் றுடலம்
உறக்கத் திலையென் றுணர்ந்தோ ளீயே;
உணரா ருடலின் பிறப்பை யுளரோ?

உணர்ந்தா ருணர்வின் பிறப்பை யுளரோ?
உடனீ யலைமே லுரைத்த வாற்றால்
உடனீ யெனுந்தி மதியை யொழியே;
நினையுன் னுருவே தெனவெப் பொழுதும்;
நினைமற் றெதையு நினைத்தி டாதே;
உடனா னெனுமோர் நினைவே யுளவோர்
ஒடுங்கி னொடுங்கு நினைவெல் லாமே.
உடனா னெனுமந் நினைவை யொடுக்கும்
உடலோ வுணர்நா னெனுமா ராய்வே;
உடனா னெனுமா லுடையோ னுலகில்
உடையூ ணாதிக் குளதை வானே:
உடனா னெனுமா லொழிப்போ னுலகில்
உடையூ ணாதிக் குளதை யானே:
இறுதி யுறினு மிதயங் கலங்கேல்;
இறைவன் செயலென் றிருந்தி டாயே.
ஒன்றோ வுடல மிரண்டோ மூன்றோ,
ஒன்றும் பயனின் றோர்த லாலே;
உடல மிதைவிட் டுன்றிப் பார்க்கில்
உடல்வே றெதற்கு மிடம்வே றிலையே;
அனிய மாகத் தோன்றுந் தோற்றம்
அனைத்து மகற்றா யலனா னென்றே;
அனிய மாந்தத் துவங்கள் குப்பை
அனைய கூட்ட மகற்றா யொருங்கே;
நினைக்க நினைக்க நானா ரெனவந்
நினைவே நிற்கும், நீறாம் பிறவே;
நினைவொன் றதுவு நீறாய்ப் போம்பின்
நினைவில் விடமே நிஜநீ யறியே;
ஒடுங்கா துதியா துளதே ததுவுன்
னுடைய சொரூப மொளிருந் தானே;
இனன்போற் சொரூப மிலகுங் காறும்
இனைய வாறே யிரியா தொழுகே
இதுவே ஸார மிதுவே ஸாரம்;
இதுவே ரமண மொழியின் ஸாரம்.

—o0o—



# ஸ்ரீ ரமணோபதேசம்

## சிவப்பிரகாசம் பிள்ளை

1. ஈச னாசா னிவருள்ளே
யிறைவ னாக வொருவனைக்கொண்
டாசின் முக்தி யடையும்வரை
யவனா னென்றுன் னகத்துட்கொண்
டாசை யின்றி யவனுடைய
வாணைப் படியே நடவென்று
மாசில் ரமணன் மொழிமறந்து
மயங்க லென்னோ மடநெஞ்சே.

2. சிரசினிற் சிகைதான் வேண்டும்
திருவெண்ணீ றணிதல் வேண்டும்
அருங்குலா சாரம் வேண்டும்
ஆன்ம விசாரம் வேண்டும்
இரமணன தாணை யாகு
மிவையெலா மேழை நெஞ்சே
மரணமுற் றிடுநாண் மட்டும்
மறந்திடா துன்னுட் கொள்ளே.

3. வீடு தனிலே யிருந்தபடி
வேலை யொழிந்த நேரமெலாம்
ஓடித் திரியு முள்ளத்தை
யொடுக்கி யானா ரென்கின்ற
ஈடி லான்ம விசாரத்தி
லிழுத்துப் பழக்கென் றெனக்கிசைத்த
கேடில் ரமணன் மொழியெங்கே
கெட்ட நாயேன் நடையெங்கே.

4. நிரந்தரஞ் சுவசொ ரூப
நினைவையே பற்றி நில்லென்
றிரமண பகவன் சொன்ன
வெழிலுப தேசந் தன்னை
மறந்தன னாகித் தீய
வாதனை வயத்த னாகி
இறப்பதற் குரிய னாகி
யேழையேன் தவிக்கின் றேனே.

5. நிரந்தரஞ் சுவசொ ரூப
நினைவையே பற்ற லென்னு
முரையினுக் கர்த்தம் யாதென்
றோர்ந்திட லுடனா னல்லே

னிறந்திடு முடற்கு வேறா
    மெனதுமெய்ச் சொரூப மென்று
நிரந்தர மஃதியா தென்று
    நினைத்தலே வேறொன் றல்ல.

6. மனதினை யடக்க லென்று
    வழங்கிடு மொழியி னுக்குக்
கனமுறு பொருள்யா தென்று
    கருதிடி லகந்தை யாதி
செனித்திடு கின்ற போதே
    சிறிதுமே மயங்கி டாமல்
அனைத்தையும் அழித்த லாகு
    மரும்பகை யழித்தல் போல.

7. ஓடித் திரியு முள்ளமென்
    றுரைத்த துடலை நானென்றும்
மாடு வீடு தந்தைதாய்
    மனைவி மக்க ளெனதென்றும்
கேடு நன்மை புரிவோர்கள்
    கெட்ட பகைநல் லுறவென்றும்
ஓடி நினைக்கும் சக்தியே
    யுரைப்ப ரிதையே மனதென்று.

8. இழிவுட லானென் றெண்ணு
    மெண்ணமெழு கின்ற போதே
இழிவுட லல்லே னென்னு
    மெண்ணத்தா லதனை மாய்த்தல்
அழித்திடு மார்க்க மாகு
    மகந்தையை யகந்தை மாய்த்தால்
இழிவுடற் கெது வந்தாலு
    மெனக்கிலை யென்று தோன்றும்.

9. நரக வுண்ணு நாய்போல
    நாரியர் நாடித் திரியாதே
அருகில் வந்து நில்லாதே
    யவரோ டிணக்கஞ் செய்வாயேல்
குறிப்பா லிவ்வா றுரைத்தனனே
    குருவாம் ரமண முனிவரனே
உரைத்த வண்ண மொழுகினையோ
    வுளமே யுன்னிப் பார்நீயே.


–o0o–



கருணையால் என்னை யாண்டநீ யெனக்குன்
    காட்சிதந் தருளிலை யென்றால்
இருணலி யுலகில் ஏங்கியே பதைத்திவ்
    வுடல்விடில் என்கதி யென்னாம்
அருணனைக் காணாது அலருமோ கமலம்
    அருணனுக் கருணனா மன்னி
அருணனி சுரந்தங் கருவியாய்ப் பெருகும்
    அருணமா மலையெனும் அன்பே.

கிரியிது பரமாக் கருதிய வென்போற்
    கெட்டவர் எத்தனை கொல்லோ
விரிதுய ராலிப் பிழைப்பினில் விழைவு
    விட்டுடல் விட்டிட விரகு
கருதியே திரிவீர் கருத்தினுள் ஒருகாற்
    கருதிடக் கொளாமலே கொல்லும்
அருமருந் தொன்றுண் டவனியி லதுதான்
    அருணமா திரமென வறிவீர்.

– ஸ்ரீ அருணாசல பதிகம்




மணிகளிற் சரடென வுயிர்தொறு நானா
　　மதந்தொறும் ஒருவனா மருவினை நீதான்
மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்
　　மறுவறக் கடையநின் அருளொளி மேவும்
மணியொளி யெனப்பிறி தொருபொருட் பற்றும்
　　மருவுற லிலைநிழற் படிதகட் டின்விண்
மணியொளி படநிழல் பதியுமோ வுன்னின்
　　மறுபொருள் அருணநல் ஒளிமலை யுண்டோ.

கடலெழும் எழிலியாற் பொழிதரு நீர்தான்
　　கடனிலை யடைவரை தடைசெயி னில்லாது
உடலுயிர் உனிலெழும் உனையுறு வரையில்
　　உறுபல வழிகளில் உழலினு நில்லாது
இடவெளி யலையினு நிலையிலை புள்ளுக்கு
　　இடநிலம் அலதிலை வருவழி செல்லக்
கடனுயிர் வருவழி சென்றிட வின்பக்
　　கடலுனை மருவிடும் அருணபூ தரனே

— ஸ்ரீ அருணாசல அஷ்டகம்

# ஞானத்திரளாய் நின்ற பெருமான்



## தலம் யாவிலும் அதிகம்

முக்திநகரம், ஞானநகரம், சுத்தநகரம், தக்ஷிண கைலாயம், தலேசுவரம், சோணசைலம், அருணாசலம் என்றெல்லாம் போற்றப்பெறும் திருவண்ணாமலை, என்று உலகம் உண்டாயிற்றோ அன்றே உண்டானதாகும். தேஜோலிங்க சுயம்பு மூர்த்தியான அருணமாமலை தென்திசையில் என்றும் நிலைபெற்று பூமியை ஊடுருவி விளங்கி எல்லா அண்டங்களுக்கும் அச்சாகத் திகழ்கிறது. ஸ்ரீ பகவான், அருணாசலத்தின் ஒப்பற்ற புனிதத் தன்மையை விளக்கும் சில ஸ்லோகங்களை ஸ்காந்தமஹா புராணத்திலிருந்து தேர்ந்தெடுத்து, அவற்றை ஒரு தமிழ்ச்செய்யுளாக வடித்துள்ளார். அச்செய்யுள் வருமாறு:

**அதுவேதலம் அருணாசலம்; தலம்யாவிலும் அதிகம்;**
**அதுபூமியின் இதயம்அறி; அதுவேசிவன்; இதயப்**
**பதியாமொரு மருமத்தலம்; பதியாமவன் அதிலே**
**வதிவானொளி மலையாநிதம் அருணாசலம் எனவே.''**

அருணாசலத்தின் புனிதத் தன்மையைப் பற்றி அன்பர்கள் வினவிய போதெல்லாம் ஸ்ரீ பகவான் ''கைலாயம், காசி, சிதம்பரம் போன்ற மற்ற க்ஷேத்திரங்கள் சிவபிரானின் உறைவிடங்களாகத் திகழ்வதால் புனிதமானவை; ஆனால் அருணாசலமோ சாக்ஷாத் சிவ சொரூபமே'' என்று விளக்குவார். எனினும், மேற்குறிப்பிட்ட ஸ்காந்த மஹாபுராணப் பாடலில் கூறியபடி, அருணாசலம் ஓர் இரகசியத் தலம். அருணாசலம் ஞானத்தை அளிக்கும் தலமாதலாலும், பெரும்பாலான மக்கள் பற்பல ஆசைகள் வயப்பட்டவர்களாய் ஞானத்தில் உண்மையான இச்சையின்றி யிருப்பதாலும், அருணாசலம் எப்பொழுதும் மக்களிடையே பிரசித்தமின்றி இருந்துவருகிறது, ஆனால் ''ஞானத் தபோதனரை வாவென்று அழைக்கும் மலை அண்ணாமலை'' என்னும் ஆன்றோர் அனுபவத்தின்படி, ஞானத்தில் உண்மையான இச்சை கொண்டு விழைவார்க்கு அருணாசலம் எப்படியாவது தன்னை அறிவித்து விடுகிறது.

அருணாசல க்ஷேத்திரத்தின் ஒப்பற்ற புனிதத் தன்மையும் ஆற்றலும் ஒரு சமயம் ஸ்ரீ பகவானின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியால் உறுதிப்படுத்தப்

மைக்கேல் ஜேம்ஸ் எழுதிய ''தி பவர் ஆஃப் அருணாசலா'' எனும் ஆங்கிலக் கட்டுரையைத் தழுவியது.

பட்டன. பக்தர் ஒருவர் ஸ்ரீ பகவானிடம் கொண்ட பேரன்பு காரணமாக அவரைத் தன்னுடைய சொந்த ஊரான சிதம்பரத்திற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். ஆனால் நேரிடையாக ஸ்ரீ பகவானை அவ்வாறு கேட்காமல், ஸ்ரீ பகவான் எப்பொழுதாவது தில்லை நடராசப் பெருமானைத் தரிசித்திருக் கிறாரா என்று வினவத் தொடங்கினார். ஸ்ரீ பகவான் ''இல்லை'' என்று பதில் கூறிய போது அவ்வன்பர் சிதம்பரத்தின் மகிமையை விவரிக்கத் தொடங் கினார். அன்பர் சொல்லிய எல்லாவற்றையும் பொறுமையாகக் கவனத்துடன் ஸ்ரீ பகவான் கேட்டார்; எனினும், சிதம்பரத்தைக் காண ஆவலொன்றும் காட்டவில்லை. இதைக் கண்ட அன்பர் முடிவாக, ''சிதம்பரம் அருணா சலத்தையும்விட உயர்ந்த ஸ்தலம். ஏனெனில், பஞ்சபூதலிங்கங்களுள் சிதம்பரமோ ஆகாசலிங்கம்; ஆனால் அருணாசலமோ அக்கினி லிங்கம்தான்.* மண், நீர், நெருப்பு, காற்று என்ற நான்கு பூதங்களும் ஆகாசத்தில் அடங்குவதால், ஆகாசமே முதன்மையான பூதம்'' என்று கூறினார்.

இதைக்கேட்ட ஸ்ரீ பகவான் புன்முறுவல் பூத்து ''பரமாத்மாவான சிவபிரானுக்கு அன்னியமில்லாத சக்தியானவள் அப்பரம்பொருளினின்றும் பிரிந்தாற்போல் தோன்றும்போதுதான், ஐந்து பூதங்களுக்கும் இருப்புண்டா கிறது. இதன்படி பஞ்சபூதங்களும் சக்தியின் படைப்பேயாதலால், அவள் அவற்றிற்கெல்லாம் உயர்ந்தவள். ஆகையால், பூதங்கள் ஒடுங்கும் இடத்தை விட சக்தியே ஒடுங்கும் இடம் மிக மேலானதாகும். தில்லையில் சக்தி நடன மாடுவதால், சிவபிரானும் அவள்முன் தாண்டவமாடி அவளை அசலையாகச் செய்கின்றார். ஆனால் அருணாசலத்திலோ சிவபெருமான் எப்பொழுதும் அசலனாகவே இருப்பதால், சக்தி பேரன்பினால் கட்டுண்டு தானாகவே முயற்சியின்றி அவனுள் ஒடுங்குகின்றாள். ஆகவே இப் பன்மையான தோற்றத்தை உண்டாக்கிய சக்தியே இறைவனுள் இத் தலத்தில்தான் ஒடுங்கு வதால், அருணாசலம் தலைசிறந்த பேராற்றல் வாய்ந்த தலமாக விளங்குகிறது. ஆகையால் பொய்த் தோற்றமாகிய துவிதக்காட்சி முற்றும் அழிந்து மெய்க் காட்சி பெற விழையும் பக்குவ சாதகர்களுக்கு அருணாசல க்ஷேத்திரத்தில் தக்க அருளுதவி மிகுதியாகக் கிடைக்கும்'' என்று கூறினார்.

பின்னர் ஸ்ரீ பகவான் இந்த விடையை ஒரு வெண்பாவாகச் சுருக்கி எழுத, அவ்வெண்பா ஸ்ரீ அருணாசல நவமணி மாலையில் முதற்பாடலாக இடம் பெற்றது. அவ்வெண்பா வருமாறு:

**''அசலனே ஆயினும் அச்சலை தன்னில்**
**அசலையாம் அம்மையெதிர் ஆடும் – அசல**
**உருவிலச் சக்தி ஒடுங்கிட ஓங்கும்**
**அருணா சலமென் றறி''**

---

★ அருணாசலம் பொதுவாக பஞ்சபூத லிங்கங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டாலும் ஸ்ரீ பகவான் இது ஸ்தூலமான பஞ்சபூதங்களுள் ஒன்றான சாதாரண அக்கினி லிங்கம் அன்று என்றும் அகந்தையை எரித்தழிக்கும் ஞானாக்கினி லிங்கமே என்றும் குறிப்பிடுவது வழக்கம்.



## குரு உருவாய் ஒளிர் அருணாசலம்

முக்தி அருள வல்லதும், அகந்தையை அழிக்க வல்லதும், 'தேகமே நான்' என்ற பொய் பாவத்தை அகற்ற வல்லதுமான மிகச் சிறந்த ஞானகுருவாக எக்காலும் புகழ்பெற்றது அருணாசலம். பிரம்ம விஷ்ணுக்கள் அகங் காரத்தாலும் கர்வத்தாலும் அறிவழிந்து தங்களுக்குள் சண்டையிடத் தொடங்கிய போது, அருணாசல சிவபெருமான் ஜோதிஸ்தம்ப வடிவில் அவர்கள் முன் தோன்றி அவர்களுடைய அகங்காரத்தை அழித்து மெய்ஞ்ஞானத்தைப் போதித்தார். பார்வதிதேவி தான் எந்த நிலையை அடைந்தால் தன்னால் தவறிழைக்க முடியாதோ அந்த நிலையைத் தனக்கு அருளுமாறு பிரார்த்தித்த போது சிவபிரான் அவளை அருணாசலத்திற்கு அனுப்ப, இங்கே அவரிடம் அவள் ஒடுங்கி ஐக்கியமானாள். இங்ஙனம் அருணாசலம் பிரம்மவிஷ்ணுக் களுக்கே குருவாகவும் பார்வதிதேவி தன்னுடைய தனி வியக்தித்வத்தை இழந்த இடமாகவும் திகழ்கிறது.

காலங்காலமாகத் தோன்றிய மகான்கள், அகந்தையைவேரறுத்து ஆத்ம ஞானமளிக்கும் அருணாசலத்தின் ஒப்பற்ற ஆற்றலைப் போற்றி, தமிழ் வடமொழி மற்றும் வேறு இந்திய மொழிகளிலும் பாடல்கள் பாடியிருக் கிறார்கள். சைவசமய குரவர்களான ஞானசம்பந்தர். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் அருணாசலத்தைப் புகழ்ந்து பாடியிருக் கிறார்கள். ஸ்ரீ பகவானால் பலமுறை குறிப்பிடப்பெற்ற ஒரு தேவாரத்தில் திருஞானசம்பந்தர் இம் மலையை ''ஞானத் திரளாய் நின்ற பெருமான்'' என்று வர்ணிக்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருணாசலத்தை நினைந்து ''அண்ணாமலையானே, ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே'' என்று பாடுகிறார்.

இப்புராணக் கதைகளும், பண்டை ஞானிகளின் பாடல்களும், அருணாசலமே பரம ஞானகுரு என்பதை நிலைநாட்டுகின்றன. இவ்வுண்மையே ஸ்ரீ பகவானால் தனிச்சிறப்புடன் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 'அக்ஷரமண மாலை'யில் அருணாசலம் அவருக்கு குரு உருவாய் ஒளிர்வதாக வெளிப்படை யாகவே கூறுகின்றார். மேலும் இதே பாடலில் நம்முடைய குற்றங் களையெல்லாம் (முதற் குற்றமாகிய அகந்தை உட்பட) அழித்து நமக்கு நற்குணங்களை நல்கி நம்மை ஆள்வதுவே உண்மையான குருவின் அருட்பணி என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

தம்முடைய வேறு பல பாடல்களிலும் ஸ்ரீ பகவான் அருணாசலத்தின் அருளுதவி குருவின் அருளுதவியே என்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறார். உதாரணமாக, 'அக்ஷரமணமாலை'யில் அருணாசலமென அகமே நினைப்பவர் அகத்தை வேரறுப்பது அருணாசலம் என்றும், தெய்வம் என்று அதைச் சார்பவரைச் சேர ஒழிக்கும் அருணாசலம் என்றும், மானங்கொண்டுறுபவர்

மானத்தை அழிப்பது அருணாசலம் என்றும் பாடுகின்றார். மேலும் அருணாசலம் சொல்லாது சொல்லும் மௌனத்தின் மூலம் உபதேசம் செய்கிறது என்பதையும், திரும்பி அகந்தனை தினம் காணும் ஆன்ம விசார மார்க்கத்தை உபதேசிக்கிறது என்பதையும் வெளிப்படுத்துகிறார். ஞான மில்லாது ஞானப்பசியால் வாடுவோரின் தளர்வற ஞானந் தெரித்தருளவும், தானே தத்துவம் என்பதைக் காட்டவும், பௌதிக உடலின் பற்று அறவும் அருணாசலத்திடம் வேண்ட நமக்கு வழிகாட்டுகிறார். தம்முடைய அனுபவத்தி லிருந்தும் அருணாசலத்தினுடைய குருத்துவத்தின் ஆற்றலை உறுதி செய்திருக்கிறார். 'ஸ்ரீ அருணாசல நவமணிமாலை' எட்டாவது பாடலில் புன்புலன் சழக்கில் துன்புறும் தவிக்குத் துஞ்சிடும்படிக்கு அருணாசலம் 'தன் பதம்' தனக்குத் தந்ததாகப் பாடுகின்றார்; ஒன்பதாவது பாடலில் ''என் மனம் மன்னி இழுத்து உன் பதத்தில் இருத்தினை'' என்று அருணாசலத்தின் அருட்சித்திரத்தை விவரிக்கின்றார்.

ஸ்ரீ பகவான் அருணாசலத்தின் ஆற்றலைப் பற்றிக் கூறியவையெல்லாம், அவர் குருவின் ஆற்றலைப் பற்றி கூறியவையோடு முற்றிலும் ஒத்திருக் கின்றன. 'குருவாசகக் கோவை' 268-வது பாடலில் தன்னைச் சரணடைகின்ற எத்தகைய உயிரையும் தனது இனிய அருளால் ஞானான்ம சொரூபத்திற் சேர்க்கும் பெருவலிமை மிக்கவனே சற்குரு ஆவான் என்று கூறுகிறார். சீடனை ஆன்மசொரூபத்திற் சேர்க்கக் குரு பலவித முறைகளில் செயலாற்றுகிறார். ''குரு வெளியு முள்ளார்; உள்ளுமுள்ளார். வெளியிலிருந்து மனம் உண்முக மாகும்படித்தள்ளுகிறார். உள்ளிருந்து மனத்தைத் தன்வச மிழுத்து, அதை அமைதியாக வைத்துக்கொள்ள உதவுகிறார். இதுதான் குரு கிருபை'' என்று ஸ்ரீ பகவான் கூறுகிறார். குரு வெளியிலிருந்து உபதேசங்கள் மூலம் சீடனின் மனத்தை ஆன்மாபிமுகமாக ஆக்குவது மட்டுமின்றி தம்முடைய உருவத்தின் அணுக்கமாகிய சற்சங்கத்தின் மூலம் உண்முகமாகி ஆன்மாவை நாடத் தேவையான அன்பையும் மனோபலத்தையும் சீடன் பெறச் செய்கிறார். வாய்வழி உபதேசங்களை அளிக்க, குரு மனித உருவில் இருப்பது அவசியமாகிறது. ஆனால் சற்சங்கமும் நுட்பமான உள்ளுதவியும் அளிக்க, குரு எந்த ரூபத்திலும் இருக்கலாம்.

நமக்குத் தேவையான எல்லா உபதேசங்களையும் அளிக்க ஸ்ரீ பகவான் நரவடிவில் குருவாக வந்து, அருணாசலம் கிரி உருவான குரு என்றும், அதனுடன் நாம் எப்பொழுதும் சற்சங்கம் கொள்ளலாம் என்றும் வெளி யிட்டிருக்கிறார். எல்லா மனித உடலைப் போல குருவின் மனித வடிவமும் ஒரு நாள் மறையும்; ஆனால் அருணாசல ரூபமோ எப்பொழுதும் இருந்து வரும். இங்ஙனம் ஸ்ரீ பகவான் தம்முடைய மானிட தேகத்தைக் களைந்து விட்டாலும், நமக்குத் தேவையான எல்லா வெளிமுக உதவியையும் நல்கி யிருக்கிறார். அதாவது தம்முடைய உபதேசங்களை என்றும் அழியாதவாறு விட்டுச் சென்றும், நாம் எப்பொழுதும் சற்சங்கம் கொள்வதற்கு ஒரு உருவைக்



காட்டியும் அருளியுள்ளார். ஸ்ரீ பகவானுடைய பக்தர்களுக்குத் தேவையான உதவியும் ஞானவழி விளக்கமும் அவர்தம் உபதேசங்கள் மூலமும் அருணாசல சற்சங்கம் மூலமும் எப்பொழுதும் கிடைப்பதால், அவ்வன்பர்கள் வெளியில் வேறு ஒரு குருவைத் தேடத் தேவையே இருக்காது. இவ்வுண்மையைத் தமது சுவானுபவத்திலிருந்து நன்குணர்ந்த ஸ்ரீசாது ஓம்,

**''ரமண திருவடிவம் நம்மையழ விட்டே**
**இமையும் பிரிந்ததில்லை; என்றும் - ரமண**
**சரீரம் விரிந்(து) அவர்கொள் சாசுவதவிச்வ**
**சரீரம் அருணா சலம்''**

என்று 'ஸ்ரீ அருணாசல வெண்பா' 29வது பாடலில் பாடுகின்றார்.

அருணாசல சற்சங்கத்தின் ஆற்றலை ஸ்ரீ பகவான் பலமுறை உறுதிப்படுத்தி யிருக்கிறார். ''இந்த மலை முழுவதுமே தெய்வீகமானது. இது சிவனேதான். நாம் நம் உடலை எப்படி 'நான்' என்று அபிமானிக்கிறோமோ அப்படியே சிவபிரான் இம்மலையை நான் என்று அபிமானிக்கிறார். ஞானமே உருக்கொண்டதுதான் இவ்வருணாசலம். தன்னைத் தேடிவரும் அடியார்களின் மேல் பெருகும் பெருங் கருணையால்தான் ஊனக் கண்களுக்குப் புலப்படும் இவ்வருணமலையாகச் சிவபிரான் வெளிப்பட்டுள்ளார். அடியார்கள் இம் மலையின் அருகே வசிப்பதனாலேயே ஆறுதலும் ஞானவழி விளக்கமும் பெறுவர்'' என்பது அவர் வாக்கு.

## அருணாசலப் பிரதக்ஷிணம்

அருணாசலம் சத்தாகிய மெய்ப்பொருளின் ஸ்தூல வடிவம்; ஆதலால் அதனுடன் எந்த விதத்தில் தொடர்பு கொண்டாலும் அது சற்சங்கமே. அருணாசலத்தை ஸ்மரிப்பது சற்சங்கம்; அதனருகில் வசிப்பது சற்சங்கம். ஆனால் அருணாசலத்தின் சற்சங்கத்தைப் பெற மிகச் சிறந்ததொரு வழி அருணகிரியைப் பிரதக்ஷிணம் செய்வதே. அதாவது, காலணியின்றி வலமாகச் சுற்றி நடப்பதே.

கிரிப் பிரதக்ஷிணத்திற்கு ஸ்ரீ பகவான் அளித்த உன்னத முக்கியத்துவம் அவருடன் வாழ்ந்த எல்லா பக்தர்களுக்கும் நன்கு தெரியும். அவரே எண்ணற்ற முறை பிரதக்ஷிணம் செய்து, பக்தர்களைத் தம் உதாரணத்தைப் பின்பற்றி நடக்குமாறு தாமாகவே ஊக்குவித்தார். ''பக்தர்கள் கேட்டாலொழிய அறிவுரை ஒன்றும் தாமாகவே எளிதில் கூறாத ஸ்ரீ பகவான் ஆன்ம சாதனையில் முன்னேற கிரிப்பிரதக்ஷிணம் அனுகூலமாக இருக்கும் என்று சொல்லிப் பக்தர்கள் பிரதக்ஷிணம் செய்வதை மனப்பூர்வமாக ஊக்குவித்தார்'' என்று ஊஸியா ஆஸ்பர்ன் எழுதுகிறார். ''பகவானே பிரதக்ஷிணத்தின் மாண்பைப் பற்றி அடிக்கடி குறிப்பிட்டதிலிருந்தும், மிகுந்த முன்னேற்ற மடைந்தவர்களாகக் கருதத் தக்கவர்கள்

உள்ளிட்ட பகவானுடைய நெருங்கிய சீடர்கள் அனைவரும் மற்ற பல்லாயிரக் கணக்கானவரும் பிரதக்ஷிணம் செய்வதிலிருந்தும்'' பிரதக்ஷிணத்தின் முக்கியத் துவம் தமக்குத் தெளிவாகத் தெரிந்ததாகத் தேவராஜ முதலியார் குறிப்பிடுகிறார்.

பிரதக்ஷிணத்தின் ஆற்றலைப்பற்றி ஸ்ரீ பகவான் கூறியவற்றில் சிறிதளவே குறித்து வைக்கப்பட்டிருப்பினும், அவர் அதை மிகுந்த ஆன்மலாபமளிக்கும் கிரியையாகக் கருதினார் என்பதில் ஐயமில்லை. ''தியானம் மற்றும் இதர மனமடக்கும் பயிற்சிகளால், பெரும்போராட்டம், முயற்சி ஆகிய இவற்றின் பிறகே அடையப்படும் நன்மைகளெல்லாம் பிரதக்ஷிணம் செய்பவர்களால் பெருமுயற்சியின்றியே அடையப்பெறும்'' என்று ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். ''தியானம் செய்ய இயலாதவர்கள் அருணாலத்தைப் பிரதக்ஷிணம் செய்வதால் தம் முயற்சியில் வெற்றி பெறுவர்'' என்று ஸ்ரீ பகவான் கூறியதாக சூரிநாகம்மா எழுதுகிறார். ''பிரதக்ஷிணத்தைவிட மேலானது வேறென்ன இருக்கிறது? அது ஒன்றே போதுமே'' என்று ஸ்ரீ பகவான் ஒருசமயம் தம்மிடம் கூறியதாக குஞ்சு சுவாமிகள் குறிப்பிடுகிறார்.

ஆன்மலாபம் அளிப்பதில் அருணாசலப் பிரதக்ஷிணத்திற்குள்ள வல்லமையைப் போற்றிக் கூறும்போது, சில சமயங்களில் ஸ்ரீ பகவான் ஸ்ரீ அருணாசல மாஹாத்மியத்தில் உள்ள வஜ்ராங்கத பாண்டியன் கதையைக் கூறுவது வழக்கம். வஜ்ராங்கத பாண்டியன் தென்னிந்தியா முழுமையும் ஆண்ட வல்லரசன். ஒருநாள் சில வித்யாதரர்கள் அவனிடம் தனது முற்பிறவியில் அவன் ஸ்வர்க்கத்தை ஆளும் இந்திரனாக இருந்ததாகவும், அருணாசலத்தை வழிபட்டால் இந்திர பதவியைத் திரும்பப் பெறுவான் என்றும் கூறினர். இதைக் கேட்டதும் அவன் தன்னுடைய இராஜ்யத்தை உடனடியாகத் துறந்து, இந்திர பதவியைப் பெறும் தீவிர இச்சையோடு தினமும் மூன்று முறை கிரிவலம் செய்து அருணாசலத்தை வழிபடத் தொடங்கினான். இவ்வாறே மூன்று வருடங்கள் கழிந்தபின், சிவபெருமான் அவன் முன் பிரத்யக்ஷமாகி, என்ன வரம் வேண்டினாலும் அளிப்பதாகக் கூறினார். தொடக்கத்தில் அவன் இந்திர பதவியை இச்சித்தானென்றாலும், பலமுறை அருணகிரிப்பிரதக்ஷிணம் செய்ததன் காரணமாக அவன் மனம் பக்குவப்பட்டுவிட்டதால், இத்தகைய நிலையற்ற சுகத்தை வேண்டுவது பயனற்றது என்பதை இப்பொழுது நன்கு உணர்ந்தான். அதனால் சிவபிரானிடம் நிலையான பேரின்பமாகிய முக்தியையே வேண்டினான். ஒருவன் காமியங்களின் பூர்த்திக்காகவே பிரதக்ஷிணம் செய்யத் தொடங்கினாலும். மனம் நாளடைவில் பக்குவமடைந்து, வைராக்கியம், ஸ்வாத்ம பக்தி ஆகியவற்றை அளிக்கும் தெளிவான விவேகத்தை அவன் பெறுவான் என்பதை இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

ஒருவன் நம்பிக்கையில்லாமல் பிரதக்ஷிணம் செய்ய நேர்ந்தாலும், அது தனது பலிதத்தில் தவறாது மனதை நிச்சயமாகப் பரிசுத்தப்படுத்தும் என்று



ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். ''மலைவலம் செல்வது எல்லோர்க்கும் நல்லதே. பிரதக்ஷிணத்தில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது முக்கியமன்று. நம்பிக்கை உள்ளவரோ அற்றவரோ ஆயினும், நெருப்பானது எப்படித் தன்னைத் தீண்டிய எல்லோரையும் சுடுகின்றதோ, அதுபோன்றே இம்மலையும் தன்னை வலம் வரும் எல்லோருக்கும் நன்மை பயக்கும்'' என்று ஸ்ரீ பகவான் தன்னிடம் கூறியதாகத் தேவராஜ முதலியார் குறிப்பிடுகிறார்.

அருணாசலம் கிரியுருவில் திகழும் ஞானாக்கினியாதலால், மலையைப் பிரதக்ஷிணம் செய்யும்போது மனத்தின் பஹிர்முகப் பிரவிருத்திகள் தானாகவே எரிக்கப்படுகின்றன. நெருப்பினருகில் கொண்டுவரப்பட்ட ஈர விறகானது மெல்ல மெல்லக் காய்ந்து, பின் ஒரு நிலையில் தானே தீப்பற்றி எரிகிறது. அது போலவே உலக வாசனைகளில் ஊறிய மனமானது பிரதக்ஷிணம் செய்யும் போது, வாசனைகள் மெல்ல மெல்ல வற்றி ஒரு நிலையில் மனமானது ஞானத்தீயால் எரிக்கப்படத்தக்க பக்குவத்தை அடைகிறது. ஆதலால்தான் ஸ்ரீ பகவான் குஞ்சு சுவாமியிடம் ''இந்த மலை அனைத்து ஆன்ம சக்தியின் களஞ்சியம் ஆகும். இதனை வலம் வருவதால் எல்லா விதத்திலும் நீ பயனடைகிறாய்'' என்று கூறினார்.

ஸ்ரீ முருகனார் கிரிப்பிரதக்ஷிணத்தின் மாண்பை முதன் முறையாக எவ்வாறு தெரிந்து கொண்டார் என்பது குஞ்சு சுவாமி அவர்களால் பின் வருமாறு விவரிக்கப்படுகிறது.

''இங்கு வந்து சிலகாலங்கழித்து, முருகனார் பகவானிடம் கிரிப் பிரதக்ஷிணத்தின் ஆன்மீகப் பயனைப்பற்றி வினவினார். முதலில் பிரதக்ஷிணம் செய்துவிட்டு பின்பு தம்மிடம் வந்து கேட்குமாறு ஸ்ரீ பகவான் அவரிடம் கூறினார். ஸ்ரீ பகவானுடைய அறிவுரையைப் பின்பற்றிய முருகனார் அவரிடம் தம்முடைய பிரதக்ஷிண அனுபவத்தைக் கூறும்போது, தாம் சிறிது நேரத்தில் தேகாத்ம புத்தியை இழந்ததாகவும், அடி அண்ணாமலையை அடைந்த பின்பே திரும்பப் பெற்றதாகவும் கூறினார்; தம்முடைய அனுபவம் எதிர்பாராததும், இணையற்றதும் ஆகும் என்று ஸ்ரீ பகவானிடம் அறிவித்தார். புன்முறுவல் பூத்த ஸ்ரீ பகவான் 'இப்பொழுது புரிகிறதா உனக்கு?' என்று கூறினார்.''

இந்நிகழ்ச்சி பிரதக்ஷிணத்தின் ஆற்றலைத் தெள்ளத்தெளிய நிரூபிக்கிறது. பிரதக்ஷிணம் செய்வதால் பக்குவிகள் தேகாத்ம புத்தியையே இழக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறது. கிரிப் பிரதக்ஷிணம் செய்யும் போது சஞ்சார சமாதி அனுபவம் ஏற்படும் என்று ஸ்ரீ பகவான் கூறியதன் பொருளையும் இந் நிகழ்ச்சி விளக்குகிறது.

இத்தகைய எண்ணமற்ற நிலை பிரதக்ஷிணம் செய்யும் அன்பர்கள் எல்லோருக்கும் அனுபவம் ஆவதில்லையாயினும், இதனால் அவர்களது




பிரதக்ஷிணம் பலனளிக்கவில்லை என்று பொருளாகாது. மனத்தின்மேல் வாசனைகளுக்குள்ள பிடிப்பு மெதுவாக அவிழ்க்கப்படுவதே பிரதக்ஷிணத்தின் பிரதான பலனாகும். ஆனால் எப்படி ஒரு குழந்தையானது தன்னுடைய வளர்ச்சியைத் தானே எளிதில் அறிந்துகொள்ள இயலாதோ, அவ்வாறே மனமும் அதனுடைய வாசனைகள் வலுவிழப்பதை எளிதில் உணர இயலாது.

எனினும், பிரதக்ஷிணத்தின் ஆன்மீக வல்லமையைத் தெளிவாகக் காட்டக் கூடியதும் அன்பர்களால் எளிதில் உணரக் கூடியதுமான ஒரு மிக முக்கியமான அம்சம் அன்பர்களது மனத்தை ஈர்க்கும் அதன் அசாதாரணமான சக்தியே. எந்த ஒரு குறிப்பிடத்தக்க காரணமுமில்லாமல் அருணாசலத்தை மீண்டும் மீண்டும் பிரதக்ஷிணம் செய்ய மனம் ஈர்க்கப்படுவதை எவரும் உணர்கிறார்கள். ''ஒருமுறை பிரதக்ஷிணம் செய்துபார்; அது உன்னை ஈர்ப்பதைக் காண்பாய்'' என்று ஸ்ரீ பகவான் தேவராஜ முதலியாரிடம் கூறினார். ''ஓரிரு முறை இம்மலையைச் சுற்றினால் இம் மலையே அவரை ஈர்த்து மீண்டும் மீண்டும் வலம் வரச்செய்யும் என்று ஸ்ரீ பகவான் கூறுவது வழக்கம். நான் உண்மையாகவே என் அனுபவத்தில் இதைக் கண்டிருக்கிறேன். இப்போது டாக்டர் சையது இவ்வாறே கண்டு வருகிறார்'' என்று தேவராஜ முதலியார் எழுதுகிறார். ''உட்கார்ந்து தியானம் செய்யும் போது நீ அடைய முடியாத தியான நிலை, பிரதக்ஷிணம் செய்யும் போது தானாகவே சித்திக்கிறது. இந்த இடமும் சூழ்நிலையும் அத்தகைய விசேஷமானவை. நடக்க இயலாத வரும்கூட ஒரு முறை பிரதக்ஷிணம் செய்தால், மீண்டும் மீண்டும் போகத் தோன்றும். பிரதக்ஷிணம் செய்யச் செய்ய மேலும் மேலும் அதில் ஆர்வம் அதிகரிக்கிறது. அது என்றும் குறைவதில்லை. ஒருமுறை ஒருவனுக்குப் பிரதக்ஷிணத்தில் வரும் மகிழ்ச்சி பழக்கமாகிவிட்டால், அவனால் பிரதக்ஷிணத்தை விடவே முடியாது'' என்று ஸ்ரீ பகவான் கூறியதாக சூரிநாகம்மா குறிப்பிடுகிறார். குரு நிலையான இன்பத்தை அளிப்பார் என்று உள்ளுணர்வால் எவ்வாறு மனமானது தானே குருவின்பால் ஈர்க்கப்படுகிறதோ, அவ்வாறே மனமானது தானாகவே கிரிப்பிரதக்ஷிணத்தின்பால் ஈர்க்கப்படுகிறது.

உயிர்வலி காந்த பர்வதமான அருணாசலத்தை 1.9.1896 ல் அடைந்தது முதல் ஸ்ரீ பகவான் இறுதிவரை அதனை விட்டு இமைப்பொழுதும் நீங்காமல் சாந்த பர்வதமாய்த் திகழ்ந்து தம்மையடைந்த அனைத்து உயிர்களையும் தமது தராதர நோக்காத் தண்ணளியால் ஆட்கொண்டமையால் அருணாசலத்தின் அருட்புகழ் பாரனைத்தும் பரவியுள்ளது. இன்றும் உலகின் பலபாகங்களி லிருந்தும் பல்லாயிரவரைத் தன்பால் ஈர்த்துத் தன்போல் அசலமாகச் செய்யும் அருட்பணியை இடையறாது ஆற்றி வருகிறது.

— oOo —



# மலைவிலா ஞானியர்க்குள் மன்னவன்

## சாது ஓம்

இந்தியாவிலும் உலகின் மற்ற பல நாடுகளிலும் இதுவரை தோன்றியுள்ள மஹான்கள் பலராவர். நம் போன்ற மனிதத் தன்மையினின்றும் உயர்ந்து, உயர்வு அறும் வரை சென்று நிலைத்த தெய்வீக புருஷர்கள் அவர்கள். அவர்களுட் பெரும்பான்மையோர் நம் பாரத பூமியிலேயே தான் அவதரித்தனர். பாரத மண் பவித்திரமானது. ஒவ்வொரு மதத்தினருக்கும் ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரம், யாத்திரை ஸ்தலமாய் அமைவது போன்று இக்காலத்தில் உலகில் எல்லா பாகங்களிலும் வசிக்கும் மக்களுக்கும் இந்திய பூமியே ஒரு க்ஷேத்திரமாகி விட்டது. சாந்தி, சமாதானம், நேர்மை, சத்தியம் போன்ற தெய்வீக சம்பத்துக்களுக்கு உலகம் இந்தியாவின் பக்கமே முகம் திரும்பி நோக்குகின்றது. 'எத்தனை ஜென்மங்கள் வந்து பிறந்தாலும், இந்திய மண்ணிடை வேண்டுவனே!' என்றார் இந்திய மண்ணின் புனிதமுணர்ந்த ஒரு கவி. இவ்வாறு தெய்வீகத்திற்கே நிலைக்களமான நம் நாட்டில் அவதரித்த பல மஹான்களின வரலாறுகளையும் நாம் நன்கு கவனிப்போமாயின் ஸ்ரீ ரமண பகவானின் உண்மை மஹிமை (அது மனோ வாக்கு காயத்தால் அளப்பரிதாயினும்) அவையாவற்றின் தனிச்சிறப்புடன் ஊடுருவி மிளிர்வது நன்கு விளங்கும்.

இறைவனின் அருளைக் கையிற் கனியெனப் பெற்ற பக்த மணிகளும், இறைவனை அத்வைதமாய் அடைந்து அனுபவித்த, மஹான்களும் செயற்கரியன செய்து முடித்த தீரர்களாவர். அவர்களே உலகில் பிறந்த மக்களுள் சரியான பணியை ஆற்றிய புத்திமான்களாவர். இவ்வுன்னத காரியத்திற்கு அவர்கள் படாதபாடு பட்டனர். சிரத்தையோடு கூடிய பக்தியால் பல்லாண்டுகள் இறைவனை வழிபட்டனர். புலன்களின் கொட்டத்தை அடக்கி யோகம் பயின்றனர். உடல் உருகி எலும்பு தோன்ற உபவாசமும் ஜபதபங்களும் ஆற்றினர். உணவு, உடை, வீடு முதலிய சௌகரியங்களைக் கூட கவனியாது தனிமை நாடி, பசிப்பிணியைப் பொருட்படுத்தாமலும் குளிர் வெப்பத்தையும் பொருட்படுத்தாமலும் கடுந்தவம் புரிந்தனர். உண்மையறிந்த குருவையடைந்து பணிவிடை புரிந்தனர். தத்தம் குருவின் உபதேச மணிகளைப் போற்றிச் சிரவண, மனன, நிதித்யாசனங்களால் வெகுகாலம் அப்பியசித்து இறைநிலை எய்தினர். பலர் பிரயாணத்தின் துன்பங்களைப் பொருட்படுத்தாமல் தீர்த்தம் க்ஷேத்திரமாதிகட்குச் சென்று நன்னோம்பு நோற்றனர். வீட்டைத் துறந்தும் மனைவி மக்களை விடுத்தும், சுக போகங்களை வெறுத்தும், தரையிற் படுத்தும், சருகைத் தின்றும் தனிமை கொண்டும் தவம் புரிந்த மஹான்கள் பற்பலராவர். இந்நிலையிலும் இறைவனைத் தரிசிக்கக் கிடைக்காத துர்பாக்கியத்தால் வருந்தி, நாத்தழும்பேற, அவர்கள் பகவானைத் துதித்துப் பாடிய பாமலர்கள் மலைமலையாய்க் குவிந்துள்ளன. அவைகளை ஆராய்வோமாயின் அவ்வன்புச் செல்வர்களின்

மனநிலை ஆண்டவனைக் காண எவ்வளவு துடிதுடித்திருக்குமென்பதை நாம் உணர முடியும். அவை கல் மனங்களையும் கரைக்கும் காந்த சக்தி வாய்ந்து விளங்குகின்றன. இன்னும் பலர், இறை காட்சிக் கேங்கி ஏங்கி, அது கிட்டாத காலத்து, தம் தகுதியின்மைக்கு மிக வருந்தி, மண்ணிலே வீழ்ந்து உருண்டழுதும், விம்மி விம்மிச் சிரம் நோக நிலத்தில் மோதிக் கொண்டும், தகுதியற்ற தம் ஜன்மத்தை நொந்து அங்கங்களைச் சோதித்தும், ஏன்? — உயிரையே மாய்த்துக் கொள்ளக் கூடத் துணிந்தும் எழுந்திருக்கின்றனர்! ஆயினும் கருணைக் கடலான கடவுள் தன் பக்தர்களைப் பழுது நேராத வண்ணம் காத்துத் தன் காட்சியளித்தருளியிருக்கிறார். இவை யாவற்றையும் நம் மனதிற் கொண்டு நம் பகவான் ஸ்ரீ ரமணரை நோக்குவோம்.

அங்கு நாம் காண்பதென்ன? மிகப் பெரிய அற்புதமொன்று அங்கு காணப்படுகின்றது. அஃதென்ன? இறைவனோடு இரண்டறக் கலந்த பேரின்ப நிலைக்கு நம் பகவான் ஒரு பாடும்படக் காணோம். அவர் அருட்பெருஞ் ஜோதியனான அமயம் அவரது வயது பதினாறே. அவர் அப்போது ஓர் பள்ளி மாணவனாகவேயிருந்தார். பெரிய புராணத்தையும், பைபிளில் சில பகுதிகளையும், தாயுமானவர், தேவாரம் போன்ற சில ஸ்தோத்திரப் பாடல் களையும் தவிர அவர் மதநூல் வேறொன்றையும் அப்போது அறியார். யோகமோ, ஞானமோ அடைய வேண்டுமே என்ற தவிப்பும் ஏக்கமும் அப்போது இல்லை. உலகம் சுகமா, துக்கமா? உலக சுகங்கள் அற்பமா மேலா னதா? என்ற விசாரமோ, அனுபவமோ அல்லது அதைப் பற்றிய எண் ணமோ ஒன்றும் தோன்ற முடியாத, உலகமறியாத அவ்வளவு பாலப் பருவம் அது. அச்சமயம் 'அருணாசலம்' என்ற அருட்சொற்றொடர் அவர் செவி புகவே அத் தாரகமே அறிவுக் கறிவான ஆன்ம போதத்தை அளித்தது. மற் றொரு விசேஷம் என்னவெனில் அவர் அடைந்த ஆன்ம சாக்ஷாத்காரத் துக்குக் காரணமாக குரு யாருமில்லை என்பதே. தத்வமஸி (நீ ஆன்மாவே) அஹம் ப்ரஹ்மாஸ்மி, என்று மந்திர குருமார்களின் மூலமாகவும், வேதாந்த சிரவணத்தாலும் ஆயிரம்முறை உணர்த்தப் பட்டிருந்தாலும் தூங்கி எழும் போது சாதகன் ஒருவனுக்கு 'தான் உடம்பு' என்ற தேக பாவமே முதலில் வந்து நிற்கின்றதன்றோ? ஆன்ம ஞானியாகிய ஓர் குருவின் பூரண கிருபை யாலன்றி ஜீவ பாவமற்ற அத்வைத ஞானானுபவம் சித்திக்காது என்பது ஆன்றோர் அனுபவித்த உண்மையாகும். அத்வைத சித்தியைப் பெற்ற யாவரும் ஓர் குரு மூலமே அந்நிலையை அடைந்தனர் என்பதை நம் நாட்டு மஹான்களின் வரலாறுகள் நிரூபிக்கின்றன. ஆயினும் ஒப்பற்ற இவ் வருட் பிரகாசன் எடுத்த எடுப்பில் எவர் தூண்டுதலுமின்றி, பயிற்சியின்றி, முயற்சியின்றி, பாடின்றி, தபஸின்றி, தான ஜப ஹோமாதி சாதனையின்றி, மந்திர தீக்ஷையின்றி, தந்திர சூக்ஷ்மமின்றி, குரு சேவையின்றி ஓரேயடியாக ஏகமாம் பரமான்ம நிலையை எய்தினார். என்னே இதன் பொருள்! என்னே இவர் மஹிமை! இவர் மனிதரா? மனிதராய்ப் பிறந்து அமரத்வமடைந்த மஹான் ஒருவரா? அப்படியாயின் குருவோ, தவமோ ஒன்றும் காணோமே!



அல்லது இவர் மஹாதேவனே மானிடக் குழந்தையாகக் கொஞ்ச காலம் தோற்றிய அற்புத அவதாரமா? தேவ தேவனான, முழு முதற் பரம் பொருளாம் அவரே அறிவார்!

இன்னுமொரு விசேஷம் இங்குக் காணக் கிடக்கின்றது. உலகில் தேகம் தரித்துப் பிறந்த மஹான்கள் யாவரும் தாம் இறைநிலை எய்திய பின் உடல் கொண்டு வாழும் காலங்களில் தாம் பெற்ற அருள் மழையைத் தம்மை யடைந்தார்க்கும் அள்ளி அளித்துள்ளனரன்றோ? அவர்கள் தம்மை அடையும் ஜீவர்கட்குத் தாமடைந்த பரம்பொருளின் பல்வேறு நாம ரூபங் களில் ஏதேனும் ஒன்றையோ அல்லது தமது குரு சொரூபத்தையோ குறிக் கோளாக்கி, தாமும் அதனைப் பிரார்த்தித்து அப்பரம்பொருளின் அருளால் மற்றவர்களையும் முக்திக் கரையேற்றினர். அத்வைத மத குருக்களும் கூட சிவ, விஷ்ணு, தேவி, விநாயக, சுப்ரமண்ய ஸ்துதிகளைக் கணக்கின்றியருளி தன் பக்தர்களை இறைவழிப்படுத்தி அனுக்கிரகித்திருக்கின்றனர். சைவ சமய மாபெருங் குரவர் நால்வரும் சிவபிரானைச் சுட்டிக் காட்டி உலகை அப் பரமனின் நாம வயமாகும்படித் தூண்டினர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் தம் சிஷ்ய கோடிகளுக்கு 'தேவியிடம் செல்க, அவளே எல்லா மாவாள்' என்று வழிகாட்டி உலகன்னையைப் பிரார்த்தித்துத் தன் மூலம் அவளருளையே உலகுக்கு வழங்கினர்.

ஆன்ம நிலையுற்ற மஹான்களும், உலக நன்மைக்காகவும், தன் தேக வாழ்வின் ஏனைய மிகுதி நாட்களைக் கழிப்பதற்காகவும் துவைத பாவத்தை (ஈஸ்வரன் ஒருவனும் தான் அவனது பிரிய பக்தனான ஒருவனுமாக இரு மையை) ஓரளவு மேற்கொண்டு நின்றனர். அதனால் அவர்கள் ஜீவபோதம் அறப்பெறாதவர்கள் என்பதாகாது. தான் ஆன்ம சொரூபமே என்று மலை விலாதறிந்த மலைப்புக்கு இடமின்றி அறிந்த மஹா ஞானியரே அவர்கள் எனினும், தம் தேக வாழ்வுநாள் முழுவதும் ஓரளவு த்வைத பாவத்தையே அவர்கள் போர்த்திக் கொண்டிருந்தனர். ஆனால் இவ்வாறு தன்னை மெய்ப்பொருளின் வேறான ஓர் பக்தனாக பாவிக்காதவர் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒருவரே. சிவ குமாரர்களான விநாயகரும், முருகக் கடவுளும், ஸ்ரீ கிருஷ்ணரும் எவ்வாறு தம்மை சர்வஜ்ஞரான பரம்பொருளே என்றறிந் திருந்து விளங்கினரோ அவ்வாறே நம் பகவான் ஸ்ரீ ரமணரும் சர்வஜ் ஞரான பரப்ரும்ம சொரூபமாகவே இருந்தருளினர். அவர் தம் பக்தர் கட்கும் உலகிற்கும் ஏதோ ஓர் கடவுளிடம் பிரார்த்தித்து அவ்வருட்சக்தி பெற்று அனுக்கிரகிக்கவில்லை. ஆதியந்தமற்று எப்போதும் விளங்கும் பரம் எது ஒன்றோ அதனின்று தானும், தன்னினின்று அதுவும் வேறல்ல என்ற அபேத ஞான நிலையே அவரது ஞானானந்த வாழ்வு முழுவதிலும் ஓங்கி நின்றது.

ஒரு முறை மஹான் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், ஸ்ரீ ரமண பகவானின் சந்நிதியில் நின்று 'அருணாசலனை வணங்கினால் முக்தி கொடுப்பான்'

என்று கூறினார். ஸ்ரீ பகவான் 'ஆம். ஆனால் வணங்குவோன் யார்? வணங்கப் படுவோன் யார்?' என்று வினவினார். ஸ்ரீ சேஷாத்திரியார் சற்று தாமதித்து 'அது எல்லாம் எனக்கு மங்கலாயிருக்கிறது. எனினும் நான் வணங்குகிறேன்' என்று கூறி வணங்கிச் சென்று விட்டார். வேறொருமுறை ஒருவர் ஸ்ரீ பகவானிடம் 'தங்களுக்கு ஞானானுபவம் கிடைத்தது எப்போது?' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ பகவான் தங்கு தடையின்றி 'எனக்கு ஒன்றும் புதிதாகக் கிடைத்து விடவில்லை. நான் எப்போதும் உள்ளபடியே உள்ளேன்' என்றருளினார். இவ்வசனங்களின் பொருளென்ன? ஸ்ரீ ரமண பகவான் தான் தேகந்தரித்ததற்குப் பிறகே உள்ளவர் என்றோ, தேகத்தின் பதினாறாவது வயதுக்குப் பிறகே ஞானானுபவம் உண்டாயிற்றென்றோ அதுவரை அஞ்ஞானம் இருந்ததென்றோ நாம் நினைத்துக் கொள்வது தவறு என்றாகிறது. உண்மை என்னவெனில் தான் அனாதிகாலமாய் அகில அண்டங்களுக்கும் மூல காரணமாய் இருந்துவருகிறோம் என்ற பரமான்ம ஞானமே ஸ்ரீ ரமண பகவான் என்பதே!

இத்தகைய திடஞான நிலை அரிதினும் அரிதாம். மஹான்கள் யாவரும் மலைவிலா ஞானியரே எனினும் 'தானன்றி யாருண்டு? தான் கடவுளன்றி யிலதால், தன்னையன்றி அன்னியமொன்றும் அறியார் அவர் நிலைமை இன்னதென உன்னல் எவன்? இறைவன் உலகம் ஜீவன் இவையெல்லாம் நான் என இடைவிடாது விளங்கும் ஆன்மாவின் வேஷங்களேயன்றி உண்மையல்ல; சத்தியமாயுள்ளது ஆன்மாவே. அதையன்றி ஈச ஜீவ ஜக பேதங்கள் அணுவுமில்லை. அதுவும் நம்மையன்றி அன்னியமல்ல' என்றவாறு கருதற்கரிய ஏகான்ம பரநிலையுற்ற பகவான் ஸ்ரீ ரமணரை மலைவிலா ஞானியர்க்குள் ஒருவராக மட்டும் கூறி விட முடியாது. மலைவிலா ஞானியர்க்குள் மன்னவன் என்றே கூறத்தகும். ஸ்ரீ ரமண பகவானின் திருவடிவின் (நாம் பெயரிட்டழைக்கும் ரமண மூர்த்தியின்) இறுதி நாட்களில் அப்பொன்னார் மேனியை நோயொன்று பற்றவே அதனால் மரணம் சம்பவிக்குமோ என்றஞ்சிய பக்தர்களிடம் ஸ்ரீ பகவான், 'ஸ்வாமி போய்விடப் போகிறாராம்! எங்கிருந்து எங்கு போவது? போக்கு வரவு ஏது?' என்று கூறிப் புன்னகை புரிந்தனர். நம்மில் சிலர் நினைப்பது போல அவரை ஏதோ ஓர் க்ஷேத்திரத்தில் ஏதோ ஓர் காலத்தில் எழுந்தருளியுள்ள மஹான் என்பது உண்மையல்ல. அவருண்மை மிக மிக ஆழ்ந்தது என்பதே இப்பொன் மொழிகளால் விளங்குகின்றது. 'காணப்படும் பலகோடி உலகங்களும் ஆன்ம சொரூபத்திற் கற்பிக்கப்பட்ட கற்பனைகளே. ஆன்ம ஞானிக்கு அவை தன்னிலும் வேறல்ல. அகண்ட பரிபூரண சச்சிதானந்த மயமாய்த் தன்னை உணர்ந்திருக்கும் மறைப்பிலா ஞான ஜோதியினின்றும் எழும் ஒரு சிறு கிரணத்தின் அணுமாத்திரப் பிரதிபிம்ப ஒளியே ஞானிக்குத் தன் உடலுணர்வு' என்று தன் அனுபவத்தைப் போதித்து வந்த போது ஸ்ரீ ரமண பகவானின் எல்லையற்ற மஹிமைகளை எண்ணி எண்ணித் திகைத்து ஆனந்த பரவசமுற்று நின்றிருந்த ஓர் பக்த சிரேஷ்டரிடம் ஸ்ரீ பகவான் 'நான்



பார்த்திருக்க, இந்த சூரியனும் இதுபோன்ற எத்தனையோ ஆதித்தர்களும் என்னில் தோன்றி, நின்று, மறைந்து போயினர்' என்றருளினார். ஆ! இந்த ப்ரபுவின் தன்மைதான் என்னவோ? இவர் உண்மையில் யாரோ? ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் அர்ச்சுனன் 'உன் பிறப்பு சூரியனுக்குப் பிற்பட்டதன்றோ? நீ எப்படி சூரியனுக்கு இவ்விஷயத்தைக் கூறியிருக்க முடியும்?' என்றபோது ஸ்ரீ கிருஷ்ணன் 'பரந்தபா! நீயும் நானும் இன்றுள்ளவர் மட்டுமன்று! பல பிறப்புக்களாய் உள்ளோம்! (அவ்வாறே சூரியனைப் பற்றியதும் என்றவாறு) அவை யாவற்றையும் நீ யறியாய்! ஆனால் நானோ அவை யாவுமறிவேன்!' என்றருளிச் செய்த பேருண்மையே இங்கு நம் ஞாபகத்திற்கு வருகிறது. அவ் வாசகத்தை மனதிற் கொண்டு பார்ப்போமாயின் ஸ்ரீ ரமண பகவான் அருளிய வாய்மை நன்கு பொருள்படுவதாகும்.

கால வரையறை கடந்தொளிரும் இம் மஹானுபாவனைப் பற்றி நாம் என்ன எண்ண முடியும்? அடி முடியற்ற (ஆதியந்தமற்ற) இப்பெருமானின் மஹிமைகளை எண்ண எண்ண நாம் என்ன ஆவோம்? ஆம்; அவர் மஹிமைகளை எண்ணிக் கொண்டே சென்ற நாம் நம் எண்ணமற்று, நம்மையே இழப்போம்! அவர் ஒருவரே மிஞ்சுவர் போலும்!

எத்தகைய அத்வைத ஞான சிகரமாயின் ஸ்ரீ ரமண பகவான் இவ்வாறு இருந்து காட்ட முடியும்! அவரது தினசரி வாழ்விலும் 'நான் தேகமல்ல, மனமல்ல, ஆன்மாவே' என்று போதித்த பரம உண்மை நிதர்சனமாகவே நடந்து காட்டப்பட்டது. தேகம் நாமல்ல என்ற திட, அனுபவ ஞான முற்றவரே ஜீவன் முக்தராயினும் அதை அவ்வாறே நடந்து காட்டிய ஞான குரு ரமணமா தேவனே யாவார். அவரது உண்மை நிலை நம் மனத்திற்கும், சொல்லுக்கும், எழுது கோலுக்கும் சற்றும் அடங்காததே. இவ்வுண்மையை அவரது அருட்சந்நிதியே நன்கு விளக்கும். அங்கே ஈஸ்வர தரிசனமுற்ற உத்தம யோகிகளும் யாவும் துறந்த உண்மைத் துறவிகளும், அணிமாதி சித்தி பெற்ற மஹா சக்தி வாய்ந்த சித்தர்களும், இவை யாவற்றிற்கும் மேலாய், அத்வைத ஞானப் பேறடைந்த ஜீவன் முக்தர்களும் கூட ஸ்ரீ ரமண பகவானின் சந்நிதியில் வந்து, தேவ தேவனாய் மலைவிலா ஞானியர்க்குள் மன்னவனாய், பரப்பிரம்ம சொரூபியாய் பிரகாசிக்கும் நம் அப்பனை அங்கம் நிலந்தோய அஞ்சலி செய்து செல்லும் அற்புத காட்சியே யாவர்க்கும் ஸ்ரீ பகவானின் மஹிமையை விளக்கும்.

பரம்பொருளை அடைந்த விதத்திலும் ஸ்ரீ ரமண பகவான் ஓர் தனிப்பட்ட அற்புதராய்க் காணப்படுகிறார். அது போன்றே ஆரூட நிலையில் இருந்தருளிய காலத்தும் அவரது மஹிமை ஒப்பும் உயர்வு மற்றதாய் விளங்குகின்றது. அது போன்றே அவரது போதனா முறைகளும் தனிச் சிறப்புடையனவாகின்றன. அவர் சர்வக்ஞராகையால் தற்காலத்திற்கேற்றவாறே அவரது ஞான போதனையும் புதுமை பெற்றிருந்தது. கடவுளைப் பற்றித் தர்க்கிக்க வருவோரின் செருக்கைக் கவிழ்க்க அவரது 'நான் யார்?' என்ற

ஞான பாணம் அருள்வலி மிக்க அற்புத ஆயுதமாயிருந்தது. கடவுளை நம்பாதார்க்கும் அதுவே தகுந்த தண்டமாயிற்று. வேத, சாஸ்திர, புராணங்களில் காணப்படும் ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்ளவரும் விசுவாசிகட்கு அது ஔஷதமாயிற்று. யோகம் பயில ஆவலுற்ற இளைஞர்கட்கு அது பூரண யோக நெறியாயிற்று. சுருங்கக் கூறின் அது ஒன்றே எல்லாமாயிற்று. சக்தி வாய்ந்த சித்தன் ஒருவனின் கரதலம் ஒன்றே பலவகைப்பட்ட அற்புதங்களையும் இயற்றும் கருவியாவது போலவும், சஞ்சீவி மூலிகை ஒன்றே மரணம் உட்பட எல்லாவியாதிகட்கும் ஒரே மருந்தாவது போலவும், 'நான் யார்?' என்ற ஆன்ம விசாரமான ரமணபோதமே கர்மம், பக்தி, யோகம், ஞானம் ஆகிய நால்வழிகட்கும் நற்றுணையும் பயனுமாகவும், ஐயம், மருட்சி, கவலை, பயம் இவைகட்கு ஏற்ற ஔஷதமாகவும், நாஸ்திகம், மடமை, குதர்க்கம், அகங்காரம் இவைகட்குத் தக்க தண்டாயுதமாகவும் அமைந்தது. ஆனால் அது வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்ட ஓர் தர்க்க முறையல்ல. ஸ்ரீ ரமண பகவான் ஆன்ம சாக்ஷாத்கார நேர்வழியாய் தான் அனுபவித்த அனுபவ நெறியே "நான் யார்" என்ற ஞான விசாரமாகும். அதை அவர் எந்த வேதாந்த நூல்களிலும் படித்ததில்லை. அதைப் பற்றிய வேத, வேதாந்த ஞான நூல்களில் ஒன்றைக் கூட அவர் கண்டும் கேட்டுமறியாத இளம் பிராயத்தில் அவருள்ளே, தனக்குத்தானாய்த் தோன்றிய விகசித்த சக்தி வேலாயுதமே அதுவாகும்.

கடவுளின் இருப்பை ஒத்துக்கொள்ள பக்குவமற்ற பாமர உள்ளம் எதுவும் கூட தன் இருப்பை ஒத்துக் கொள்ள மறுக்காதன்றோ? இவ்வாறு யாவர்க்கும் உடன்பாடான தன்னிருப்பைப் பற்றியே ஸ்ரீ பகவான் முதலில் விசாரிக்கச் சொல்கிறார்! தன்னை அறியாமல் தானறியும் பிற அறிவெல்லாம் (எல்லாவித அறிவியல் துறைகளும்) மலடி மைந்தனின் மணவினைச் சிறப்பையும், குதிரைக் கொம்பின் வண்ண அழகையும் பற்றி அறிந்து கொள்ளும் அறிவு போன்றே வெறும் பிரமையாகும் என்ற உண்மையை இதனால் விளக்கியருளுகிறார். தன்னை அறிவதான தற்போத இழப்பே ஆத்ம சாக்ஷாத்காரமாகிவிடவே, சர்வ சந்தேகங்களும் அங்கு நீங்கப் பெற்று, துன்பம் யாவும் அங்கு நாசமாய் விடுவதால் தன் இயல்பிருப்பான பேரின்பமே எப்போதும் உள்ளது என்பதையே லக்ஷியமாக அன்பருக்கருளுகிறார். தன்னிருப்பை மறுப்போர் யாரும் இலராதலின் அதனையே அடிப்படையாயுள்ள ஸ்ரீ ரமண பகவானின் போதனைக்கு மறுப்புள்ளோர் யாருமிலரென்பதற்கும், அவ்வருட் போத முறையால் உய்விக்கப்படாதாரும் யாருமிரார் என்பதற்கும் சந்தேகமேயில்லை. இவ்வாறு ஆன்ம சாக்ஷாத்கார அடைவிலும், இருப்பிலும், அனுக்கிரகிப்பிலும் உலக மஹான்கள் யாவருள்ளும் தனி விளக்க முற்றொளிரும் ஸ்ரீ ரமண ஜோதியை மலைவிலா ஞானியர்க்குள்ளும் மன்னவனாய்த் திகழும் மாகுரவனைக் குருவாகப் பெற்ற நாமெல்லோரும் பெறற்கரிய பேறுற்றோம். அவரருளாலேயே அவரது அளவற்ற மஹிமைகளை மேலும் மேலும் உணர்த்தப் பெறுவோமாக.

--oOo--



# ஸ்ரீமஹரிஷிகள் அருள்வாக்கு

பக்தன்:- ஞானமடைய நாம ஜபம் அநுகூலமல்லவா?

மஹரிஷி:- ஆம்.

ப:- நிஷ்காம கர்மயோகங் கூடத் தானே?

ம:- அது கூடத்தான்.

ப:- நாம ரூபங்களுக்குள் பரஸ்பர ஸம்பந்தமென்னவோ? நாம ஜபத்தில் சிரத்தையில்லாதவன் ஆத்ம விசாரம் செய்யலாமா?

ம:- நாம ரூபங்களுக்குள் உள்ள சம்பந்தம் அவற்றின் பூரண அபேதமே (ஒருமைப்பாடே). நாமமே ரூபம். ரூபமே நாமம். நாம ஜப மூலமாய் அந்த நாமத்துக்குடைய நாமி அடையப்படுகிறார். ஒருவனுக்கு எந்த பகவான் நாமத்திலும் உறுதியான நம்பிக்கையில்லாமல் தன்னையறிய வேண்டுமென்னும் ஆர்வம் மாத்திரம் இருந்தால் அவன் அஹம்பத விசாரம் செய்யலாம். தன்னியல்பை விசாரிக்க முந்தும் நினைவோடு கூடிய மனத்துக்கு, 'அஹம்,' 'நான்' என்பது ஒரு நாமம் போன்றிருக்கிறது. இந்த விசார நிலையில், ஆத்ம விசாரம் ஓர் நாம சிந்தனம் அல்லது ஜபமே.

ப:- என்னில் உள்ள நான் என்னும் பொருளுக்கும் லௌகிக பதார்த்தத்துக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென நன்றாயுணர்ந்தும், என் சொத்தில் லாப நஷ்டமேற்படுதல், சுகதுக்கமேற்படுதல் நேரிடும்போது மனதில் சமம் அடியோடு அற்றுப்போகிறது. மனம், ராகத்வேஷம் ஹர்ஷசோகம் போன்ற தொந்தங்களுக்கு அதீனமாகி விடுகிறது. இதன் காரணமென்ன? இதிலிருந்து நிவிருத்தியடைவதெப்படி?

ம:- ஆத்மாவில் பதிக்கப்பட்டிருக்க வேண்டிய மனத்தின் நிஷ்டாலோபமே இதற்குக் காரணம். ராகத்வேஷம் போன்ற தொந்தங்களின் ஆவேசமேற்படும்போது, "இந்த ராகத்வேஷாதிகள் யாருக்கெழுந்தன? எனக்கு, யான் யார்? எனக்கும் இந்த பாசங்களுக்கும், பாசங்களை எழுப்பும் பொருள்களுக்கும் என்ன சம்பந்தம்" என்று ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டும். இப்படி வசாரிப்பதால் மனம் அந்தர் முகப்பட்டு ராகத்வேஷங்களின் வேகம் அடங்கிவிடும்.

— **ஹனுமான்** *(ஜனவரி 4, 1942)*

# எனது வாழ்க்கையின் மகத்தான சம்பவம்

(பொன் விழா மலரில் வெளிவந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் வடிவம்)

## கிராண்ட் டஃப் (டக்ளஸ் எயின்ஸ்லீ)

எனது பாட்டனார் மகாராஷ்டிர தேசத்தின் கவர்னராகச் சில வருஷ காலம் வேலை பார்த்ததுண்டு. மகாராஷ்டிர ஜாதியினரிடமும், பொதுவாக இந்தியப் பரம்பரையிலும் அவருக்கு விசேஷ சிரத்தையுண்டு. அன்னார் எழுதியுள்ள மகாராஷ்டிர தேச சரிதத்தைப் படித்த பிறகே, எனக்கு முதன் முதலாக இந்தியா விஷயத்தில் ருசி ஏற்பட்டது.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மதராஸ் கவர்னராக இருந்த எனது தாய் மாமன், என்னை அவ்விடம் வந்து வேண்டிய காலம் வரை தங்கிச் செல்லலா மென்று எழுதியிருந்தார். இதுவே எனது விருப்பமாகவும் இருந்தது. அதிக சந்தோஷத்துடன் இந்தக் கடிதத்தை எனது பெற்றோர் களிடம் படித்துக் காண்பித்தேன்; அவர்கள் சிறிது நேரம் கலந்தாலோசித்து விட்டு, இந்தியாவின் சீதோஷ்ண நிலையை முகாந்திரமாகச் சொல்லி அனுமதி கொடுக்க மறுத்து விட்டார்கள். இதைக் கேட்டு வியப்படைந்தேன்.

இந்தியாவைப் பற்றிய எனது விசித்திரமான மனோநிலை எப்படி யிருந்தது என்பதை விளக்கும் பொருட்டே இவ்விஷயங்களை எல்லாம் நான் எடுத்துச் சொல்கிறேன். 18 வயதாயிருக்கையில் உலகாயதக் கொள்கையுடை யவர்களும் ஹெர்பெர்ட் ஸ்பென்ஸரின் சீடர்களும் வழக்கம் போல் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். எனது மனமோ, வேறு ஏதோ ஒன்றை நாடி நின்றது.

நாடிய பொருளொன்று உண்டென்பதை நன்கு உணர்ந்திருந்தேன்; ஆனால் எனது ஆக்ஸ்போர்ட் படிப்பின் காரணமாக அப்பொருள் எங்குளது என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை. ஈடனில் நாலு வருஷ காலம் படித்த காலத்திலும், ஆக்ஸ்போர்டில் உயர்தரக் கல்வி பயின்று வாழ்நாளை வீண் நாளாக்கிய காலத்தும் குறுகிய மனப்பான்மையுடைய இளைஞர்களுடனேயே சகவாசம் செய்ய நேரிட்டது. விளையாட்டுத்தன மாகச் சுற்றித் திரிவதும் கடைசியில் பட்டம் பெறுவதையும் தவிர வேறென்ன செய்துவிடுகிறோம். ஆக்ஸ்போர்ட் படிப்பு ஆரம்பமான காலத்தி லேயே பொங்கித் ததும்பி நின்ற எனது உள்ளக் கிளர்ச்சிகளைக் கவிதா ரூபமாக வெளியிட்டுப் பலபுத்தகங்களை வெளியிட்டேன். சஞ்சிகைகளுக்கும் கவிதை எழுதி சமூக வாழ்விலும் வெகுவாகப் பங்கெடுத்து வந்தேன்.



'தீப்பந்தத்தைத் தலைகீழாய்ப் பிடிக்கினும்
சுவாலை மேல் நோக்கியே எழும்
பேரும் புகழுமற்ற சாதாரண மனிதனும்
மூலமாம் உயர் நிலையையே நாடுவான்
ஞானக் கனல் அவனிடமும் உளதன்றோ!'

பல வருடங்கள் சென்றபின் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எனது உண்மை நாட் டத்தைப் பற்றியும் முடிவில் எங்கே எப்படி தத்துவத்தை நாடி உணர்ந்தேன் என்பதையும் எடுத்துச் சொல்லும் போது, இவ்விஷயத்தை பிரஸ்தாபிப்பது பொருத்தமாயிருக்கும். நேபிள்ஸ் நகரத்திலுள்ள சங்கம் ஒன்றில் நான் அங்கத் தினனாக இருக்கையில், பெனிடெட்டோ க்ரோஸி என்ற அறிஞரது நூல் களின் பரிச்சயம் ஏற்பட்டது. அனுபவத்திற்கு ஒத்ததும் தர்க்க ரீதியுமான அவரது கலையாராய்ச்சி முடிவுகளில் என்மனம் ஈடுபட்டது. இவ்வறிஞரிடம் நானே நேரில் சென்று அவரைப் பேட்டி கண்டேன். அத்யாத்ம சாதனை விஷயத்தில் எனது கருத்துக்கள் அவரது கருத்துக்களைப் போன்றவையே என்பதைத் தெரிவித்தேன். சில வாரங்களுக்குள்ளாகவே அவரது கலையா ராய்ச்சி, தத்துவ விளக்கம் ஆகிய இலக்கியங்களில் அவருடன் நானும் ஒத்து ழைத்தேன். அவரது கூட்டுறவு, அறிவுத்திறனை ஆச்ரயித்திருந்த போதிலும் எனது அத்யாத்ம தாகத்தை அதிகரிக்கச் செய்தது. இவ்விதமான மனோ நிலையில் இருக்கும் போது, - உலகு - உயிர்களைப்பற்றிய உண்மையான முடிவைக் காணப் பேராவல் கொண்டிருக்கையில் - அருணாசல ஞானியாம் ஸ்ரீ ரமண மஹரிஷிகளைப் பற்றி பால் பிரண்டன் என்பவர் மூலம் கேள்விப் பட்டேன். முடிவாக மஹரிஷிகளிடம் போய்ச் சேர்ந்து எனது வாழ்க்கையின் மகத்தான அனுபவத்தைப் பெற்றேன். முதன்முதலில் எனது பார்வை ஸ்ரீ மஹரிஷிகளின் மேல் விழுந்த போது என்ன நேர்ந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் என்னை நோக்கிய உடனே, ஸ்ரீ பகவான் தேஜோ மூர்த்தி என்பதையும் ஸத்ய ஸ்வரூபி என்பதையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் உணர்ந்து கொண்டேன். பல ஆண்டுகளாக என் மனதில் சேர்ந்திருந்த சந்தேக விபரீதங்கள் அனைத்தும் அவரைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தொழிந்தன.

என்னிடம் ஏற்பட்ட எதிர்பாராத மாறுதலை வார்த்தைகளால் வர்ணிப்பது இயலாத காரியம். மஹரிஷிகளின் சன்னிதியில் நான் சிறிது நேரமே அமர்ந்திருந்தாலும் நான் சென்ற ஒவ்வொரு சமயமும் எனக்கு ஒரு விஷயம் மிகத் தெளிவாய் விளங்கியது. மனதிற்கும் தேகத்திற்கும் யாது நேரிடினும் என்றும் அழியாத கட்டுக்கோப்பு ஒன்றை என்னுள் எழுப்பிக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

நரசிம்ம ஸ்வாமி எழுதிய சரிதத்தைப் படித்து அரிய பெரிய விஷயங் களை நான் தெரிந்து கொள்ள முடிந்தது. ஸ்ரீ பகவானது பெருமையை விளக்

7

கும் சில விஷயங்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவரது செய்கைகளில், அன்பும் கனிவும் அமைதியும் விளங்குகின்றன. தன்னிடம் வரும் அன்பர்களின் திடமற்ற மனோநிலையை உணர்ந்தவராய் அவர்களது மனம் வருந்தாமலும் வெட்கமடையாமலும் இருக்கும்படி அவர் பேசுகிறார். மிருதுவான கனிவுடன், பிறர் குணங்களை நன்கு உணரும் அசாதாரணமான சாமர்த்தியமும் அவரிடம் உள்ளது. அனைவருள்ளத்தையும் ஊடுருவிப் பார்த்து அவர்களுக்குப் பூரண நன்மை ஏற்படும் வகையில் தனது அமுத மொழிகளால் அன்பர்களின் உள்ளத்தில் இடம் பெற்று விடுகிறார்.

ஹம்ப்ரீஸ் என்பவர் ஸ்ரீ மஹரிஷிகளைத் தரிசித்தது, ஐரோப்பியர்களாகிய நமக்கு மிகவும் ருசிகரமான முக்கிய சம்பவமாகும். இந்தச் சந்திப்பு பல வருடங்களுக்கு முன் நிகழ்ந்ததாயினும் அவசியமான விஷயங்கள் அனைத்தையும் அவர் எழுத்துக்களின் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். அவரது முடிவுரை மிகவும் கவனிக்கத் தக்க விஷயமாகும் 'நாம் மகரிஷியின் சன்னிதியில் அமரும் முன் இருக்கும் நிலைக்கும் அமர்ந்த பின் உள்ள நிலைக்கும் உள்ள வித்தியாசம் ஆச்சரியமானது!' என்று அவர் கூறியுள்ளார். என் அனுபவமும் இதையே ஊர்ஜிதப் படுத்துகிறது. அருணாசல பரமஹம்சரை நான் தரிசித்தது எனது வாழ்க்கையின் மகத்தான சம்பவமாகும்.

இன்னும் காலதாமதம் செய்துகொண்டு தயங்கி நிற்கும் மேனாட்டு அன்பர்கள் சீக்கிரம் இந்தியாவிற்குப் பயணமாக ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டுமல்லவா! ரமணாவதார மகிமையைப் பற்றி பல்லாண்டுகளாக வேண்டிய மட்டும் எடுத்துச் சொல்லியாய் விட்டது. மேலும் விளம்பரப்படுத்தத் தேவையில்லை என்றெண்ணுகிறேன்.

–oOo–

அறியாமைக் குப்பகை யன்றதனாற் கன்மம்
அறியாமை தன்னை யகற்றா-தறிவே
யழிக்குமறி யாமையொளி யந்தகா ரக்கும்பு
ஒழிக்குமா றென்றே யுணர்.

— **ஆன்ம போதம்** (தமிழாக்கம் - ஸ்ரீ பகவான்)



# தியானப் பாட்டு

## சாது ஓம்

1\. கண்ணை மூடி யமர்ந்துகொள்;
கடவு ளென்று நினைந்துகொள்;
எண்ணி டாம லெதையுமே
யிறைவ னொன்றே நினைந்துகொள்.

2 காணு முலகை நினைப்பதால்
கடவு ணினைவு போய்விடும்.
வேணு முறுதி முதலிலே
விரும்பித் தியானம் பண்ணுவாய்.

3\. எந்த வடிவிற் கருதினும்
அந்த வடிவிற் றோன்றுவார்.
சொந்த வடிவம் பெயரிலார்
சுத்த மோன சின்மயம்.

4 இன்ப மான வொருபொரு
ளிருக்கு துன்ற னெஞ்சிலே.
அன்பு கொண்டு தேடினா
லளவில் லாத சுகமடா.

5\. எங்கு முள்ள கடவுளை
யிதய குகையிற் காணலாம்.
இங்கு கண்ட பிறகுதா
னிருப்ப தெல்லா மவன்மயம்.

6\. என்னை மறியுஞ் சாக்ஷியா
யிறைவ னுன்னு ளிருக்கிறார்.
என்ன மோய்ந்த விடத்திலே
யிறைவன் வந்து தோன்றுவார்.

7 எண்ண மோய வழியைக்கேள்;
இறைவன் ரமணன் மொழியைக்கேள்.
எண்ண மெழும்புந் தருணமே
யாருக் கெழுவ தென்றுபார்.

8. எண்ணந் தனக்கே யெழுவதா
லிந்த 'நானா' ரென்றுபார்;
எண்ணுந் தன்னை நோக்கவே
யெழுந்த வெண்ண மோய்ந்துபோம்.

9. பார்க்கப் பார்க்க வுன்னுளே
பரம ஞானம் பூக்குமே
பார்க்கு மறிவைப் பார்க்கவே
பழகிப் பழகி வெற்றிகொள்.

10. கற்குங் கல்வி பலவிலுங்
கடவுட் கல்வி முதலிடம்
நற்சி றப்பு யாவிலும்
ஞான நிஷ்டை முதலிடம்.

11. உட லெடுத்த நோக்கமே
யுண்மை யின்பந் துய்க்கவே
கடவு ளாகி நின்றுடல்
கழற்றி வீசிப் போகலாம்.


12. தெய்வ மென்ப தருண்மயம்
ஜெகமெல் லாமு மிருண்மயம்.
மெய்ய தென்று நாடவே
விளங்கு மிந்த வுண்மையே.

13. வாழ்க ரமண சற்குரு!
வாழ்க ஞான மார்க்கமே!
வாழ்க வான்ம சாந்தியில்,
வாழும் வாழ்வு வாழ்கவே!

-oOo-







# பகவான் உபதேசங்களும் அறிவுரைகளும்

தேவராஜ முதலியார்

அப்போது கோடைக்காலம்; பிற்பகல் நேரத்தில் பகவான் முன் பழைய ஹாலில் கையில் விசிறியுடன் அமர்ந்திருந்தேன். அப்போது நான் பகவானிடம், ''ஒருவனுடைய வாழ்க்கையில் நடக்க இருக்கும் மிக முக்கிய மான சம்பவங்கள், அதாவது அவன் பிறக்கும் நாடு, குடிமை, அவனுடைய குடும்பம், விவாகம், தொழில், இறப்பு முதலியவை முன்வினைப்பயனால் முன்னரே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அவன் வாழ்க்கையில் நடக்க இருக்கும் மிகச் சிறிய சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்துமே முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டனவா? உதாரணமாக நான் இப்பொழுது என் கையிலிருக்கும் விசிறியைத் தரையில் வைக்கிறேன். இப்படி இந்த நாள், இத்தனை மணிக்கு, நான் விசிறியை விசிறிக் கொண்டிருப்பேன் என்பதும் பின்னர் அதனைக் கீழே வைப்பேன் என்பதும் முன்னரே தீர்மானிக்கப்பட்டு விட்டனவா?'' என்று கேட்டேன்.

''நிச்சயமாக'' என்று விடையளித்த பகவான் மேலும் தொடர்ந்தார்: ''இந்த உடல் என்னென்ன செய்ய வேண்டும், என்னென்ன அனுபவங்களை அனுபவிக்க வேண்டும் என்பது அனைத்தும் இந்த உடல் தோன்றிய உடனேயே தீர்மானிக்கப்பட்டுவிட்டன'' என்று கூறினார். இதைக்கேட்டு நான் அதிர்ச்சியும் ஆச்சரியமும் உற்று ''அப்படியானால் மனிதனின் சுதந்திரமும் அவன் செய்யும் செயல்களுக்கு ஏற்கவேண்டிய பொறுப்பும் என்ன ஆவது?'' என்று கேட்டேன். ''முயற்சி செய்து அதன் பயனாய் ஞானம் பெறுவதற்கே மனிதனுக்குச் சுதந்திரம் உண்டு. இவ்வாறு ஞானம் பெறுவதால் தேகாத்மபுத்தி ஒழியும். உடலானது அதற்குப் பிராரப்தத்தால் விதிக்கப்பட்ட அனுபவங்களை அடைந்தே தீரும். அதைத் தவிர்க்க இயலாது. எனவே ஒருவன் தன்னை உடலாகக் கருதிக்கொண்டு அதன் செயல்களால் விளையும் பலன்களில் பற்றுள்ளவனாக இருக்கலாம்; அல்லது உடலை நான் என்று பற்றாமல் அதன் செயல்களுக்குச் சாட்சி மாத்திரமாக இருக்கலாம்'' என்று விளக்கினார் பகவான்.

பகவானது இக்கருத்தைப் படிப்பாளிகளில் பலரும் தத்துவ விற்பன்னர்களும் ஏற்கமாட்டார்கள்; ஆனல் அவருக்கும் எனக்கும் நடந்த உரையாடலின் சாரத்தை தவறு ஏதும் இல்லாமல் தந்திருக்கிறேன் என்பது

'My Recollections of Bhagawan Sri Ramana' எனும் புத்தகத்திலிருந்து தொகுக்கப்பெற்றது.

நிச்சயம். பகவானின் இந்த விடை நாம் தீவிரமாக யோசித்து ஆராய்ந்து அடையும் முடிவிற்கு எதிர்மாறாக உள்ளதுபோல் தோன்றினாலும், பகவான் கூற்று முற்றிலும் உண்மையே என்பதில் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை. மற்றொரு சமயத்தில் இதனுடன் தொடர்புடைய மேற்கோள் ஒன்றினைத் ''தாயுமானவர்'' பாடிய ''சந்ததமும் வேதமொழி'' எனும் பாடலிலிருந்து எடுத்துக்காட்டியது என் நினைவிற்கு வருகிறது.

**''சிந்தை அறியார்க்கீது போதிப்பதல்லவே,**
**செப்பினும் வெகு தர்க்கமாம்'' என்பதே அது.**

'மதியினால் விதியை வெல்லமுடியுமா?' என்ற பழம் பெரும் கேள்விக்கு ''உள்ளது நாற்பது'' இல் பகவான் தன் முடிவான பதிலைத் தந்துள்ளார் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். ''விதிக்கும் மதிக்கும் ஆதாரமான அகந்தையின் மூலத்தை அறியாதவர்களே விதி வலியதா, மதி வலியதா என்னும் வாதத்தில் ஈடுபடுவர். அகந்தையின் மூலத்தை அறிந்தோர் இத்தகைய விவாதங்களை ஒழித்திருப்பர்.'' இம்மாதிரியான கேள்விகளுக்கு பகவான் பொதுவாக, ''விதியும் மதியும் யாருக்கு? அதைத் தெரிந்துகொண்டால் இக்கேள்வி எழாது'' என்று பதிலளிப்பார். முன்னர் குறிப்பிட்ட தாயுமானவர் பாடல், பகவான் கொண்டிருந்த வேறுசில அபிப்ராயங்களையும் எனக்கு நினைவுறுத்துகிறது. பயனற்ற முடிவில்லாத சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காகவே பகவான் இவ்வபிப்ராயங்களைப் பகிரங்கப்படுத்தியதில்லை.

தன்னைப் போல் எல்லாவற்றையும் கடந்தவர்கள், வர்ணாசிரம தர்மங்களைத் துறந்து துறவிகளாக இருப்பவர்கள் ஆகிய இவர்களைத் தவிர ஏனையோர் வர்ணாசிரம தர்மத்தையும், ஆசாரத்தையும் கடைப்பிடிப்பது நல்லது என்பது பகவானது முடிந்த அபிப்ராயம். பகவானுடன் என்னுடைய நீண்டநாளைய நெருக்க மான பழக்கத்தின் போது அவருடைய பேச்சிலும் நடத்தையிலும் நான் கவனித்த பல விஷயங்களிலிருந்து அவரது இவ்வபிப்ராயம் ஐயமற விளங்கியது. குலாசாரங்களை வீட்டில் கடைப்பிடிப்போர், ஆசிரமத்திலும் அவைகளைப் பின்பற்றுவதற்கு வசதியாக அவ்வாசாரங்கள் ஆசிரமத்திலும் நடைமுறைப் படுத்தப்படுவதை பகவான் ஆதரித்தார். எனினும் இதைப்பற்றி பலவந்தமாய் அவர் கருத்துக்களை அறிய விரும்பி வினாவுவோர்க்கு விடையிறுக்க மாட்டார். கேள்வி கேட்பவர் பத்திரிகையாளராகவோ அவர் பெயரைத் தமக்குச் சாதகமாக உபயோகிக்க விரும்பும் அரசியல் அல்லது சீர்திருத்தவாதியாகவோ இருந்தால் விவாதங்களில் ஈடுபடாமல் மௌனமாகவே இருந்திடுவார். தம் அறிவுரையை ஏற்று அதன்படி நடப்போரிடம்தான் அவருக்கு அக்கறை இருந்ததே அன்றி வீண் சர்ச்சைகளில் பங்கு கொள்வதில் அவருக்கு எள்ளளவும் ஈடுபாடு இருந்ததில்லை. இதற்கு நல்லதோர் உதாரணமாக ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது ஜயந்தி அல்லது மஹாபூஜையாக இருந்திருக்கலாம். அதையொட்டி ஆசிரமத்தில் சிலநாள் தங்குவதற்காகச் சென்றிருந்தேன். அது முடிந்து ஒன்றிரண்டு நாள்கள் கழித்து நான்



ஹாலினுள் நுழையும்போது, எனக்கு முன்பே பரிச்சயமான பெண்மணியும் அவர் சகோதரியும் ஹாலைவிட்டு வெளிவந்து கொண்டிருந்தனர். அப்பெண்மணி சென்னையில் உள்ள பெண்கள் கல்லூரியின் முதல்வராக இருந்தார். நான் அவருடன் சற்றுநேரம் பேசிவிட்டு அவர்கள் விரும்பினால் அவர்களைப் பகவானிடம் அறிமுகப்படுத்தி வைப்பதாகக் கூறினேன். கல்லூரி முதல்வர் அறிமுகத்தை விரும்பவே அவர்களை உள்ளே அழைத்துச் சென்று பகவானிடம் அறிமுகம் செய்து வைத்தேன்.

கல்லூரி முதல்வர் பகவானிடம், ''ஒருவன் தான் முக்தி அடையும் பொருட்டு உலகத்தவரிடமிருந்து பிரிந்து தனித்திருந்து தியானத்தில் ஈடுபடுவதைக் காட்டிலும் உலக நன்மைக்காக ஏதாவது ஒரு விதத்தில் உழைப்பது மேலானது அன்றோ?'' என வினவினார். இக்கேள்வி பகவானுக்குப் புதிதன்று. இதற்கு அவர் அளித்த தெளிவான உறுதியான விடை ''மஹரிஷி வாய்மொழி'' என்னும் புத்தகத்தில் முன்னரே வெளியாகியிருந்தது. சமூகசேவை செய்வோர் அனைவரும் சேர்ந்து செய்யும் உதவியைக் காட்டிலும் மகத்தான உதவியை ஒரு ஞானி தன் ஆத்மானுபூதி வாயிலாகச் செய்கிறான். மேலும் பலவிதமான வழிகளைத் தம் பேச்சாலும் எழுத்தாலும் போதிக்கும் சீர்திருத்த வாதிகளின் சொற்களைக் காட்டிலும் ஞானியின் மௌனம் சக்திவாய்ந்ததும் நற்பயனளிப்பதும் ஆகும் என்பது பகவானது விடையின் சாராம்சம். ஆயினும் இம்முறை இக்கேள்விக்கு மௌனம் சாதித்தார். பகவான் விடை ஏதும் கூறாததால் அப்பெண்மணி இவ்விஷயம் பற்றி முன்போலவே பத்து நிமிடங்களுக்குத் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். அப்போதும் பகவான் மௌனமாகவே இருந்தார். பகவானிடமிருந்து பதில் ஏதும் பெறாததால் அப்பெண்மணியும் அவர் சகோதரியும் ஏமாற்றத்துடனும் எரிச்சலுடனும் ஹாலைவிட்டு அகன்றனர். அவர்கள் சென்றபின் பகவான் என்னிடம் ''அவர்களிடம் என்ன சொன்னாலும் பயனில்லை. சொன்னால், இவை இன்னாரது கருத்துக்கள் என்று பத்திரிகையில் வெளியாவதே சொன்னதன் ஒரே விளைவாகும். முடிவிலாத் தர்க்க வாதங்களில் கொண்டு விடும். எனவே மௌனமாக இருப்பதே சாலச் சிறந்தது'' என்று கூறினார்.

பிராமணர் அல்லாதார் வேதம் ஓதுவதை பகவான் அங்கீகரிக்கவில்லை என்பது உண்மையே. அன்பர் ஒருவர் பகவான், 'அனுசரிக்கலாம்' என்று கூறியதை 'அத்தியயனம் செய்யலாம்' என்று தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார். பகவான் ''வேதத்தை அனுஷ்டிக்கலாம் என்று கூறினேனே தவிர அத்யயனம் (ஓதுவது) செய்யலாம் என்று கூறவில்லை'' என்று அவரைத் திருத்தினார். இதை நான் நேரடியாகக் கேளாவிட்டாலும், நம்பத்தகுந்த ஒருவரிடமிருந்து அறிந்தேன். இதன் விவரங்களைத் திருமதி. நாகம்மாள் தம் சகோதரருக்கு எழுதிய 'கடிதங்கள்' புத்தகத்தில் காணலாம். பதினெட்டு வருடங்கள் பகவானுக்கு அணுக்க உதவியாளராகப் பணியாற்றிய மாதவசுவாமி, பகவான் முன் செய்யப்படும் வேதபாராயணத்தைத் தொடர்ந்து கேட்டதால் அதனைப் பாராயணம் செய்யும்

ஆற்றலைப் பெற்றிருந்தார். பகவானுடன் நடந்து மலை ஏறிச் செல்லுங்கால் ஒரு சமயம் அதனை ஓதினார். அதைக் கேட்ட பகவான், ''நீ அதைக் கற்றுக் கொண்டு விட்டாய், அதனால் பரவாயில்லை; ஆனால் ஓதாதே'' என்றார். மாதவசுவாமியே இவ்விஷயத்தை என்னிடம் கூறினார். ஆனால் ஆசாரம் அனுஷ்டிக்கும் வைதீக பிராமணர்கள் மனம் நோகாமல் இருப்பதற்காகவே தன்னைத் தடுத்தார் என்பது மாதவசாமியின் கருத்தாகும். அதே சமயம், பிராமணர் அல்லாதாரும் இந்து அல்லாதாரும் வேதபாராயணத்தின் போது ஹாலில் அமர்ந்து பாராயணத்தைக் கேட்பர். இது தீவிர வைதீக சம்பிரதாயத்துக்கு மாறுபட்டதாயினும் இதனைப் பகவான் நிச்சயமாக ஆமோதித்தார். இம்மாதிரியான விஷயங்களில் பகவானின் கருத்து என்ன என்பதை சிவப்பிரகாசம் பிள்ளையின் கீழ்வரும் பாடல் நன்கு விளக்குகிறது.

**''ஆசாரம் விடல் அனர்த்தம் ஆம் என்று**
**அறைவோன் பாதம் வாழ்கவே**
**யோசித்தவற்றின் பொருள் கொள் என்னும்**
**யோகி பாதம் வாழ்கவே.''**

சோஷலிஸ்டோ, கம்யூனிஸ்டோ, வேறு எவ்வகையினரான லட்சிய நோக்குடைய சீர்திருத்தவாதியோ, மக்கள் எல்லோரும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் நல்லநிலையில் வாழவேண்டும் என்ற லட்சியத்தை அடைவதற்கு அத்தகையோர் செய்யும் முயற்சியைப் பற்றி பகவான் பின்வருமாறு கூறினார். ''சந்தோஷம், செல்வம், அறிவு, ஆரோக்கியம் முதலியவற்றை ஒருவருக் கொருவர் ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் ஒரே அளவில் இதுவரையில் பெற்றதும் இல்லை; இனியும் பெறப்போவதில்லை. உண்மையில் இச்சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் இல்லையாயின் இவற்றிற்குப் பொருளே இல்லை. ஆனால் உன்னைவிட சந்தோஷம் குறைந்தவனையோ, துக்கம் மிகுந்தவனையோ நீ காணநேர்ந்தால் அவனுடைய நிலையைக் கண்டு இரங்காமலும், உன்னால் இயன்ற உதவியைச் செய்து அவன் துன்பத்தைக் குறைக்காமலும், வாளா இருக்கலாம் என்ற முடிவுக்கு வரக்கூடாது. மாறாக எல்லோரையும் நேசித்து எல்லோருக்கும் உதவ வேண்டும்; அவ்வாறு செய்வதால்தான் உனக்கு நீயே உதவிக் கொள்ள இயலும். பலனில் பற்றின்றியும் 'நான் இதைச் செய்கிறேன்' என்னும் அகங்கார உணர்வின்றியும் 'கடவுள்தான் என்வாயிலாக இதைச் செய்விக்கிறார்; அவரே கர்த்தா; நான் கருவி மாத்திரமே' எனும் மனப்பாங்குடனும் சகமனிதர்களுக்கும், ஜீவராசிகளுக்கும் ஏற்படும் துன்பத்தைக் குறைக்க நீ செய்யும் முயற்சி வெற்றி பெறினும் பெறாவிடினும் அம்முயற்சியால் நீ உன் ஆன்மீகப் பாதையில் முன்னேறுகிறாய்.'' தொடர்ந்து இருநாள்களில் அன்பர்கள் கேட்ட கேள்வி களுக்குப் பகவான் அளித்த விடைகளின் சாராம்சத்தையே மேலே கொடுத் திருக்கிறேன். திருமதி நாகம்மாவின் 'கடிதங்கள்' புத்தகத்தில் இவ்வுரை யாடல்கள் விவரமாக வெளிவந்துள்ளன.



ஞான, பக்தி மார்க்கங்களுடைய ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிச் சில சமயங்களில் பகவானிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. எந்த வழியில் சாதனையை ஆரம்பித்தாலும் இறுதியில் அது ஞானத்திலேயே முடிவுபெறும் என்றும் ஞானமே ஒருவனைப் பிறப்பு இறப்பிலிருந்து விடுவிக்கிறது என்றும் பகவான் எப்போதும் வலியுறுத்தி வந்தார். எனினும் அவரவர்க்குப் பிடித்த மான வழியைப் பின்பற்றுமாறு அவரவரிடம் சொல்வார். உண்மையான ஞானமும் உண்மையான பக்தியும் ஒன்றே என்பதை வலியுறுத்துவார். ஞானி விசாரத்தால் ஆன்மா ஒன்றே உளது என்று உணர்கிறான்; பக்தனோ பக்தி யினால் பரிபூரணமாகத் தன்னை இறைவனிடத்து அர்ப்பணிப்பதால் அகந்தையை அழித்து 'நான் இல்லை; இருப்பது நீ ஒருவனே' என்ற நிலையை அடைகிறான்.

அவருடைய முன்னோடியான புகழ்பெற்ற சங்கரரைப் போல் பகவானிடத்தும் பக்தியும் ஞானமும் பிரிக்கமுடியாமல் கலந்திருப்பதைக் காணலாம். ஒருமுறை கிருஷ்ண ப்ரேம் என்னும் துறவி பகவானைத் தரிசிக்க வந்தார். (அவர் பிறப்பால் ஆங்கிலேயர்; சிறந்த பக்திமான்; கல்வி அறிவில் மிக்கவர். இப்போது அவர் இமாலயத்தில் அல்மோராவில் ஆசிரமம் அமைத்து அங்கேயே வசித்து வருகிறார்) அந்த அன்பரைச் சென்னையில் நான் பின்னர் சந்தித்துப் பேசியபோது அவர் ''பகவான் முழுக்க முழுக்க ஞானி என்று பலர் என்னிடம் சொல்லியிருந்தார்கள். ஆனல் நான் அவரை மாபெரும் பக்தர் என்றே கருதுகிறேன். நான் பூஜிக்கும் கிருஷ்ண பரமாத்மாவின் விக்கிரகத்தை என்னுடனேயே எடுத்துச் செல்லும் பழக்கம் உடையவன். அதை அவரிடம் காட்டினேன். கையிலெடுத்துப் பார்த்துவிட்டுத் திரும்பித் தந்தபோது அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. இது பக்தி இல்லை என்றால் வேறு என்ன?'' என்றார்.

பகவானது 'சகஜநிஷ்டை' எனும் நிலையைப் பற்றிக் கட்டாயம் குறிப்பிடவேண்டும். பகவான் எப்போதும் இந்நிலையில் உறுதியாக நிலைத்து இருந்தாக அவர் அடியார்கள் கூறுவார்கள். நிர்விகல்ப சமாதி நிலையைப் பற்றிச் சுலபமாக எண்ணிப் பார்க்கலாம். அந்நிலையில் ஒருவர் ஆன்மா விலேயே முற்றிலும் லயித்து இருப்பதால் வேறு எதனையும் அறியார்; ஆன்மாவில் விழிப்புடையவராகவும் உலகத்தை மறந்தவராகவும் பரமார்த் தத்தில் வேரூன்றி நிற்கும் அதீதநிலை அது. ஆனால் எப்படி ஒரே சமயத்தில் வியவகாரிகத்திலும் பரமார்த்திகத்திலும் ஒருவர் இருக்க இயலும்? எப்போதும் பரம்பொருளையன்றி வேறு எதனையும் காணாத ஒருவன், மற்றவர்போல் எவ்வாறு உலக விவகாரங்களைச் செய்ய முடியும்? இது என்னளவில் ஒரு புரியாத புதிராக உள்ளது. எனவே பகவானிடம் இதைப் பற்றிக் கேட்டிருக்கிறேன். அவர், இந்நிலையை விளக்க இயலாது என்றும், ஒரு ஞானியே இதனை முழுமையாக அறிய இயலும் என்றும் கூறிவிட்டு இது

எப்படி சாத்தியம் என்பதை எனக்குப் பல உதாரணங்கள் வாயிலாக விளக்க முயன்றார். அதில் ஓர் உதாரணம் திரைப்படமாகும். குழந்தைகள் திரையில் ஓடும் படங்களை உண்மை என்று கருதுகின்றன. ஆனால் வயது வந்தவர்கள் அவை திரைமீது தோன்றும் நிழல் தோற்றங்களே என்பதை எப்போதும் அறிவார்கள். வயது வந்தோர் திரையில் தோன்றும் படங்களைக் கவனிக்காமல் இருக்கவேண்டியதில்லை. அவர்கள் அவைகளை உண்மை என்று தவறாகக் கருதமாட்டார்கள்; அவை ஆதாரமான திரையில் விரைவில் தோன்றி மறையும் நிழல் தோற்றங்களே என்பதை அறிவார்கள்.

நாம் காணும் யாவற்றிலும், தாம் ஆன்மாவையன்றி வேறு எதனையும் காண்பதில்லை என்று பகவான் அடிக்கடி கூறியிருக்கிறார். நம் ஞான சாஸ்திரங்களிலும் இவ்வாறே கூறப்பட்டுள்ளது. இது குறித்து இரு சமயங் களில் பகவான் கூறியது என் நினைவிற்கு வருகிறது. இவற்றில் சகஜ நிஷ்டையைப் பற்றி விளக்கம் எதுவும் அளிக்கவில்லை; எனினும் தம்முடைய அனுபவத்தை எவ்வித உந்துதலுமின்றித் தாமாகவே வெளியிட்டார். ஒரு சமயம் தமது பழைய பக்தர் ஒருவர் தம்மை, இந்தியாவின் பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் பல காரணங் களுக்காகவும் அவ்வன்பர் ஏற்பாட்டை தாம் ஏற்க மறுத்ததாகவும் எங்களிடம் பகவான் கூறினார். இதைப்பற்றி எங்களிடம் கூறும்போது பகவான் ''நான் எங்குப் போவதினாலும் அதனால் என்ன பயன்? என்னால் எதையும் பார்க்க முடியாது'' என்றார். தாம் எங்குச் சென்றாலும் தமக்கு என்ன காண்பித்தாலும் தாம் ஆத்மா ஒன்றையே காண்பதை ''எதையும் பார்க்க முடியாது'' என்று குறிப்பிட்டார்.

பிறிதொரு சமயம் பக்தர் போஸ் அவர்களின் தாயார் தம் வீட்டில் தயாரித்த பல விதமான உணவு வகைகளை பகவானுக்கும் பக்தர்களுக்கும் மதிய உணவின்போது போஜன கூடத்தில் பரிமாறினார். பகவான் ஒவ்வொரு உணவுவகையினின்றும் சிறிதளவு தாம் ஏற்றுக்கொண்டு, எப்போதும் செய்வது போல், எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிட்டார். என்னை மொழிபெயர்க்கச் சொல்லிவிட்டு பின்வருமாறு கூறினார். ''இனிமேல் இவ்வாறு சிரமப்பட்டுப் பலவிதமான உணவு வகைகளைத் தயாரித்துக் கொண்டு வரவேண்டாம் என்று அந்த அம்மாளிடம் சொல்லுங்கள். உங்கள் எல்லோருக்கும் பலவிதமான ருசிகள் உள்ளன; ஆனால் எனக்கோ ஒரே ஒரு ருசியே உள்ளது. உங்களுக்குப் 'பல' வற்றில் ருசி; எனக்கு எப்போதும் 'ஒன்றில்' தான் ருசி. நான் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்துச் சாப்பிடுகிறேன் என்பதையும் கவனித்திருப்பீர்கள்.'' இவ்விரு சமயங்களில் பகவான் கூறியவை எனக்கு நன்றாக நினைவிலிருக்கின்றன. எவ்வித உந்துதலு மின்றி, தாமாகவே சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு கூறியவை இவை. விழிப்பு, கனவு, துயில் ஆகிய நிலைகளைக் கடந்ததும், துரியம் என்றும் நான்காவது



நிலை என்றும் சொல்லப்படும் அதீத நிலையில் பகவான் எப்போதும் இருந்தார் என்பது இவற்றால் தெளிவாகிறது.

அதேசமயம் ருசியும் ஏனைய புலன் உணர்வுகளும் நம் எல்லோரிடமும் இருப்பதுபோலவே பகவானிடம் தெளிவாக விளங்கின. இது ஒரு முரண்பாடாகத் தோன்றலாம். மற்றவர்களைப்போல் பகவானும் உணவு வகைகளில் சேர்க்கப்பட்டுள்ள பொருள்களைக் கண்டறிவார். அதேபோல் எல்லாம் ஒழுங்காக இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த கவனம் செலுத்துவார். புத்தகங்களைப் பைண்ட் செய்வது போன்ற வேலைகளைத் திருத்தமாகவும் அளவு பிசகாமலும் செய்வதில் அவர்மிகுந்த கவனம் செலுத்துவார். முன்னே குறிப்பிட்ட இரு உதாரணங்கள் பகவான் ஐம்புல விஷயங்கள் எதனையும் தெளிவாக அறியார் என்ற மிகவும் தவறான முடிவிற்கு இடம் கொடுக்கின்றன. மாறாக பகவான் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து அறிவார். அவர் எக்காரியத்தைச் செய்தாலும் அது இம்மியும் பிசகின்றி ஒழுங்காக இருக்கும். இது ஒரு முரண்பாடாகத் தோன்றினுல் அது ஞானியின் நிலையாகிய சகஜ நிஷ்டை நிலையை நம் போன்றோர் புரிந்து கொள்வது எவ்வளவு கடினம் என்பதைத்தான் காட்டுகிறது.

இக்கேள்வியுடன் தொடர்புடைய பின்வரும் விடுவிக்க முடியாத புதிரும் உள்ளது. மற்றைய ஞானிகளைப்போல் பகவானும் மனமழிந்த நிலையில் இருப்பதால் ஆன்மாவைத் தவிர வேறொன்றையும் காண்பதில்லை. எனவே பேததிருஷ்டி இல்லை. அப்படியானால் அவரால் எவ்வாறு தனித்தனியே தம்முடைய சீடர்களையும், பக்தர்களையும் கவனித்து அவர்கள் தேவையை உணர்ந்து உதவ முடியும்? பகவானை இதுபற்றிக் கேட்டுவிட்டு மேலும் தொடர்ந்தேன். ''நானும் மற்றவர்களும் ஒன்றை நன்றாக அறிவோம். துன்பம் வருங்கால் பகவானிடம் மனதிற்குள் முறையிட்டால் நாங்கள் எங்கிருப்பினும் உடனடியாகவே தேவையான உதவி கிடைத்துவிடுகிறது. ஒரு நெடுநாளைய பக்தர் தாம் பகவானிடம் போனமுறை வந்து சென்ற பின் தமக்கேற்பட்ட பல இன்னல்களைப்பற்றி பகவானிடம் கூறுவார். பகவானும் அவர் கூறுவதைப் பொறுமையோடு கேட்பதோடல்லாமல் இடையில் 'ஓ அப்படியா' என்று ஏதாவது சொல்வார். பக்தர் இறுதியாகக் கூறுவது பெரும்பாலும் 'எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன. பகவானிடம் முறையிட்டேன். இறுதியில் அவரே என்னைக் காப்பாற்றினார்' என்பதாகவே இருக்கும். பகவான் இவற்றையெல்லாம் ஒரு புதிய செய்தியைக் கேட்பது போல் கேட்பதோடல்லாமல் மற்றவர்கள் ஹாலுக்குள் வந்ததும் 'இவர் போனமுறை இங்கு வந்து சென்ற பிறகு இவ்வாறெல்லாம் நடந்ததாம்' என்று சொல்லவும் வியக்கவும் செய்வார். பகவான் பாசாங்கு செய்ய மாட்டார். எங்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை ஒரு விதத்தில் அவர் அறியார் என்பது தெளிவாகிறது. எனினும் நாங்கள் துன்பத்தில் சிக்குண்டு அதனால் உதவி வேண்டிக் கதறினால் ஏதோ ஒரு விதத்தில் அவர் உதவி கிடைத்துவிடுகிறது. அத்துன்பத்தைத்

தவிர்க்கவோ மாற்றவோ இயலாது என்ற நிலையில் அதைத் தாங்குவதற்கு வேண்டிய மனோபலமோ தகுந்த சூழ்நிலையோ கிடைத்து விடுகிறது.'' இவற்றையெல்லாம் பகவானிடம் கூறியதற்குப் பகவான், பக்தர்கள் துயரத்தில் முறையிடும்போது அவர்களுக்குக் கிடைக்கும் உதவியைக் குறித்து ''ஆம். தானாகவே அப்படி நடக்கும்'' என்று விடையிறுத்தார்.

கல்லூரிப் பேராசிரியராக இருந்தவரும், பகவானுடைய நெருங்கிய சீடருமான ஒருவர் தம் குடும்பத்தில் பல பேரிழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. அவர் பகவானிடம், ''நாங்கள் இத்தகைய இன்னல்களால் துயருறும்போது உங்களிடம் மனத்தாலோ கடிதம் வாயிலாகவோ முறையிடுகிறோம். அப்போது தாங்கள் எங்கள் நிலையை அறிந்து இரக்கத்தால் உந்தப்பட்டு 'இவர்கள் இவ்வளவு கஷ்டப்படு கிறார்களே' என்று வருந்துவதில்லையா?'' என்று கேட்டார். சற்றுநேர மௌனத்திற்குப் பின்னர் பகவான் ''அப்படி ஒருவன் வருந்தினால் அவன் ஞானியாகான்'' என்றார். இந்த அன்பர் எனக்கு நல்ல நண்பர். அவரே இதனை என்னிடம் கூறினார். பகவானிடம் நேரில் கேட்டறிந்த விஷயங்களைப்போல் இதன் உண்மைக்கும் என்னால் உறுதியளிக்க முடியும்.

நாமஜபம் பற்றிய பகவானது கருத்துக்களைக் கூறுவதும் மிக அவசியம். பகவான் முழுக்க முழுக்க ஞானி; ஞான மார்க்கத்தையே உயர்ந்த வழியாகப் போதித்தார்; எவ்வழியில் சென்றாலும் இறுதியில் ஞானமார்க்கத்தையே அடைய வேண்டும் என்று கூறினார். இவையே பகவானைப் பற்றிய பொதுவாக நிலவும் கருத்துக்கள். ஆனால் பகவான் நாம ஜபத்தின் பெருமை பற்றிப் பேசியதைப் பலர் அறியார். பக்தி மார்க்கத்தை அனுஷ்டித்த மகாத்மாக்கள் எந்த அளவிற்கு நாம ஜபத்தைச் சிலாகித்துப் போற்றி யிருக்கிறார்களோ அதற்கு எந்த விதத்திலும் குறையாமல் பகவானும் சில பக்தர்களிடம் நாம ஜபத்தின் மஹிமையைப்பற்றிக் கூறியிருக்கிறார்.

'விஷன்' எனும் தமது பத்திரிகையில் சுவாமி ராமதாஸ் நாமஜபத்தின் மஹிமையை விளக்கி எழுதிய கட்டுரையைப்பற்றி பகவான் என்னுடன் பேசியபோது, நாம ஜபத்தைப்பற்றிய பகவானது இக்கருத்து எனக்குத் தெளிவாக விளங்கியது. சுவாமி ராமதாஸ் அக்கட்டுரையில் நாமஜபத்தை மிகவும் போற்றிப் பரிந்துரைத்திருந்தார். பகவான் அக்கட்டுரையின் கருத்துக்களை முற்றிலும் ஆமோதிப்பதாகக் கூறினார். மேலும் மஹாபக்த விஜயத்தினின்றும் நாமதேவர் நாமஜப மஹிமை பற்றிக் கூறியதை எனக்குச் சுட்டிக் காட்டினார். நாமதேவர் வாக்கு இன்னும் உறுதியாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் இருந்தது. பகவான் ''கடவுளும் கடவுள் நாமமும் வேறல்ல'' என்று தெளிவாகக் கூறினார்.

ராமன், கிருஷ்ணன், முருகன், சிவன் அல்லது வேறு தெய்வங்களின் நாமங்களில் ஒன்றினை ஜபம் செய்துவந்த அன்பர் பலர் ஆர்வத்துடன் பகவானிடம்



தாங்கள் நாமஜபத்தைத் தொடர்ந்து செய்யலாமா என்று கேட்டபோதெல்லாம் பகவான் அவர்கள் அச்சாதனையைத் தொடர்ந்து செய்யலாம் என்று உறுதிப்படுத்தி ஊக்குவித்தார். என் முன்னரே அடிக்கடி பலர் இத்தகைய விடையைப் பெற்றிருக்கிறார்கள்.

எனக்கும் அமரும்போதும், எழுந்து நிற்கும்போதும், படுக்கும்போதும், துயில் எழும்போதும், அல்லது எங்காவது செல்லக் கிளம்பும்போதும் ரமணநாமத்தைக் கூறும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒருநாள் முருகனாரின் திருச்சுழிப் பதிகத்தைப் பகவான்முன் பாடிக் கொண்டிருந்தேன். ஒவ்வொருபாடலும் ''உனை நான் மறக்கினும் நாச்சொலும் உன்றன் நாமமே'' என்று முடிவுறுகிறது. பாடுவதை நடுவில் நிறுத்திவிட்டுப் பகவானிடம் ''இப்பாடலில் கூறியிருப்பது என் விஷயத் தில் முற்றிலும் பொருந்தும். நான் பகவான் திருநாமத்தை அடிக்கடி வாயினால் கூறிக்கொண்டிருக்கிறேன்; ஆனால் அச்சமயங்களில் என்மனம் பொதுவாக பகவானிடத்தில் இருப்பதில்லை. நாமத்தை வாயால் உச்சரிக்கும்போது கவனம் நாமத்திலோ பகவானிடத்திலோ இருந்தால் அத்தகைய நாமஜபத்தால் நற்பலன் உண்டு என்பதில் எனக்கு ஐயம் ஏதும் இல்லை. அவ்வாறு செய்யாமல் பழக்கத்தின் வலிமையால் தானாகவே வாயால் மட்டும் உச்சரிப்பதால் பலன் ஏதும் உண்டா?'' என்று கேட்டுவிட்டு, மேலும் ''அதற்கும் மதிப்பெண்கள் கொடுக்கப்படவேண்டும் என்றே நான் கருதுகிறேன். அதிக மதிப்பெண்கள் கிடைக்காவிட்டாலும் குறைந்தது ஒன்றிரண்டாவது கிடைக்கும் என நினைக்கிறேன்; அப்படித்தானே பகவான்?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டேன். பகவானும் சிரித்துக்கொண்டே ''ஆமாம். உனக்கு அதற்கு மதிப்பெண்கள் கிடைக்கும்'' என்றார்.

நானும் ''ரமணா, ரமணா'' என்று சொல்வதைத் தொடர்ந்து செய்து வருகிறேன். நாம் எல்லோரும் ஏற்க வேண்டிய இறுதித்தேர்வில் பகவான் கூறியதுபோல் அதற்காக நிச்சயம் மதிப்பெண்கள் தருவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

ஒருமுறை பகவானிடம், ''எனக்கு முக்தி முதலியவைபற்றி என்ன தெரியும்? உண்மையிலேயே எனக்கு முக்தியைப்பற்றியோ வேறு எதைப்பற்றியோ அக்கறையில்லை. நான் எப்போதும் சந்தோஷமாக இருக்கவே விரும்புகிறேன்'' என்று கூறினேன். என்னுடைய இக்கருத்து விளையாட்டுத்தனமான ஒன்றாகத் தோன்றினாலும் உண்மையில் இதுவே என் மனோபாவமாக இருந்தது. பகவான் இதற்கு ''முக்தி என்ற வார்த்தையை உபயோகிக்காவிட்டாலும் நீ உண்மையில் அதைத்தான் கேட்கிறாய். நீ விரும்பும் கலப்பற்ற இடையறாத ஆனந்தம் முக்தியினால்தான் (அதாவது அறியாமையிலிருந்து விடுபடுவதி னால்தான்) சாத்தியமாகும்'' என்றார்.

இன்பத்தை நாடுவதில் தவறொன்றுமில்லை என்பதைப் பகவான் மீண்டும் அறிவுறுத்தினார். இன்பமே ஒருவனது சொரூபமாகையால்,

இன்பத்தை நாடாமல் இருப்பது இயலாது. ஆத்மா ஒன்றே இன்பம்; எனவே அவ்வின்பத்தை ஆத்ம ஞானத்தால் பெறாமல், அனாத்மப் பொருள்களில் தேடுவதுதான் பிழை. நீண்ட நாளாக எனக்கிருந்த ஒரு சந்தேகத்தைப்பற்றி பகவானிடம் கேட்டேன். நம் நாட்டு ஞானிகளும் பக்தர்களும் மற்றும் கார்லைல், கெத்தே போன்ற மேல்நாட்டு அறிஞர்களும் துன்பத்தை வரவேற்றுப் போற்றவேண்டும் என்றும், ஆன்மீக முன்னேற்றத்திற்கு துன்பமே வாயிலாகும் என்றும், நம்மை உலகத்தினின்று திருப்பிக் கடவுளிடம் ஈர்ப்பதன் பொருட்டுத் தோன்றிய இறைவனது அருளின் வெளிப்பாடாகத் துன்பத்தை வரவேற்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள். நான் பகவானிடம் ''ஒரு தந்தை தன் குழந்தையைத் திருத்தி நல்வழிப்படுத்திக் காப்பதற்காக வேறுவழியின்றி அக்குழந்தையைத் துன்பத்திற்கு ஆளாக்க வேண்டியதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. சர்வசக்திமானாகவும், சர்வஜீவ நேசனாகவும் உள்ள இறைவன் நம்மை எவ்விதத் துன்பத்துக்கும் ஆளாக்காமல் ஆன்மீக முன்னேற்றம் அடையச் செய்ய வல்லவனாக இருக்கவேண்டும் அல்லவா?'' என்று கேட்டேன். அதற்கு ''நாம் என்ன சொல்ல முடியும்? அதுதான் அவருடைய திட்டம்'' என்று விடையிறுத்தார் பகவான்.

சர்வசக்திமானும், கருணாமூர்த்தியுமான கடவுளால் உண்டாக்கப்பட்ட இவ்வுலகத்தில் தீமையும், துன்பமும் ஏன் இருக்கின்றன என்ற கேள்வி பலருக்குப் புதிராக இருக்கிறது. இக்கேள்விக்குப் பெரும்பாலும் பகவான், ''யார் இந்தத் தீமையையும் துன்பத்தையும் காண்கிறார்கள். உன்னுடைய ஆழ்ந்த தூக்கத்தில் அவை இருந்தனவா? முதலில் உன் உண்மை சொரூபத்தை நீ அறிந்துகொள். அதன் பின்னும் தீமையும், துன்பமும் உனக்குத் தோன்றினால் கடவுள் அவற்றை ஏன் அனுமதிக்கிறார் என்று கேட்கலாம்'' என்று விடையிறுப்பார்.

வேறுசில சமயங்களில் பகவான், ''நீ நல்லதையும், இன்பத்தையும் மட்டுமே விரும்புகிறாய். ஆனல் இச்சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் இன்றேல் அவை பொருளற்றுப் போகும். நன்மை - தீமை, இன்பம் - துன்பம் போன்ற இருமை உணர்வுகள் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை. வியவகாரிக உலகில் இவற்றைத் தவிர்ப்பது இயலாது. பரம்பொருளை அடைந்தால் இவற்றைக் கடக்கலாம். பரம்பொருளை அடைவதே பரிபூரண ஆனந்தம்'' என்று கூறினார்.

— oOo —

ஒரெழுத்(து) என்றுந்தானாய் உள்ளத் தொளிர்வதா(ல்)
ஆரெழுத வல்லார் அதை.

— ஸ்ரீபகவான்



# ஆட்கொண்ட தெய்வம்

## ஸ்வாமி மதுரானந்தா

எத்தனையோ ஜென்மம் எடுத்து ஓய்ந்த இந்த ஜென்மத்தில் அவனது அருளால் கனவில் ஆட்கொண்ட ஐயன் பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் புனித நினைவைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*1950*-ம் ஆண்டு கும்பமேளா முடிந்து ரிஷிகேசத்தில் பூஜ்ய ஸ்வாமி சிவானந்தர் அருகிலிருந்தபோது, பகவான் மஹாசமாதி அடைந்து விட்டார் என்று கேட்டதும் இனி நேரில் தரிசன பாக்கியம் ஏது என்று வியாகூல மடைந்தேன். *1953*-ம் ஆண்டிலிருந்து ஆனந்தாஸ்ரமத்தில் பூஜ்ய பப்பாவின் (ஸ்வாமி ராம்தாஸ்) அருகிலிருந்து சேவை செய்யும் பாக்கியம் கிடைத்த போது, பகல் நேரத்தில் காற்று, நிழல் அனுசரித்து குறிப்பிட்ட இடங்களில் பக்தர்களுடன் உட்காருவது பப்பாவின் வழக்கம். அவர் உட்காரும் இடங் களில் நாற்காலிவைத்து பக்தர்களுக்காகப் பாய் விரித்து சௌகர்யம் செய்யும் கைங்கர்யங்களில், அன்புருவான அன்னையார் அடியேனை உருவாக்கி இருந்தார்.

### கனவு

வழக்கம்போல் பூஜ்ய பப்பா நாற்காலியில் அமர்ந்திருக்க, அன்பர்களு டன் அடியேனும் உட்கார்ந்து இருக்கும்போது, ஏதோ காரணமாக நான் எழுந்தவுடன் 'எங்கே போகிறாய்?' எனக்கேட்டது பப்பாவின் குரல். பார்த் தால், பப்பாவிற்குப் பதிலாக பகவான் ரமண மஹரிஷி நாற்காலியில் அமர்ந்து கொண்டு பேசுவதைக் கண்டு பரவசமடைந்து, 'எங்கும் இல்லை' என்று மெதுவாகக் கூறினேன். 'பஜனை செய்கிறாயா?' என அன்புடன் கேட்டார் பகவான். சரி என்று சொல்லிக் கொண்டே பஜனைப் புத்தகத்தைக் கையில் ஏந்தி பஜனை செய்யத் தயாரானேன். ஆனால் தொடங்கியதோ –

'ஓம் பார்த்தாய ப்ரதி போதிதாம்
பகவதா நாராய ணேன ஸ்வயம்
வ்யாசேன க்ரதிதாம் புராண முனினா
மத்யே மஹா பாரதம்'

என்ற ஸ்ரீமத் பகவத் கீதையின் தியான ஸ்லோகம்.

மனப்பாடமில்லாத ஸ்லோகங்கள், முன் பின் மாறினாலே சிரமம் தான். ஆனால் மனம் கலங்காது தொடர்ந்து ஸ்லோகங்களைச் சொல்ல மனம் ஆயத்தமானது. 'மத்யே மஹா பாரதம்' முடிந்ததும் அடுத்த ஸ்லோகம் எது எனத்தெரியாது, நிறுத்தி பகவானைப் பார்த்து பயத்துடன் விழித்தேன்.

உடனே பகவான் 'அத்வைதாம்ருத வர்ஷிணீம்' என்ற ஸ்லோகத்தைத் தொடங்கி வைத்தார். நான் தொடர்ந்து அந்த ஸ்லோகத்தைப் பாடி முடித்ததும் மீண்டும் பகவானது திருவதனம் 'நமோஸ்துதே' எனத் தொடங்க, அதை யான் முடிக்க, இவ்விதம் உற்சாகமும் ஆனந்தமும் கலந்த நிலையில் கடைசி ஸ்லோகம் 'யம் ப்ரஹ்மா வருணேந்த்ர' என்று பகவான் தொடங்கினார். நான் அந்த ஸ்லோகத்தைத் தொடர்ந்து பாடி முடிக்கும் சமயம் கனவு கலைந்தது. உணர்வு வந்தது (இது நடந்தது 1970-ல் நான் காஷ்மீரில் இருந்த போதாகும்). அன்பரது இல்லத்தில் படுக்கையில் இருந்தவாறு தொடர்ந்து நாவில் தவழ்ந்து கொண்டிருந்தன புண்ணிய ஸ்லோகங்கள். அச்சமய மனோ நிலையை எடுத்துக்கூற இந்தப் பேனாவால் இயலாது. பகவானின் கருணா கடாட்சம் இன்றைய தினம் அண்ணாமலையில் அவரது திருவடி நிழலில் அமர்ந்து, கனவு நனவுக்கு அப்பாலுள்ள மெய்யான நிலை எது என்பதில், ஐயமற அனுபவம் பெறுவதில் காலம் கடந்து கொண்டிருக்கிறது. எல்லாம் அவன் செயல்.

ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய.
ஓம் நமோ பகவதே ஸ்ரீ ராமதாஸாய
ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய்ஜெய்ராம்.


–oOo–

மனத்தின்கண் எதுவரையில் விஷயவாசனைகள் இருக்கின்றனவோ அதுவரையில் நானாரென்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத் தோன்ற அப்போதைக் கப்போதே அவைகளையெல்லாம் உற்பத்திஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். அன்னியத்தை நாடாதிருத்தல் வைராக்கியம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம். உண்மையில் இரண்டும் ஒன்றே. முத்துக் குளிப்போர் தம்மிடையிற் கல்லைக் கட்டிக்கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடக்கும் முத்தை எப்படி எடுக்கிறார்களோ அப்படியே ஒவ்வொருவனும் வைராக்கியத்துடன் தன்னுள் ஆழ்ந்து மூழ்கி ஆத்ம முத்தை அடையலாம். ஒருவன் தான் சொரூபத்தையடையும் வரையில் நிரந்தர சொரூப ஸ்மரணையைக் கைப்பற்றுவானாயின் அது வொன்றேபோதும். கோட்டைக்குள் எதிரிகள் உள்ள வரையில் அதிலிருந்து வெளியே வந்து கொண்டேயிருப்பார்கள். வரவர அவர்களையெல்லாம் வெட்டிக் கொண்டேயிருந்தால் கோட்டை கைவசப்படும்.

— **பகவான் ஸ்ரீ ரமணர்** (நூல்திரட்டு)







# விஞ்ஞானி வேதாந்தியானான்

## (ஸ்ரீ ரமண மஹரிஷி தரிசனத்தின் பலன்)

(தன் பெயரைக் குறிப்பிடாமல் தன்னனுபவத்தை எழுதியுள்ள இவ்விஞ்ஞானி, இக்கட்டுரையை 15.4.1946 அன்று ஆச்ரமத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். தற்போது ஆவணக் காப்பகத்திலிருந்து (Archives) எடுத்துப் பிரசுரிக்கப்படுகிறது)

சர்வகலாசாலையில் விஞ்ஞான வகுப்பிலிருந்த ஓரிளைஞன், நவீன மேல் நாட்டு விஞ்ஞானத்தை மிக்க ஆர்வத்துடன் பயின்று வந்தான். அடிக்கடி சர்.சி.வி. ராமன் போன்ற விஞ்ஞானப் பேராசிரியர்கள் சொற்பொழிவாற்று வதை அவன் கேட்பதுண்டு. அவர்களைப் போல் விஞ்ஞானவாராய்ச்சியில் தீவிரமாக இறங்கி உலகப் பொருளின் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற பேரவா அவனுக்கிருந்து வந்தது.

பி.எஸ்ஸி. பரீக்ஷை முடிந்தது; கோடை விடுமுறைக்குப் பெற்றோரிருக்கும் ஊருக்குப் போகவேண்டும். இந்த சமயம் ஹாஸ்டலிலிருந்து பணம் கொஞ்சம் திருப்பிக் கிடைத்தது. அதைக் கொண்டு, வேறெந்தவூராவது சுற்றிப் பார்த்து விட்டு, பின் சொந்த ஊர் போகலாமென நினைத்தான். அப்பொழுது திருவண்ணாமலை ஞாபகம் வந்தது. அச்சமயம் அவன் தகப்பனார் அடிக்கடி திருவண்ணாமலையிலுள்ள ஸ்ரீ ரமணாச்ரமம் சென்று கொண்டிருந்தார். மேலும், இத்திருவண்ணாமலையில் சரித்திரப் புகழ் பெற்ற புராதனக் கோயில் இருக்கிறது; மலையொன்றிருக்கிறது; ஒரு ரிஷியாச்ரமம் வேறிருக்கிறது. ரிஷி யாச்ரமம் எப்படியிருக்கிறதென்று பார்க்க வேண்டுமென்ற எண்ணம் கிளம் பியது. ஆகவே இளைஞன் திருவண்ணாமலை போவதென்று தீர்மானித்தான். கடைசி பரீக்ஷையும் முடிந்தது. அன்றிரவே கிளம்பி, மறுநாட் காலை நேரே ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு வந்து சேர்ந்தான்.

உள்ளே நுழைந்ததும் மகரிஷி தர்சனம் கிடைத்தது. இதற்கு முன் அவன் ரிஷியொருவரையும் பார்த்ததில்லை. இந்த ரிஷி சினிமா ரிஷிமாதிரி இல்லை. கோவணம் மாத்திரம் தரித்து சாதாரண மனிதராகத்தான் அவர் தோன்றி னார். இந்த ரிஷியை வணங்கி, ஹாலில் அவர் முன் அமர்ந்தான். மகரிஷி மௌனமாக சும்மா உட்கார்ந்திருந்தார். சுற்றியுள்ள ஒருவரிடமிருந்தும் ஒரு சப்தமும் எழவில்லை. இப்படியே கொஞ்ச நேரம் சென்றது. ஆனால் இளைஞனால் அதிக நேரம் ஒன்றும் பேசாமல் சும்மா உட்கார்ந்திருக்க முடியவில்லை. அங்கே மகரிஷியுடன் என்ன பேசுவதென்றும் தெரியவில்லை. நல்ல வேளையாக ரிஷியினருகில் புத்தகங்களிருந்தன. அதில் ஒன்றை யெடுத்துப் படிக்கலானான். அது 'உள்ளது நாற்பதின்' ஆங்கில விரிவுரை.

அதில், உலகம் பொய், இருப்பது ஒன்றே, என்றெல்லாம் எழுதியிருந்தது. இது இளைஞனுக்கு விளங்கவேயில்லை. அச்சமயம், அணுவைப் பற்றியும்,

அண்டத்தைப் பற்றியும், இவைகளிற் பொதிந்து கிடக்கும் ஓரற்புத மகாசக்தியைப் பற்றியும் அச்சக்தியைத் தினசரி வாழ்விற் பயன்படுத்திக் கொள்ள விஞ்ஞானி கையாளும் முறைகளைப் பற்றியும், தான் சர்வ கலாசாலையிற் கற்றதெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. "இந்தப் பிரம்மாண்டத்தில் நான் ஒரு பரமாணு மாதிரி ... கடவுள் என்னை ஏன் சிருஷ்டிக்க வேண்டும்?...... நான் எங்கிருந்தேன், இனி எங்கிருப்பேன், இப்பொழுது ஏன் இங்கிருக்க வேண்டும்..... நான் பார்ப்பதெல்லாம் உண்மையல்லவா! பொருள்களிருப்பதை பஞ்சேந்திரியங்கள் மூலம் நானுணர வில்லையா! ஒன்றுமே இல்லை என்று மகரிஷி சொல்கிறாரே; என் முன்னி ருக்கும் அவரையே நான் பார்க்கவில்லையா?" இவ்விதமான எண்ணங்கள் இளைஞன் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. கையிலெடுத்த புத்தகத்தை அவனால் மேலே படிக்க முடியவில்லை. ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்தான். அப்பொழுது மகரிஷி இளைஞனைப் பார்த்து, "ஏன், என்ன சந்தேகம்" என்று கேட்டார். உடனே இளைஞன் தலை நிமிர்ந்து, மகரிஷியைப் பார்த்து, "சோபா மேல் ஒருருவம் இருக்கிறது, கீழே ஒருருவம் இருக்கிறது. கண்ணைத் திறந்து பார்த்தால் தெளிவாக இரண்டும் தெரிகின்றன. ஆனால் உண்மையில் இருப்பது ஒன்றுதான் என்று சொல்கிறீர்கள். இது எப்படி உண்மையாகும்?" என்று கேட்டான். மகரிஷி சிறிது சிரித்துக்கொண்டு சும்மாயிருந்தார். சில நிமிடங்கள் கழித்து பின்வருமாறு பதிலளித்தார்.

"நீ உன் கலாசாலையிலுள்ள லபோரட்ரியில் (சோதனைக் கூடத்தில்) சோதனை செய்கிறாய் அல்லவா? ஏதாவது ஒரு பொருளை நீ ஆராய்வதாக வைத்துக் கொள். உன் சோதனையில் பயன்படுத்தும் கருவி எவ்வளவுக்கெவ் வளவு நுட்பமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பொருளின் உண்மை விளங்கும். ஆனால் கருவி எவ்வளவு உயரியதாக இருந்தாலும் உன் கண் சரியாகயில்லையானால் பொருளின் உண்மைநிலை, அப்பொழுதும் சரியாக விளங்குவதில்லை; கண் எவ்வளவு நேர்த்தியாக இருந்தாலும், மூளை சரியாக இல்லையானால் பொருளின் உண்மை நிலையைப் பின்னும் அறியமுடிவ தில்லை; மூளை எவ்வளவு சரியாக இருந்தாலும் இந்தச் சோதனையில் கவனத்தோடு மனது ஈடுபடவில்லையானால் பொருளின் உண்மையை அறிவது இன்னும் அசாத்தியமே. ஆகையால் முடிவாகப் பார்த்தால், சோதனையின் பயனாக பொருளின் உண்மையை அறிவது மனத்தைப் பொறுத்தது. மனது என்பதென்ன? எண்ணங்களே. ஆனால் எல்லா எண்ணங்களும் ஓரே எண்ணத்திலிருந்து விரிந்தவை. அந்த ஒரு எண்ணமே எல்லா எண்ணங் களுக்கும், அடிப்படையாக, மூல காரணமாக இருக்கிறது. அதுதான் 'இத் தேகமே நான்' என்ற எண்ணம். இந்த எண்ணம் முதலில் ஏற்படாமல் பொருள்களின் பலவகைத் தோற்றமும், தன்னைவிட்டு, அவைகள் அயல் எனும் எண்ணமும் நிகழமாட்டா. 'தேகாத்ம பாவம்' இல்லாத ஆழ்ந்த தூக்கத்தில் உலகம் தோன்றுவதில்லை; வேறெந்தவிதமான எண்ணமும் இருப்ப தில்லை. விழித்தவுடன் 'இத்தேகம் நான்' என்ற எண்ணந்தான் முதலில்



உண்டாகிறது. இந்த எண்ணத்தில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று தேகம் என்பது; மற்றொன்று நான் என்பது. தேகமோ தோன்றி மறையக் கூடியது; மாறிக்கொண்டே இருப்பது; அதன் இருப்பு பிற சாதனங்களை (உணவு முதலானவற்றை) ஆசிரயித்ததாகும். ஆனால் நான் என்பதன் இலக்க ணமோ இதற்கு நேர்மாறானது. உண்மையில் இருப்பது எப்போதும் இருக்க வேண்டும். தேகமோ எப்போதும் இருப்பதில்லை. ஆகையால் அது உண்மைப் பொருளன்று. நான் என்பது எப்போதும் 'ஜாக்ர, ஸ்வப்ன, சுஷுப்தி' ஆகிய எல்லா நிலைகளிலும் இருப்பதாகும். ஆகையால் அதுவே உண்மைப்பொருள்; தேகம் பொய். இவை இரண்டும் சேர்ந்து ஒரே உண்மைப் பொருளாக இருக்க முடியாது. இரவும் பகலும், ஒளியும் இருளும் எப்படி ஒன்றாகச் சேர்ந்தி ருக்கும்? ஒளியிருந்தால் இருட்டில்லை; இருட்டிருந்தால் ஒளியில்லை. அது போல் தேகமும் நானும் சேர்ந்த உருப்படி ஒன்றும் இல்லை. ஆகையால் தேகாத்மபாவம் அல்லது 'இத்தேகம் நான்' என்ற எண்ணமே பொய். இந்தப் பொய் யெண்ணத்தைக் கருவியாகக் கொண்டு உலகத்தை ஆராயத் தொடங்கினால் உண்மையை எப்படி அறிய முடியும்?" என்று பகவான் அருளினார். **அந்தக் கணமே, இளைஞனுக்கு நவீன மேல் நாட்டு விஞ்ஞான முறைகளில் இருந்த மோகம் அறவே ஒழிந்தது. அதன் மூலம் உண்மையைக் கண்டு பிடிக்க முடியாதென்றும் தெரிந்து கொண்டான்.** மேலும் பகவான் 'தன்னுண் மையை அறிந்த பிறகுதான் ஒருவன் உலகுண்மையை அறிய முடியும்' என்று, தன்னை அறிவதற்கான விசார மார்க்கத்தையும் சுருக்கமாகச் சொல்லி விளக்கினார்.

தேகசம்பந்தமே இல்லாத போது 'நான்' எப்படி இருக்கிறதென்று பார்க்க வேண்டும். ஆழ்ந்த தூக்கத்தில் நமக்கு ஒருவித எண்ணமும் இருப்பதில்லை. அந்த மாதிரி தூங்கிக் கொண்டே நம்மையும் விழித்துப் பார்க்க வேண்டும். இந்த விழிப்பு இப்பொழுது நமக்கு இருக்கும் விழிப்புப் போன்றதல்ல. ஆகையால் அந்த விழிப்பை ஒன்றுக்கும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. தன்னில் விழித்திருக்கும் ஞானியைக் கேட்டால் நான் என்பதைப் பற்றி நமக் குள்ள எண்ணமெல்லாம் தப்பு என்றுதான் சொல்கிறான். அதற்கு மேல் அவன் மௌனம் சாதிக்கிறான். நான் என்பதன் உண்மையை நம்மஞ்ஞான விழிப்பு நிலையிலிருந்து அறிய முடியாது. ஆனாலும் ஒருவாறு சிறிதளவு ஊகிக்கலாம். ஆழ்ந்த தூக்கத்தில், உலகம், அதிலுள்ள இத்தேகம், அத்தேக ரூபமாக நான் தனிப்பட்ட மனிதன் என்ற எண்ணம், தனக்கு வேறாயிருப் பதாக நினைக்கும் ஈசுவரன், இவற்றுள் ஒன்றுமே இருப்பதில்லை. ஆனால் நான் தூக்கத்தில் இல்லாதொழிந்தேன் என்று ஒருவரும் சொல்வதில்லை. அந்த நான் இப்பொழுது நமக்கிருக்கும் ஜீவபாவம் மாதிரி இல்லை என்று மாத்திரம் இதிலிருந்து தெரியவரும். ஆனால் நான் என்பது எப்படிப்பட்டது என்றுதான் தெரியவில்லை. தானாயிருப்பதுதான் தன்னை அறிவதாகும்.

தானே தானாயிருப்பதெப்படி? மனது தன் கற்பனையேயான உலகத்தி லிருந்து திரும்பி அதன் மூலமாகிய தன்னில் ஒடுங்க வேண்டும். இது சாதாரண

காரியமன்று. மனது அழிந்து தன் உண்மை அம்சமாகிய தான் மாத்திரம் மிஞ்சவேண்டும். இப்படி மனதழியப் பெற்றவனே உண்மையிற் பிறந்தான்.

புத்திபூர்வமாக இவ்வுபதேசம் பெற்ற இளைஞன் வீடு திரும்பினான். மறுபடியும் விஞ்ஞானக் கல்வியில் ஈடுபட்டான். ஆனால் இப்பொழுது அவனுடைய நோக்கமே மாறிவிட்டது. இந்தக் குறையான மனத்தைக் கொண்டுதான் அதன் ஸ்வஸ்தானமாகிய தன்னை அடைய வேண்டும். அதற்கு மனதின் ஆசாபாசங்கள், விஷயப்பற்றுக்கள் நீங்கி, மனது பலப்பட்டு, விசார மார்க்கத்தில் இடைவிடாது ஈடுபட்டு உண்மையை அறியவேண்டும். இதற்குக் குருவருள் வேண்டும். தீவிர புத்தியுள்ள தீரர்கள் உடனே சாதனத்தில் இறங்கி விடுவார்கள். மற்றவர்கள் உலக வாழ்வில் இருந்தாலும் குருவருட்பலத்தால், தங்களுக்கு ஏற்படும் சுக துக்கங்களை விவேக புத்தியால் ஆராய்ந்து அவைகளிலிருந்து தாமறிய வேண்டிய உண்மை என்ன என்று கவனித்துக் கொண்டிருக்கவேண்டும். இந்த உலக சுக துக்கங்களில் மனது ஈடுபட்டு ஏமாறாமல் இருக்க, உலக விஷயங்களின் தேவையைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். சாத்வீக ஆகாரத்தை மிதமாக அருந்தி வரவேண்டும். இயற்கையோடியைந்து வாழவேண்டும். எது செய்தாலும் அது ஆத்ம சாதனத்திற்குப் பாதகம் இல்லாததாக இருக்கவேண்டும். இவ்வாழ்வு உண்மையல்லாத ஸ்வப்ன வாழ்வாக இருந்தாலும், இதிலிருந்து கிடைக்கும் அனுபவம் வீண்போகாது. அந்த அனுபவத்திலிருந்து அறியும் உண்மையை மாத்திரம் விழித்திருந்து கவனிக்கவேண்டும். அது ஆத்ம சாதனத்திற்கு மிக்க உதவி அளிக்கும்.

இந்த நோக்கத்துடன்தான் இந்த இளைஞன் விஞ்ஞானம் பயின்றான். அத்துறையில் பெரிய பட்டம் பெற்று, பெரிய பதவி அடையவேண்டும் என்ற ஆசை அவனுக்கில்லை. வேறெந்தக் கலை பயின்றாலும் அதன் மூலம் உலக வாழ்வில் பெரிய பதவியும் தனமும் பெற எண்ணிப் பயிலவில்லை. அவன் தான் எடுத்துக் கொண்ட சாஸ்திரங்களிலெல்லாம் நல்ல தேர்ச்சியடைந்தான். பின் உபாத்தியாயர் சேவையை மேற்கொண்டான். எல்லோரிடமும் அன்புடனும் மரியாதையுடனும், ஆனால் சுயமரியாதையைக் குறைத்துக் கொள்ளாமல் தைரியமாகவும் எல்லோரையும் திருப்தி செய்து கொண்டும் வாழ்ந்து வருகிறான். இதற்கெல்லாம் காரணம் குருநாதன் அருளாலும் ஆத்மோபதேசத்தாலும் இளைஞன் வேதாந்தியானதுதான். உண்மையில் அருளும் ஆத்மோபதேசமும் ஒன்றே.

தற்சமயம் உலகில் அமைதி மிகக் குன்றிப் போய்விட்டது. இதற்குக் காரணம் வேதாந்திகள் மிகக் குன்றி விட்டதே. உண்மையான வேதாந்திக்கு ஆசையும் பயமும் மிகக் குறைவு. அவன் எத்தொழில் புரிந்தாலும் செய்ய வேண்டிய முறைப்படிச் சரிவரச் செய்கிறான். பிறருக்கு அவனிடம் பொறாமை உண்டாகாது. தன் தொழிலின் பலனையும் பிறருடன் சேர்ந்து அனுபவிக்கத் தயாராயிருக்கிறான். அவரவர்கள் தங்கள் தங்களால் இயன்றதும்,



தங்கள் தங்கள் ஸ்வபாவத்திற்கு ஏற்றதுமான தொழிலைச் செய்து, பலனை எல்லோரும் சேர்ந்து அனுபவிக்கவேண்டும். இதுதான் என்றும், மனிதன் முறைப்படி கடைப்பிடிக்க வேண்டிய தர்மம். இதைத்தான் நம்முன்னோர்கள் சநாதனதர்மம் என்றார்கள். இது உண்மையில் உலகில் நிலை பெற்று நிலவ வேண்டுமானால், உலகத்தை ஆண்டுவரும் ராஜதந்திரிகளும், அவர்களுக்குச் சாதனங்கள் உதவிவரும் விஞ்ஞானிகளும் வேதாந்திகளாக வேண்டும். உலக சமாதான மகாநாட்டில் வேதாந்திகள் கூடவேண்டும். மகாத்மா காந்தி போன்ற வேதாந்த ராஜ தந்திரி, தற்சமயம் பாரீஸில் நடக்கும் சமாதான மகாநாட்டிற்குப் போக வேண்டும். அங்கே பொறாமையும் அவநம்பிக்கையும் காரணமாகத் தம்மிற் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் தலைவர்களுக்கு நம்நாட்டு வேதாந்த அறிவைப் புகட்ட வேண்டும். வாழ்வின் லக்ஷியத்தையும் வாழ்வின் அற்பத்தையும் கண்டுகொண்டால் அமைதி சீக்கிரம் நிலைபெறும்.

அதிருஷ்டவசமாக நம் நாட்டில் ராஜீயக் கிளர்ச்சி செய்யும் தேசியக் கட்சியில் ஒரு வேதாந்தி முடிசூடா மன்னனாக விளங்குகிறார். நம் தலைவர்கள், மேல்நாட்டார் லௌகீக வாழ்வில் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைக் கண்டு மயங்கிவிடாமல், நம் புராதன வேதாந்தவொளியைப் பின்பற்றி, கல்வி முறைகளையும் அவற்றின் துறைகளையும் அமைக்க வேண்டும். ராஜீய அமைப்பே மகாத்மாகாந்தி சொல்லும் ராமராஜ்ய முறையில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தியாவுக்கும், உலகத்திற்குமே க்ஷேமம்.

வேதாந்தவொளி ஒன்றில்லாமல் வேதாந்திகள் கிடையாது. அந்த வேதாந்தவொளி ஈசுவரன்தான். அதே ஒளிதான், ஸ்ரீரமண மஹரிஷி எனப் பெயருள்ள உருவமாக நம்முன் ஒளிர்கிறது. அம்மூர்த்தியை நாமெல்லோரும் மனமார வணங்கி அவரருள் பெற்று இன்புற்று இருப்போமாக.

–o0o–

அப்பனென் றாயதுவோர் அருணாசலம்
எப்போதுமுன்னுருவி லிதுவோர் கருணாசலம்
தப்பாமல்வருவோர்க் கிதுவோர் தனிகாசலம்
அப்போதுமிப்போதும் அன்பர்க்கோர் சரணாசலம்.

**— ரா. நரசிம்மன்**

# ஸ்ரீ ரமண திருத்தொண்டத் தொகை

**நடனானந்தர்**

அருணைவா முறவோர்த மடியார்க்கு மடியேன்
அருள்வடிவா மழகம்மை யடியார்க்கு மடியேன்
கருணைநிரஞ் சனயதிசி காமணிக்கு மடியேன்
கவினேக விம்சதிசொல் கணபதிக்கு மடியேன்
பொருண்மருவு தமிழ்த்துதிகள் புனைமுருகற் கடியேன்
போனகந்தந் துயர்சுப்ர மணிப்புனிதற் கடியேன்
அருணெறியில் வாழ்வேல னடியார்க்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 1

சார்பகல்பா ரத்வாஜி தனக்குமெம்மான் காதை
தண்டமிழிற் சாற்றியநா ராயணற்கு மடியேன்
சோர்வகலும் போதனையோ டாங்கிலத்தி லதனைத்
துலக்கியசீர் நரசிம்மத் தோன்றலுக்கு மடியேன்
நேர்மைமிகு சுந்தரற்கும் நிமலனடி முதலா
நேர்ந்ததிரு வுத்தண்டி நேயர்க்கு மடியேன்
ஆர்வமிகு மன்புடைய வம்ப்ரீசுக் கடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 2

உஞ்சலுள நிலைதருமென் றுத்தமனா ருண்மை
யுரையனைத்துந் தெலுங்காக்கு நரசிம்மற் கடியேன்
துஞ்சுமக வருந்தலெனத் தொழும்பனைத்துஞ் செய்யுஞ்
சுமதிசபா பதியோடணா மலைத்தோன்றற் கடியேன்
நஞ்சொதர ரெனநாய்க்கு நலம்புரியுங் குமர
நாதனோடு சாந்தகுண நரசிங்கற் கடியேன்
அஞ்சறவிர் வதமிதென்ற வச்சுதற்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 3

கண்ணிமைபோ லிறைமெய்காத் திடுபழனிக் கடியேன்
கழல்வாழ்த்தி யுயர்சிவப்ர காசனுக்கு மடியேன்
நண்ணருந்தொண் டதிலேயே நாட்கழிய வீடு
நாடுமையா சாமிகந்த நம்பிகட்கு மடியேன்
பண்ணுபணி முடித்தல்லாற் பசிநோயும் பாராப்
பண்புடைய பெருமாட்கம் பலவாணற் கடியேன்
அண்ணலுக்கா வாடைநெயு மஸ்தானுக் கடியேன்
ஆனாரங்கூ ரானருணா சலரமணற் காளே. 4



பத்தியதிற் சிறந்ததண்ட பாணிதனக் கடியேன்
பண்டிதசுந் தரனொடுக பாலிக்கு மடியேன்
எத்திரமும் பயில்யோக நாதனுக்கு மடியேன்
இரப்பவர்வாழ்த் திடுராம யோகிதனக் கடியேன்
முத்திநெறி தனைமுறையாய் முயல்சேஷற் கடியேன்
முதுமொழிபேண் சேஷகிரி மூதறிஞற் கடியேன்
அத்தனைநீங் காவிசுவ நாதனுக்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 5

அறையருமன் பால்விபக்தி யட்டகங் கொண்டேத்தி
யகமடங்கி வாழ்தெய்வ ராதனுக்கு மடியேன்
சிறைதவிருந்த திருராம கிருஷ்ணனுக்கு மடியேன்
சித்தமயக் ககல்குமரச் செம்மலுக்கு மடியேன்
மறையவன்றா ளன்றியுணா மாதவற்கு மடியேன்
மறந்துமயல் மதியாத மாவகண்டற் கடியேன்
அறிஞுற வமைசோம சுந்தரற்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 6.

பத்தருக்கு மாட்படுகோ பாலனுக்குந் தெய்வப்
பண்பவிர்சுத் தாநந்த பாரதிக்கு மடியேன்
சித்திரத்தொண் டாற்றிடுநா ராயணற்கு மடியேன்
திருராம நாதனுக்கும் ரங்கனுக்கு மடியேன்
சுத்தரினந் தோய்வாசு தேவனுக்கு மடியேன்
தூயசா மாவொடுசுப் பிரமணியற் கடியேன்
அத்தனடி முகில்விடுரா மச்சந்த்ரற் கடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 7.

எல்லையிலாச் செயன்முறையா லிறவாநோய் தமையு
மிறப்பிக்கு மியன்முறைவல் லிலக்குவற்கு மடியேன்
நல்லடியார்க் கெம்முடைய நாதனுதித் திட்ட
நாளிலுடை நல்கியுயர் நரசிம்மற் கடியேன்
வல்லதமிழ் வாய்ந்தசட கோபனுக்கு மம்மான்
வந்ததினம் போற்றிடுமா ராமனுக்கு மடியேன்
அல்லறவி ரரங்கனுக்குங் குப்பனுக்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 8.

தன்னவன்பா லுணர்ந்தவெலாந் தன்சரணா கதியிற்
சாற்றியசற் குணராம சாமிதனக் கடியேன்
என்னவனைத் தன்னுயிரா யெண்ணுமணிக் கடியேன்
எழினடஞ்செய் சத்தியநா ராயணற்கு மடியேன்
தன்னியல்சேர் கார்ஷிணிவை தர்ப்பர்தமக் கடியேன்
சதுரமிர்த நாதனொடு தவசேஷுக் கடியேன்
அன்னையென்றெல் லோர்பணிக்கு மமைவீரற் கடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 9.

மாதரெலாம் பேதையரென் வழுத்தீர்ப்பை மாற்ற
வந்துகல்வி கேள்வியறி வாதிகளில் வலராய்
ஓதுசிந்தை மயக்கமகன் றொளிரருட்சத் திகளாம்
ஒழுக்கமிகு மலங்கார முயர்குணவெச் சம்மை
தீதிலிக் குமிவேணு கண்ணம்மை ஞானம்
திருவேங்க டம்விசா லாட்சிகா மாட்சி
யாதியபெண் ணாயகங்க ளனைவர்க்கு மடியேன்
ஆனாங்கூ ரானருணா சலரமணற் காளே. 10.

புன்புலைபொய்க் குடின்மோகம் போகாப்புல் லேற்குப்
புலனாகா துளமற்றைப் புண்ணியர்க்கு மடியேன்
துன்பொழியு மாறாகத் துணிந்தெம்மான் றன்னைத்
தொடர்பசுநாய் குரங்குகிளி யாதியதோல் போர்த்து
மன்பதைக்கு மரியதிரு வடிமுடியைச் சூடி
வழிவழியாய் வாழ்ந்திடுதொன் மாணடியார்க் கடியேன்
அன்பொடுமா னாங்கூர னடிமைகேட் டுவப்பார்
அணியருணா சலரமணற் கன்பர்களா வாரே. 11.

— oOo —

விதிமதி மூல விவேக(ம்) மிலார்க்கே
விதிமதி வெல்லும் விவாதம் - விதிமதிகட்(கு)
ஓர்முதலாந் தன்னை யுணர்ந்தார் அவை தணந்தார்
சார்வரோ பின்னுமவை சாற்று.

— **ஸ்ரீபகவான்** (உள்ளது நாற்பது)







# ‘ஆண்டவனே’

**மால்மருகன்**

ஸ்ரீ பகவான் விருபாக்ஷி குகையில் இருந்த நாட்களிலேயே அவரைத் தரிசித்து அவரிடம் தம்மை முற்றிலும் இழந்த அடியார் ராமநாத பிரம்மச்சாரி. தமது இளமைப் பருவத்திலேயே பகவானைத் தரிசிக்கும் பேறு பெற்றவர். முதல் சந்திப்பிலேயே பகவான் அருட்பார்வையில் சிக்கியவர். குள்ளமான, ஆனால் எலும்புக்கூடு போன்ற ஒல்லியான உருவம். தடித்த மூக்குக் கண்ணாடி அணிந்திருப்பார். உடல் முழுவதும் குழைத்த விபூதியைத் தரித்திருப்பார். அவர் உருவமும் அவர் கொண்ட கோலமும் அவருக்கே உரிய தனித் தோற்றத்தைத் தந்தன. அதனால் அவரை எவரும் எளிதில் அடையாளம் கண்டு கொள்வர். திருவண்ணாமலையில் உள்ள வேத பாடசாலையில் வேதம் பயின்று வந்தார். வேதபாடசாலையிலேயே உடல் பராமரிப்புக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெற்று அங்கேயே ஓரளவுக்குச் ‘சுகமாக’ இருந்திருக்கலாம். அவ்வாறு பெற்றால் பாடசாலைக் கட்டுப்பாட்டுக்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நடக்க வேண்டும். அவருக்கு பகவானைப் பிரிந்திருக்க மனமில்லை. எனவே அச்சிறு வயதிலேயே வைராக்கியத்துடன் அக்கிரகாரத்தில் பிக்ஷை எடுக்கச் செல்வார். வேதம் பயில்வதற்கு மட்டுமே பாடசாலைக்குச் செல்வார். மற்ற நேரங்களில் பகவான் சன்னிதியிலேயே இருப்பார். ராமநாத பிரம்மச்சாரி பேசும் போது அடிக்கடி ‘ஆண்டவனே’ என்பார். அதனால் அவரை ‘ஆண்டவனே’ என்று குறிப்பிடுவது வழக்கமாயிற்று.

பகவானுடைய விருபாக்ஷி நாட்களில் ராமநாத பிரம்மச்சாரி, தாம் பெற்ற பிக்ஷான்னத்தை விருபாக்ஷிக்கு எடுத்துச் சென்று முதலில் பகவானுக்கு அளிப்பார். எஞ்சிய பிக்ஷான்னத்தைத் தாம் உண்பார். ஒருநாள் வழக்கம் போல் பகவானுக்கு அளிப்பதற்காக, பிக்ஷான்னத்துடன் மலையேறி வந்துகொண்டிருந்தார். குகை நமச்சிவாயர் கோயில் அருகில் தம் தந்தையார் அமர்ந்திருக்க கண்டார். தம் மகனிடம் தந்தை, தாம் மிகுந்த பசியுடன் இருப்பதனால் தனக்கு கொஞ்சம் பிக்ஷான்னம் அளிக்குமாறு கேட்டார். தாம் பெற்ற பிக்ஷான்னத்தை பகவான் உண்பதற்கு முன், தம் தந்தை உள்ளிட்ட வேறு எவருக்கும் அளிப்பது தகாத செயல் என்று எண்ணிய பிரம்மச்சாரி தம் தந்தையிடம், ‘நீங்கள் விருபாக்ஷி வாருங்கள். அங்கே பகவான் உண்டபின் எஞ்சிய உணவை நாம் பகிர்ந்து கொள்ளலாம்’ என்று கூறினார். தந்தையார் விருபாக்ஷி செல்ல மறுத்து அங்கேயே இருந்தார்.

இவை எல்லாவற்றையும் பகவான் விருபாக்ஷியிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்தார். பிரம்மச்சாரி பகவானிடம் சென்றபோது பகவான் அவரிடம் “நீ பெற்று வந்த பிக்ஷான்னத்தை உன் தகப்பனாருக்கு முதலில்

கொடுத்தாலன்றி நான் அதனை ஏற்க மாட்டேன்" என்று கூறி உணவை ஏற்க மறுத்தார்.

வேறு வழியின்றி பிரம்மச்சாரி தந்தையிடம் திரும்பிச் சென்றார். எனினும் பகவான் சொற்படி செய்யாமல், மீண்டும் தம் தந்தையை விருபாக்ஷிக்கு வந்து பகவானுடன் உணவு உட்கொள்ளுமாறு வேண்டினார். தந்தை முன் போலவே விருபாக்ஷிக்கு வர மறுக்கவே பிரம்மச்சாரியும் தந்தைக்கு உணவளிக்காமல் விருபாக்ஷிக்குத் திரும்பினார்.

இம்முறை பகவான் "நீ உன் தந்தைக்கு முதலில் உணவளித்தால்தான் உன் பிக்ஷான்னத்தை ஏற்பேன்; நீ போய் முதலில் உன் தந்தைக்கு உணவளி" என்று மிகவும் உறுதியாகக் கூறினர். இம்முறை பிரம்மச்சாரி பகவான் சொற்படியே குகை நமச்சிவாயத்திற்குச் சென்று தம் தந்தைக்கு முதலில் உணவளித்து விட்டு எஞ்சிய உணவுடன் பகவானிடம் திரும்பினார். ராமநாத பிரம்மச்சாரிக்கு பகவானே அம்மை, அப்பன் ஆண்டவன் மற்றனைத்தும். தம் தந்தை உள்ளிட்ட வேறெவரைப்பற்றியோ, எதனைப்பற்றியோ அவருக்கு அக்கரையில்லை. பகவானிடம் எத்தகைய தீவிர பக்தி கொண்டவர் என்பதை இந்நிகழ்ச்சி நிரூபித்துக்காட்டுகிறது. தூய்மையான அன்புடன் பகவானுக்கு அன்னம் அளித்த அன்பர் பட்டியலில் ராமநாத பிரம்மச்சாரியும் இடம் பெறுகிறார்.

பகவானது விருபாக்ஷி நாட்களில் ஒரு பௌர்ணமி இரவு பகவானும், பக்தர்களும் கிரிவலம் செய்யப் புறப்பட்டார்கள். பூரணநிலவொளி பிரகாசமாக வீசிற்று. எல்லோரும் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து கிரிவலம் செய்யுங்கால் ஒவ்வொருவராகச் சொற்பொழிவாற்றுவதாகத் தீர்மானித்தனர். ஒவ்வொரு சொற்பொழிவாளருக்கும் அரைமணி அவகாசம் கொடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. முதல் சொற்பொழிவை ராமநாத பிரம்மச்சாரி வழங்கினார். அவர் பேச எடுத்துக் கொண்ட தலைப்பு "இதயத்தில் உறையும் பரமன், தில்லையில் நடனமாடும் நடராஜன், விருபாக்ஷியில் வீற்றிருக்கும் வேங்கடன் – இம்மூன்றுக்கும் உள்ள ஒற்றுமைகள்" என்பதாம். பிரம்மச்சாரி தமது சொற் பொழிவைத் தொடங்கினார். மடைதிறந்த வெள்ளம் போல கருத்துக்கள் வெளிவந்தன. அவர் குறிப்பிட்ட ஒற்றுமைகள் மிகப்பல. அவருடைய சொற் பொழிவில் சாஸ்திரங்களினின்றும் நூல்களினின்றும் எடுக்கப்பட்ட மேற்கோள்களும் உவமைகளும் எடுத்துக் காட்டுக்களும் நிறைந்திருந்தன. அவருக்கு அளிக்கப்பட்ட அரைமணி அவகாசமும் தீர்ந்தது. தலைவர் அவர் உரையை முடிக்கு மாறு பணித்தார். பிரம்மச்சாரி மேலும் அரைமணி அவகாசம் அளிக்குமாறு வேண்டவே தலைவரும் அதற்கு இசைந்தார். இரண்டாவது அரை மணி நேரமும் கழிந்தது. ஆனால் பிரம்மச்சாரி மேலும் மேலும் புதிய கருத்துக்களை விளக்கிக் கொண்டி



ருந்தார். முன் போலவே மேலும் அரைமணி அவகாசம் கேட்க, இவ்வாறு அவர் தொடர்ந்து மூன்று மணிநேரத்திற்கு சொற்பொழிவாற்றினார். இனியும் அவரைப் பேச அனுமதிக்க இயலாது என்று தலைவர் கண்டிப்பாகக் கூறவே பிரம்மச்சாரியும் தமது உரையை முடித்துக் கொண்டார். பிரம்மச்சாரி மிகவும் சாதுவானவர்; அதிகமாகப் பேசவும் மாட்டார்; வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடார்; அதுவரை சொற்பொழிவாற்றியதாகத் தகவல் இல்லை. அப்படிப்பட்டவர் மூன்று மணிநேரம் தொடர்ந்து அனுயாசமாகப் பேசி அரியதோர் சொற்பொழிவாற்றியதை ஒரு பேரதிசயம் என்றே கருதவேண்டும். அவருக்குப் பகவானிடத்து இருந்த பக்தியும், அப்பக்தி பெற்றுத்தந்த பகவானது அருளும் இவ்வரிய செயலைச் சாத்தியமாக்கின. இச்சொற்பொழிவில் தாம் குறிப்பிட்ட கருத்துக்களைப் பின்னர் 'திருச்சுழி நாதனைக் கண்டேனே' என்னும் இசைப் பாடலில் வெளியிட்டார்.

மேலும் 'ஸ்தோத்ரானுபூதி' என்னும் அரியதோர் பாமாலையையும் பகவானுக்குச் சூட்டியிருக்கிறார். (இக்கட்டுரையின் இறுதியில் இவ்விரு பாமாலைகளையும் காணலாம்) இந்நூல், பாடல் வடிவிலும் கருத்தாழத்திலும் அருணகிரிநாதர் அருளிய 'கந்தரனுபூதி'யைப் போல் சிறந்து விளங்குகிறது. தமிழ்ப்பாடல் இயற்றுவதில் எவ்வித பயிற்சியும் இல்லாத பிரம்மச்சாரி மிகுந்த சொல்லழகும் நிறைந்த பொருளழகும் கொண்ட பாடல்களைப் பாடியிருப்பதும் ஒரு வியத்தகு செயலே. அவரது இணையற்ற குரு பக்தியும் பகவானது பேரருளும் அவரைப் பாடுவித்தன போலும்!. 1939-ம் ஆண்டு அச்சிடப்பட்ட இந்நூலுக்கு, புத்திமானும் பகவானது 'உள்ளது நாற்பது' நூலை பகவானிடமே பாடம் கேட்டு அதற்குச் சீரியதோர் உரை கண்டவருமான லக்ஷ்மணசர்மா பின்வரும் முன்னுரையை அளித்துள்ளார்.

'திருவண்ணாமலையின் அடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரமண பகவானது அடியார்களில் மிகச் சிறந்தவராவர், இவ்வினிய துதியை இயற்றிய ஸ்ரீ ராமநாத பிரம்மச்சாரி என்பவர். அந்த பகவானது அருளின் அதிசய சக்தியை இத்துதியினால் ஒருவர் அறியலாகும். ஆசிரியர் தமிழில் பாண்டித்யம் இல்லாதவரானாலும் குருநாதனிடம் அவருக்கிருக்கும் பரபக்தியின் விசேஷத்தால் இந்நூல் மிக இனிய ரீதியில் உயரிய கருத்துக்கள் அடங்கியதாய் அமைந்திருக்கிறது. பகவானை ஆத்மநாதனாகப் பெற்ற அடியார்களுக்கு, இம்மாதிரி துதிகளில் அளவிறந்த மகிழ்வு ஏற்படும். ஆகையால் இது அச்சிடப்பட்டு வெளியாவதும் நன்றே'.

ஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்த போது 'தக்ளி'யில் எப்போதும் நூல் நூற்றுக் கொண்டே இருப்பார். அவ்வாறு நூற்ற நூலை தேசூர் மஸ்தான் ஸ்வாமி தம் நெசவுத் தறியில் நெய்து கௌபீனமாகவும் சிறு துண்டுகளாகவும் தயாரித்து பகவானுக்குக் காணிக்கையாகக் கொடுப்பார். தற்போதைய ரமணாஸ்ரமத்தின்

ஆரம்ப காலத்திலும் பிரம்மச்சாரி தமது நூற்பு யக்ஞத்தை விடாமல் செய்தார். அதனால் அவரது கண்பார்வை கெட்டது. எனினும் தன் நோன்பைக் கைவிடவில்லை.

திருவண்ணாமலையில் 'ப்ளேக்' கொள்ளை நோய் பரவி இருந்த சமயம் பகவானுடன் பிரம்மச்சாரி, பெருமாள்சாமி, ரங்கசாமி ஆகிய சிலரே ஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்தனர். பிரம்மச்சாரி ப்ளேக் நோயால் பீடிக்கப்பட்டார். பகவான் ஸ்கந்தாஸ்ரமத்திலேயே இருந்தால் ப்ளேக் நோய் அவரையும் தொற்றிக் கொள்ளலாம் என்று அஞ்சிய பெருமாள் சாமி முதலியோர் தமக்குள்ளே ஒரு ஏற்பாடு செய்தனர். அதன்படி பிரம்மச்சாரியை ஸ்கந்தாஸ்ரமத்தில் விட்டு விட்டு பகவானுடன் கிரிவலம் சென்றார்கள். வழியில் பச்சையம்மன் கோவிலில் தங்கி இளைப்பாறி னார்கள். அப்போது பெருமாள்சாமியும் ரங்கசாமியும் பகவானிடம், "பகவானே! நாமெல்லோரும் இங்கேயே தங்கி இருக்கலாம். வேண்டிய சாமான்களையும் எடுத்து வந்திருக்கிறோம். ராமனாதனுக்கு இங்கிருந்து உணவு எடுத்துக் கொண்டு போய்க் கொடுக்கலாம்" என்று தம் ஏற்பாட்டைத் தெரிவித்தனர். இதைச் செவியுற்ற கருணைக் கடலான பகவான் தம் அடியார்களின் சிறுமைக்கு இறங்கி "ஆஹா! அருமையான யோசனை! சிறு பையனாக இருக்குபோதே நம்மை அண்டியவன். முழுமை யாக நம்மையே நம்பியிருப்பவன். இந்நிலையில் அவனைத் தனியே விட்டு நாம் இங்கிருப்பது நியாயமா? உங்களுக்கு பயமாக இருந்தால் நீங்கள் எல்லோரும் இங்கேயே இருங்கள். அவனுக்கு ஆகாரம் கொண்டு வரும்போது எனக்கும் கொண்டு வந்தால் போதும்" என்றார். இதைக் கேட்ட அன்பர்கள் வாய் திறக்க வழியில்லாமல் ஸ்கந்தாஸ்ரமம் திரும்பினர். பிரம்மச்சாரியும் பகவான் கவனிப்பில் விரைவில் பூரண குணமடைந்தார்.

பகவானின் தாயாருக்கு ராமனாத பிரம்மச்சாரியிடம் அதிகப் பிரியம். அவர் அந்தணச் சிறுவனாக இருந்தமையால், சமையல் பாத்திரங்களைக் கழுவும் வேலையை அவரையே செய்யச் சொல்வது வழக்கம். ஒவ்வொரு நாளும் கல்-சட்டியைத் துலக்கும் வேலையை அவரே செய்வார். வேலை செய்வதில் சற்றே நிதானமோ, செய்வதைத் திருத்தமாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வமோ, கச்சிட்டியைச் சுத்தம் செய்வதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்வார். தாயார் 'ராமனாதா! கச்சிட்டியைக் கொண்டா' என்று கூற, அவர் 'இதோ கொண்டுவரேன்' என்று பவ்யமாக விடையிருப்பார். தாயார் பலமுறை இவ்வாறு கூற, ராமநாதனும் இதே பதிலை விடாது சொல்வார். இது தினமும் நிகழும் நிகழ்ச்சி. இதைச் செவியுற்ற பகவான் ஒரு நாள், 'அம்மாவும் கச்சிட்டிப் பல்லவி பாடுவதை நிறுத்த மாட்டாள். இவனும் அனுபல்லவி பாடுவதை விடமாட்டான் போல் இருக்கிறது' என்று ஹாஸ் யமாகக் குறிப்பிட்டார்.



பகவான் தற்போதைய ரமணாச்ரமத்திற்கு வந்தபின்பும் பிரம்மச்சாரி தம் அன்பர் பணியை விடாமல் தொடர்ந்து செய்துவந்தார். சிறிய உடம்பின ரான தம்மிடமுள்ள அயரா ஆற்றலைக் கண்டு அனைவரும் அதிசயிக்கும் வண்ணம் தொண்டு செய்வார். தாமாகவே இருப்பிடத்தைச் சுத்தம் செய்வார். ஆச்ரமத்தினருக்கு வேண்டிய சிறு வேலைகளையும் செய்வார். தாமாகவே மேற்கொண்ட பணி, இரவில் 8.30 மணி இரயிலில் ஆச்ரமம் வரும் பக்தர் களுக்கு உணவளிப்பதே. தாமும் மற்றவர்களும் இரவு உணவு உட்கொண்ட பின்னர் இரவு இரயிலில் வரும் பக்தர்களுக்காக உணவைச் சூடாக வைத்திருப்பார். வரும் பக்தர்களுக்கு அன்புடன் உணவளித்து, உறங்குவதற்கு ஓலைப் பாயும் கட்டைத்தலையணையும் கொடுப்பார். யாராவது நடுத்தூக்கத்தில் எழுப்பி வெந்நீர் கேட்டால் முணுமுணுக்காமல் உடனே அதனைக் கொணர்ந்து கொடுப்பார். அன்பர் பணி செய்வதில் அவருக்கு இருந்த ஆர்வத்தை அதனைக் கண்டாரே அறிவர்.

இராமநாத பிரம்மச்சாரி ஒரு தீவிர காந்தியவாதியும் கூட. சர்க்காவில் நூல் நூற்கும் பழக்கத்தையும் மேற்கொண்டார். ஒருமுறை தாம் நூற்ற நூலிலிருந்து தயாரிக்கப்பட்ட கதர் வேட்டி ஒன்றை மகாத்மா காந்தியிடம் அளித்தார். வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்கேற்கச் சென்றபோது அவரிடம் பகவான் 'உன்னைப் பார்த்து போலீஸ் காரன் பயந்து ஓடி விடுவான், உன்னிடம் வரமாட்டான்' என்று சிரித்துக் கொண்டே கூறினர். பகவான் சொன்னவாறே எந்த போலீஸ்காரரும் இவரை நெருங்கவில்லை. பிரம்மச்சாரியும் அப்போது காய்ச்சி எடுத்த உப்பைக் கொண்டு வந்து பகவானிடம் கொடுத்தார்.

பிற்காலத்தில் பலாக்கொத்தில் ஒரு குடில் அமைத்துக் கொண்டு அதில் தங்கியிருந்தார். காலைவேளைகளில் டவுனில் உள்ள நீலகண்ட ஐயர் வீட்டிற்குச் சென்று அவர் வீட்டுப் பூஜையிலுள்ள படங்களுக்கும் மூர்த்தி களுக்கும் பூஜை செய்வார். அங்கேயே தம்முடைய பகல் போஜனத்தை முடித்துக் கொண்டு, இரவுக்கு வேண்டிய உணவை ஒரு பாத்திரத்தில் எடுத்து வருவார். பலாக்கொத்தில் வசிக்கும் சாதகர்களுக்குத் தேவையான காய்கறிகள், மற்றும் வேறுசில பொருள்களையும் டவுனிலிருந்து வாங்கி வருவார். ஒரு கையில் சாப்பாட்டுத் தூக்கு, மற்றொரு கையில் ஒரு கிழிந்த குடை, காய்கறிகளையும் ஏனைய பொருள்களையும் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு மடிப்புக்குள் போட்டு எடுத்து வருவார். மிகவும் தடித்த, பல இடங்களில் தைக்கப்பெற்ற, பழைய செருப்பை அணிந்து வருவார். இவ்வளவும் போதாதென்று சில சமயம் டவுனில் அன்பர் ஒருவர் பகவானுக்குக் கொடுக்கும் காப்பியை தெர்மாஸ் பிளாஸ்க்கில் கொண்டு வருவார். அவருடைய உருவமும், அவருடைய கோலமும் அவர் சுமந்து வரும் பொருள்களும் ஒருங்கே சேர்ந்து அவரைப் பார்ப்பதற்கு விநோதமான காட்சிப் பொருளாக்கும். எனினும் எவர் கேலியையும் பொருட்படுத்தார். யாராவது

அவர் நடையையும் உடையையும் பார்த்துக் கேலியாகப் பேசினால் சிரித்துக் கொண்டே 'ஆண்டவனே' என்பார். கோபம் என்பதையே அறியார்.

பலாக்கொத்தில் வாழ்ந்த சாதுக்களின் குடில்களைத் தாமே முன் வந்து பெருக்கி சுத்தமாக வைப்பார். எல்லாருடைய அறைகளிலுள்ள விளக்கு களைத் துடைத்து ஊருக்குள் அன்பர் ஒருவர் கொடுக்கும் மண் ணெண்ணையை விளக்குகளில் விட்டு வைப்பார். பலாக்கொத்து வாசிகள் பகவான் சந்நிதியிலிருந்துவிட்டு இரவு 7.30 மணிக்கு பலாக்கொத்து செல்லும் போது அவர்களுக்கு உதவியாக கையில் 'அரிக்கன்' விளக்குடன் முன் சென்று வழிகாட்டுவார். இதுபோன்ற காரியங்களைச் சிறிதும் வித்தியாச மில்லாமல் செய்வார். அவருடைய தன்னலமற்ற தூய்மையான அன்பைக் கண்ட பலாக்கொத்து வாசிகள் அவரைப் 'பலாக் கொத்து சர்வாதிகாரி' என்று அழைத்தனர். ஒருமுறை பகவான் சந்நிதியில் எல்லோரும் அமர்ந் திருந்த சமயம் பகவான் பக்தரான ஏகநாதராவ் சென்னையிலிருந்து ஆச்ர மத்திற்கு எழுதியிருந்த கடிதத்தில் 'பலாக்கொத்து சர்வாதிகாரி'யின் நலத்தைக் குறித்தும் விசாரித்திருந்தார். அதைப் படித்த பகவான் குஞ்சு ஸ்வாமியைப் பார்த்து 'என்ன ஓய்! இந்த பலாக்கொத்து சர்வாதிகாரி யார்? இதுவரை எனக்குத் தெரியாதே! எனச் சிரித்துக் கொண்டே கேட்ட தும் குஞ்சு ஸ்வாமி எழுந்து அங்கு அமர்ந்திருந்த பிரம்மச்சாரியைக் காட்டி 'இவரைத்தான் பலாக்கொத்து சர்வாதிகாரி என அழைக்கிறோம் பகவானே! எங்களுக்கெல்லாம் சாமான் வாங்கி வருவது, விளக்கைத் துடைத்து எண்ணெய் விடுவது, எங்கள் அறைகளைப் பெருக்கி சுத்தம் செய்வது போன்ற பல காரியங்களைச் செய்து தருகிறார்' என்றார். உடனே பகவான் பிரம்மச்சாரியைப் பார்த்து 'சர்வாதிகாரி என்றால் இப்படித்தானிருக்க வேண்டும். இப்படி ஒரு சர்வாதிகாரி கிடைத்தால் எல்லோருக்கும் சௌகரி யமாக இருக்கும்' எனச் சந்தோஷமாகச் சொன்னார். அதற்கு பிரம்மச்சாரி சங்கோசத்துடன் எழுந்து 'இல்லை பகவானே! இவர்களெல்லாம் வேடிக்கை யாக அப்படி என்னைக் கூப்பிடுகிறார்கள்; எனக்கொன்றும் தெரியாது' என்று சொன்னார். பகவான் சிரித்துக் கொண்டே 'அதனாலென்ன? நல்லது தானே' என்றார்.

ஒருநாள் பிரம்மச்சாரி பகவானிடம் தம் அனுபவத்தைச் சொல்லி 'இதுதான் ஸ்புரணமா?' என்று கேட்டதற்கு பகவானும் 'ஆமாம்' என்று பதி லளித்தார். மீண்டும் மீண்டும் 'நிஜமாகவா?' என்று பகவானைக் கேட்ட போது பகவான் 'ஆமாம்யா, ஆமாம்' என்று சொல்லிய வண்ணம் அவர் தலையில் குட்டினார். பகவானிடம் குட்டுப் பட்டதில் பிரம்மச்சாரிக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. ஆனந்தப் பரவசராக வெளியே ஓடி வந்து எதிர்ப்பட்டவர்களிடமெல்லாம் தமது உச்சந்தலையைச் சுட்டிக் காட்டி 'இங்கேதான் குட்டினார்; பகவான் இங்கேதான் குட்டினார்' என்று சொல்லிச் சொல்லி சந்தோஷப்பட்டார்.



ஒருமுறை ராஜகோபாலய்யர் சென்னை சென்ற போது நோயுற்றிருந்த பிரம்மச்சாரியையும் தகுந்த சிகிச்சைக்காகத் தம்முடன் அழைத்துச் சென்றார். அய்யரின் சகோதரர் பெரிய சமஸ்கிருதப் பண்டிதர்; கல்லூரியில் பேராசிரி யராகப் பணிபுரிந்து வந்தார். ஒருநாள் அவர் ஆத்மீக விஷயம் குறித்துப் பேச ஆரம்பித்தார். பல நூல்களினின்றும் மேற்கோள்களை அள்ளி வீசினார். ராம நாத பிரம்மச்சாரி எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பண்டிதர் பேசியதில் சில விஷயங்கள் பகவான் கருத்துக்கு மாறாக இருந்தன. பண்டிதர் பேச்சில் சிறிது இடைவெளி ஏற்பட்ட சமயத்தில் பிரம்மச்சாரி அவரிடம் 'இதெல்லாம் எதற்கு? சத்தங்கொள் எந்திரத்தின் சால்புற்றார் சோணகிரி வித்தகனே வேறார் விளம்பு?' என்று கூறிவிட்டு எழுந்து போய் விட்டார். பிரசங்க மழையும் நின்று விட்டது. ராஜகோபாலய்யர் இந் நிகழ்ச்சியைப் பற்றி அடிக்கடி சொல்லி சந்தோஷப்படுவார்.

பசு லக்ஷ்மி ஆறுமாதக் கன்றாக இருந்தபோது தன் தாயுடன் பகவானிடம் வந்தது. கன்றையும் தாய்ப்பசுவையும் கொடுத்த அருணாசலம் பிள்ளையிடம் பகவான் 'இவைகளைப் பார்த்துக் கொள்வதற்கு இங்கே யாரி ருக்கிறார்கள்? நீயே எங்களுக்காக இவற்றை உன்னிடத்திலேயே வைத்துக் கொள்' என்று கூறி அவற்றை ஏற்க மறுத்தார். அச்சமயம் அங்கிருந்த பிரம்மச்சாரி எவ்விதத் தயக்கமுமின்றி 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று முன் வந்ததால்தான் கன்றும் தாயும் ஆஸ்ரமத்திலேயே தங்கின. பிரம்மச் சாரியும் சுமார் மூன்று மாதங்கள் அவற்றைக் கவனித்துக் கொண்டார். பசு லக்ஷ்மி பகவானுடைய திருவடிக்கு ஆளானதில் பிரம்மச்சாரிக்கு மிக முக்கியமான பங்கு உண்டு.

ராமநாத பிரம்மச்சாரி 1946-ல் டிசம்பர் மாதத்தில் நோய்வாய்ப் பட்டார். சிகிச்சைக்காக சென்னை சென்றவர் பதினைந்துநாட்கள் கழிந்த பின்னர் 19.12.1946-ல் தம்மை ஆண்ட ரமணருடன் இரண்டறக் கலந்தார். அன்பெனும் கயிற்றால் அருள் மலையான ரமண பகவானைக் கட்டியவர் இவர். இதனைப் பகவான் 'நான் ராமநாத பிரம்மச்சாரி, முதலியார் பாட்டி ஆகிய இருவரைக் கண்டே அஞ்சுகிறேன்' என்று கூறி குறிப்பாகப் புலப் படுத்தினாராம். இவர்களது அன்புப் பிடியில் சிக்கிய பகவான், இவர்கள் எது வேண்டினாலும் அதனைக் கொடாமல் இருக்க இயலார். எனவேதான் பக்தபராதீனரான தாம் அவர்களைக் கண்டு அஞ்சுவதாகக் கூறினார் போலும். அடக்கமே உருவான ராமநாத பிரம்மச்சாரி பகவானது மெய்யடி யார் ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

**'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே'.**

-o0o-

# ஸ்ரீ ரமண ஸ்தோத்ராநுபூதி

எந்தை யெழில்ரமண னெம்பெருமான் றோத்திரமா
மிந்தவநு பூதி யிசைத்திடவே - சிந்தைசெய்வார்
முந்தை வினைமுழுதும் மோசித் தருள்செய்யுந்
தந்திமுகன் றாளே சரண்.

1. கந்தன் முருகன் கருணை ரமணன்
வந்தென் னிதயம் மருவப் பெறலும்
பந்தந் தருதீ வினைபாழ் படவே
யெந்தம் மநுபூ தியெழுந் ததுவே.

2. பெம்மான் ரமணப் பெரியோ னருளென்
கைம்மா றறியாக் கடையேன் மனதைச்
சும்மா திறுவச் சுகமெய் தியவா
றம்மா வடியே னறையத் தகுமோ.

3. பொல்லா வினையேன் புகலொன் றறியேன்
கல்லா தவெறுங் கசடன் றனையுஞ்
சொல்லா' வரமோ னகுகோ ததிவா
யெல்லா மறவென் னையிருத் தினனே.

4. ஊனா யுயிரா யுளதா யிலதாய்
வானாய்க் கனலாய்ப் புனல்மா ருதமாய்க்
கோனாய்க் குருவாய்க் குகனா யொளிருந்
தானாய்த் தனிநின் றருள்வே தியனே.

5. தாரா தருள்தந் ததனிப் பெரியோன்
ஓரா றுமுகன் னுமையாள் புதல்வன்
ஆரா வமுதன் னருள்வே தியனென்
றீராப் பிறவிப் பிணிதீர்த் தனனே.

6. அருளே யுருவா யமரும் ரமணன்
பொருளே யெனவைம் பொறிவா யலையும்
மருளே யுருவாம் மனநோய் கெடவே
யிருளே துமிலாப் பதமீந் தனனே.



7. அரவிந் தமதா கியதா ளிணையைப்
பெறவென் றுபெருந் தவமெய் துவனோ
மறவா துணைவாழ்த் தவரந் தருவாய்
சுரசுந் தரர்தந் தருள்சோ தியனே.

8. சிந்தா டவிசென் றுதியங் குமெனை
மந்தா கினிமைந் தமனோ கரனே
இந்தா விருதாள் வனஜம் மெனவே
வெந்தா பமகற் றிணைவே தியனே.

9. தவரா ஜசிகா மணிவே தியனென்
பவநோய் கெடவே பதம்வைத் தபிரான்
நவநா தமுனீந் திரர்நா யகனாம்
சிவயோ கபுரந் தரதே சிகனே.

10. ஆடும் மயில்வா கனவென் றடியேன்
பாடும் பணியே பரிசா யருள்வாய்
ஓடும் மனமா னதுவோய்ந் திடவே
சாடுஞ் சதுர்மா மறைவே தியனே.

11. அரவிந் தமதா கியதா ளிணையென்
னரவிந் தவுளத் திலகும் புமதோ
வரவேங் கடமா தவனா யொளிரும்
புரணோ தயமா கியபுண் ணியனே.

12. தானா கியதத் துவஞா னமயன்
கோனா கியவே தியஜோ தியவன்
ஊனா கியெனுள் ளொளிரும் ரமணன்
சேனா பதியா கியஷண் முகனே.

13. ஐயன் ரமணன் னருள்தந் ததனால்
பொய்யாம் வினைபோ னவகை யறியேன்
உய்யும் வழியென் னுளமுற் றதனால்
மெய்யன் பெனைவந் துவிழுங் கியதே.

14. அழலே யுருவா யமர்சோ ணையிலே
தழலே யுருவாய்த் தனிநின் றபிரான்
பிழையே புரியும் பிறவிக் கடலைக்
கழலே புணையாக் கரையேற் றினனே.

15. குருவா யொளிருங் குணபூ தரனே
விருவா தனையா மிடர்தீர்த் தருள்வாய்
அரவிந் தபதாம் புயவா ரியனே
சுரசுந் தரர்தந் தருள்சோ தியனே.

16. அருணா புரிவா முருள்வே தியனாங்
கருணா முகிலோன் கவலை களைவோன்
மரணா தியமயக் கமறுத் தருளும்
தருணா குணஞா னதயா பரனே

17. காயா புரிவாழ் வெனுமிவ் வலையிற்
மாயா தெனைமாற் றியருள் புரிவாய்
நேயா நிருதர் குலகா லனெனுஞ்
சேயா சிவஷண் முகதே சிகனே.

18. மாயாப் பிறவிக் கடல்மூழ் கிநிதம்
ஓயா துழலத் தகுமோ தகுமோ
நாயே னெனையாய்ந் துசுகம் பெறவே
நேயா வருள்வாய் நிறைநீ தியனே.

19. மோகா டவியிற் றிரிகின் றவெனை
ஏகா மலிருத் தியவித் தகனே
சோகா குலநா சகசோ தரனே
யோகா துரர்காண் குறுமுள் ளொளியே.

20. குருநா தனுநிர்க் குணமா மிதயத்
துருநா தனுமுள் ளொளிரான் மசுகந்
தருநா தனுமித் தமியே னுயிருக்
கொருநா தனுமென் னுடையாண் டவனே.

21. பேசாப் பெருமோ னசுகோ ததியில்
ஆசா மனமாய்ந் துதிளைக் குமதோ
நேசா நிருதர் குலநா சகனா
மீசா விமையோர்க் கருள்வள் ளியனே.

22. யானா ரெனவென் னையறிந் துநிதந்
தானா யிலகுந் தவமெய் துவனோ
வானா யொளிருந் வரவேங் கடமெய்ஞ்
ஞானா ரியநா யகமா மணியே.



23. நெஞ்சங் கனல்சேர் மெழுகாய் நெகவின்
றஞ்சந் தருதா ளிணைதந் தருள்வாய்
செஞ்சொற் புனைமா லைசிறந் தொளிரும்
அஞ்சக் கரர்தந் தருளா ரியனே.

24. சிந்தா மணியா கியசின் மயனே
மந்தா கினிமைந் தமகா சயனே
கந்தா கருணா லயதே சிகனே
எந்தா பமகற் றியருள் குகனே.

25. சரணா கதியா யடையுந் தமியேன்
மரணா திமயக் கமறுத் தருள்வாய்
கருணா நிதியா கியவேங் கடமா
வருணா சலமா யமர்ஜோ தியனே.

26. ஐயன் னருணா சலவே திவிழி
மெய்யன் பறுவெற் றுயிரா மெனைநன்
குய்யும் படியென் னுளமூ டுருவிச்
செய்யுஞ் செயலாற் சிவமாக் கியதே.

27. அரியா லயனா லறியா தொளிர்செங்
கிரியா யமருங் கிளர்வேங் கடவன்
பரிவா லிதுகாற் பரமோ னமெனும்
பிரியா வநுபூ திபிறந் ததுவே.

28. பெருமை பெறுநின் புகழ்பா டவெனக்
கருமைத் திருவாக் கறிவோ டருள்வா
இருமை யொடுமும் மையிகல் கடியும்
ஒருமெய் யுணர்வா லொளிர்வேங் கடனே.

29. உருவும் மருவும் முறலா யொளிருங்
குருவுங் குகனுங் குணபூ தரனும்
மருவும் மனமற் றமகா சயமாய்
வெருவும் படிநீள் வெளிவேங் கடனே.

30. கருணை முகிலா யமுதம் பொழி
லருணை ரமணன் னழியாப் புகழோன்
கருமோ கமெனுங் கலகம் மறமெய்
யுருமோ னமெனும் மொளிதந் தனனே.

## திருச்சுழி நாதனைக் கண்டேனே

**பல்லவி.**

திருச்சுழி நாதனைக் கண்டேனே
திரும்பி வராமலே நின்றேனே.

**அநுபல்லவி.**

தில்லையி லேநடம் புரிபவனாம்
தீனர்க ளைரக்ஷித் தருள்பவனாம்.

**சரணங்கள்.**

1. திருவண்ணா மலையென்னும் க்ஷேத்திரத்தில்
திருவரு ளாய்நின்ற மலையின்மீதில்
விருபாக்ஷ மென்னுங் குகைதனிலே
வேண்டிக் கண்டன னாண்டவனை (திருச்சுழி)

2. காயா புரியென்னும் பட்டணத்தில்
கரணங்க ளாகின்ற பிரஜைகளுடன்
அகங்கார மந்திரி யோடுஞ்சீவன்
அநியாய ராச்சிய மாண்டானே

3. இப்படி யிருக்குநாள் தன்னிற்சீவன்
ஈச னருளென்னும் வாளேந்தி
அகங்கார மாகுமம் மந்திரியை
அடியோடு மில்லாமல் அறுத்தெரிந்தான் (திருச்சுழி)

4. தறித்தெறிந்து சீவன் றானாகி
தகராலய மென்னுங் குகைதனிலே
தாண்டவ மாடுமவ் வாண்டவனைத்
தான்கூடி யொன்றாகி நின்றானே (திருச்சுழி)

ஓ நரபதியே! முக்கியமாக பரமாசாரியர் மீதும் இஷ்ட தேவதையின் மீதும் ச்ரவணார்த்தங்களின் மீதும் சிரத்தை பூரணமாய் யிருக்க வேண்டும். பரமாசாரியர் மீதிருக்கும் சிரத்தையானது பிரம்ம ஞானத்தைக் கொடுக்கும். இஷ்ட தேவதை மீதிருக்கும் சிரத்தை பாப விமோசனம் ஆக்கும். சிரவணார்த்த சிரத்தை சகல சந்தேகங்களையும் மாற்றும். சிரத்தை இல்லாதவனுக்கு ஞானம் லபிக்க மாட்டாது. எப்போது ஆசாரியருடைய பரிபூரண கிருபை பெறுவானோ அப்போதே ஞானப்பிரகாசம் உதயமாகும்.

— **ஸ்ரீ மஹா பக்த விஜயம்**



# முள்ளிச்செடிக்கு முக்தி அளித்த மஹாபுருஷர்

**வேங்கடன்**

பசு லட்சுமி முக்தி அடைந்ததைத் தெரிவிக்கும் பகவானது பாடலைப் பற்றிக் கேள்வியுற்ற அன்பர் ஒருவர், பகவானிடம் 'ஸ்வாமி! தங்கள் சந்நிதியில் மிருகங்களும் பறவைகளும் முக்தியடைவதை நாங்களே காண்கிறோம். ஆனால் மனிதர்கள் மட்டுமே முக்தியடையக் கூடும் என்பது உண்மையல்லவா?' என்று வினவினார். அதற்கு பகவான் 'ஏன்? ஒரு மஹாபுருஷர் முள்ளிச் செடிக்கும் முக்தி கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளதே!' என்று சொல்லி அது பற்றிய வரலாற்றைக் கூறத்தொடங்கினார். (இவ்வரலாறு வேறு வேறு இடங்களில் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்படினும், உமாபதிசிவாச்சாரியார், அம்பலவாணனிடம் திருமுக ஓலை பெற்று வந்த பெற்றான் சாம்பான் என்ற புலையனுக்கும் முள்ளிச் செடிக்கும் முக்தி கொடுத்தார் என்பதில் ஒருமித்த கருத்து நிலவுகிறது.)

நால்வர் பெருமக்களான ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகியோர் சைவசமய குரவர்களாகப் போற்றப்படுகிறார்கள். இவர்கள் தோத்திர நூல்களாகிய தேவாரம், திருவாசகம் அருளிச் செய்தவர்கள். இவர்களுக்குப் பின்வந்த மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும் சந்தான குரவர்களாகப் போற்றப் படுகிறார்கள். குரு சிஷ்ய பரம்பரையில் வந்த இவர்கள் சைவ சித்தாந்த சாத்திர நூல்களை அருளிச் செய்தவர்கள்.

சந்தான குரவர்களுள், உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத்தில் தில்லை வாழ் அந்தணர் மரபில் தோன்றியவர். அம்பலவாணனை முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் பேறு பெற்றவர்; ஆகமங்களைக் கரை கண்டவர்; வடமொழியிலும் தமிழிலும் வல்லுநர். அக்காலத்திய சோழ மன்னன் இவரது அருமையும் பெருமையும் கருதி இவருக்கு முத்துச் சிவிகை, மேளவாத்தியம், பகல்தீவட்டி முதலிய விருதுகளை அளித்திருந்தான். நாள் தோறும் நடராஜப் பெருமானைப் பூஜித்து வருகிறவர், வைகாசித் திங்களில் ஒருநாள் நண்பகலில் சிவிகையூர்ந்து வந்தார். அப்போது அருள்நலம் முதிர்ந்த மறைஞான சம்பந்தர் தமது மாணாக்கர்களுக்குத் திண்ணையில் பாடம் கற்பித்து வந்தனர். அவர் மாணாக்கர்களுள் ஒருவர், உமாபதி சிவாச்சாரியாரின் வருகையை அறிவிக்க, அதற்கு மறைஞான சம்பந்தர் 'பட்ட கட்டையில் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்' எனக் கூறினார். பக்குவ முதிர்ச்சியின் காரணமாக இவ்வார்த்தைகளைச் செவியுற்ற மாத்திரத்திலேயே உமாபதிக்கு ஞானோபதேசமாயிற்று. உடனே சிவிகையை விட்டு இறங்கி

மறைஞான சம்பந்தரை வணங்கித் தம்மை ஆட்கொள்ளுமாறு விண்ணப்பித்தார். அவரது பக்குவ நிலையை உணர்ந்து உமாபதிக்கு அருளுபதேசம் செய்து தம் சீடராகவும் ஏற்றுக் கொண்டார்.

தம் சீடரின் குருபக்தியை உலகோர்க்கு உணர்த்தத் திருவுளங்கொண்ட மறைஞான சம்பந்தர், ஒருநாள் நெசவுத்தொழில் செய்யும் செங்குந்தர் வாழும் வீதியை அடைந்தார். உமாபதியாரும் தம் குருநாதரை நிழல் போலப் பின் தொடர்ந்தார். ஆங்கே ஓரிடத்தில் நெசவு நூலில் ஏற்றுவதற்காகக் கலயத்தில் கஞ்சி வைக்கப் பட்டிருந்தது. மறைஞான சம்பந்தர் அந்தக் கஞ்சியை எடுத்துக் குடித்தார். அவரது முழங்கை வழியாக ஒழுகிய கஞ்சியை, குருவின் உச்சிஷ்டப் பிரசாதமாகக் கருதி உமாபதி உட்கொண்டார். மறைஞான சம்பந்தர், குலத்தால் வேளாளர். எனவே அந்தணரான உமாபதியாரின் இச்செய்கையை அறிந்த தில்லைவாழ் அந்தணர்கள் அவர் குலாசாரத்தை விட்டு விட்டார் என்று கருதி அவரைத் தம் கூட்டத்திலிருந்து விலக்கி வைத்தனர். குருவருளால் சிவானுபூதி கைவரப்பெற்ற உமாபதியார் இக்காரணத்தால், தில்லைக்கு வெளியே கொற்றவன்குடி என்னுமிடத்தில் திருமடம் அமைத்துத் தம்மை அண்டிய பக்குவர்களுக்கு ஞானோபதேசம் செய்து வாழ்ந்து வந்தார்.

அக்காலத்தில் தில்லையில் பெற்றான் சாம்பான் என்பவன் வாழ்ந்து வந்தான். பிறப்பால் புலையனாயினும் சிவ பெருமானிடத்து பேரன்பு பூண்டவன் அவன் சித்தம், எப்போதும் சிவ சிந்தனையிலேயே திளைத்திருந்தது. அவனது சிவ பக்தியை உலகுக்கு உணர்த்த எண்ணிய இறைவன் ஒருநாள் அவன் முன் மான், மழு தரித்த கோலத்தில் தோன்றினார். தேவரும் மூவரும் காணாச் சிவபெருமானை கண்ட சாம்பான் ஆனந்த பரவசனானான். அவனிடம் 'உனக்கு யாது வேண்டும்?' என்று கேட்க அதற்குச் சாம்பான் 'எம்பெருமானே! எனக்கு முக்தி ஒன்றே வேண்டும்; வேறு எதுவும் வேண்டாம்' என்று விண்ணப்பித்தான். புலையனின் வைராக்கியத்தையும் பக்குவத்தையும் என்னென்று சொல்வது! அன்பன் வேண்டுகோளைக் கேட்ட அண்ணல், திருவாசகம் எழுதிய தமது திருக்கரத்தால் ஓர் ஓலையில் பின்வரும் பாடலை எழுதிச் சாம்பானிடம் கொடுத்தார்.

**அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதியகைச் சீட்டு-படியின்மிசைப்**
**பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முக்தி கொடுக்க முறை**

'இவ்வோலையை நீ கொற்றவன் குடியில் வாழும் உமாபதி சிவாச்சாரியாரிடம் கொடுப்பாயாக' என்று கூறி மறைந்தார்.



பெற்றான் சாம்பான் சிவபெருமான் எழுதிக் கொடுத்த ஓலையை உமாபதியாரிடம் நேரில் கொடுக்கத் தயங்கினான். ஆகையால் தினந்தோறும் ஒரு விறகுக் கட்டினை அவர் திருமடத்தில் யாரும் அறியாதவண்ணம் வைத்து சேவை செய்து வந்தான். விறகை யார் கொண்டு வந்து வைப்பது என்பதை அறியாமலேயே மடத்தில் அதை உபயோகித்து வந்தனர். சாம்பானிடம் கொடுத்த ஓலை பயன்படாமல் போவதை அறிந்த எம்பெருமான், ஒருநாள் அடைமழை பொழியச் செய்தார். அதனால் அன்று சாம்பானால் மடத்திற்கு விறகு கொடுக்க இயலாமற் போயிற்று. நாள்தோறும் வரும் விறகுக்கட்டு இல்லாமல் போகவே அன்று அமுது செய்யப்படவில்லை. காரணத்தை விசாரித்து அறிந்த உமாபதியார் அடுத்தநாள் விறகுக்கட்டு கொண்டுவருவது யாரென்பதை கவனித்து அறியுமாறு கூறினார். சீடர்களும் அடுத்தநாள் விறகுக்கட்டினைக் கொண்டு வந்த சாம்பானைக் கண்டு, அவனை சிவாச்சாரியாரிடம் அழைத்துச் சென்றனர். எதிர்நோக்கியிருந்த வாய்ப்பினைப் பெற்ற சாம்பான், அவரிடம் சிவபெருமான் எழுதிக் கொடுத்த ஓலையைக் காட்டினான். ஓலையைப் படிக்க ஆரம்பித்த அளவிலேயே உமாபதியார் புளகாங்கிதம் அடைந்து ஆனந்தபரவசரானார். உடனே சிவபெருமான் பணித்த வண்ணம் சாம்பானுக்கு முறைப்படி தீக்ஷை அளித்து காலக்கிரமத்தில் நயன தீக்ஷையும் அருளினார். உடனே சாம்பான் பரவொளியாகி பராகாசத்தில் கலந்து மறைந்தான். இதனைக் கண்ட உமாபதியாரும் சீடர்களும் சாம்பானின் பக்குவ முதிர்ச்சியை எண்ணி அதிசயித்தனர்.

சாம்பான் வீடு திரும்பாமையால் அவன் உறவினர்கள் மடத்திற்கு வந்து விசாரித்தனர். உமாபதியார் கூறியதை நம்ப மறுத்து, அவர் ஏதோ தந்திரம் செய்து சாம்பானைக் கொன்று விட்டார் என்று மன்னனிடம் புகார் செய்தனர். நடந்ததை அறிந்துவர தன் மந்திரிகளை மன்னன் அனுப்பினான். அவர்கள் சிவாச்சாரியாரைச் சந்தித்து விசாரித்து தாம் கேட்டறிந்தவற்றை அரசனிடம் சொன்னார்கள். ஆச்சர்யமடைந்த மன்னன், தானே உமாபதியாரை நேரில் காண திருமடத்திற்கு வந்தான். ஊர் மக்கள் பலரும் அரசனுடன் இருந்தனர். அரசனிடம் உமாபதியார் நடந்தவை அனைத்தையும் விளக்கினார். அதை நம்ப மறுத்த அரசன், 'தாங்கள் அதே போல் வேறொருவருக்கு என் முன்னிலையில் முக்தியளிக்க முடியுமா?' என்று கேட்டான். அதற்கு உமாபதியார் 'பக்குவர்க்கு நிச்சயம் அளிக்க இயலும்' என்று கூறி அங்கு குழுமியுள்ளவர்களை நோக்கினார். அவர்களுள் பக்குவர் எவரும் இல்லையாதலால், தம் திருமடத்துப் பூஜையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் அபிஷேக நீர் ஓடும் இடத்தில் வளர்ந்திருந்த ஒரு முள்ளிச் செடியின் பக்குவ முதிர்ச்சியை அறிந்து அதற்கு நயனதீக்ஷை அளித்தார். உடனே அச்செடி பரவொளியாகி மறைந்தது. அதனைக் கண்டு ஆச்சர்யமுற்ற மன்னன் 'இது ஏதோ அபிசாரப் பிரயோகம் போல் தோன்றுகிறது' என்று எண்ணி உமாபதியாரிடம் 'நீங்கள் நடராஜப் பெருமான் ஓலை கொடுத்தார் என்றீர்கள்; நாம் அவரிடமே சென்று இதுபற்றிக் கேட்போமே!' என்றான்.

அதற்கு உமாபதியார் 'நான் கோயிலுக்குள் செல்லத் தடைவிதிக்கப் பட்டிருக்கிறது' என்று கூறினார். தன்னுடன் வந்தால் தடையேதும் இராது என்று அரசன் கூற, அனைவரும் அம்பலவாணனைத் தரிசிக்கச் சென்றனர். அரசனுக்காக நடராஜப் பெருமானுக்கு தீபாராதனை நடைபெற்றது. அச்சமயம் சாம்பானும் முள்ளிச் செடியும் நடராஜப் பெருமானின் இருமருங்கிலும் காட்சியளித்தனர். இதனைக் கண்ட அரசனும் உடனிருந்தோரும் உமாபதி சிவாச்சாரியாரின் பெருமையை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கோரி வணங்கினர்.

—o0o—

சருவதா ரிப்பேர்கொள் சம்வச் சரத்து
வருமானி யைந்துசனா வாரம் - மருவுமுற்
பக்கத் துவாதசியி சாகம் பகவாமி
லக்குமியி முக்தநா ளாம் (18.6.1948)

— ஸ்ரீ பகவான்

(பசு லக்ஷ்மி முக்தியடைந்ததைக் குறிக்கும் பாடல்)


உனையன்றி யொன்றையுமோர் பொருளாய்க் கொள்ளா
    உணர்வினைநீ யருளிப்பின் ஒளிந்து கொண்டால்
நினையன்றி யென்மனந்தான் நினைப்ப தேதோ
    நிலைபெறினும் பெறாவிடினும் நின்க ணல்லால்
பினையொன்றில் மனஞ்செல்லக் காணே னந்தோ
    பெற்றதாய் விடுத்தகன்ற குழவி யானேன்
நினையொன்றி லுறுவேனும் அருள்செய் யாயோ
    திருவண்ணா மலையில்வாழ் ரமண கோவே.


அண்டமெல்லாம் நிறைந்திருந்தும் அணுவுக் குள்ளும்
    அவ்வாவே யாய்நின்ற அருமை தன்னை
கண்டவர்கள் மொழிவதெல்லா முன்றன் கீர்த்தி
    கணக்கிலடங் காதபெருங் கணக்கே யன்றோ
தண்டரளம் புனைமணியே தவத்தோர்க் கெல்லாம்
    தலைமணியே மலைமணியே தமியேன் வாழ்வே
தெண்டனிட்டேன் திக்கில்லை அப்ப னேகேள்
    திருவண்ணா மலைதனில்வாழ் ரமண நாதா.

— குமாரசாமி முதலியார்

(மேலைச்சிவபுரி)







# அருணகிரி ரமணனின் அற்புத அனுக்கிரஹ விலாசம்

(பொன் விழா மலரில் வெளிவந்த, தம் பெயரை வெளியிட விரும்பாத பக்தர் ஒருவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் வடிவம்)

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே ரமணாச்ரமம் செல்ல வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் அவ்வப்போது தலைதூக்கி வந்தது. சில மாதங்களுக்கு முன்னர் அது தீவிர இச்சையாக உருவெடுத்தது. இதன் விளைவாக ரமணாச்ரம விஜயத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தேன். ஆனால் அச்சமயம் நடந்து கொண்டிருந்த இரண்டாவது உலகப் போரில் ஜப்பானியர் கிழக்குக் கடற்கரையைக் குண்டுவீசித் தாக்குவதாகச் செய்தி வந்தது. என் குடும்பத்தினர் அங்கு இருந்தமையால், நான் அச்சமயம் பயணம் மேற்கொள்வது உசிதமன்று என்று பலர் அறிவுறுத்தினர். என் விருப்பம் ஈடேறாமையால் மனதில் ஏமாற்ற உணர்வு நிறைந்தது. ரமணாச்ரமம் செல்ல வேண்டும் என்ற விருப்பமும் உள்ளடங்கியது. எனினும் அது முற்றிலும் அழியாமல் அடித்தளத்திலேயே ஆழ்ந்து கிடந்தது. வரும் டிசம்பர் மாதம் செல்லலாம் என்று தீர்மானித்தேன். டிசம்பரும் வந்தது. பயணம் செய்யலாம் என்று தீர்மானித்தாலும் முன்னர் ஏற்பட்ட ஏமாற்றத்தினால் இப்போது அதுபற்றி மனதில் கவலையோ கலக்கமோ ஏற்படவில்லை. சாதகமான சூழ்நிலைகள் அமைந்தால்தான் பயணம் மேற்கொள்ள இயலும் என்பதை நான் நன்கு உணர்ந்திருந்ததால், இறுதி முடிவை அவைபால் ஒப்புவித்தேன். இறுதியில் அவையும் பயணம் மேற்கொள்ளச் சாதகமாக அமைந்தன. முடிவில் டிசம்பர் மாதம் ஒரு பிற்பகலில் 'மெட்ராஸ் மெயில்' ரயிலில் ஏறினேன்.

பயணம் சாதாரணமான ஒன்றாக அமைந்தது. போர்க்காலமாகையால் ரயிலில் கூட்டம் அதிகம். எனினும் எனக்கு இருக்கை வசதியும், படுக்கை வசதியும் கிடைத்தன. பயணத்தின் இரண்டாவது நாள் பிற்பகலில் ஒரு நண்பரும் கிடைத்தார். அவரும் பகவானைத் தரிசித்து வணங்க ரமணாச்ரமம் செல்வதாகக் கூறவே நாங்கள் இருவரும் சேர்ந்து பயணத்தைத் தொடர்ந்தோம். மூன்றாம் நாள் பிற்பகல் சென்னை அடைந்தோம். விசாரித்ததில் எழும்பூரிலிருந்து விழுப்புரம் செல்லும் வண்டி உடனே புறப்பட இருப்பதாகக் கூறினர். விழுப்புரத்தில் இறங்கி, திருவண்ணாமலைக்கு வேறு வண்டியில் செல்லவேண்டும். அன்று நள்ளிரவு விழுப்புரம் அடைந்தோம். சற்று நேரம் கழித்து திருவண்ணாமலை செல்லும் ரயிலும் வந்தது. அதில் கூட்டமே இல்லை; எனவே நாங்கள் இருவரும் ஒரு சிறிய பெட்டியில் ஏறினோம். அப்பெட்டியில் வேறு எவரும் இல்லை.

பகவானைப் பற்றி அறிந்த நாள் முதலாக அருணாசலத்தைப் பற்றிய எண்ணமும் எப்போதும் என் மனதிலிருந்தது. எனினும் அதன் காரணமாக எந்தவிதமானத் தீவிர மனக்கிளர்ச்சியும் இதுவரை ஏற்படவில்லை. மாறாக இருண்ட மனநிலையே இருந்தது. திருவண்ணாமலை அடைவதற்குச் சில ஸ்டேஷன்களே இருக்கும்போது 'நாம் பகவானால் நிராகரிக்கப் படலாம்' எனும் எண்ணம் மிகத் தீவிரமாகத் தோன்றியது; என் மனவேதனை மேலும் அதிகரித்தது. உடன் இருந்த நண்பர் உறங்கிக் கொண்டிருந்தார். பெட்டியில் வேறு எவரும் இல்லை; எனவே என் வேதனை* அழுகையாக வெளிப்பட்டது. அதன் பயனாக உணர்ச்சியின் வேகம் தணிந்தது; மனம் எதையும் ஏற்கும் நிலையில் நின்றது. வண்டியும் திருவண்ணாமலை அடையவே என் நண்பரை எழுப்பினேன். நாங்கள் இருவரும் புனித பூமியான அருணாசலத்தில் அடியெடுத்து வைத்தோம்.

நாங்கள் ரயில் நிலையத்தைவிட்டு வெளிவந்த நேரம் விடியற்போது. ஓங்கி நிற்கும் அருணாசலம் எங்கள் பார்வையை ஈர்த்தது. அமைதியான கம்பீரமான அதன் தோற்றம், அது தியானத்தில் ஆழ்ந்திருப்பது போல் தோன்றியது. ஜோதிலிங்கமான அருணாசலத்தை வணங்கிவிட்டு நாங்கள் ஆச்ரமத்திற்குச் சென்றோம். நாங்கள் சென்ற நாள் பகவான் ஜயந்தி விழா நாளாக அமைந்தது. பக்தர்கள் அவ்விழாவை விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். பல்லாயிரக்கணக்கானவர்க்கு பிரசாத உணவு அளிப்பதற்காகப் பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. வளாகச்சதுக்கத்தின் ஒரு கோடியில் பகவான் அமர்வதற்காக ஓர் இடம் ஒதுக்கப்பட்டு அதில் ஆசனமும் வைக்கப்பட்டிருந்தது. பகவான் அமரும் இடத்தைச் சுற்றி குட்டையான தடுப்பு வேலி போடப்பட்டிருந்தது. அவரைத் தரிசிப்பதற்கு வசதியாக தடுப்பு வேலியைச் சுற்றிலும் யாரும் அமரவில்லை. பந்தலில் ஏனைய இடத்திலும் அதனை ஒட்டியிருந்த வரண்டாவிலும் பக்தர்கள் நிறைந்திருந்தனர்.

தரிசனம் அளிப்பதற்காக அமைக்கப்பட்ட இடத்தில் இருந்த ஆசனத்தில் பகவான் வந்து அமர்ந்தார். பக்தர்கள் வரிசையில் நின்று ஒவ்வொருவராகச் சென்று அவரை நமஸ்கரித்துப் பின்னர் வெளிவந்தனர். இவ்வாறு இரண்டு மணி நேரத்திற்குப் பக்தர்கள் தரிசிக்கச் சென்ற வண்ணம் இருந்தனர். பகவான் எனக்குத் திருக்கண்ணோக்கம் பாலிப்பாரோ என்று ஏங்கியிருந்தேன். எனினும் நான் இருந்த இடத்தில் அது கிடைக்கவில்லை. தரிசனம் செய்யும் பக்தர்களின் கூட்டமும் குறைந்தது. நான் எழுந்து சென்று பகவான் தரிசனம் கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட இடத்தையடைந்து அவரது வலப்புறத்தில் தடுப்பருகிலேயே நின்றேன். நீர் மல்கும் கண்களுடன்

* இதுவும் இக்கட்டுரையில் பின்னர் குறிப்பிடப்படும் உடல், மன நிலைகளும் என்னிடத்தில் தோன்றின. நான் அவற்றை உண்டாக்கவில்லை. இதுபோன்ற அனுபவங்களைப் பின்னர் எவ்வளவு முயன்றும் பெற இயலவில்லை.



கைகட்டி, அவருடைய திருக்கண்ணோக்கம் என் மேல் விழாதா என்று ஏங்கி அங்கேயே நின்று கொண்டிருந்தேன். தரிசனத்திற்காக வந்த எவரும் பகவான் அருகில் தொடர்ந்து நிற்க அனுமதிக்கப்படவில்லை. எனினும் அதிர்ஷ்டவசமாக என்னை யாரும் அவ்விடத்தைவிட்டு அகலுமாறு சொல்லவில்லை. பக்தர்கள் வரிசையாகத் தரிசனம் செய்த வண்ணமிருந்தனர். நானும் தொடர்ந்து அருகிலேயே நின்று கொண்டிருந்தேன். பல விதமான உணர்ச்சிகள் என் உடலில் தோன்றின. கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்தது. இவை ஏன் தோன்றின என யான் அறியேன். என் உயிரும் உணர்வும் அவர்பால் முழுமையாக ஈர்க்கப்பட்டன. அதை என்னால் தடுக்க இயலவில்லை. இறுதியில் பகவான் நான் நிற்கும் பக்கம் தம் பார்வையைத் திருப்பினார். ஆனால் என்ன துரதிருஷ்டம்! அவர் பார்வை என்மேல் விழாமல் என்னைத் தாண்டிச் சென்றது. என்னுடைய ஏமாற்றம் அதிகமாகியது. இனி எதுவும் செய்ய இயலாது என்ற என் அசக்த உணர்வைத் தீவிரமாக்கியது. இதன் காரணமாக என்னுடைய மௌனமான வேண்டுகோள் அழுகையாக வெளிப்பட்டது. ஆ! என்ன ஆச்சரியம்! பகவான் தம் கடைக் கண்ணால் என்னை நோக்குகிறார். அவர் முகத்தில் இனிய புன்னகை மலர்ந்து ஒளிர்கிறது. சொல்லொணா உணர்வு என் உடலில் பாய்ந்து என்னை முழுமையாகக் கடைந்தது. ஒருநிமிடம் சென்றபின் பந்தலைவிட்டு வெளியேறினேன்.

மறுநாள் காலை சீக்கிரமாகவே எழுந்து நீராடிவிட்டு ஹாலிற்குச் சென்றேன். காலை வழிபாடு நடந்து கொண்டிருந்தது. வேத அத்தியயனம் செய்த அந்தணர்கள் வேதபாராயணம் செய்தார்கள். பகவான் மேல் இயற்றப் பெற்ற ஸ்லோகங்களும் பாராயணம் செய்யப்பட்டன. இப்பாராயணம் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் நடைபெறும். காலைப் பாராயணத்திற்குப் பின்னர் பகவானுடன் பக்தர்கள் காலை உணவிற்காகப் போஜன கூடத்திற்குச் செல்வர். பகவான் எப்போதும் பக்தர்களுடனேயே அமர்ந்து சாப்பிடுகிறார். பகவானுக்குப் பரிமாறப்படும் அதே உணவே பக்தர்களுக்கும் பரிமாறப்படுகிறது. உணவில் எந்தவிதப் பாரபட்சமும் காட்ட பகவான் அனுமதிப்பதில்லை.

என் வேண்டுகோளை பகவானிடம் தெரிவிக்க ஆசைப்பட்டேன். என்னை அவரிடம் அறிமுகப்படுத்தி என் பொருட்டு அவரிடம் பேச எவராவது இருக்கிறாரா என்றும் தேடினேன். ஆச்ரமவாசிகள் சிலரிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர்கள் எல்லோரும் என்னிடம், பகவானிடம் பேச அறிமுகமோ பரிந்துரையோ தேவையில்லை என்றும் அவரிடம் நேரிலேயே பேசலாம் என்றும் ஒருமுகமாகக் கூறினர். பகவானிடம் நேரில் பேசுவதற்கு வேண்டிய தைரியம் என்னிடம் இல்லை. மேலும் அவரிடம் என்ன பேசுவது என்றும் தெரியவில்லை. பகவானிடம் நேரில் பேச இயலாமல் இப்படியே இரண்டாவது நாளும் சென்றது. நான் மிகுந்த பிரயாசையுடனும், செலவுடனும் மேற்கொண்ட இப்பயணம் ஒரு பயனும் அளிக்காமல் வீணா

குமோ? இத்தகைய எண்ணங்கள் என்னைத் தம் வசப்படுத்தி பகவானிடம் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கத் தூண்டின.

மறுநாள் காலை வேறொரு ஆச்ரமவாசியை அணுகி என் நிலைமையை விளக்கினேன். என்னை பகவானிடம் அறிமுகப்படுத்துமாறு மன்றாடினேன். அவர் என்னைச் சற்று நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, நான் பகவானிடம் கூற வேண்டியதை எல்லாம் ஒரு தாளில் எழுதுமாறு பணித்தார். எழுதுவதா! என்ன எழுதுவது? அப்போது நான் எண்ணிச் செயல்படும் நிலையில் இல்லை; என் மனதில் தோன்றிய எண்ணங்களை அவர் கொடுத்த தாளில் எழுத்தில் வடித்தேன். அவ்வன்பர் அத்தாளை வாங்கிக் கொண்டு பகவானிடம் சென்றார். நான் பின் தொடர்ந்தேன். தாளை பகவானிடம் கொடுத்து விட்டு தமிழில் ஏதோ பேசினார். பகவான் தாளைப் படித்துவிட்டுப் புன்னகை புரிந்தார். உடனே என் பக்கம் திரும்பினார். நான் அங்கேயே கண்களில் நீர் மல்க கைகட்டி அமர்ந்திருந்தேன். பகவான் என்னைப் பார்த்த உடன் ஏதோ ஒரு உணர்வினால் கவ்வப்பட்டேன். அதனால் உடல் மிகவும் நடுங்கியது. இதைக் கண்ட பகவான் சிரித்தார். தொடர்ந்து சற்று நேரம் ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டே இருந்தார். பின்னர் நான் எழுதிய தாளை மடித்து அருகிலிருந்து புத்தக அலமாரியில் வைத்தார். அதன்பிறகு என்னிடம் பேசவுமில்லை; என்னைக் கவனிக்கவுமில்லை. மனம் அதிக நேரம் இறுக்கமான நிலையில் இருக்க இயலாது. மிகுந்த களைப்பினால் தானாகவே அமைதியடைகிறது. என் மனமும் அவ்வாறே சற்று நேரத்தில் அமைதியுற்றது. சாப்பாடு மணி அடித்ததும் நாங்கள் எல்லோரும் பகவானுடன் போஜன கூடத்திற்குச் சென்றோம்.

என் வேண்டுகோளை அவர் முன் வைத்தாகிவிட்டது. அவர் என்னிடம் பேசவுமில்லை. மாறாக என்னை நோக்கிச் சிரித்தார்! இனிமேல் ஒன்றும் செய்ய இயலாது. வீடு திரும்பி அங்குள்ளோரின் நகைப்பிற்கும் கேலிக்கும் ஆளாக வேண்டியதுதான். என்ன செய்ய முடியும்? அவர் அருளைத் தரும்படி அவரைக் கட்டாயப்படுத்த இயலாது. இவ்வெண்ணங்களுடன் மனம் அமைதியுற்றது.

இரவு உணவுக்குப் பின்னர் அன்பர்கள் ஹாலில் பகவானுடன் அரை மணி நேரம் தியானத்தில் அமர்வது வழக்கம். நானும் இயந்திர கதியில் அவர்களைத் தொடர்ந்து சென்று ஹாலில் அமர்ந்தேன். ஒரு சில நிமிடங்கள் சென்றன. திடீரென்று ஒரு இனிமையான குளுமை உடல் முழுவதும் வெள்ளம் போல் பரவியது. அவ்வுணர்வு எலும்புகளினின்றும் எழுவதுபோல் தோன்றியது. என் உடலும் உயிரும் குளிர்ந்தன. நான் கூறிய இந்த ஆன்மீக மணம் பகவானிடமிருந்து வருவதாகச் சொல்லப்படுகின்ற ஒன்றா? எப்படி யாயினும் இது பகவானிடமிருந்து அவரிச்சையால்தான் கிடைத்தது என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆச்ரமம் வந்த மூன்றாம் நாள் இந்த அனுபவம் கிடைத்தது.



அடுத்த நாள் பகவான் முன் அமர்ந்திருந்தபோது இதயஸ்தானத்தில் ஒரு தீவிரமான சர்ப்பை உணர்ந்தேன். நான் ஆச்சரியப்பட்டு அவ்வுணர்வைக் கவனிக்க முயன்றபோது அவ்வனுபவம் நீங்கியது. முந்தையநாள் அனுபவம் போல் எதுவும் நிகழவில்லை. அன்றைய எஞ்சிய பகுதி அவ்வனுபவத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதில் கழிந்தது. எனினும் இரவு தியான வேளையிலும் ஒன்றும் நிகழவில்லை. நான் அனுபவத்தை எதிர்பார்த்ததே அதன் நிகழ்வைத் தடுத்தது போலும்.

மறுநாள் காலை, அதாவது ஆச்ரமத்துக்கு வந்த ஐந்தாவது நாள் ஜப்பானியர் கிழக்குக் கரையை மீண்டும் தீவிரமாகக் குண்டு வீசித் தாக்கியதாகச் செய்தி வந்தது. என் குடும்பத்தினரின் பாதுகாப்பைப் பற்றிய கவலை என்னை மீண்டும் பீடித்தது. முந்தைய நாள் இரவும் அன்று காலையிலும் தியான காலத்தில் எவ்வித அனுபவமும் ஏற்படவில்லை. எனவே எனது தகுதிக்கேற்ற அனுபவம் கிடைத்தாகிவிட்டது என்று கருதினேன். ஆச்ரமத்தில் தொடர்ந்து தங்குவதால் இதைவிட மேலான அனுபவம் எதுவும் கிட்டாது என்று எண்ணினேன். எனவே வீடு திரும்பத் தீர்மானித்தேன். என்னுடைய முடிவை ஒரு தாளில் எழுதி பகவான் முன் வைத்தேன். அவர் அதை எடுத்துப் படித்துப் பார்த்துவிட்டு மடித்துப் பேசாமல் அலமாரியில் வைத்தார். அவர் ஏதும் பேச வில்லை. என்னைப் பார்க்கக் கூட இல்லை. மீண்டும ஒரு நிராகரிப்பே எனக்குக் கிடைத்தது.

ஊர் திரும்பும் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். என்னுடைய சாமான்களைக் கட்டிவிட்டு இரவு உணவிற்குப்பின் ஆச்ரமவாசி ஒருவரிடம் ரயில் நிலையத்திற்குச் செல்வதற்கு வண்டி கொண்டு வருமாறு வேண்டினேன். ஆனால் அவர் அச்சமயம் வண்டி எதுவும் கிடைக்காது என்றும் வண்டி ஏற்பாடு செய்ய முன்னரே தெரிவித்திருந்தால்தான் டவுனிலிருந்து வண்டி அழைத்து வந்திருக்கலாம் என்றும் கூறினார். வேறு வழியின்றி மேலும் ஒருநாள் ஆச்ரமத்தில் தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அடுத்தநாள் காலைப் பாராயணத்திற்குச் சென்றேன். காலை உணவிற்குப் பின்னர் ஹாலில் பக்தர்கள் பகவானுடன் உரையாடுவார்கள். பகவானும் அச்சமயம் சாதகர்களின் ஐயங்களைக் களைவார். அன்று காலையும் வழக்கம் போல் உரையாடல் நடந்து கொண்டிருந்தது. எனக்குத் தெரியாத மொழியான தமிழில் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர். எனவே உரையாடலை நான் கவனிக்கவில்லை. எனினும் சிலர் அடிக்கடி என்னை நோக்கிச் சிரித்தனர். விசாரித்ததில் அவர்கள் நான் பகவானிடம் முதலில் தாளில் எழுதித்தந்ததைப் பற்றிப் பேசுவதாகத் தெரிந்தது. பகவான் அவர்களிடம் அதைப் பற்றி ஏதோ கூறியிருப்பார் போலும். அவர்கள் சிரிப்புக்கு ஆளானாலும், பகவான் இறுதியில் என் வேண்டுகோளைக் கவனித்திருக்கிறாரே என்றெண்ணி மகிழ்ந்தேன். நானும் அவர்கள் விவாதத்தில் கலந்து கொள்வதற்காக பின் வரிசையில் அமர்ந்திருந்த என்னை அருகில் வந்து அமருமாறு

கூறினார். விவாதம் முடிந்த பின்னர் பகவான், 'இவன் பிரதிபலனத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறான். நிஜம் தெரியவில்லை என்று முறையிடுகிறான்' என்று கூறினார். இது என் மனதில் ஆழப் பதிந்தது. எதனை நிஜம் என்று குறிப்பிட்டார்? எதனைப் பிரதிபலனம் என்று குறிப்பிட்டார்? என்று கண்களை மூடி இவற்றின் பொருளை அறிய முயன்றேன். உடனே இதயஸ்தானத்தில் ஈர்ப்பை உணர்ந்தேன். மனம் சலனமற்று ஒடுங்கியது; எனினும் நான் முற்றிலும் விழித்திருந்தேன். உணர்வில் எவ்வித இடையீடும் இல்லாமல் திடீரென்று 'நான்' பளிச்சிட்டுப் பிரகாசித்தது. இதுவே தூய்மையான, ஒருபடித்தான, இடைவிடாத தன்னைத்தானே உணரும் கேவல உணர்வு. சூரிய ஒளி எவ்வாறு விளக்கொளியைக் காட்டிலும் மிகமிகப் பிரகாசமானதோ, அவ்வாறே இத்தன்னுணர்வு சாதாரண விழிப்புணர்வைக் காட்டிலும் பிரகாசமானது. சாதாரண விழிப்பு நிலையில் நம் கவனம் முழுமையும் சுட்டுப் பொருள்களால் கவரப்படுவதால் 'நான்' எனும் கேவல உணர்வு பிரகாசிக்காமல் மங்கி பின்னணியில் நிற்கிறது. அந்நிலையில் அது யூகித்து அனுமானிக்கப்படும் நிலையில் உள்ளது. ஆனால் இவ்வனுபூதிநிலையில் 'நான்' முன்னே வந்து சுட்டுப் பொருள்களைப் பெயர்த்து வெற்றுணர்வாகத் தீவிர இருப்புடன் விளங்குகிறது. நான் இருக்கிறேன்; ஆனால் நான் இவ்வுணர்வை அறிபவனும் அன்று. இவ்வுணர்வால் அறிபடும் பொருளுமன்று. நானே உள்ளதாகிய இவ்வுணர்வு. சுட்டுப் பொருள்கள் ஏதும் இல்லை. உலகமும் உடலும் மனமும் இல்லை. எண்ணமும் சலனமும் காலமும் இல்லை. நான் ஒருவனே இருக்கிறேன். இரண்டற்று தன்னந்தனிநின்று தானே ஒளிரும் கேவல உணர்வே நான். திடீரென்று மீண்டும் என் உணர்வில் எவ்வித இடையீடும் இல்லாமல் சாதாரண விழிப்பு நிலைக்குத் திருப்பிக் கொண்டுவரப்பட்டேன்.

பலர் மத்தியில் இருந்தபோதிலும் அவர்கள் அறியாத வண்ணம் மாபெரும் அதிசயம் ஒன்று நிகழ்த்தப்பட்டது. 'நான்' எனும் மெய்ப்பொருளை அறிவான் அறிபடுபொருள் எனும் தொடர்பின்றி அது உள்ளவாறே உணர்வுமயமாகவே அனுபவிக்க இயலும். மகத்தான விஞ்ஞானிகளும் தத்துவ வல்லுநரும் எவ்வித விவாதங்களினாலும் என்னுடைய இம்முடிவை மாற்ற இயலார். இவ்வனுபவம் தோன்றுவதற்கான எவ்வித அறிகுறியும் எதிர்பார்ப்பும் எனக்குச் சற்று முன்னரும் இல்லை. சாதனை ஏதுமின்றியே உலகச் சேற்றில் உழலும் இவ்வற்பனுக்கு, பெரிய யோகியரும் கடுந்தவம் செய்தும் கிடைக்காத இறுதியான பேரனுபவமான இவ்வாத்மானுபூதியை அளித்ததை என்னென்று சொல்வேன். இது அவனருளின் அற்புதமேயன்றோ! புரிந்து கொள்ளமுடியாத, அளவிடமுடியாத அருள்! 'கேளாது அளிக்கும் கேடில் புகழோய்' என்ற கூற்று உபசாரமன்று; முற்றிலும் உண்மையே.

விழிப்புநிலைக்குத் திரும்பியதும் கண்களைத் திறந்து பகவானை நோக்கினேன். அவரே கருணை கூர்ந்து இவ்வனுபவத்தை எனக்கு அருளினார்



என்பதை என் இதயத்தின் ஆழத்தில் உணர்ந்தேன். ஆனால் அவரோ ஏதும் நடவாதது போல் உதாசீனராகவே இருந்தார். அவர் எவ்வாறு இவ்வற்புதத்தை நிகழ்த்தி இருக்கக் கூடும்? தம்முடைய மௌனத்தில்தான் செய்தாரோ? 'மௌன வ்யாக்கியா ப்ரகடித பரப்பரம்ம தத்வம்' என்பதன் பொருள் இதுதானோ! இதனை யாரால் புரிந்துகொள்ள இயலும்! இவ்வனுபவம் என்னை மிகுந்த ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அதனால் பகவானுக்கு நன்றி சொல்லவும் மறந்தேன். இவ்வனுபவத்தின் பெருமையை முற்றிலும் உணரவும் இல்லை. என் பக்கத்திலிருந்தவர்கள் என்னைக் கவனிக்கவில்லையாதலால் எனக்கு நடந்த அனுபவம் அவர்களுக்குத் தெரியாது. இதைப் போல் எத்தனை பேருக்கு இவ்வரிய அனுபவத்தையும் இதனிலும் உயர்ந்த அனுபவங்களையும் பகவான் அளித்துள்ளாரோ! அதை அவரே அறிவார். நேரம் முற்பகல் 10.20. இவ்வனுபவத்திற்கு முன் கடிகாரத்தைக் கவனிக்காததால் எவ்வளவு நேரம் இவ்வதிசய நிலையில் இருந்தேன் என்பதைக் கூற இயலாது. சற்று நேரத்தில் எல்லோரும் போஜனசாலைக்குச் சென்று பகவானுடன் பகலுணவை புசித்தோம்.

இவ்வனுபவம் என்னை ஆனந்தமான நிலையில் வைத்ததால் எவ்வித கவலையும் இன்றி இருந்தேன். ஜப்பானியரின் குண்டு வீச்சும் குடும்பத்தைப் பற்றிய கவலையும் என்னை இப்போது பாதிக்கவில்லை. இன்னும் சில நாட்கள் ஆச்ரமத்தில் தங்க நினைத்தேன். திட்டமிடத்தான் நமக்கு உரிமை. நடப்பதை தீர்மானிப்பது அவனன்றோ! இரவு உணவுக்குப்பின் ஓர் அன்பர் என்னை புகைவண்டி நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வண்டி ஏற்பாடு செய்யப்பட்டு, அது ஆச்ரமவாயிலில் காத்திருப்பதாக என்னிடம் கூறினார். நான் சற்றே துணுக்குற்றேன். யார் இவரை வண்டி அழைத்து வரச் சொன்னது? நான்தான் ஊர்திரும்பும் திட்டத்தை மாற்றிக் கொண்டு விட்டேனே! ஆனால் அவர் மீது குற்றம் சொல்லி என்ன பயன்? நேற்றிரவு வண்டி கேட்டதையும் அது கிடைக்காமல் நான் ஊர் திரும்ப முடியாமல் நேர்ந்ததையும் கண்டு மிகுந்த பரிவுடன் வண்டி ஏற்பாடு செய்யும் பொறுப்பை அவர் தாமே ஏற்றுக் கொண்டார். என்னில் நிகழ்ந்த மாற்றத்தை அவர் எவ்வாறு அறிந்திருக்கக் கூடும்? மேலும் அவர் வெறும் கருவிதானே? எனவே அவரிடம் நான் ஒன்றும் கூறவில்லை. அவர் என்னைப் பகவானிடம் அழைத்துச் சென்றார். என்னை அறிமுகப்படுத்தி நான் ஊர் திரும்புவதாகக் கூறினார். பகவானை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விடைபெற்றுக் கொண்டு வண்டியில் ஏறினேன். **நேற்று ஊர் திரும்பத் தீர்மானித்தேன், ஆனால் ஆச்ரமத்தில் தங்க நிர்ப்பந்திக்கப்பட்டேன்! இன்று ஆச்ரமத்தில் தங்க நினைத்தேன். ஆனால் ஊர் திரும்ப வேண்டியதாயிற்று! அவருடைய செயல்கள் யாவும் நம் சிற்றறிவிற்கு எட்டாத புதிரே.**

– oOo –

# சுகமும் சந்யாசமும்

சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே; சுகமும் ஆத்மசொரூபமும் வேறன்று. ஆத்மசுகம் ஒன்றேயுள்ளது; அதுவே ஸத்யம். பிரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுகமென்பது கிடையாது. அவைகளிலிருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக்கின்றோம். மனம் வெளியில் வரும்போது துக்கத்தையனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும்போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே யனுபவிக்கிறது. அப்படியே தூக்கம், சமாதி, மூர்ச்சைக் காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கிற போதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாகும் போதும் மனம் அந்தர் முகமாகி ஆத்ம சுகத்தையே யனுபவிக்கிறது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும், உள்ளே திரும்புவதுமாக ஓய்வின்றி யலைகிறது. மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியில் சூரியவெப்பம் கொடுமையாயிருக்கிறது. வெளியில் அலையும் ஒருவன் நிழலிற்சென்று குளிர்ச்சியடைகிறான். சிறிது நேரத்திற்குப்பின் வெளிக்கிளம்பி வெப்பத்தின் கொடுமைக்காற்றாது, மறுபடியும் மரத்தடிக்கு வருகிறான். இவ்வாறு நிழலினின்று வெயிலிற் போவதும், வெயிலினின்று நிழலிற் செல்வதுமா யிருக்கிறான். இப்படிச் செய்கிறவன் அவிவேகி. ஆனால் விவேகியோ நிழலைவிட்டு நீங்கான். அப்படியே, ஞானியின் மனமும் பிரஹ்மத்தைவிட்டு நீங்குவதில்லை. ஆனால் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்தி லுழன்று துக்கப்படுவதும், சிறிதுநேரம் பிரஹ்மத்திற்குத் திரும்பி சுகம் அடைவதுமா யிருக்கிறது. ஜகமென்பது நினைவே. ஜகம் மறையும்போது அதாவது நினைவற்றபோது மனம் ஆனந்தத்தை யனுபவிக்கின்றது; ஜகம் தோன்றும்போது அது துக்கத்தை யனுபவிக்கின்றது.

நானென்னும் ஸங்கற்பத் தியாகமே சந்யாஸமன்றி வெளி விஷயங்களை விடுவதல்ல. இந்த சந்யாஸமுள்ளவன் ஏகாங்கியானாலும், அபார சம்சாரத்தில் இருந்தாலும், அவனுக்கு இரண்டும் ஒன்றாகவே தோன்றும். உதாரணமாக "வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தியிருக்கும் போது, பக்கத்திலுள்ளது தோன்றாததுபோல, ஞானி எவ்வளவு வியவகாரங்கள் செய்யினும், நான் என்பது உண்டாகாமல், தன்னிடத்தில் மனது இருப்பதால், ஒன்றும் செய்யாதவனேயாம். தான் அசையாமல் படுத்திருந்தும் கனவில் தலைகீழாய் விழுவதாய் காண்பது போல, அஞ்ஞானி (நான் என்பது அறாதவன்) ஏகாந்தனாய், ஸதா நிஷ்டையிலிருந்தாலும், ஸர்வ வியவகாரங்களும் செய்தவனே யாவன்" என்று வஸிஷ்டவாக்கியம்.

- **ஸ்ரீபகவான்** (நூல் திரட்டு)



# சாதக சித்த சம்வாதம்

## வேங்கட தாசர்

*(மனு சுபேதார் என்ற அன்பர் முதன் முறையாகப் பகவானைத் தரிசிக்க வந்தபோது பகவானிடம் 'ஞான சித்தனின் நிலை பல நூல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது; ஞானம் அடைய முயலும் சாதகனது நிலையை விளக்கும் நூல்களைக் காண்பது அரிதாக உள்ளது' என்றார். கருணையுடன் அவரை நோக்கிய பகவான் பக்தர் ஒருவரிடம் 'மஹா பக்த விஜய'த்தைக் கொண்டு வருமாறு பணித்தார். அப்புத்தகத்தைப் பிரித்தபோது அது ஞானேசுவரருக்கும் அவர் தந்தை விடோபாவிற்கும் நடந்த சம்வாதம் இருக்கும் பக்கத்தில் பிரிந்தது. அதைப் படித்துக் காட்டிய பகவான், சாதக நிலையும் சித்த நிலையும் அதில் நன்கு விளக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்.)*

ஞானேசுவரருடைய தந்தை விடோபா ஞானமடையும் பொருட்டு நாட்டைவிட்டு காட்டிற்குச் சென்று சாதனையில் ஈடுபடுகிறார். ஞானேசுவரர், அவர் உடன்பிறந்தோர் ஆகியோரது பெருமையை அறிந்த அந்நாட்டு அரசன் அத்தகைய ஞானக் குழந்தைகளின் தந்தையைக் காண விரும்புகிறான். தனது அதிகாரிகளை அனுப்பி விடோபாவை நாட்டிற்கு அழைத்து வர முயல்கிறான். விடோபா அதற்கு இணங்காமல் போகவே ஞானேசுவரரே தம் உடன்பிறந்தோருடன் விடோபாவை நாட்டிற்கு அழைத்து வரச் சொல்கிறார். ஞானேசுவரருக்கும் விடோபாவிற்கும் சம்வாதம் நடக்கிறது. இறுதியில் விடோபாவும் ஞானேசுவரருடன் காட்டைவிடுத்து நாட்டிற்குச் செல்கிறார்.

ஞானேசுவரர், தந்தையாகிய விடோபா தபோபலத்தாலும் பிரம்ம நிஷ்டையாலும் ஆனந்த பரவசத்தாலும் தன்னை மறந்து, சங்கல்பம் இறந்து, தக்ஷிணாமூர்த்தியைப் போல சமாதி நிலையைச் சார்ந்திருப்பதைக் கண்டு, அவருடன் தர்க்கம் செய்ய வாஞ்சை கொண்டார். சின்மய முத்திரையில் இருக்கும் அவர் மடியின்மேல் போய் வீற்றிருக்க, பராத்பரனாகிய ஞானேசுவரர் பரிசம் பட்ட மாத்திரத்தில் எல்லையற்ற பரவசத்தனாயிருக்கும் விடோபாவின் நிர்விகல்ப சமாதி கெட்டு சுழுப்தி மௌனத்தைவிட்டு புளகாங்கிதனாகி விகல்ப மனதுடையவரானார். தன் மடியின் மேல் வீற்றிருக்கும் பக்தவத்சலனாகிய ஞானேசுவரர்மேல் மிகவும் வாஞ்சை கொண்டு 'என் கண்மணியே!' என்று வாரி எடுத்து உச்சி மோந்து முத்தம் கொடுத்தார். நிவர்த்திசாது முதலானவர்களையும் தழுவி ஆனந்த பாஷ்பங்களால் கழுவி 'ஓ ஒப்பிலா என் மைந்தர்களே! யான் வணங்குதற்கு உகந்தவர்களே! சௌக்கியமான நாட்டைவிட்டு காட்டிற்கு ஏன் வந்தீர்கள்? என்பால் வந்து ஏன் நொந்தீர்கள்? அநேக நாளாய் ஏன் தரிசனம் தராமலிருந்தீர்கள்?' என்கிற பலபட்ச வார்த்தைகளாடி உடனே மௌன நாட்டை நாடி பரப்பிரம்ம சங்கீர்த்தனம் பாடி மகவாசையை நீக்கி மைந்தர்



10

களை நோக்கி 'இனிச் சுகமாய் நாட்டைச் சேர்ந்து வேஷ்டை (துன்பம்) தீர்த்து மிகவும் களி கூர்ந்து அரசனோடு இன்புற்று இருங்கள்' என்று பகர்ந்து மடியிலிருந்த ஞானேசுவரரை 'எழுந்திருமப்பா' என்றார். கபட நாடகனாகிய ஞானேசுவரர் 'ஓ! எந்தையே! எங்களை ரட்சிக்கும் கடவுளாகிய எனைப் பெற்ற தந்தையே! தேவரீர் நாட்டுக்கு வரவேண்டும்; எங்களோடு இருந்து, நாங்கள் களிக்க வேண்டும்; இந்த வரம் நீர் இப்போதே தரவேண்டும்' என்று அறைந்து மற்றோர் வாமத்தின்மேல் வாம பாகனாகிய நிவர்த்தி சாதுவும் எதிரில் சோபான்தேவும் முக்தாபாயும் வீற்றிருக்கச் செய்தபின் ஞானேசுவரர் மீண்டும் பேசத் தொடங்கினார்.

**ஞானேசுவரர்:** நீர் நாட்டை அடையாமல் காட்டிலிருக்க நாங்கள் சுகமுற்று இருப்போமா? பெற்ற தந்தையையும் வெறுப்போமா? சீக்கிரம் எங்களுடன் பட்டணத்துக்குப் புறப்படுங்கள்!

**விடோபா:** அடே ஞானேசுவரா! கக்கினது ஆயாசம் தீர்க்கும் பாயா சமானாலும் அதை நக்குவாருண்டோ? காட்டில் வந்தபின் நாட்டில் பிரவேசிக்கலாமா? அறிவில்லாத மாந்தரை நேசிக்கலாமா? அற்பமான அரசனைப் பூசிக்கலாமா? எப்பொழுதும் எனக்குக் காடே கதியாகும்; உங்களுக்கு நாடே கதியாகும். ஆகையால் நீங்கள் வாட்டமற்று நாட்டையுற்று இருப்பீர்கள்!

**ஞானேசுவரர்:** ஓ என் ஐயனே! நீர் காட்டிலிருக்கும் காரணம் ஏது?

**விடோபா:** அப்பா மகனே! நான் நாட்டையடைந்து பெறும்படியான போக லாபம் ஏதிருக்கிறது? நாடு மோக்ஷத்திற்கு விக்னமேயாகும். நிச்சங்கமான இந்தக் கானகமே மோன நிஷ்டைக்கு யோக்கியமானதால் இம் மலைச் சாரலில் சஞ்சரிக்கிறேன்.

**ஞானேசுவரர்:** கண்களை மூடாமல் கௌசனையால் (போர்வையால்) விண்ணை மூட நினைப்பது போலவும், இடியைத் தன் சிறு காலால் தாங்கக் கருதிய சிறு குருவியைப் போலவும், கர்மம் செய்துகொண்டே தர்மம் தேடுவது போலவும், கடின நெஞ்சன் கடவுள் காட்சியைப் பெற வாஞ்சை கொண்டது போலவும், 'நான்' என்பதை மாற்றாமல் ஞான நிஷ்டையைச் சாதிப்பது போலவும், நாடென்றும் காடென்றும் பேத எண்ணங்களோடு கூடி இருக்கும் நீர் செய்யும் பிரம்ம நிஷ்டை இருக்கின்றது. அபேத நிஷ்டைக்குப் பேத நாட்டம் இருக்கலாமா?

**விடோபா:** 'எனது' என்னும் பொருள்கள் இருக்கும் வரை 'நான்' என்னும் அகந்தையும் அது இது என்னும் துவித பாவமும் போகாது. இப்பேத பாவங்களை நீக்குவது நிர்விகல்ப நிஷ்டை. அது



நிச்சங்கல்பத்தாலும்• நிச்சங்கத்தாலும் லபிக்கும். ஆதலால் ஏகாந்தமான காடே மௌன நிஷ்டைக்கு உரியது.

**ஞானேசுவரர்:** தன்னையறிந்து தானாயிருப்பதே பிரம்ம நிஷ்டையன்றி காட்டில் தனித்திருப்பது நிஷ்டையல்ல.

**விடோபா:** சத்குரு முன்னிலையில் தன்னையறிந்துகொண்டாலும் தானாய் இருப்பதற்கு ஏகாந்த ஸ்தானமே முக்கியமாக வேண்டுமல்லவா?

**ஞானேசுவரர்:** காட்டில் தனித்துத் தவம் செய்வதால் அஞ்ஞானம் நிவர்த்தியாகாது. அகமமதைகள் நீங்கிப் போகாது. எனவே மெய்ஞ் ஞானிகள் காடென்றும் நாடென்றும் சந்நியாசமென்றும் சம்சாரமென்றும் உன்னாமல் திடமனதோடு நிர்விகல்ப சமாதியைப் பொருந்தி இருக்க, நீர் சம்சாரத்தை எதிர்த்து இக்கானகத்தில் இருக்கலாமோ?

**விடோபா:** சாட்சியை அறிந்து சர்வசாட்சியில் ஐக்கியமானவர்கள் சம்சாரத்தில் இருந்தால் சமாதி சாதனைக்கு விக்கினம் நேரிட்டு சாட்சாத்காரத்தை இழந்துவிட நேரிடும். ஆகையால் சகஜானந்தானுபூதி பெற்றோர், சம்சார அபேட்சையைக் கனவிலும் கருதார்.

**ஞானேசுவரர்:** இது வேண்டுமென்ற சங்கல்பமும் இது வேண்டாமென்ற விகல்பமும் அற்று இருப்பதே சகஜ நிஷ்டையன்றிக் காட்டை அபேட்சித்து நாட்டை உபேட்சித்து இருப்பது நிஷ்டையாகுமா?

**விடோபா:** சங்கல்ப விகல்பமற்று இருப்பவர்க்கு வியாபாரம் எவ்விதம் நடக்கும்? வியாபாரத்திற்கு உதவாதவன் நாட்டிலிருப்பதால் என்ன பிரயோசனம்? பிணத்துக்கு மணம் செய்வது போல, அநித்ய துக்க அசுத்தமான இத்தேக போஷணையைக் குறித்துப் பல சங்கடங்களுக்கு இடமான நாட்டில் இருக்கவே கூடாது.

**ஞானேசுவரர்:** வியாபாரத்தில் இச்சையற்றவன் சமாதி சாதனம் செய்வா னாயின் அச்சாதனமும் வியாபாரமல்லவோ? இவ்வியாபாரம் உள்ளவனுக்குச் சம்சார வியாபாரமும் இருக்கட்டுமே!

**விடோபா:** சமாதி ஓர் வியாபாரமானாலும் சமஸ்த சங்கல்ப சஞ்சலங்களையும் மாற்றிவிடும். சம்சார வியாபாரம் சமஸ்த சஞ்சலங்களைக் கொடுத்து எந்நேரமும் அல்லலுறச் செய்யுமல்லவா?

---

• இது ஸ்ரீபகவான் தம் திருக்கரத்தால் 'மஹா பக்தவிஜயம்' புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள வார்த்தையாகும்.

**ஞானேசுவரர்:** சச்சிதானந்தப் பொருளே தானாய் இருக்க நிஷ்டாசாதனை செய்யுங் காரணமென்ன?

**விடோபா:** ஜாக்ராவஸ்தையில் சுழுப்தி நிலையை அடைவதல்லவோ பிரம்ம நிஷ்டை என்று உத்தமர்கள் உரைக்கிறார்கள். அப்படியில்லாத சமாதியால் தடையற்ற ஆனந்தம் உண்டாகுமா?

**ஞானேசுவரர்:** ஜாக்ராவஸ்தையில் இந்திரியங்களின் சேஷ்டையையும் சொப்னாவஸ்தையில் மனோ வியாபாரத்தையும் சுழுப்தி அவஸ்தையில் சுத்த சூனியத்தையும் கண்டு களித்திருப்பதே ஆனந்தம். பருந்தின் நிழல் போல் ஒன்றிலும் ஒட்டியும் ஒட்டாமல் இருப்பதே நனவில் சுழுப்தி நிலை என்று வேதங்கள் முறையிட, சுத்த சூன்யமான சுழுப்தியைப் போல் இருப்பதே ஆனந்தம் என்றும் நனவில் சுழுப்தி என்றும் நீர் நினைத் திருக்கலாமா?

**விடோபா:** ஜாக்ராவஸ்தையும் சொப்பனாவஸ்தையும், பிரபஞ்ச வியாபாரத்தில் அமிழ்த்தி விஷயங்கள் என்னும் மிருகங்களுக்கு ஆகாரமாக்கி மிகவும் வேதனையடையும்படிச் செய்யும். ஆதலால் பிரபஞ்ச வியாபாரம் இறந்த சுத்த சூன்யமான சுழுப்தியவஸ்தைக்கு இணையான சமாதியே உத்தம சமாதியன்றி வேறல்ல.

**ஞானேசுவரர்:** திருடனுக்கு முரடனே குரு என்பது போலப் பிரபஞ்ச வியாபாரத்தில் இருந்துகொண்டே ஜனகரைப் போல விஷயங்கள் என்னும் மிருகங்களைத் திடஞானம் என்னும் வாளால் துண்டித்துச் சுகதுக்கங்களைச் சட்டை செய்யாமல் எதிர்த்திருப்பதே பரமசமாதியன்றி சூன்யமாயிருப்பது சமாதி அல்ல.

**விடோபா:** அநேக ஜென்மங்களாய் வாசனை ஏறியிருக்கும் மனக்குரங்கு சகல பற்றுக்களும் அற்ற சுகப்பிரம்ம ரிஷியால் ஜெயிக்கப்பட்டதன்றிச் சுழுப்திநிலை இல்லாமல் தான் பிரம்மம் என்கிற திடஞானம் உள்ள ஜனகரால் ஜயிக்கப் பட்டதல்லவே!

**ஞானேசுவரர்:** கோலாடினால் குரங்காடுவது போல திடஞானமுள்ள ஜாகரால் மனோ நாசம் அடைந்ததேயன்றி, புறப்பற்றற்று காடே கதியாயிருந்த சுகரால் மனோலயம் அடையப்படவில்லையே!

**விடோபா:** 'த்ருக்'காயிருந்து த்ருச்யத்தை அகற்ற வேண்டுமேயன்றித் த்ருச்யத்தில் இருந்துகொண்டே த்ருச்யத்தை எப்படி நீக்கக்கூடும்? விஷம் தீர விஷமே குடித்தால் மரணஹேது அல்லவோ?



**ஞானேசுவரர்:** விஷந்திர வேறோர் விஷமான ஔஷதம் உட்கொள்வது போலப் பயமான விஷயேந்திரியகரணாதிகளை நிர்ப்பயமான திடஞானத்தால் கொல்பவனே சமர்த்தனன்றி எப்போதும் நிஷ்டையில் இருந்துகொண்டே எங்கே விஷயங்கள் என்னும் மிருகங்கள் வரப்போகிறதோ என்கிற பீதி குடிகொண்டிருப்பவனுக்கு அப்பீதியே பலிதமன்றி பிரம்மானந்தம் ஓர் காலும் கிட்டாது. நன்றாக யோசித்துப் பாருங்கள்.

**விடோபா:** சன்யாசியாகி சதா சமாதிநிஷ்டையில் இருப்பனையே சஞ்சலத்துக்கு உட்படுத்தும் விஷயங்கள் சம்சார வியாபாரத்தில் இருப்பவனை என்னென்ன படுத்தாது? பெருவெள்ளத்தில் வீழ்ந்த சருகு சலனமின்றி ஓரிடத்தில் இருக்கவும் கூடுமோ?

**ஞானேசுவரர்:** திடஞானம் இல்லாதவன் எத்தனைநாள் அந்தர் நிஷ்டையில் இருந்தாலும் கருவிகள் பகிர்முகத்தில் கொண்டுவந்து பல துன்பம் அடையச் செய்யும். பெருத்த வெள்ளத்தில் வீழ்ந்த பருத்த கல்லானது சற்றும் அசையாமல் இருப்பதுபோல் விஷயாதி விகாரங்கள் எத்தனை வந்தாலும் சகிக்காத துன்பம் தந்தாலும் நிச்சலனமாய் இருப்பவனே பிரம்மானந்த அனுபவம் பெறுவானன்றித் திடமில்லாதவனுடைய மடமை ஒருக்காலும் நீங்கவே நீங்காது.

**விடோபா:** எவ்வளவு திடமிருந்தாலும் நிச்சங்கனாய் சதா பிரம்மானுசந்தானம் செய்யாமல் போனால் மாயாந்தகார கூபத்தில் அமிழ்ந்து போவதில் சந்தேகமேயில்லை.

**ஞானேசுவரர்:** பிரம்மத்தையன்றி மாயை என்பது ஒன்று இருந்தால் அல்லவோ சதா நிஷ்டையில் இருந்து மாயையை நீக்க வேண்டும்? தன் நிழல் தன்னோடு எதிர்த்து யுத்தம் செய்யும் என்பது போல இல்லா மாயையையும் இல்லாத அகந்தையையும் ஏற்படுத்திக் கொண்டு சதா நிஷ்டையில் இருக்கவேண்டும் என்று உரைக்கின்றீர். இல்லா மாயையும் இல்லை என்று அறிந்துகொண்டு மௌனமுற்று இருக்காமல் எந்நேரமும், 'இதுவல்ல, இதுவல்ல' என்று நியதி களைதல் ஓயாச் சள்ளையல்லவா?

**விடோபா:** நியதிகளையாமலும் ஏகாக்கிரசித்தம் அடையாமலும் சாட்சியாய் இருக்காமலும் சகஜ ஞானம் பொருந்துவது எப்படி?

**ஞானேசுவரர்:** 'இதுவல்ல, இதுவல்ல' என்று நேதி செய்யச்செய்ய புற்றினுள் ளிருந்து புறப்படும் ஈசலைப்போல விஷயங்கள் மேலும் மேலும் புறப்பட்டு நிற்கும். ஏகாக்கிர சித்தம் ஆக்க, ஆக்க அடிக்க அடிக்கப் பந்து எழும்புவது போல மனம் சஞ்சலப்பட்டு நிற்கும். சாட்சியாய் இருக்க இருக்க, நிமிர்த்தப் பட்ட நாய்வாலைப்போலத் தனுவாதிகள் தானென்கிற பிரமையே வந்து

கொண்டிருக்கும். ஆதலால் அவித்தை என்னும் அகந்தையையும் மித்தை என்னும் மாயையும் சுத்திகா ரஜதம் போல் முழுவதும் மித்தையாய் எண்ணி தானே பிரம்மம் என நண்ணி விசார ஞானத்தால் கம்பீரத்துடன் இருப்பதே பிரம்மானந்தம்.

**விடோபா:** யாதொரு சாதனையும் செய்யாமல் விசார ஞானத்தால் தானே பிரம்மம் என்றிருப்பதால் துக்கமயமான விஷயாதிகளை வெல்லக் கூடுமோ? அகண்டானந்த ஆத்மாவைப் புல்லக் கூடுமோ?

**ஞானேசுவரர்:** உயிரோடு இருக்கும் பசுவே புலியைக் கொல்லாதாயின் இறந்துபோன பசு புலியைக் கொல்லுமா? அதுபோல நித்யமாகியும் நிஷ்களமாகியும் அகண்டானந்தமயமாகியும் விளங்காநின்ற ஆத்மாவை விஷயாதிகள் என்ன செய்யக்கூடும்? கொழுத்த பசுவும் புலி முன் வர அஞ்சுவது போலத் திட ஞானத்தால் பூர்த்தியடைந்திருக்கும் ஞானவான் முன் விஷயங்கள் வரவே வராது. வந்தாலும் புலிமுன் வந்த பசு எப்படி அபாயமடையுமோ அப்படியே அழிந்து போகும்.

**விடோபா:** விபசாரியோடு கூடிய சம்சாரியும் கெடுவதுபோல அஞ்ஞானி களோடு கூடிய மெய்ஞ்ஞானியும் விஷயாதிகளில் சிக்கி மனோ சஞ்சலத்தில் சொக்கி துக்கமயமாய்ப் போவான்.

**ஞானேசுவரர்:** திடமுள்ள சம்சாரி பல விபசாரிகளோடு கூடியிருந்தாலும் கற்பழியாமலே இருப்பாள். திடமில்லாதவள், கூட்டுறவில்லாதிருந்தாலும் பதிவிரதைத் தன்மைக்குத் தானே பழிதேடிக் கொள்வாள். அதுபோலத் திடமுள்ள ஞானி அநேக அஞ்ஞானிகளோடு சூழ்ந்திருந்தாலும் பூரண ஞானத்தை இழக்கமாட்டான். திடமில்லாதவன் ஏகாந்தனாயிருந்தும் பூரண ஞானத்தை இழந்துவிடுவான்.

**விடோபா:** சம்சார வியாபாரத்தில் இருந்து கொண்டு எப்படி சகஜ ஞானி யாகக் கூடும்?

**ஞானேசுவரர்:** பார்ப்பான் தோட்டி வேஷம் போட்டு நாட்டியமாடினாலும் தோட்டியாகாமல் அந்தணனாகவே இருப்பதுபோல், மெய்ஞ்ஞானி அஞ்ஞா னிகளோடு கூடி அநேகவித நடனத்திலிருந்தாலும் பரமானந்தானு போகியாகவே இருப்பான்.

**விடோபா:** எவ்வளவு திடப்பிரக்ஞை உள்ளவனானாலும் ஓர் முகூர்த்த நேரமாவது பிரம்மானுசந்தானம் செய்யாமல் போனால் பிரம்ம ஞானியாதல் துர்லபம்.



**ஞானேசுவரர்:** தோட்டி வேஷம் போட்டு நாட்டியமாடும் மறையோன் அடிக்கடி 'நான்' மறையோன் என்று எண்ண வேண்டுமோ? அப்படி நினையாவிட்டால் தோட்டியாய்ப் போவானோ? நாடறிந்த பிராமணனுக்கு பூணூல் வேண்டுமோ? நான் என்னும் அகந்தையற்றபின் மேலும் நான் என்னும் அகங்காரக் கிரந்தியை வைத்துக்கொண்டு அகம்பிரம்மம் எனும் பிரம்மானுசந்தானம் பண்ணவும் வேண்டுமோ? நாடறிந்த பிராமணனுக்குப் பூணூல் இல்லாவிடினும் பூசுரன் என்றே பூசிக்கப்படுவது போலவே நான் எனது என்னும் அகமமதையற்றவன் யாதோர் அனுசந்தானம் செய்யாவிடினும் எல்லோராலும் பூசிக்கப்பட்டு பிரம்மானுபோகியாகவே இருப்பான்.

**விடோபா:** ஜகதீஸ்வரனுக்கு இணையானவனானாலும் தான் பிரம்மம் என்கிற அனுசந்தானம் நாள்தோறும் செய்யானாகில் அஞ்ஞானியாய்ப் போவ தற்கு தடை இல்லவே இல்லை. நான் என்னும் அகந்தை கொஞ்சத்தில் போகவே போகாது.

**ஞானேசுவரர்:** விளக்கைக் கையில் பிடித்துக்கொண்டு, இருட்டே இரு என்றால் இருக்குமோ? பூனையை அருகில் வைத்துக் கொண்டு, கிளியே பேசு என்றால் பேசுமோ? அதுபோலவே தேகாதிகள் நான் என்னும் அஞ்ஞானத்தை எதிர்த்து பிரம்மமே தான் என்று அறிந்த பின் அஞ்ஞானமே! இருப்பாயாக என்றால் இருக்குமா? ஜீவேஸ்வர ஜெகத்தாதிகள் பொய் என்று அறிந்தபின் மாயையை வா என்றால் வருமா? பிரம்மம் சத்யம் என்றும் மாயை அசத்தியம் சென்றும் பிரம்மம் நிர்விகல்பம் என்றும் மாயை சங்கல்ப-விகல்பம் என்றும் தான் பிரம்மமே என்றும் சத்குருநாதன் சந்நிதானத்தில் சந்தேகமறத் தெரிந்தவனுக்கு சங்கல்பமேது? விகல்பமேது? பந்த மோட்சமேது? ஜனன மரணமேது? நாடு காடேது? சந்நியாச சம்சாரமேது? செத்தாட்டுக் கண் போல ஜெகத்தில் இருப்பவன் முன் மாயையின் சாமர்த்தியம் அணுவும் நடக்குமா? அஞ்ஞானத்தில் மடக்குமா? நன்றாக யூகித்துப்பாரும்.

**நிவர்த்திசாது:** ஓ! என் தந்தையே! நீர் வெகுநேரமாகத் தர்க்கிப்பது விந்தையே! எதை நினைத்த மாத்திரத்தில் சகல பாபங்களும் நிவாரணமாய்ப் போகுமோ, எதை ஆராயின் அனங்கன் ஆவானோ, எதனுடைய தரிசனத்தால் தன்னை மறப்பானோ, எது ஞானார்ச்சனைக்கு உகந்ததோ, ஏகமாயிருப்பது எதுவோ அதையே அறியவேண்டும். பிரியத்தைக் கொடுப்பதாகியும் ஆகண்டானந்தத்தைத் தருவதாகியும் ஒருதரம் தரிசித்தாலும் ஆயுள் இறுதிவரை நினைத்து நினைத்து வியப்படைவதாகியும் வெளியிலும் வளியிலும் சமீபத்தனாகியும் கோடிசூர்யப் பிரகாசமாகியும் மஹாவாக் கியங்களுக்கு லக்ஷியமாகியும் எப்போதும் நூதனமாகியும் விளங்குவது எதுவோ அதையே தியானிக்க வேண்டும். எதனிடத்தில் அண்டரண்ட


பிண்டரண்ட பிரம்மாண்டங்களெல்லாம் சிருஷ்டி ஸ்திதி லயங்களைப் பொருந்தி இருக்குமோ பூத பவிஷ்ய வர்த்தமானம் என்னும் முக் காலங்களிலும் பின்னமின்றி அத்வைதமாய் எந்தப் பொருளானது இருக் கின்றதோ எது அவாங்மனோகோசரமாய் இருக்கின்றதோ எது மேல் கீழ் நடுப்பக்கமும் நாமரூப விகாரமற்று இருக்கின்றதோ, அது பிரம்மம் என்று உரைக்கத்தகும் என்று வேதத்தில் முறையிட்டாலும், சராசரங் களிலும் ப்ருத்வியாதி பஞ்சபூதங்களிலும் சப்தாதி பஞ்ச தன்மாத்ரை களிலும் அவ்யக்தம் மகத்வம் அகங்காரத்வங்களிலும் சாத்வீக ராஜ சத் தமோ குணங்களிலும் இதன் பிரதிபிம்பமான த்ரிமூர்த்திகளிலும் பரமாணுக் களிலும் பரிபூரணமாய் என்றும் நீங்கா திருக்கும் பரப்பரம்மத்தை வணங்குவது எப்படி? இணங்குவது எப்படி? இப்பேர்ப்பட்டதென்று வாக்கினால் சொல்லவும் மனத்தினால் நினைக்கவும் கூடாததான வஸ்துவை வாழ்த்துவது எப்படி? மனனம் செய்வது எப்படி? எவனுக்கு ரூபம் சூனியமாயிருக்குமோ எது நாமத் துக்கு அப்பாற்பட்டிருக்குமோ அதைப் பார்க்க வேண்டும் துதிக்க வேண்டும் என்று பலரும் பேசுவ தனால் பிரயோஜனம் ஏது? ஸ்ருதி ஸ்மிருதிகளே அப்பரமாத்மாவின் நிலையை உரைத்தற்குக் கூடாமல் மௌனஸ்திதியைப் பொருந்தி இருக்குமாயின் நாம் சொல்வது எப்படி? நாமம் குணம் குறி முதலியவைகளை நீக்கியபின் எப்பொருள் உள்ளதோ, அப்பொருளாகி சமஸ்த வஸ்த்துக்களிலும் சமத்துவம் பொருந்தியிருப்பதே மேன்மையான பிரம்மத்தியானம் ஆகும். விருப்பு வெறுப்புற்று சுகதுக்க சகிதனாகி யிருக்கும் நான் என்னும் அகங்கார கிரந்தியைக் களைதலே மாட்சிமையான பிரம்ம நிஷ்டையாகும். இதுவே உண்மையாயிருக்க நீர் காட்டினில் இருக்கும் காரணமென்ன? தறிபோல் அசையாது ஓர்ஸ் தானத்தில வீற்றிருப்பது ஏன்?


விடோபா, தன் மைந்தர்களைத் தழுவி "அப்பா நிவர்த்திசாது! ஐயா ஞானேசுவரா! நீங்கள் ஜனிக்கும் போதே மெய்ஞ்ஞான நாட்டமும் சுஞ்ஞான கோஷமும் விளக்கமுற்றிருந்தவர்கள். ஆதலால் உங்களுடன் வாது செய்ய என்னால் ஆகுமோ! மஹானுபாவர்களாகிய உங்களை மைந்தர்களாய்ப்பெற என்ன பாக்கியம் செய்தேனோ! ஏது தவம் செய்தேனோ!" என்று சொல்லித் தம் மைந்தர்கள் அறிவுறுத்தியபடியே காட்டை விட்டு நாட்டுக்குச் சென்றார்.

**சித்தஞ் சிறிதசையச் சம்சார நிச்சலமாச்**
**சித்தநிலை நிற்குமுத்தி சித்தமிது - சித்தந்**
**திரமாக்க வேவேண்டும் ஆதலினாற் றீமான்**
**பரமாம் பிரஞ்ஞையினாற் பார்**

— **தேவிகாலோத்தரம்** நூல்திரட்டு







# ஸ்ரீ ரமணாஷ்டகம்

க. இராமச்சந்திரன் (இலங்கை)

குருவடிவங் கொண்டிலகுங் குமரன் கண்டாய்
    குன்றாத தவவாய்மை யுடையான் கண்டாய்
மருள்மனத்தார்க் கறிவரிய மன்னன் கண்டாய்
    மன்னர்களும் பதம்பணியும் மகிபன் கண்டாய்
உருகடியார்க் காரமுத மானான் கண்டாய்
    உள்ளறிவாய் நின்றொளிருஞ் சோதி கண்டாய்
திருவருணை வீற்றிருக்குஞ் செல்வன் கண்டாய்
    திருவளர்வேங் கடரமணச் செம்ம றானே. 1.

ஆர்வமிலார் தமையணுக மாட்டான் கண்டாய்
    ஆருமிலார்க் காருயிரே போல்வான் கண்டாய்
பார்வையினாற் பவமொழிக்கும் பகவன் கண்டாய்
    பக்தர்களை யீடேற்றும் பரமன் கண்டாய்
சூர்தடிந்த செவ்வேளின் றோற்றங் கண்டாய்
    சுருதிகளின் முடிவான பொருடான் கண்டாய்
பார்புகழுந் திருவருணைப் பதியில் வாழும்
    பரமகுரு வாம்ரமண மூர்த்தி தானே. 2.

முன்னொருநாட் சனற்குமர னாகத் தோன்றி
    மூவருடன் மறைபயின்ற முருகன் கண்டாய்
பின்னொருகாற் சம்பந்தப் பெருமா னாகிப்
    பிறைசூடி மகிழ்ப்பண் ணிசைத்தான் கண்டாய்
மன்னுயிர்க ளுய்வதற்காய்ப் பாண்டி நாட்டில்
    மறுபடியும் வந்துதித்த மணாளன் கண்டாய்
உன்னுவா ருளத்தொளிரு முண்மை கண்டாய்
    உலககுரு வாம்ரமண மூர்த்தி தானே. 3.

கருணைக்கோர் திருவுருவ மாயி னானைக்
    காத்துரட்சிப் பளிப்பதுவே கடனா னானை
அருணைக்கோ ரணிவிளக்கா யமர்ந்தான் றன்னை
    அன்பர் துன்பங் களைவதுவே தொழிலா னானை
இருள்கடிய வெழுகின்ற விரவி யேபோல்
    எம்போல்வா ரிதயவிரு ணீக்கி யானக்
குருவடிவி லுதித்தரம ணேசன் றன்னைக்
    கும்பிட்டு வெம்பிறவிக் குறைதீர்ப் போமே. 4.

தீராநோய் தீர்த்தருளுந் தீரன் றன்னைத்
திருவிழியாற் றீவினைக ளீர்ப்பான் றன்னை
யாராலு மளவிடுதற் கரியான் றன்னை
யாவர்க்கு மணுகுவதற் கெளியான் றன்னைப்
பாராரும் விண்ணோரும் போற்று வானைப்
பக்தர்களும் முக்தர்களும் பரிந்து போற்றுஞ்
சீரானை ஸ்ரீரமண தேவன் றன்னைச்
சிந்தித்துப் பந்தமறுத் துய்வோம் யாமே. 5.

கந்தனென்ற திருப்பெயர்கொண் டமரர் தம்மைக்
காத்தவர்தம் பதியளித்த கடவு ளன்னைச்
சுந்தரனார் திருமகனாய்த் தோன்றி னானைச்
சுழியலுக்கோர் தனிப்பெருமை சூட்டி னானைத்
தந்தையிட்ட கட்டளையைத் தலைமேற் கொண்டு
தரணிபுகழ் திருவருணைத் தலத்தே யோடி
வந்தவனை வள்ளல்ரம ணேசன் றன்னை
வழுத்துவார் வெம்பிறவிக் கரைகண் டாரே. 6.

அன்னைக்கு மரும்பதவி யருளி னானை
அருணைக்குப் புதுப்பெருமை யளித்தான் றன்னை
முன்னைக்கு முன்னான முதல்வன் றன்னை
மூவர்க்கு மேலான மூர்த்தி தன்னைத்
தன்னருகி னிம்மதியாய்த் தங்க வைத்துத்
தன்னடியார் கூட்டத்தைச் சாரச் செய்தே
என்வினைதீர்த் தாட்கொண்ட ரமணன் றன்னை
ஏத்துவார் யாமேத்துங் கடவு ளாரே. 7.

தாயாரா மழகம்மைத் தேவி யார்தந்
தனித்தவத்தைக் கண்டுமிகத் தயவு கூர்ந்தே
சேயாக வந்துதித்த செவ்வே ளன்னைச்
செருக்குற்றா ரறிகுவதற் கரியான் றன்னை
ஓயாத கவலையினா லுளம்புண் ணாகி
ஒளிதேடி வந்தடைந்த வன்பர் தங்கள்
தாயாகித் தந்தையுமாய்க் குருவா னானைத்
தரணிபுக ழருணைதனிற் காண லாமே. 8.

–o0o–



# அருணாசலத்தில் விளங்கும் கைலாசபதி

(பொன் விழா மலரில் ஆங்கிலத்தில் வெளிவந்த கட்டுரையைத் தழுவியது)

## கோர்க்கா தக்ஷிணபாபு ஸர்தார் ருத்ரராஜ பாண்டே

(நேபாளம்)

நான் பிரவிருத்தி தர்மத்தில் ஈடுபட்டவனாயினும் சிறுபிராயத்திலிருந்து எனக்குச் சிறிது அத்யாத்ம சிந்தனையும் உண்டு. பால் பிரண்டன் எழுதியுள்ள புத்தகங்களைப் படித்ததும், மகரிஷிகளை நேரில் தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று. இரண்டு வருடங்களுக்கு முன் இவ்வபிலாஷையைப் பூர்த்தி செய்து கொள்ளும் சந்தர்ப்பம் இறைவன் அருளால் கிடைத்தது. ரமண பக்தரான நேபாள மகாராஜா அவர்களே எனக்கு இந்த சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுத்ததற்கு, எனது நன்றி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையை அடைந்ததும் நேரே ஆச்ரமம் சென்றேன். மகரிஷிகள் ஒரு ஸோபாவில் உட்கார்ந்திருக்கிறார். தன்னில் தானே ரமிப்பவராய், தெளிவும் பிரசாந்தமும் பொருந்தியவராய் விளங்குகிறார். வணக்க ஒடுக்கத்துடன் அன்பர்கள் பலர் அவரைச் சுற்றி அமர்ந்திருக்கிறார்கள். பார்த்த மாத்திரத்தில் ஒரு விஷயம் என் மனதில் பட்டது. வர்ணாச்ரம தர்ம பேதமோ, திரவித்தியாசமோ ஏழை பணக்காரன் என்ற தாரதம்யமோ இங்கே காணப்படவில்லை. முதலில் மனதைக் கவரும் விசேஷ அம்சங்கள் ஒன்றும் மகரிஷிகளிடம் காணாதது, எனக்கு வியப்பாகவே இருந்தது.

இதற்கு முன் இமயமலைப் பிரதேசங்களில் ஏகாந்த வாச யோகிகளைப் பார்த்திருக்கிறேன். இப்பொழுது அருணாசலத்தில் மகரிஷிகளைக் கண்டவுடன், இவரும் அத்தகைய யோகிபோலும் என்று தாற்காலிகமாக முடிவு கட்டிக் கொண்டேன். ஆனால் அதிசீக்கிரத்திலேயே நான் பார்த்த யோகிகளுக்கும் இவருக்கும் பெருத்த வித்தியாசம் இருப்பதை உணர்ந்தேன்.

நான் ஆச்ரமத்திற்கு வருமுன் பல சந்தேகங்களை மகரிஷிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று சிரத்தையுடன் கேள்விகளைத் தயாரித்து வைத்திருந்தேன். ஆனால் எனது கேள்விகளை விட மிகவும் சாரமான விஷயங்களைப் பற்றி ஸ்ரீ பகவான் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அதைக் கேட்டதும் எனது சந்தேகங்கள் அனைத்தும் அர்த்தமற்றதாகி விட்டன. மகரிஷிகளிடம் கேட்பதற்கு முன்னரேயே அன்பர்களின் சந்தேகங்கள் நிவர்த்தியாவது சந்நிதியில் சர்வ சகஜமெனப் பின்னர் தெரிந்து கொண்டேன். இவ்விதமான அதிசயங்கள் நிகழ வேண்டும் என்றால், பகவானிடம்

ஏதோ மகத்வம் இருக்க வேண்டும். ஆனால் இதிலிருந்து இன்னும் எனக்குப் பூரண நம்பிக்கை பிறக்கவில்லை. நமஸ்காரம் செய்ய வேண்டும் என்றோ அவர் பாதகமலங்களைத் தொடவேண்டும் என்றோ எனக்கு அப்போது தோன்றவில்லை. எனது பக்குவக் குறைவினால் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறியதை எண்ணி இப்பொழுது வருந்துகிறேன். ஆனால் ஆச்ரமத்தை விட்டுப் புறப்படும் முன்னரேயே, அடுத்து நிகழ்ந்த சில சம்பவங்களால் மகரிஷிகளின் மகிமை எனக்கு நன்கு விளங்கிவிட்டது. அன்பர் ஒருவர் காசியில் மரணமடைவதால் முக்தி என்றும், அருணாசலமோ நினைத்த மாத்திரத்தில் முக்தி அளிக்கவல்லது என்றும் புராண வசனத்தை எடுத்துச் சொன்னார்; பக்கத்தில் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் அருணாசல பர்வதமும், 'அப்படித்தானே' என்று என்னைக் கேட்பது போலிருந்தது. உடனே அருணாசலேச்வரரை தரிசிக்க வேண்டியது என் கடமை என்று உணர்ந்தேன்; மகரிஷிகளிடமும் சொல்லிக் கொண்டு மாலை மூன்று மணிக்குக் கோவிலை அடைந்தேன். இவ்வாலயம் மிகவும் பிரம்மாண்டமானது. பார்ப்போர் மனதில் பிரமிப்பையும் வியப்பையும் பயபக்தியையும் ஊட்டவல்லது. நாற்பது அடி உயரமுள்ள மதில்களால் சூழப்பெற்றது. வானளாவி நிற்கும் கோபுரங்கள் பல உண்டு. கிழக்கு கோபுரத்தின் உயரம் இருநூற்றுப்பத்து அடி. அபூர்வமான இவ்வாலயத்துள் நான் நுழைந்ததும், கோவிலைச் சேர்ந்த அன்பர் ஒருவர் எனக்கு வழிகாட்டியாக இருக்க முன் வந்தார். மூர்த்திகளின் பல சந்நிதிகட்கும் என்னை இட்டுச் சென்று ஒவ்வொன்றின் விசேஷத்தினையும் எனக்கு விளக்கிச் சொன்னார். நமது மகரிஷிகள் தவம் செய்த இடங்களையும் காட்டினார். விநாயக விக்கிரகத்தின் அமைப்பைக் கண்ணுற்று நான் வியப்படைந்தேன். விக்னேச்வரனுக்கு முதலில் அர்ச்சனை செய்யவேண்டும் என்று சொல்லவே அங்ஙனமே செய்துவிட்டு, அருணாசலேச்வரர் சந்நிதியை நோக்கிச் சென்றோம். இன்னும் கதவு திறக்கவில்லை என்றும் அதற்குள் அம்மன் சந்நிதி சென்று வரலாம் என்றும் எனது அன்பர் சொன்னார். உடனே அடுத்தாற் போலிருந்த அபீதகுசாம்பாள் சந்நிதியை அடைந்து, தரிசனம் செய்துகொண்டு சுவாமி சந்நிதிக்குத் திரும்பினோம். கதவு இன்னும் திறக்கவில்லை. இச்சமயத்தில் காலையில் ஆச்ரமத்தில் கண்ட பக்தர் ஒருவர் அவ்விடம் வந்து சேர்ந்தார். இருவரும் மகரிஷிகளின் உபதேசங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எனது கருத்துக்களை அவர் ஆமோதிப்பவராகக் காணப்பட்டார்.

அருணாசலேச்வரர் கர்ப்பக்ருஹம் இதற்குள் திறக்கப்பட்டது. உள்ளே இருட்டாகத்தான் இருந்தது. கொஞ்ச தூரத்தில் ஒரு சிறு எண்ணெய் விளக்கு மட்டும் மினுக்மினுக் என்று எரிந்து கொண்டிருந்தது. எனது அன்பர், 'அருணாசலா அருணாசலா' என்று உரக்க உச்சரித்தார். லிங்க ரூபம் கொண்டு இலகும் அவ்யக்த பிரம்ம சொரூபத்தைக் காணவேண்டும் என்பதிலேயே எனது கவனம் முழுதும் நின்றது. ஆனால் இது என்ன ஆச்சரியம்! லிங்க ரூபத்திற்குப் பதிலாக பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகளின்



உருவத்தையே கண்டேன். முறுவல் பூத்த முகமும் ஒளிவீசும் கண்களும் என் முன்னே தோன்றின. சிறிது நேரத்தில் எனது வியப்பும் பிரமிப்பும் இன்னும் பன்மடங்கு அதிகரித்தன. கர்ப்பகிருகத்தில் எனது பார்வை விழுந்த இடமெல்லாம் நூற்றுக்கணக்கான மஹரிஷிகளின் வடிவமே – முகாரவிந்தமே – காணப்பட்டது. நான் ஆனந்த பரவசமுற்றேன். அப்பொழுது நான் அனுபவித்த சாந்த சுகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. ஆனந்தபாஷ்பம் கன்னங்களில் வழிந்தோடியது. **ஆலயம் சென்று அருணாசலேசரைக் காண எண்ணினேன். ஆனால் கண்டது எதை! அனுக்ரஹ நிமித்தம், மானிட ரூபந்தாங்கி ஒளிரும் பகவான் ஸ்ரீ மஹரிஷிகளையே தரிசித்தேன்.** புராதனப் பெருமை வாய்ந்த இத்தேவாலயத்துள் நான் கண்கூடாகக் கண்ட இவ்வதிசயம் என் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. மகர்ஷிகளின் மகத்துவத்தை விளக்க இச்சம்பவம் ஒன்றே போதும்.

அன்று இரவே திருவண்ணாமலையை விட்டு நான் புறப்பட இருந்ததால், சீக்கிரம் கோவிலை விட்டு ஆச்ரமத்தை நோக்கி விரைந்தேன். அப்பொழுது மணி *4.45*; மகரிஷிகள் மாலையில் மலைப்பக்கம் போகும் சமயம், நான் புறப்படும் விஷயத்தை ஸாது ஒருவர் அவரிடம் தெரிவித்தார். உடனே பகவான் புன்முறுவலுடன் என்னை நோக்கி அனுக்கிரஹித்தார். கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்து வந்ததில் திருப்திதானே என்று கேட்பது போலிருந்தது. கருணை நிறைந்த பகவானது திருஷ்டியினால் நான் பரவசம் அடைந்தேன். அவரது அனுக்கிரஹத்தால் நான் பெற்ற இன்பத்திற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். கோவிலில் நிகழ்ந்த அதிசயம் என்றும் என் மனதை விட்டு அகலாமல் உற்சாகமூட்டிக் கொண்டே இருக்கிறது. இந்தக் காட்சியைச் சிலர் பிரமை – வெறும் மன மயக்கம் – என்று சொல்லலாம். ஆனால் நான் அடைந்த சாந்த சுகமும் ஆண்டவனுக்கு என்னை ஆளாக்கிய ஆழ்ந்த உள்ளுணர்ச்சியும் பார்வைக் கோளாறால் ஏற்பட்ட மாயத்தோற்றம் அல்லவே! அவ்வித அதிசயத்தைக் காணும் பாக்யம் கிடைத்ததே என்று எண்ணி எண்ணி இப்பொழுதும் திருப்தி அடைகிறேன். இதய ரூபமாய் என்னிடம் இலகும் ஈச்வரனிடம் என்னை ஒப்பித்துவிட்டேன்; இனி நான் அவரது உடைமை.

இரண்டு வருஷங்கள் சென்று, மறுபடியும் மஹரிஷிகளைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கிடையில் பகவானைப் பற்றித் தெரிந்து கொண்டு அவரது உபதேசங்களையும் வாழ்க்கை வரலாற்றையும் நன்கு படித்துணர்ந்தேன். இறைவன் அருளால் எனக்குப் பூரண நம்பிக்கையும் பக்தியும் ஏற்பட்டுள்ளன.

– oOo –

11

# அதிவர்ணாச்ரமி

(பகவான் எந்த வர்ணாச்ரமத்தைச் சேர்ந்தவர் என்று ஒருகால் அவரை வினவியபோது, அவர் தாம் வர்ணாச்ரமங்களைக் கடந்த அதிவர்ணாச்ரமத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டார். முருகனாரும் "யதிகள் பன்னூராயிரர் பணிந்தேத்தும் அதிவன்னாச்சிரம ஆரியன் போற்றி" என்று பகவானைப் புகழ்ந்திருக்கிறார். அதிவர்ணாச்ரமத்தைப் பற்றி உபநிடதங்களும் சூத சம்ஹிதையும் விரிவாகப் பேசுகின்றன. சதாசிவப்பிரம்மேந்திரரால் தொகுக்கப் பெற்ற "சூத சம்ஹிதாசாரம்" என்னும் நூலில் உள்ள, அதிவர்ணாச்ரமியின் இலக்கணம், அனுபவம், பெருமை ஆகியவைகளை விளக்கும் சுலோகங்களின் கருத்தை இக்கட்டுரையில் காணலாம்)

## அதிவர்ணாச்ரமியின் இலக்கணம்:

எந்த உத்தம புருஷன் அஞ்ஞான காரியங்களான மெய், வாய், கண், செவி, மூக்கு முதலிய இந்திரியங்களினின்றும் பிரிவுபட்டதாகவும் எல்லா நாமரூபங்களுக்கும் சம்பந்தப்படாத சாக்ஷியாகவும் மாயை அவித்தைகளாகிற உபாதிகளின் சம்பந்தமற்ற யதார்த்த அறிவாகவும் ஆனந்தகன வியாபக ஆத்மாவாகவும் தானாகவே பிரகாசித்துக் கொண்டிருப்பதாகவும் இருக்கிற யதார்த்த ஆத்மாவை நன்றாகத் தெரிந்து கொண்டவனோ, அந்த மஹா புருஷன் சரீர சம்பந்தமான வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்த வனாகிறான்.

எந்த மஹாபுருஷன் நனவு, கனவு, துயில் ஆகிய அவஸ்தைகளினின்று விடுபட்டதாகவும் அவைகளை விளக்குவதாகவும் உள்ள மஹாபிரகாச ஆத்ம ஸ்வரூபத்தை அனுபவமாகத் தெரிந்திருக்கிறானோ அந்த உத்தமன் வர்ணாச்ரம தர்மங்கள் இல்லாதவனாகிறான்.

எந்த மஹாபுருஷன் உபநிஷத்துக்களிலுள்ள மஹாவாக்கியங்களின் அர்த்த நிச்சயமாகிற ஜீவப்ரம்ம ஐக்கியமாகிய ஏகத்துவத்தை குருமுகமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வதனாலே, தன்னை எல்லாப் பிராணிகளின் இதயத்திலிருந்து நியமிக்கிற ஈசுவரனாகத் தெரிந்து கொண்டவனோ அந்த உத்தமன் வர்ணாச்ரம தர்மங்களைத் தாண்டினவனாகிறான்.

"எனக்கு பிராமணன் முதலான வர்ணங்களும் பிரம்மச்சரியம் முதலான ஆச்ரம தர்மங்களும் எப்போதும் அஞ்ஞானத்தினால் சரீரத்திலிருக்கின்றன; பூர்ணானந்தகனமாக இருக்கிற ஆத்மாவாகிற என்னிடத்தில் அவைகள் என்றும் இல்லவே இல்லை" என்று எந்த உத்தம ஞானி உபநிஷத்து முதலான சாஸ்திரங்களினால் தெரிந்து கொண்டவனோ அந்த மஹா புருஷனே வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்தவனாகிறான்.



"நாமரூபப் பிரபஞ்சமாகப் பார்க்கப்படும் இவ்வுலகம் சூரியன் முன், தானாகவே எங்ஙனம் காரியங்களைச் செய்கிறதோ அவ்விதமே வியாபகப் பிரகாச ஆத்மாவாகிற என்முன்னால் அவித்யாகாரிய நாமரூபப் பிரபஞ்சங்கள் தானாக காரியங்களைச் செய்கின்றன" என்று எவன் வேதாந்த சாஸ்திரங்களினால் தெரிந்து கொண்டானோ அந்த மஹாபுருஷனே வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்தவனாகிறான்.

"தங்கத்தில் மாலை, தோள்வளை, காப்பு, கங்கணம், ஒட்டியாணம் முதலான ஆபரணங்கள் மனத்தின் விகாரத்தினால் எங்ஙனம் கற்பிக்கப் பட்டவைகளோ அங்ஙனமே தோற்றமாகிய நாமரூபப் பிரபஞ்சமானது, எப்பொழுதும் அஞ்ஞான ரூப மனோவிருத்தியினால் பிரகாச ஆத்மாவாகிய என்னிடத்தில் கற்பிக்கப்பட்டவைகள்" என்று எந்த மஹாபுருஷன் வேதாந்த சாஸ்திரங்களினால் நிச்சயமாகத் தெரிந்து கொண்டானோ அந்த மஹாசித்த புருஷன் வர்ணாச்ரம தர்மங்களைத் தாண்டினவனாகிறான்.

"சிப்பியில் வெள்ளியானது எவ்விதம் அஞ்ஞானத்தினால் கற்பிக்கப் பட்டதோ அவ்விதமே அஞ்ஞானகாரிய நாமரூபப் பிரபஞ்சங்களும் வியாபக ஆத்மாவாயிருக்கிற என்னிடத்திலேயே கற்பிக்கப்பட்டவைகள்" என்று எந்த மஹாதீர புருஷன் வேதாந்த சாஸ்திரங்களினால் அனுபவ ரூபமாகத் தெரிந்து கொண்டவனோ அவனே வர்ணாச்ரம தர்மங்களைத் தாண்டினவனாகிறான்.

"இழிந்த சரீரத்திலும் ஓரறிவுடைய நாலுகால் ஜந்துக்கள் முதல் பக்ஷி புழுக்கள் வரையிலுள்ள சரீரங்களிலும் உயர்ந்த குலத்தோன் என்று சொல்லப்பட்டவர்களான பிராமணன் முதலிய சரீரத்திலும் அல்லது பிரம்ம தேவன் முதலிய தேவ சரீரங்களிலும் இவைகள் தவிர தாவரங்களாயுள்ள மரம், செடி, கொடி, கல், மண் முதலிய சரீரங்களிலும் ஆகாசத்தைப் போல் எங்கும் வியாபித்திருப்பதாகவும் எல்லா நாமரூப உபாதிகளின் சம்பந்தம் இல்லாததாயும், உற்பத்தி நாசங்களற்ற மேலான அமிர்தமாயும், நாம ரூபங்களால் ஏற்பட்டுள்ள பிரிவில்லாத பூரணரூபமாயும் மஹாபிரகாசமாய் இருக்கிற அந்த பூர்ணாத்மாவாக இருக்கிறவன் நான்" என்று எந்த புருஷன் அனுபவரூபமாகத் தெரிந்து கொண்டவனோ அந்த மஹாபுருஷன் வர்ணாச்ரம தர்மங்களைத் தாண்டினவனாவான்.

"திசைகள் தெரியாத இடத்தில் தெரிந்தவனால் காண்பிக்கப்பட்டதால் தெரியாமையானது நிவர்த்தியடைந்தாலும் முன்போல் வேறொரு சமயத்தில் அந்த இடத்தில் வரும்போது முன் பிரமம் (மயக்கம்) உண்டான இடம் என்று தோன்றுகிறதோ அங்ஙனமே பரிபூரண ஆத்ம ஞானத்தினால் நாசமடைந்த நாமரூப ஜகத்தானது எனக்கு பூர்வ வாசனையினால் தோன்றுகிறது; அப்படிப் பட்ட நாம ரூபமுடைய ஜகத்தென்பது இல்லை"

என்று எந்த மஹானுக்கு நிச்சயஞானம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த மஹாத்மாவே வர்ணாச்ரமங்களைக் கடந்தவனாகிறான்.

"எவ்விதம் இந்த மனத்தினால் கற்பித்த கனவில் தோன்றுவதான நாமரூபப் பிரபஞ்சங்கள் என்னிடத்தில் அஞ்ஞானத்தினால் இருக்கிறவை போல விகாசத்தை (விரிவை) அடைகின்றனவோ, அவ்விதமே விவகாரத்திற்கு யோக்கியம் போல் காணப்படுவதான நாமரூபப் பிரபஞ்சமும் உபாதியில்லாத சுத்தப் பிரம்மத்தில் மாயையினால் கற்பனையாகத் தோன்றுகிறது என்று எந்த உத்தமன் நிச்சய ஞானத்தை அடைந்திருக்கிறானோ அந்த தீரபுருஷனே வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்தவனாகிறான்.

பரிபூர்ண ஆத்மஞான சித்தியடைந்த எந்த மகானுக்கு, நிருபாதிகப் பிரகாச ஆத்மாவாகத் தன்னை அறிந்து கொண்டதனால் சரீர சம்பந்தங்களான பிராமணன் முதலான வர்ணங்களுடையவும் பிரம்மச்சரியம் முதலான ஆச்ரமங்களுடையவுமான தர்மங்கள் யாவும் தானாகவே நழுவுகின்றனவோ, எந்த மஹாபுருஷன் அஞ்ஞானத்தினால் தோன்றிய சரீர சம்பந்தமாயுள்ள வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்து சொப்பிரகாச பரிபூரண ஆத்மாவில் தானாகவே இருக்கிறானோ அம்மகானை சகல வேதசாஸ்திர ரகசியார்த்தங்களைத் தெரிந்த மஹாபுருஷர்கள், வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்திருப்பவன் என்று சொல்கிறார்கள்.

## அதிவர்ணாச்ரமியின் அனுபவம்

அஞ்ஞானத்தினால் வந்த பிராமணன் முதலிய வர்ணங்களும் அவற்றிற்குட்பட்ட பிரம்மச்சரியம் முதலான ஆச்ரமங்களும் ஆத்மா அனாத்மாக்களின் லக்ஷணம் தெரியாததான மயக்கத்தினால் பூரணப் பிரகாச ஆத்மாவில் கற்பிக்கப்பட்டவை; வாஸ்தவமாக உள்ள பிரகாச ஆத்மாவை யதார்த்தமாகத் தெரிந்து கொண்டவனுக்கு அந்தக் கற்பனா நாமரூப வர்ணாச்ரமங்கள் இல்லை.

**யதார்த்த ஆத்ம சொரூபத்தைத் தெரிந்து கொண்ட ஞானிகளுக்கு இன்னது செய்ய வேண்டும் என்ற விதியும் இன்னது செய்யக்கூடாது என்ற விலக்கும் இல்லை.** அவ்விதமே தோன்றி மறைவதான எதுவுமில்லை. உபாதிகளோடுள்ள நாமரூபங்களின் சம்பந்தமில்லாத பூரண போதானந்த ஞானிகளுடைய அனுபவ ரூப இருப்பை, பிரமத்தை (மயக்கத்தை) அடைந்த மனிதர்கள் எப்போதும் தெரிந்து கொள்வதில்லை. அஞ்ஞான காரிய புத்தி விருத்தியினால் உண்டாகாததாயும் தானாகவே சித்தித்திருப்பதாயுமிருக்கிற நிருபாதிக பூரணப் பிரம்ம ஞானத்தை அடைந்த **ஆத்ம ஞானியுடைய இந்த ஞான நிஷ்டையானது, மாம்சக் கண்ணின் பார்வையுடையவர்க்குத் தெரிந்து கொள்ளச் சாமர்த்தியம் இல்லவே இல்லை.** சீதோஷ்ணம், சுக



துக்கம், உற்பத்தி நாசம் முதலான இருமைகள் இல்லாததாயும் சரீராதி அவயவங்களற்றதாயும் தமோ குணத்தினால் உள்ள மறைப்பு இல்லாததாயும் நாசமற்றதாயும் அவித்தையினால் தோன்றி மறைகின்ற அசுத்த நாமரூபங்கள் இல்லாததாயும் வேறுவிதமாகக் காட்டும் மயக்கத் தோற்றமில்லாததாயும், ஸ்வபாவப் பிரகாசமுள்ளதாயும் அஞ்ஞான விஷய சம்பந்தமில்லாத மேலான ஆனந்தமாயும் வியாபகமாயுமிருக்கிற தன் சொரூபத்தை எந்த மஹா உத்தம புருஷன் வேதாந்த சாஸ்திரங்களினால் சந்தேக விபரீதங்களறத் தெரிந்து கொண்டு தன்னுடைய அனுபவத்தினாலேயும் நிச்சயத்தை அடைந்தவனோ, அந்த திவ்விய ஞான சித்த புருஷனே வர்ணாச்ரம தர்மங்களைக் கடந்திருப்பவன். அந்த மஹா புருஷன்தான் உத்தமர்களாயுள்ள குருக்களுக்குள் உத்தமமான குருநாதன்; அஞ்ஞான காரிய நாமரூபப் பிரபஞ்சங்களை சத்தியமாகப் பார்ப்பவர் குரு ஆகார்.

## அதிவர்ணாச்ரமியின் மஹிமை

எந்த இடத்தில் பூரண ஞானியானவன் வாசம் செய்கிறானோ அந்த இடத்தில் நான் (ஈஸ்வரன்) சதா இருக்கிறேன். **ஒரு நிமிஷமாவது அரை நிமிஷமாவது எந்த இடத்தில் ஞானி இருக்கிறானோ அந்த இடத்தில் சகல தீர்த்தங்களும் சாக்ஷத்தாகவே இருக்கின்றன;** இதில் சிறிதும் ஐயமில்லை. எந்த மனிதன் அறிவில்லாமல் சரீர மதத்தினால் பிரம்ம நிஷ்டையுடைய பூரண ஞானிக்குக் கெடுதியான காரியத்தைச் செய்கிறானோ அந்த அதமனான மூடன் ஈஸ்வரனுக்குக் கெடுதியைச் செய்தவனாகிறான். சந்தேகமேயில்லை. பூரணப் பிரகாச ஆத்மஞானியையும் ஈஸ்வரனையும் எந்த அதமர்கள் விசேஷமாகப் பிரிவுபடுத்திச் சொல்லுகிறார்களோ, அந்தக் கெட்ட மனிதர்கள் அறிவில்லாத மூடர்களே; அந்த விஷயத்தில் விசாரிக்கவே வேண்டியதில்லை. ஆகையினால் பூரணாத்ம ஞான நிஷ்டையை உடைய அவர்களே எல்லா மனிதர்களாலும் மிகுந்த சிரத்தா பக்தியுடன் பூஜை செய்வதற்கு உரியவர்களாவர்.

-o0o-

சேஷாத் திரியாருஞ் சேர்ரமண மாமுனியும்
ஆசாரத் தோடே யமர்பதியு - மீசவென்
றெண்ணக் குறைதவிர்க்கும் எம்மா ஞறைபதியும்
அண்ணா மலையென்ப ரால்.

**— சிந்தாதிரிப்பேட்டை**
**ஷண்முக பக்தஜன சபையார்**
(29.11.1944)

# உபதேச உந்தியார் - கருத்துரை

## முருகனார்

பலதிறப்பட்ட பக்குவ முன்னோர்க்கும் பயன்படத் தக்க வகையில் சாதனக் கிரமம் முழுமையும் அடங்க பகவான் மஹர்ஷி சுருக்கமாக அருளிய உபதேச சாரம் இதுவாம்.

ஜீவகோடிகளுள் வளம்பட வேண்டாதார் யார் யாருமில்லை. அவருட் பெரும்பாலோரான உலகியலோர், தமக்கு வேண்டிய பயன்களான அவ் வளங்களைத் தமது கன்மமே தரவல்லதாகலின் அதுவே பரம் போலத் தவறாகக் கருதுகின்றனர். அன்னார், பல பசுக்களடங்கியதோர் பெருமந்தையிற் கொண்டுபோய் விட்டாலும் கன்று தன் தாயை நாடியடைதல் போன்றே, கன்மமும் தன் கர்த்தாவைத் தேடியடைந்து பயனளிக்குமெனத் திடமாக நம்பிக் குதர்க்க வாதஞ் செய்கின்றனர். கன்று சேதனமும் கன்மம் அசேதனமுமாகலான் அவர் வாதம் பொருந்தாது. ஜடமான கன்மம் செய்தார்க்குப் பயனளித்தல் சுத்த ஞான சொரூபியான கடவுள் கட்டளையாம். எனவே, சர்வ கர்த்தாவும் சர்வ நியந்தாவுமான அவனே பரம். கன்மம் அதன் போக நுகர்ச்சியால் ஒரு விதத்தில் அழியினும், மற்றொரு விதத்தில் அதுவே கன்ம பீஜமான வாசனை வடிவில் உயிரோடுள்ளத்திற் பதிந்து கிடந்து மேன்மேலும் கன்மக் கடலில் தள்ளுவதல்லது கன்ம விடுதலையான சற்கதி கூட்டுவதன்றாம். எனினும், நிட்காமியமாய் ஈச்வரார்ப்பணமாகச் செய்யப் படின் அதுவே சித்த சுத்தியுண்டாக்கும் வாயிலாக முக்தி வழியும் காண்பிக்கும். முறையே உடல் வாக்கு உள்ளத் தொழில்களான பூஜை, ஜபம் தியானங்கள் ஒன்றினொன்று நுட்பமாய் ஏற்ற முடைத்தாம். காணப்படுமெல்லாம் கடவுள் வடிவாகக் கருதி அவ்வவற்றுக்கேற்பத் தொண்டு செய்தொழுகல் மகத்தான கடவுட் பூஜையாம். வாசிகத்தில், துதியைக் காட்டிலும் ஜபமும், அந்த ஜபத்திலும் வாய்விட்டுச் செய்வதைக் காட்டிலும் வாய்க்குட் செய்வதும் விசேடமாம். அவ்விருவகைப் பட்ட ஜபத்தினும் மாண்புடைத்தான மானசிக ஜபமே தியானமெனப்படும். அந்தத் தியானத்தில், விட்டு விட்டுச் செய்வதைக் காட்டிலும், ஆற்றொழுக்குப் போலவும் தைல தாரை போலவும் ஒரே தொடர்ச்சியாகச் செய்யப்படுவது மனோபலத்தால் மாட்சிமைப் படுவதாம். பேத பாவனையினும் கடவுளைத் தன் ஆன்ம சொரூபமாகவே கருதுவதான அபேத பாவனையே பாவனைகளின் மிக்கதாம். அத்தகைய பாவனா பலத்தால், பாவனை கடந்த சுபாவமான உண்மை நிலையில் ஊன்றி யுறைதலே பரபக்தியின் உண்மை. மனம் உதித்தவிடத்தில் ஒடுங்கியிருத்தலே கன்மம், பக்தி, யோகம், ஞானம் அனைத்துக்கும் பொதுவாக முடிந்த கருத்தாம். விரிந்த மனத்தை ஒடுக்கும் உபாயம் பிராணாயாமம்; அதனால், வலையிலகப்பட்ட பறவை போல மனமொடுங்கும். பிராணாயாமத்தால் மனமொடுங்குவதன் காரணம், முறையே அறிவு ஆற்றல்களோடு கூடிய அம்மனமும் பிராணனும் ஒரே மூலத்தினின்று



கிளைத்தலாம். மனம் தாற்காலிகமாய் அடங்கியிருந்து மீண்டெழுவதான லயமும், தன்னுருவழிந்ததால் என்றுமே எழாததான நாசமும் என மனவொடுக்கம் இரண்டாம். பிராணாயாம சாதனத்தால் ஒடுங்கப் பெற்ற மனத்தை ஒரே பொருள் மேல் அகமுகமான ஒரு வழியிற் செலுத்தும் தீவிரத் தியானத்தால் மனம் உருவழிவதாம். மனம் உருவழிவதால் அருவமா முண்மையில் நிலைத்த யோகி பரமார்த்தமான சொருபவியல் சார்ந்தோனாய்ச் செய்வதற்கொன்று மிலாக் கிருத கிருத்தியனாம். இம்மட்டும் பக்தி சாரமான தியானப் பிரதான யோக மார்க்கம். இனி வருவது, கிருதோபாசகராய் (உபாசனையைச் செய்து முடித்தவராய்) போதிய பக்குவமுன்னோர்க்கான ஞான விசாரம்.

அன்னிய விடயங்களை யகன்று அவற்றை யறியும் முதலான தன் அறிவுருவை ஆராய்ந்தறிதலே உண்மை யுணர்ச்சியாம். மறதியற்று மனத்தின் சொருபத்தை மௌனமாக ஆராயின் மனமெனக் கூறுவதோர் பொருளே இன்றாக முடிதலின் இதுவே நேரான முக்தி நெறியாம். பலதிறப்பட்ட எண்ணங்களே மனமெனப் படுவது. 'நான்' என்னும் எண்ணமே ஏனை எண்ணங்களுக்கெல்லாம் மூலமாகலான் அவ் வெண்ணமொன்றே மனம் எனச் சுருங்க உரைக்கத் தகும். யாதானும் ஓருருப் பற்றி 'நான்' என்றுதிக்கும் மனத்தின் மூலத்தானம் எதுவென அம்மனத்தால் அகத்தே மௌனமாக ஆராயின், அந்த 'நான்' என்னும் அகந்தை தலை சாய்ந்தழியும். இதுவே ஞான விசாரம். 'நான்' என்றுதித்த அகந்தை அவ்வாராய்ச்சியின் பயனாக மீண்டொடுங்கப் பெற்ற இதயத்தினின்று வேறெதுவோ ஒன்று 'நான், நான்' என்று சுத்த ஞான சொரூபவுணர்ச்சியோடு தானாகவே மேற்கிளர்வதாம். இவ்வாறு பொங்கியெழுந்த சுத்தான்ம சொருபமாம் அது, போலியாய்க் குறுகிய முன்னையகந்தை 'நான்' போலன்றி உண்மைப் பரிபூர்ணமாம். 'நான்' என்னும் அகந்தை யுணர்ச்சி அற்றொழிந்த தூக்கத்திலும் 'நாம்' இன்றியொழியாது நிச்சயமா யிருக்கின்றோமாக நித்தம் இயல்கின்ற நம்மெல்லோர் அனுபவத்தாலும், பேதைமையால் உடலைப் பற்றி வழங்கிவரும் 'நான்' என்னுஞ் சொல்லின் முடிவான பொருள் அதுவேயாக அறியத் தக்கதாம். தேகம், கன்மேந்திரியம், ஞானேந்திரியம், பிராணன், மனம், அறியாமையான சூனியம் - இவை யாவும் ஜடமாகலின் அசத்தாயொழிதலால் சத்தான நம் ஆன்ம சொரூபம் ஆகாவாம். உள்ள பொருளான அவ்வான்ம சொரூபத்தை உணர அதற்கயலான உணர்வொன்று இன்றாகவும் 'நான் இருக்கின்றேன்' எனத் தான் தானே இருந்தொளிர்வதால், உள்ளதாம் அது உணர்வுருவேயாம். அவ்வுணர்வுருவே உண்மை நாமாக இயல்வதாம். இருப்பு மாத்திரமான உண்மைத் திறத்தால், ஈச ஜீவர் இருவரும் ஒரே பொருளேயாவர்; அப் பரமார்த்தவுண்மைக்கண் மனோ மாயா கற்பனைகளான உபாதி (உடல்) யும் அது பற்றிய சுட்டுணர்வுமே அவர்தம்முள் வேறுபடுவன. எனவே, ஈசன் நிருபாதிகமான நிஜான்ம சொரூபமாகவே நின்றொளிர்தலால், தன் சொந்த சொரூபத்தை அதன்கட் கற்பிதமான அகந்தை வடிவ உபாதி நோக்க மகற்றி உள்ளவாறுணர்தலே தன் தலைவனான ஈசனையுணர்தலாம். ஆன்ம சொரூபமான தான் இரண்டற்ற ஒரே பொருளாகச்

சுட்டறிவுக் கிடமின்றி யுள்ளதால், தான் தானாகச் சும்மாவிருத்தலே தன்னை யறிதலாம்; இதுவே தன்மய நிஷ்டை. அத்துவித வுண்மையான தனக்கு அயலாக அறிவதற்கு விடயமொன்றின்மையால், அறியாமையேயன்றி அறிதலு மற்ற வெறும் அறிவே (இதுவே கடவுளுண்மையான வாலறிவென்று வள்ளுவ ராற் கூறப்படுவது) உண்மையறிவாம். பரமார்த்தமான சொரூபவியல் எத்தகைய தென்று அனுபவத்தால் ஆராயின் ஆதி யந்தமற்ற அகண்ட பரிபூரண சச்சிதா னந்தமாம். பந்த மோக்ஷ சிந்தையற்ற பரமோபசாந்த வடிவான நிரதிசயா னந்தம் அடைந்தவாறே, அத்தகைய தன்னுண்மை நிலையில் நிலைத்து நிற்றலே இறைபணி நிற்றல் என்ற ஜீவன் முக்தி பதமாம். முடிவாக ஆராயின் 'யான்' என்னும் அகந்தை வாசனையே யின்றித் தன்னியல்பாகப் பொங்கும் சற்போ தானுபூதி தானே சிறப்பு மிக்க உண்மைத் தவமாம். சகல வேதாந்த சித்தாந்த சாரமாக தம் அனுபவத்தாற் கடைந்தெடுத்த உண்மையை வெண்ணெய் போலத் திரட்டி இரண்டே வரியில் முடிவாகச் சுருக்கி அருள்கின்றார்:

**-அகஞ்செத்து**
**அகம் அது ஆகில் அறிவுரு வாம்அவ்**
**அகம் அதே மிச்சம் அறி.**

—oOo—

முதுமொழிகள் பலவற்றைப் பாமரர் புரிந்து கொள்வதில்லை. "கல்லைக் கண்டால் நாயைக் காணோம். நாயைக் கண்டாற் கல்லைக் காணோம்" என்னும் மூதுரையை மிகவும் தூலமாய்க் கிரகிக்கின்றனர் அற்பவறிவினர். கல்லால் நயமிகச் செய்யப்பட்ட ஒரு நாயைக் காணுங்கால் அது கல்லாகத் தோன்றுவதில்லை. நாயாகவே தோன்றுகிறது. அவ்வாறின்றி அது கல்லேயென்று காணுங்கால் நாயின் வடிவம் முக்யத்வம் பெறுவதில்லை. இதுவே அம்மூதுரையின் பொருள். அவ்வாறே "மரத்தை மறைத்தது மாமத யானை, மரத்தில் மறைந்தது மாமத யானை" என்னும் மூதுரையும் மேலே கூறிய பொருளையே போதிக் கின்றது. அவ்வுவமையின் மூலம் காண்பான் - காட்சி மயமாம் உலகவுபாதி பரஸ்வரூபத்தை மறைக்கிற தென்றும் உபாதியை நீக்கிக் காணின் பரஸ்வரூபமே ஒளிரு மென்றும் போதிக்கிறார் திருமூலர்.

**— ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்.**



# வாயை மூடு

## சரோஜா கிருஷ்ணன்

ஸ்ரீ பகவான் மகாநிர்வாணத்திற்குப் பிறகும் தமது பக்தர்களைத் திருத்தி ஆட்கொள்கிறார் என்பதற்கு என் சித்தப்பா ராஜகோபாலய்யர் ஒரு சிறந்த உதாரணம். என் சித்தப்பா வாக்சாதுர்யம் மிக்கவர். தனது பேச்சு சாமர்த்தியத்திலேயே எலியைப் புலியாக்கிக் காட்டுவார். இத்திறமையைக் கொண்டு சிலருக்கு உதவவும் செய்வார், சிலரை சீண்டி அழவிடவும் செய் வார். இதனால் விளைந்த விபரீதங்களைக் கண்டு என் சித்தியும் மற்றவர் களும் சித்தப்பாவை வாயை அடக்கும்படிக் கேட்டுக் கொள்வார்கள். அதற்கு அவர் "நான் யார் சொன்னாலும் கேட்க மாட்டேன். என்னிஷ்டப் படித்தான் நடப்பேன். என் பகவான் சொன்னால்தான் வாயை மூடுவேன்" என்று வாதிடுவார்.

ஒரு நாள் என் சித்தப்பாவின் கனவில் ஸ்ரீபகவான் தோன்றி தம் கைத்தடியால் அவரைத் தட்டி "ஏய் வாயை மூடு" என்று சொல்லித்தாம். மறுநாளிலிருந்து சித்தப்பா எதிலும் பற்றற்று மௌனியாகி அவருடைய இறுதிக் காலம் வரை (சுமார் இரண்டாண்டுகள்) பகவத் தியானத்திலேயே இருந்து 1980 ஆம் ஆண்டு வாக்கில் ஸ்ரீ பகவான் திருவடியை அடைந்தார்.

**மௌனம்**

பக்தர்: பகவான் உலகெங்கும் சென்று தமது உபதேசத்தைப் பரப்புவது நல்லதல்லவா?

பகவான்: நான் அதைச் செய்யவில்லையென்பதை எப்படி நீ அறிவாய்? உபதேசத்தை உபன்யாச வாயிலாகத்தான் பரப்ப வேண்டுமா? உலகில் எத்தனையோ உபன்யாசங்கள் நடக்கின்றன. அவற்றால் விசேஷ நன்மை ஏதும் விளைவதாகத் தெரிய வில்லை. அத்யாத்ம தத்துவத்தை விளக்கப் பேச்சைவிட மௌனமே சிறந்த சாதனம். மஹான்களின் மௌன சந்நிதியில் உண்டாகும் தெளிவு பேச்சினால் உண்டாகாது. ஆன்மாவிலிருந்து அகந்தையும், அதிலிருந்து பிற எண்ணங்களும் அதிலிருந்து பேச்சும் உண்டாகின்றன. ஆதலால் பேச்சு என்பது ஆன்ம சொரூபத்தின் (மௌனத்தின்) கொள்ளுப் பேரனாகும். பேச்சிற்கே ஓரளவு பிரபாவம் உண்டென்றால், மௌனத்தின் பிரபாவத்தை யாரே இயம்ப வல்லார்!

**— ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்**

# சும்மா இரு

## மேஜர் சாட்விக் (சாது அருணாசலா)

*(1946-ஆம் ஆண்டு பொன்விழா மலரில் வெளியான ஆங்கிலக் கட்டுரையைத் தழுவியது)*

**''சுகக் கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா''.**

ஐம்பது வருடங்கள் என்பது, கால அளவையில் அற்பமானதல்ல; சென்ற ஐம்பது வருடங்களில் எவ்வளவு மாறுதல்கள்! என்ன தலை சுற்றும் வேகம்! மனித சரித்திரத்திலேயே இவ்வளவு வேகமான மாறுதல்களை உலகம் கண்ட தில்லை என்றே சொல்லிவிடலாம். ஆனால் இக்கொந்தளிப்புகள் அனைத்தும் மஹர்ஷிகளைத் துளியாவது தாக்கவில்லை. காலச் சக்கரத்தின் விசித்திரமான சுழற்சியை அவர் சிறிதேனும் அறிந்தாரில்லை போலும்! அருணாசலத்தை அடைந்து ஐம்பது வருடங்கள் கடந்து விட்டதாகத் தோன்றவே இல்லை என்று அவர் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

இந்த அரைநூற்றாண்டு காலத்தில் அவரது வாழ்க்கையில் குறிப்பிடத் தக்க சம்பவங்கள் ஏதும் நடைபெறவில்லை; இருக்கும் இடத்திலும் உண்ணும் உணவிலும் சில சில மாறுதல்கள்; — பொறாமை பிடித்த சில சாதுக்களிட மிருந்து சில்லறைக் கஷ்டங்கள் — அவ்வளவுதான். ஆனால் ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. அவரது கீர்த்தி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இப்பொழுது அவரைத் தெரியாத தேசமே இல்லை எனச்சொல்லலாம். ஒவ்வொரு நாட்டிலும் ஏதாவது ஒரு மூலையில் ஒரு பக்தனையாவது நிச்சயம் பார்க்கலாம்.

ஸ்ரீ பகவானது பெயரும் புகழும் அதியாச்சர்யமான அளவில் அதிகரித்துக் கொண்டு வருவதில் அதிசயம் ஒன்றும் இல்லை; ஒரு மஹாபுருஷனை ஆவலுடன் உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அனைவருடைய பிரார்த் தனைகளுக்கும் இணங்கி பகவான் அவதரித்திருக்கிறார்; காலச் சக்கரத்தில், தர்மம் க்ஷீணமடையுங்கால் எப்பொழுதும் ஸஹஜமாக நேரிட்டுக் கொண்டு வரும் ஸம்பவமே இது. அசாதாரணம் என்று இதைச் சொல்வதற்கில்லை. ஆனால் ஸ்ரீ பகவானது வாழ்க்கை வரலாற்றில் திடீரெனத் தோன்றிய பெருத்த மாறுதல்களே நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன.

ஸ்ரீ பகவான் ஒரு சாதாரண குடும்பத்தில் உதித்தவர்; இப்பொழுதோ அவர் உலகப் பிரசித்தராகிவிட்டார். குடும்பத்தினர் பணக்காரர்களல்ல; ஆனால் தங்கள் செல்வமனைத்தையும் பகவான் பாதத்தில் சமர்ப்பணம் செய்ய, இப்பொழுது மனிதர்கள் தயாராய் இருக்கிறார்கள். அப்பொழுது பரம வைதீகக்



குடும்பம்; அயல் நாட்டான் எவனும் வீட்டில் நுழைந்து வர்ண தர்மத்திற்குக் கேடு விளைவித்ததில்லை; ஆனால் தற்சமயத்தில், தீண்டாதாரும் அன்னிய தேசத்தினரும் ஸ்ரீ பகவானுடன் சமபந்தி போஜனம் செய்வதைக் காணலாம். ஸர்வ ஸஹஜமாக அவர்களுடன் உட்கார்ந்து பகவான் உணவருந்துகிறார். பேதபுத்தியே அவரிடம் இல்லையாகையால் அனைவரும் அவரை நெருங்க முடிகிறது. தன் குலத்தைச் சேர்ந்தவரென்று அந்தணர்களும், ஸமத்வபுத்தியும் உதாரகுணமும் வாய்ந்தவரென்று ஏனையோர்களும் அவரிடம் வந்து ஈடு படுகிறார்கள். ஸ்ரீ பகவான் படிப்படியாக முன்னேறி ஆத்ம ஞானியாகவில்லை; எடுத்த எடுப்பில் ஆத்ம நிஷ்டையில் அமர்ந்தார். சிறிய தகப்பனார் வீட்டில் கீழே படுத்துக் கொண்டு மரணத்தை ஆராய்ச்சி செய்து பார்க்கையில் தன் அகந்தை அடியோடு நாசமுற்றதை அவர் அனுபவித்து உணர்ந்தார். இவ்வனுபவத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில், ''எப்பொழுதும் உள்ளபடியே நானிருக்கிறேன், எனக்கு ஒன்றும் நேரவில்லை'' என்று பகவான் சொல் வதுண்டு. வாஸ்தவந்தான்; 'நான் இருக்கிறேன்,' என்பதாக, உள்ள பொருள் உள்ளபடியேதான் இருக்கிறது. உள்ள உணர்வில் மாறுதலொன்றும் ஏற்பட வில்லை. ஆனால், விவகார ரீதியில் பார்க்கும்பொழுது நடக்க வேண்டிய தெல்லாம் அப்பொழுதுதான் நடந்திருக்கிறது. எதையடையும் பொருட்டு, ஸாதகர்கள் பலர், வருஷக்கணக்கில் — ஏன் அநேக ஜன்மங்களில் கடுந்தவம் இயற்றி அரும்பாடு படுகிறார்களோ, அவ்வுத்தம அனுபூதி நிலையை மஹர்ஷிகள் ஒரு நொடியில் சாதித்துக் கொண்டார். அகந்தை நாசமுறவே பூரணப்பொருள் சாட்சி மாத்திரமாக, ''நான் இருக்கிறேன்'' என்று எஞ்சி நிற்கிறது. ஆரோபமாம் அனைத்திற்கும் இதுவே மாறுதலில்லா அதிஷ்டான மாகும்.

உலக மகாஞானியாம் ஸ்ரீ பகவான் போதிக்கும் தத்துவத்தை இரண்டு வார்த்தைகளில் சுருக்கிச் சொல்லி விடலாம்; ''அனைத்தும் கற்பனையே'' என்பது தான் — எவ்வளவு சுலபம்! ஆனால் எவ்வளவு சிரமசாத்யமானது? ஒன்றும் இல்லை — இதெல்லாம் சுத்தப்பொய் — நீ காணும் உலகனைத்தும், உயிர்வாழும் பொருட்டும், பணம் தேடும் பொருட்டும் மனிதன் அரும்பாடு படுவதும் — எல்லாம் மனக்கற்பனை; அநித்யமான மாயத் தோற்றம். தனிப்பட்ட வியக்தியாக நினைத்துக் கொண்டு, லௌகிக முன்னேற்றத்துக்கும், ஆன்மானுபூதிக்கும் பாடுபடுகிறதாகச் சொல்லும் நீயும் சுத்தப் பொய். சந்திர ஒளியில் தோன்றும் இலைநிழலைத் தொட்டுப் பிடிக்க முடியுமோ? அந்நிழலுக்குத் தனியாக இருப்பேது! வெளிச்சம் தடைபட்டிருப்பதால், இலை போலுள்ள நிழல் உருவாகிறது. நீயும் இந்த நிழல் போன்றவனே. ஜீவ அகந்தையும் — இஃதனைத்தும் — வெறும் சாயாமாத்ரமே; ஆத்ம சைதன்ய ஒளி தடைபட்டிருப்பதால் நீயும் இவ்வுலகத்தோற்றமும் ஏற்பட்டிருக்கிறது. உன் அகந்தையாலேயே உலகம் தோன்றுகிறது; உண்மையில் அகந்தை இன்றேல், ஒன்றும் காணப்படாது.

நாம் அனைவரும் தேடி அடையமுயலும் நிலை, சூனியமென்று பகவான் சொல்லவில்லை. அனைத்தும் கற்பனையென்று சொல்லும்போது, ஜீவபாவத்தில் நமக்கு சர்வமுமாயிருக்கும் இந்த மனோமய உலக வாழ்க்கையையே அவர் குறிப்பிடுகிருர். இப்பிரபஞ்சம் பொய்யென்றால், இத்தோற்றமனைத்திற்கும் ஆதாரமான ஸத்யம் ஒன்று இருந்தாக வேண்டும். அதுவே அனுபூதி நிலை; எல்லாம் அதுவேயாதலின், பூரணமும் ஆகும். ''நாமனைவரும் பூரணப் பொருளேயாயின், நமக்கு அன்னியமாக வேறொன்றும் இல்லையெனின், பகவானிடம் போகவேண்டிய அவசியம் என்ன'' என்று கேட்கலாம்.

என்னைப் பற்றிய சம்பவமொன்று இத்தருணத்தில் என் ஞாபகத்திற்கு வருகிறது; ஆஸ்த்ரேலியா தேசத்துப் பத்திரிகை நிருபர் ஒருவர் ஆச்ரமத்திற்கு வந்து என்னை எனது குடிலில் பேட்டி கண்டார். இந்த இடத்தில் நான் வசிப்பதைப் பார்த்ததும், என்னைப் பற்றிப் பெரியதொரு பிரச்சினை அவர் மனதில் கிளம்பியிருக்க வேண்டும். ஐரோப்பியன் ஒருவன், இம்மாதிரியான இடத்தில் ஏன் இப்படி அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்பது அவருக்கு விளங்கவில்லை. என்னைப் பல கேள்விகள் கேட்டார்; எனது விடைகளில் ஒன்றாவது அவருக்குத் திருப்தி யளிக்கவில்லை. அவருக்கு, ஆச்ரமத்தைப் பற்றின விஷயங்களும், மனிதர்கள் இங்கே என்ன செய்கிறார்கள் என்பதும் சிறிதும் தெரியாது. ஏதாவது எழுத்து வேலையில் நான் ஈடுபட்டிருந்தாலும் அவருக்குக் கொஞ்சம் சமாதானம் ஏற்பட்டிருக்கும். அதுவும் இல்லாமல் நான் இங்கே என்னதான் செய்து கொண்டிருக்கிறேன்! கடைசியாக, பொறுக்க முடியாமல், ''இங்கே என்ன செய்கிறீர்கள்?'' என்று பச்சையாக என்னைக் கேட்டுவிட்டார். இப்பொழுது இதற்குப் பதில் சொல்லியாக வேண்டும்; எதார்த்தத்தை நான் சொல்லப்போனால், அவருக்கு ஒன்றும் விளங்காதென்பது எனக்கு நன்றாய்த் தெரியும் ஆகையால், ''இங்கே எனக்கு மன அமைதி கிடைக்கிறது'' என்று சொல்லி வைத்தேன். இது திருப்திகரமான சமாதானம் ஆகாது என்று எனக்குத் தெரியும், ஆனால், மேற்கொண்டு கேள்விகள் கிளம்பாது இருக்கட்டும் என்று இவ்வாறு கூறினேன்.

நான் ஏன் இங்கு வந்தேன் என்றால், என் இஷ்டம்; நான் வந்திருக்கிறேன். ஏன் இங்கேயே தங்கியிருக்கிறேனென்றால் — அதுவும் என் இஷ்டமே; இவ்வளவுதான் நான் சொல்லமுடியும். ஏன் வந்தேன், தங்கியிருக்கிறேன் என்பவைகளைப் பற்றி நான் சிந்திப்பதேயில்லை. சிறு இரும்புத் துண்டு போன்ற எனக்கு பகவான் காந்தக்கல் போன்று விளங்குகிறார்; அவரது காந்த சக்தி குறையாமல் இன்றும் அப்படியேதான் இருக்கிறது. அதனுல் தப்பிச் செல்லும் சக்தி என்னிடமில்லை.

ஆனால் ஸ்ரீ பகவானிடம் வருபவர்களில் பெரும்பாலோர் ஏதாவதொன்றைக் கருதியே வருகிறார்கள் என்பது உண்மையே; இகசுகத்தையோ



அல்லது பர சுகத்தையோ கோரித்தான் வருகிறார்கள்; தங்கியும் இருக்கிறார்கள். இந்த சந்நிதி மகிமையால் ஸித்திகள் நிகழ்ந்திருப்பதாகவும் பலர் சொல்கிறார்கள். குறிப்பிட்ட சம்பவங்களொன்றையும், இதற்கு அத்தாட்சியாகச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஏன் அதிசயங்கள் நிகழக்கூடாது? தெய்வ நம்பிக்கையால் நிகழக் கூடாத அதிசயமொன்றும் இல்லை என்றும், அணுவளவு நம்பிக்கையுள்ளவன் மலையையும் சுலபமாக நகர்த்திவிடலாம் என்று ஒரு மஹான் கூறியுள்ளாரல்லவா? ஆனால், ஸ்ரீ பகவான் ஆத்ம சாக்ஷாத்காரத்தைத் தூக்கி நம் கையில் கொடுத்துவிடுவார் என்று நாம் எதிர்பார்த்தால் நிச்சயம் ஏமாற்றம் அடைவோம். ஏற்கனவே நம்மிடமுள்ள பொருளை வேறொருவர் கொடுப்பது எப்படி? சொரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கும் அஞ்ஞானம் என்னும் ஆவரணம் நீங்க அவர் உதவி செய்வார்; அவ்வளவுதான். கையில் கிண்ணத்துடன் குளத்தருகே சென்று, ஜலம் கிண்ணத்தில் வந்து நிரம்ப வேண்டும் என்று தவம் பண்ணிக் கொண்டிருந்தால் என்ன ஆகும்! ஆயிரம் வருஷம் குளக்கரையில் நாம் உட்கார்ந்து கொண்டிருக்கலாம்; குனிந்து, கிண்ணத்தைத் தண்ணீரில் அமிழ்த்தினாலொழிய ஒன்றும் நேரப்போவதில்லை. மேலும் நமது கிண்ணம் குப்பை கூளங்கள் நிறைந்ததாயிருக்கக் கூடாது; ஆனுல் பெரும்பாலான கிண்ணங்கள் இவ்வாறு குப்பை கூளங்களுடன்தான் இருக்கின்றன! ''குறைபாடுகள் அனைத்தும் நீங்கிப் பூரணத்துவம் பெறுவது எப்படி? நமது கிண்ணங்களில் உள்ள அழுக்கை அகற்றிக் கொள்வது எப்படி?'' என்று கேட்கலாம். இதற்கு ஸ்ரீ பகவான் ஒரு உபாயம் சொல்கிறார். ''சும்மா இரு'' என்று நமக்கு உபதேசிக்கிறார். உள்ளபடி - உள்ளத்தே - இரு; அது போதும். ''ஆமாம்; இது சரிதான்; சும்மா இருப்பது என்பது நடைமுறையில் அப்படி சுலபமாகத் தோன்றவில்லையே! இதற்கு சாதனை எதையும் பகவான் குறிப்பிடவில்லையா?'' என்று கேட்கலாம்.

சாதனை! எதை மனதில் எண்ணிக் கொண்டு சாதனை செய்ய வேண்டும்? மூலாதாரத்தை தியான லக்ஷ்யமாகக் கொண்டு, ஆசனத்தில் அமர்ந்து ஏகாக்ரதை பழகுவதையா? — இரேசக பூரகங்களைப் பழகிப் பிராணாயாமம் அப்யஸிப்பதையா? — அல்லது ஏதாவது ஒரு மந்திரத்தை ஒருகோடியே எட்டு தடவை ஜபம் செய்வதையா? இம்மாதிரியான முறைகள் எதையும் பகவானிடம் எதிர்பார்க்க முடியாது; சாதனை எதையும் அவர் சிபாரிசு செய்கிறதில்லை; மேற்சொன்ன முறைகளெல்லாம் ஆரம்ப காலத்தில் நன்மை பயப்பனவே; ஆனால் பகவான் இவைகளை உபதேசிப்பதில்லை; சும்மா இரு என்றுதான் பகவான் சொல்கிறார். அப்படி இருப்பதற்கு ''நான்'' என்னும் போதத்தின் எதார்த்த உண்மையை உணரவேண்டும். ''நானார்?'' என்று விசாரித்துக் கொண்டேபோனால், பரமார்த்தம் விளங்கும். அஹம் விருத்தியைத் தவிர மற்றெதிலும் கவனம் செலுத்தக் கூடாது. கிண்ணத்திலுள்ள அழுக்கை அகற்றிவிடுவது போல் புற விஷயங்கள் அனைத்தையும் தூரத்தள்ளிவிடு. கடைசியில், 'நான்' என்பதன் உண்மை விளங்கியவுடன் — சும்மா இரு. வெறும் வார்த்தைகளால் என்ன பயன்! இஃதனைத்தும்

கற்பனையே, என்று முடிவாகச் சொன்ன பிறகு, வேறென்ன சொல்ல வேண்டும்? உண்மையில் சாதகனும் இல்லை, சாதனையும் இல்லை, தள்ள வேண்டியதும் இல்லை, கொள்ள வேண்டியதும் இல்லை. ஆத்ம வஸ்து, 'நான், நான்' என்பதாக, நித்யாபரோக்ஷமாக என்றும் விளங்கிக் கொண்டிருக் கிறது. என்றும் எவர்க்கும் இயல்பாயுள்ள பொருளை அடைவது என்பது எப்படி! பேத திருஷ்டியை வைத்துக்கொண்டு ஏன் துன்பப்படவேண்டும்? 'சும்மா இரு' இருப்பே நமது இயல்பாகும். இதெல்லாம் மிகவும் எளிதாகத் தோன்றலாம். பகவான் ஆத்ம வித்தை அதி சுலபம் என்றுதான் சொல்கிறார். ஆனால் எனக்கு அப்படித் தோன்றவில்லை; மிகக்கஷ்டமானது என்று தான் நான் நினைக்கிறேன்; கத்தி முனையில் நடப்பதுபோல் என்று சிலர் கருதுகிறார்கள். எல்லாம் நம் 'கிண்ணத்தில்' எவ்வளவு குப்பை இருக்கிறது என்பதைப் பொருத்திருக்கிறது. என்ன செய்வது! நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமாய் இருக்கிறோம். ஆரம்பத்தில் சிலருக்கு அதிக சிரமம் ஏற்படும்; பிராரப்த வசத்தால் உள்ளே மறைந்துள்ள வாசனைகள் அனைத்தும் தலைதூக்கும்; நாம் கனவிலும் எதிர்பாராத கெட்ட குணங்களும், துர்வாசனை களும் நம்மிடமிருந்து வெளிப்படும். மனத்தின் கசடுகள் அனைத்தும் வெளிவருவது நன்மையும் அவசியமும் ஆகும். பகவானும் இப்படித்தான் சொல்கிறார். ஆனால் வாசனைகள் புதிய ரூபத்துடன் நம்மிடம் நிலை பெறலாகாது; மனம் போன போக்கெல்லாம் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதெல்லாம் நல்ல உபதேசங்களே; சொல்வது மிக எளிது; ஆனால், அனுபவத்தில் கொண்டுவருவது அவ்வளவு சுலபமல்ல.

உண்மையில் பகவான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை; கௌடபாதர், உபநிடதங்கள் கூறுவதையேதான் அவரும் உபதேசிக்கிறார். கூர்ந்து கவனிக்கும் போது எப்பொழுதும் ஒரே தத்துவம் உபதேசிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பது தெரியவரும். சாதனங்களில்தான், மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில், வித்தியாசம் இருப்பது போல் தோன்றுகிறது. லக்ஷ்யம் எப்பொழுதும் ஒன்றுதான்.

பகவானது உபதேசம் நமக்கு முக்கியமில்லை. – பகவான்தான் நமக்கு முக்கியம். உபதேச ரூபமாகவே அவர் விளங்குகிறார்; போதிப்பதுடன் நின்றுவிடாமல், தானே நடந்தும் காட்டுகிறார். பிறருக்கு போதிக்கும் ஆயிரக்கணக்கான குருமார்களைக் காணமுடியும்; பிறரை நல்வழிக்குச் கொண்டுவர வேண்டுமென்று புத்தி சொல்ல விரும்பாதவர்கள் யார்? – தான் சொல்வதைத் தன் வாழ்க்கையில் அனுஷ்டித்துக் காட்டுபவர்கள் மிகச்சிலரே; லக்ஷ்யத்தில் நிலைபெற்றவர்கள் இன்னும் அபூர்வம். முற்காலத்தில் எத்தனையோ மகான்கள் இருந்திருக்கிறார்கள்; ஆனால் பிராசீன காலத்து மஹரிஷிகளைப் போன்றவர்கள் இப்பொழுதும் இருக்க முடியும், இருக் கிறார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்ய பகவான் நம் முன்னே பிரத்யக்ஷமாக விளங்குகிறார். இவ்விஷயம் எனக்கு அபார ஊக்கத்தையும் நம்பிக்கையையும்



ஊட்டியிருக்கிறது. மனப்பூர்வமாக நாம் தளரா முயற்சி செய்ய வேண்டும்; செய்தால் சகல அனர்த்தங்களும் ஒழிந்து, பரிபூரண சாந்தி சுகத்தை அனுப விக்கலாம். திருச்யப் பிரபஞ்சத்தின் தொல்லைகள் நீங்கியவுடன் உபசாந்தி ஏற்படுவதற்கு என்ன தடை – இதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

பகவான் சந்நிதியில் உட்கார்ந்திருக்கிறார்; நான் பார்க்கிறேன்; எதிலேனும் அணுவளவாவது அவருக்குப் பற்று இருப்பதாகத் தெரியவில்லை! எத்தனையோ சம்பவங்கள் – மஹத்தான பலாபலன்களைத் தரக் கூடியவை யென்று நாம் கருதும் எத்தனையோ சம்பவங்கள் வெளி உலகில் நிகழ்கின்றன. ஆனால் அவைகள் சிறிதளவாவது அவரிடம் பரபரப்பை உண்டு பண்ணக் காணோம். அவரது முகாரவிந்தத்தில் சிறப்புற்றொளிரும் ரமணீயமான புன்முறுவலையும் பிரசாந்த சௌந்தர்யத்தையும் என்னென்று வர்ணிப்பது! அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாலே எனக்கு அளவற்ற ஊக்கமும் உற்சாக மும் ஏற்படுகிறது. முற்காலத்து மஹான்களின் சரிதைகளையும், புராதனக் கிரந்தங்களையும் படிப்பதால் இத்தகைய அழுத்தமான உபதேசம் நமக்குக் கிடைக்காது. பகவானது சந்நிதி மகிமையோ கண்கூடாக விளங்குவது; சந்தேகத்திற்கு இங்கே சிறிதும் இடமில்லை; ஜனங்கள் இவ்விடம் வருவதற்கும் தங்குவதற்கும் இதுவே காரணம் போலும். **நிச்சயம் ஒன்றுமே இல்லாத இம்மாய பிரபஞ்சத்தின் நடுவே, திடவுண்மையே உருக் கொண்டதுபோல் பகவான் விளங்குகிறார்.** சாதனத்தைப் பற்றியோ, லக்ஷ்யத்தைப் பற்றியோ இங்கே சிந்திக்கத் தேவையில்லை. கேள்வி கேட்கவும் தோன்றாது; பகவானுக்கு அன்னியமாக வேறொன்றுமில்லை யென்பது நாளடைவில் புலப்படும்.

''அருணாசலேச்வரரைப் பற்றி ஸ்ரீ மஹர்ஷிகள் ஸ்தோத்திரங்களைப் பாடி யுள்ளாரே! அனைத்தும் கற்பனை என்பவர், இவ்வாறு செய்திருப்பதற்கு என்ன சமாதானம் கூறுகிறாய்?'' என்று கேட்கலாம். இதற்குக் காரணம் கூற இயலாது; ஞானிகளிடம் காணப்படும் விசித்திரமான முரண்பாடுகளில் இதுவும் ஒன்று. எல்லாம் பொய் என்று சொல்லிவிட்டுக் கடவுளைப் பற்றி இவர் புகழ்மாலைகள் பாடியிருக்கிறார்! நாம் மனதில் வரையறுத்து வைத்துக் கொண்டிருக்கிறபடிதான் ஞானி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. பொருத்தமுள்ளது. பொருத்தமற்றது, என்று நிர்ணயிக்க குறுகிய வியவஹாரிக திருஷ்டியுடைய நாம் யார்? பகவானோ, அகண்டைகரச பாரமார்த்திக திருஷ்டி படைத்தவர்; அந்த அருணாசல ஸ்தோத்ரங்கள் மிக அழகாக பகவானால் பாடப் பெற்றவை; இதிலேயே எனக்குப் பரம திருப்தி; வேறு சமாதானம் எதற்கு? கடைசியாக, ''பகவான் ஏன் அருணாசலம் வந்தடைந்தார்?'' – இதற்கும் என்னால் விடை சொல்ல இயலாது; பகவானிடம் கேட்டாலோ, நான் எங்கேயும் போகவுமில்லை, வரவும் இல்லை என்று சொல்லுவார்; இருந்த இடத்திலேயே எப்பொழுதும் இருக்கிறார்! நமது வியவஹார திருஷ்டிக்கு இது தகுந்த சமாதானம் இல்லை. ஆனால்

பகவானுக்கு ஒரே திருஷ்டி தான் உண்டு; அந்தப் பாரமார்த்திக திருஷ்டியின்படி, இவ்விதமான மறுமொழியைத்தான் நாம் அவரிடமிருந்து எதிர்பார்க்கமுடியும். பேததிருஷ்டியே அவரிடம் இல்லை; அவரது நிலை போக்குவரவற்றது. ஆனால் அவர் திருவண்ணாமலை வந்தடைந்தாரென்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. பகவானது சாந்நித்யத்தால் இப்போது அருணாசல க்ஷேத்ர மகிமையும் அதிகரித்திருக்கிறது. அவரது திருவடி நிழலில் தங்கியிருக்கும் நாமனைவரும் பாக்கியசாலிகள். **நாம் எவ்வளவு அதிருஷ்ட சாலிகள் என்பதை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை** என்பதே எனது அபிப்ராயம். சம்பவங்களின் மகத்துவம் நாளடைவில் குறைவடைந்து, மனிதனுக்கு ஸர்வ ஸஹஜமாய்ப் போய்விடுகிறது; இது ஜீவ அகந்தையின் இயல்பு. பகவானை அடைந்து, தான் பெற்ற தெய்வீக சம்பத்தின் பெருமையைச் சரியாக மதிப்பிட்டுக்கொள்ள அவனுக்குத் தெரிகிறதில்லை. ஆனால் பகவானை மட்டும் எவனும் சர்வ சாதாரணமாகக் கருதுவதற்கில்லை. அவருக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம், திகைப்பூட்டும் வண்ணம் அவ்வளவு ஆச்சர்யகரமானது. அவரது அவதார மகிமைகளில் இதுவும் ஒன்று.

பகவானை உள்ளவாறு உணர்த்த நான் முன்வரவில்லை; அவர் போதிக்கும் தத்துவத்தையும் விளக்கம் செய்யவில்லை. இவை என் சக்திக்கு மீறின விஷயங்கள். பகவானை உள்ளவாறு உணர்ந்தவனே அவரைப்பற்றி எழுத முடியும். பகவானை உண்மையில் அறிந்துகொண்டவர் பகவானேதான். அவர் தன்னைப் பற்றி எழுதப் போவதில்லை என்பது நிச்சயம்.


''இஃதெல்லாம் கற்பனையே ஆயின், ஏன் இதை எழுதவேண்டும்?''

ஆம்; உண்மைதான்; ''இஃதனைத்தும் கற்பனையே; சும்மா இரு'' என்ற இரு வாக்கியங்களில் எல்லாம் அடங்கியுள்ளது. இவ்வுபதேசத்தின் உட்பொருளை உணர்ந்து கொண்டவன், அனைத்தையும் அறிந்தவனாகிறான். பின்னர் சொல்ல வேண்டியதோ, எழுத வேண்டியதோ, ஒன்றும் இராது; பரமோனந்தான்.

**''சொலாது சொலிநீ சொல்லற நில்லென்று**
**சும்மா இருந்தாய் அருணாசலா''**

— oOo —


**ஓம் தத்ஸத் ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து.**





# பிழைதிருத்தம்

| பக்கம் | பத்தி/பாடல் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 3 | 2 | இருப்போன் | இறுப்போன் |
| 21 | 2 | 8 | பூதடலை | பூதவுடலை |
| 62 | 3 | 5 | வடிவான அவன் | வடிவான அந்த |
| 63 | 1 | 4 | உதித்து எங்காவது | உதித்தது. எங்காவது |
| 64 | 2 | 13 | துரைமுகத்திலிறங்கி | துறைமுகத்திலிறங்கி |
| 69 | 2 | 1 | தம்முன் | தம்முடன் |
| 71 | 2 | 6 | பகவான் பகவான் | பகவான் |
| 71 | 2 | 9 | எடுத்து | எரித்து |
| 71 | 2 | 15 | நாளில் | தாளில் |
| 89 | 8 | 6 | வசாரிப்பதால் | விசாரிப்பதால் |
| 99 | 2 | 11 | திரும்பித் | திருப்பித் |
| 113 | 6 | 3 | சிறைதவிருந்த | சிறைதவிருந் |
| 117 | 2 | 7 | வியத்தகு | வியக்கத்தகு |
| 118 | 3 | 8 | விடையிருப்பார் | விடையிறுப்பார் |
| 125 | 28 | 2 | டருள்வா | டருள்வாய் |
| 126 | 3 | 4 | அறுத்தெரிந்தான் | அறுத்தெறிந்தான் |
| 128 | 3 | 2 | பூண்டவன் | பூண்டவன். |
| 136 | 1 | 1 | கூறினார் | கூறினர் |
| 136 | 2 | 9 | கிடைக்காத | பெறாத |
| 137 | 1 | 9 | நடந்த | ஏற்பட்ட |
| 139 | 2 | 7 | சொல்கிறார் | செல்கிறார் |
| 142 | 7 | 2 | ஜாகரால் | ஜனகரால் |
| 152 | முன்னுரை | 4 | பன்னூராயிரர் | பன்னூறாயிரர் |
| 165 | 3 | 8 | பொருத்தமுள்ளது. | பொருத்தமுள்ளது, |



விஜய நூற்றாண்டு வெளியீடு